
www.tamilarangam.net

நவம்பர் - டிசம்பர் 1996

# எரிமலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




## அக்கறைப் பூக்கள்

நான் அறிந்த வகையில் 'எரிமலை' சிறந்த தமிழ்ச் சஞ்சிகையாக வெளி வந்து கொண்டிருக்கிறது. குறுகிய காலத்தில் ஏராளமான வாசகர்களைப் பெற்றதுடன் எல்லோருடைய மதிப்பிற்கும் அது ஆளாகியிருக்கிறது. இன்றைக்கு தமிழ் நாட்டில் வெளிவரக் கூடிய பல பிரபலமான பத்திரிகையாய் இருந்தால் கூட அவைகளெல்லாம் மக்களுக்கு எந்தச் செய்தியைக் கொண்டு போகவேண்டுமோ அந்தச் செய்திகளைக் கொண்டு போவதில்லை. எந்தச் செய்திகளை மக்களுக்கு கொண்டு போகக் கூடாதோ அவற்றை மக்களிடத்தில் கொண்டு போகின்றவையாக அவைகள் எல்லாம் திகழ்ந்து கொண்டிருக்கும்போது அவைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு இதழாக எரிமலை வெளிவருவதைப் பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அதற்கு காரணமான நண்பர்களையும் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

இந்தப் பத்திரிகையை மேலும் மேலும் வளர்ப்பதென்பது நம்முடைய தமிழினத்திற்கு நன்மை பயக்கக் கூடிய செயல் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு தமிழன் கையிலும் எரிமலை திகழும் நாள் தமிழன் வாழ்விற்கு விடிவைக் கொண்டு வரும் நாள் என்பதை நான் சுட்டிக்காட்டி எரிமலை வாசகர்களுக்கு என்னுடைய வாழ்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. பழநெடுமாறன்அவர்களுடனான உரையாடலின் போது எரிமலை இதழ் பற்றி அவர் குறிப்பிட்டவை..*

★★

அன்பின் எரிமலை ஆசிரியர்கட்கு!

சிறிலங்கா அரசிற்கும், ஏனைய நாடுகள் அனைத்திற்கும் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் ஒரு தனி மனிதன் அல்ல. மக்கள் நடத்தும் விடுதலைப் போரின் தலைவர். தமிழினத்தை உலகிற்கு காட்டிய வீரத் தமிழர். முல்லைத்தீவு போரில் மக்கள் புலிகளுக்கு உதவியதை யாரும் மறந்திருக்க முடியாது. தமிழீழ மக்கள் அளிக்கும் ஆதரவைக் கொண்டே ஊகித்து, உணர்ந்து கொள்ள முடியும்.

ஆகவே, சிறீலங்கா அரசு, இச் சிக்கலை ஒரு தனிமனிதனின் சந்தர்ப்பவாத தீவிரவாதம் என்று பிரித்துப் பாராமல், மக்களின் சிக்கல் இது என்பதை உணர்ந்து, தீர்வுகாண விரும்புமேயானால், தமிழீழ மக்களின் சார்பாக புலிகளை மட்டுமே பேச அழைக்க வேண்டும்.

இராணுவத்தால் தீர்வுகாண சிறீலங்கா அரசு விரும்புமேயானால், அப்பாவி மக்கள் பலியாவதை யாராலும் தடுக்க இயலாது. அப்பாவி மக்கள் பலியாவது சிறீலங்கா அரசிற்கோ, புலிகளுக்கோ பிடித்தமான ஒரு விடயம் அல்ல என்று நான் நம்புகின்றேன்.

படுகொலை செய்யப்பட்ட நிதிப் பிரிவின் தலைவர் திரு. கந்தையா, பேரின்பநாதன், 'ஈழமுரசு' ஆசிரியர் கந்தையா கஜேந்திரன் ஆகியோருக்கு முதலில் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம். அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்கு வெளி வரும் இதழ்களின் வாயிலாக தமிழ்ப் பகுதிகளில் நடந்தேறி வரும் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி அறிந்தோம். உலகில் எந்த ஒரு அரசும் செய்யாத மாபெரும் தவறை சிறீலங்கா அரசு செய்து வருகின்றது. இது கண்டிக்கத்தக்கது மட்டுமல்ல உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டிய விடயங்களில் ஒன்றாகும்.

ஈழத்தமிழர்களை கிள்ளுக்கீரையாக சந்திரிகா அரசு எண்ணி வருகின்றது. இந்த எண்ணத்தை அகற்றி, மூன்றாம் உலக நாடொன்றின் முன்னிலையில், பேச்சுவார்த்தைக்கு உடன்பட வேண்டும். ஈழத்தமிழர்களின் சார்பில் புலிகளே அழைக்கப்பட வேண்டும். இத்தகு தீர்வை சந்திரிகா அரசு நிபந்தனைகள் ஏதுமின்றி ஏற்று, ஈழத்தமிழர்களின் அவல வாழ்விற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டுதல் அவசியம்.

சிறிலங்காவில் சிறுபான்மையினரும், உலகளவில் பெரும்பான்யினருமான தமிழர்களை அடக்கி ஆள நினைப்பது முட்டாள்தனமான போக்கு.

நல்மனதுடன்
முருகன்

★★

### தமிழ்த்தாய்

தாயோ,
பெற்ற குழந்தைகளைக் காப்பாற்றத்
தத்தளித்துக் கொண்டிருக்கிறாள்.
தோளுக்கு மேல் வளர்ந்தவரோ
பொருள் சேர்க்க அக்கரைக்குச்
சென்று விட்டார்
சென்றவர்
சில ஆண்டுகளுக்கு ஒரு முறைத்
திரும்பி வந்து

'ஆகா'
இதுவல்லவோ தாய் வீடு!
இதுவல்லவோ என் வீடு!
இந்தக் காற்றையும் மண்ணையும்
விட்டுச்சென்றேனா?
என் மொழியில் பேசுகையில்
என் நா குளறுகிறதா?
பயிருக்கு ஏங்கிக் கிடக்கும் நிலத்தை
புறக்கணித்தேனா?
குதித்து விளையாடும் கன்றுகளையும்
கூவி எழுப்பும் சேவல்களையும்
மறந்தேனா?
பழைய சோறும் தயிரும்
துவக்கிவைத்த காலைகளையும்
மறந்தே போனேனா?
என்னை உண்டாக்கிய தாயைத்
தத்தளிக்க விட்டுச் சென்றேனா?
அறிவுக்கு ஏங்கிக் கிடக்கும்
தூண்டப்படாத விளக்குகளை
இருளிலே தவிக்கவிட்டேனா?
அந்தக் குழந்தைகளுக்கு,
நான் வாங்கிச் சென்ற
பொம்மை தான் தெரிகிறது..
என்னைத் தெரியவில்லை
அரவணைப்பும் மறந்து போகுமா?

என்றெல்லாம் கூறிவிட்டு
துக்கங்களையும் திருமணங்களையும்
விசாரித்து விட்டு

மடியாத ஏக்கத்தை
மனதிலே என்றும் சுமந்தவராய்
அக்கரைக்கே திரும்பி விட்டார்.

– க. வே. பூங்கொடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு

நவம்பர் – டிசம்பர்

1996

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# உலகத் தமிழர் நாம் ஒன்றுபடுவோம்

1996–ம் ஆண்டும் ஓடிக் கழியப்போகிறது. சிங்கள பௌத்த பேரினவாதம், தனது மேலாண்மையினைத் தமிழ் மக்கள் மீது திணித்துவிடுவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்த முனையும் ஒரு சூழலில், தேசியத் தலைவரின் மாவீரர் நாள் செய்தி 1997ம் ஆண்டில் எமது கடமைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

எந்தவொரு அரசியல் பேச்சுவார்த்தைக்கும், சிறீலங்காவின் படைகளை விலக்குதல், நெருக்கடியினைத் தணித்தல், இயல்பு நிலையினைத் தோற்றுவித்தல் என்பன முன் நிகழ்வாக அமைய வேண்டிய அவசியம் தேசியத் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நேர்மையாகச் சிந்திக்கும் எவரும் இவ்விடயத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டில் உள்ள நியாயத்தன்மையினைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இராணுவத்தின் இரும்புக் கரங்களினால் தமிழீழ தேசத்தின் மக்கள் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், இலங்கைத்தீவில் சமாதானத்தினை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவோர் புலிகள் இயக்கத்தின் இந்நிலைப்பாட்டில் உள்ள நியாயத்தன்மையிைப் புரிந்துகொள்ளல் அவசியம்.

தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து படைகளை விலக்குவது தொடர்பாகவும் இயல்பு நிலையினைத் தோற்றுவிப்பது தொடர்பாகவும் பேசி ஓர் உடன்பாட்டைக் காணவும் தயாராக இருப்பதாக வெளிப்படுத்திய தேசியத் தலைவர், இந் நியாயமான நிலைப் பாட்டை சந்திரிகா அரசு ஏற்றுக்கொள்ளும் எனத் தாம் எதிர்பார்க்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். சிங்கள ஆட்சியாளரிடம் கைநீட்டி நின்று எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற வரலாற்று அனுபவத்தினையும் வெளிப்படுத்திய அவர் எமது மக்களுக்கு விடிவு ஏற்படும் வரை நாம் உறுதி தளராது துணிந்து போராடுவோம் என மாவீரர் நினைவுடன் உறுதியுரை மொழிந்துள்ளார்.

இவ் மாவீரர் நாள் செய்தி எமக்கு 1997ம் ஆண்டில் உள்ள பணிகளைத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது.

அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளுக்கு முன் படைகளை விலக்குதல், நெருக்கடியினைத் தணித்தல், இயல்பு நிலையினைத் தோற்றுவித்தல் ஆகியன முன் நிகழ்வுகளாக அமைதல் வேண்டும் என்ற தமிழர் தரப்பின் நிலைப்பாட்டிற்கு சர்வதேச ஆதரவு திரட்டப்பட வேண்டும்; தமிழ் மக்களின் தன்னுரிமைக்கான போராட்டம் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டது என்பது அனைத்துலக அரங்கில் பரவலாக வெளிப்படுத் தப்பட வேண்டும்; விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழ் மக்கள் நடாத்தும் போராட்டத்தினை உலக நாடுகள் அங்கீகரிக்கும் நிலையினை உருவாக்க வேண்டும். இவை சர்வதேச அரசியல் அரங்கில் எம் முன்னால் உள்ள பணிகள்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை காலாதி காலம் ஒதுக்கித் தள்ளி விட்டு, தமிழர்களை விழுங்கி ஏப்பமிடத் துடிக்கும் இனவாதப் பூதம், இத்தடவையும் அவ்வாறு செய்யும் என்பதே வரலாற்று நிகழ்வாக அமையும். தனது படை பலத்தினைப் பெருக்கி தனது ஆக்கிரம்பிப்புப் போரைத் தொடர்ந்து நடத்தவே இனவாதப் பூதம் முயலும். இதனை எதிர்கொள்ள தமிழர் தரப்பு தம்மைப் பலப்படுத்திக் கொள்வதனைத் தவிர வேறு வழியில்லை.

தமிழர் படையணி பலம் பெற உழைப்பது இன்று எம்முன் உள்ள அதிமுக்கிய கடமையாகும். பலம் என்பது எமது உரிமைகளின் பாதுகாப்புக் கவசமாக அமைகிறது. நாம் எமது பலத்தினை எவ்வளவு பெருக்கிக் கொள்கிறோமோ போரில் அவ்வளவு தூரம் முன்னேறியவர்களாக இருப்போம்.

எமது மக்கள் மீது சொல்லொணாக் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் மக்களின் மனோபலத்தினை உடைத்து போராட்டத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்தும் அரசின் தந்திரோபாயமும் தோல்வியினையே தழுவி வருகிறது. அழுத்தம் கூட கூட வெடிப்புத்தான் நிகழும் எனும் இயற்கையின் நிலைக்கேற்ப போராட்டமும் உக்கிரம் பெற்று வருகிறது. உக்கிரம் அடைந்து வரும் போராட்டத்தினை மேலும் பலம் பெறச் செய்வதற்கு புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பங்கு முக்கியம் பெறுகிறது.

தமிழ் மக்களின் போராட்டத்தினை அனைத்துலக ரீதியாக பலவீனப்படுத்துவதற் கான நாசகாரச் செயல்களை சிறீலங்கா அரசு ஆரம்பித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப் பொறுப்பாளர் லெப். கேணல் நாதன், ஈழமுரசு ஆசிரியர் கப்டன் கஜன் ஆகியோர் பாரிஸில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. அரசின் இந் நாசகாரச் செயலை ஒரு சவாலாக எடுத்து ஈழத் தமிழர் தாயகத்தினைப் பலப்படுத்தும் செயற்பாடுகளை உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் செய்ய வேண்டும். ஈழத் தமிழ் மக்களுக்குத் தாயகம் அமைந்திட உலகத் தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும். தமிழீழ மக்கள் தமது கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுபட வேண்டும்.

களத்திலே உறுதியான தலைமையுடன் நடைபெறும் வீரம் செறிந்த போராட்டம் வெற்றிக்குச் சங்கு ஊதிட உலகத் தமிழர் அனைவரும் உறுதுணையாக வேண்டும். உலகெங்கும் உள்ள தமிழர் எல்லாம் ஒன்றுபட்டார்; தமிழீழ தேச விடுதலைக்கு உறுதுணையாய் நின்றார்; தாயக விடுதலைக்காய் அளப்பரிய தியாகம் புரிந்த தமிழீழ மக்கள் அடைந்திட்டார் விடுதலையை என்பது நாளைய வரலாறாய் அமைய இன்றே எமது கடமைகளுக்குத் தயாராவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
*27–11–1996*

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

இன்றைய நாள் வணக்கத்திற்குரிய நாள்.

ஆயிரம் ஆயிரம் சுதந்திரச் சுடர்களாக எமது விடுதலைக் கோவிலை அலங்கரித்து நிற்கும் எமது மாவீரர்களுக்கு இன்று நாம் வணக்கம் செலுத்தி கௌரவிக்கும் புனித நாள்.

இன்றைய நாள் சாவுக்கு கலங்கி அழும் சோக நாள் அல்ல. அன்றி, துயரத்தில் உறைந்து போகும் துக்க நாளுமல்ல. இன்று தியாகிகளின் திருநாள்.

ஒரு சத்திய இலட்சியத்திற்காக தம் இன்னுயிரை ஈகம் செய்த எம் இனிய வீரர்களை இன்று நாம் எமது நெஞ்சப் பசுமையில் நினைவு கூர்ந்து கௌரவிப்போம். அவர்களது வீரத்திற்கும், அதியுயர்ந்த தியாகத்திற்கும் தலைகுனிந்து வணக்கம் தெரிவிப்போம்.

ஈடிணையற்ற ஈகங்கள் மூலம் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை அளப்பற்றது. எமது மக்கள் இறைமை பெற்று பெருமையுடன் வாழவேண்டும் என்ற இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு காலத்திலும், எந்த ஒரு போராட்டத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்கள் எமது மண்ணில், எமது காலத்தில், எமது போராட்டத்தில் நிகழ்ந்திருக்கிறது. மானிட வரலாறு கண்டிராத, ஒரு வீரகாவியம் எமது மண்ணில் படைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீண்டகாலமாக் தமிழரின் விடுதலை எழுச்சி, நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது. இந்த விடுதலைத் தீயை அணைத்துவிட எமது எதிரியோடு கைகோர்த்து நின்று எத்தனையோ சக்திகள், எத்தனையோ வகையில் அயராது முனைந்து வருகின்றன. இதனால், எமது சுதந்திர இயக்கம் காலத்திற்குக் காலம் பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. எந்தவித உதவியுமின்றி, எந்தவித ஆதரவுமின்றி, எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளுக்கு எதிராக நாம் தனித்து நின்று போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதனால் விடுதலைக்கு நாம் கொடுக்கும் விலை மிகப் பெரிது. தமது உயிரையே விலையாகக் கொடுத்து தமிழரின் தேச சுதந்திரத் தீயை அணையாது காத்துவருபவர்கள் மாவீரர்கள். எனவே, மாவீரர்களை எமது தாயக விடுதலையின் காவற் தெய்வங்களாக நாம் கௌரவிக்க வேண்டும்.

நீண்டதாகத் தொடரும் எமது விடுதலைப் பயணத்தில் நாம் பல நெருப்பு ஆறுகளை நீந்திக் கடந்துள்ளோம். இந்த அக்கினிப் பிரவேசத்தில் நாம் அழிந்து போகாமல் நிலைத்து நிற்பதற்கு, எமது இலட்சிய உறுதிதான் காரணம். அடக்குமுறைக்கு ஆளாகி, இன அழிவைச் சந்தித்து நிற்கும் எமது மக்களுக்கு தன்னாட்சி கோரி நாம் வரித்துக்கொண்ட இலட்சியம் நேரானது, சரியானது, நியாயமானது. அன்றிலிருந்து இன்றுவரை நாம் எமது கொள்கையை உறுதியாகப் பற்றி நிற்கின்றோம். எமது இலட்சியமே எமது மலையான பலம். அந்த மலையான பலத்தில் நாம் நிலையாக நிற்பதால்தான் எமது இயக்கத்திற்கு ஒரு தனித்துவமும், முக்கியத்துவமும், சிறப்பான சரித்திரமும் உண்டு. தமிழீழத்தில் அதிர்ந்த அரசியற் பூகம்பங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் ஏனைய தமிழ்க் குழுக்களின் இலட்சியக் கோட்டைகள் தகர்ந்து போயின. எமது உறுதியை மட்டும் எந்தவொரு சக்தியாலும் உடைத்துவிட முடியவில்லை.

தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு, அன்று எமது உறுதிக்கு பெரும் சவாலாக எழுந்தது. அன்றைய அந்த வரலாற்றுச் சூழலில், ஒரு உலக வல்லரசின் இராணுவ வல்லாதிக்கம் எம்மைப் பலமாக நெருக்கிய பொழுதும் நாம் எமது இலட்சியத்தை தளரவிடாது நெஞ்சுறுதியுடன் போராடினோம். அந்த ஆபத்தான கட்டத்தில் உறுதிதான் எமது இறுதி ஆயுதமாக இருந்தது. அந்த ஆன்மீக பலத்துடன் உலகின் மிகப் பெரிய ஆயுத பலத்தை எம்மால் எதிர்கொள்ள முடிந்தது.

இன்று நாம் ஒரு புதிய சவாலை சந்தித்து நிற்கிறோம். ஒரு புதிய ஆக்கிரமிப்புப் போரை எதிர் கொண்டு நிற்கிறோம்.

எமது வரலாற்றுப் பகைச் சக்தியான சிங்கள பௌத்த பேரினவாதம் சந்திரிகா அரசு என்ற நிறுவன வடிவம் கொண்டு, தமிழினத்திற்கு எதிராக இன அழிப்புப் போர் ஒன்றை நடத்தி வருகிறது. சிங்களத்தின் முழுப் படை பலத்தையும் ஒன்று திரட்டி வடபுலத்தில் தமிழரின் வரலாற்று நிலங்களை ஆக்கிரமித்து நிற்கிறது.

பெரிய தொகையில் படையணிகளையும் , பெரிய அளவில் வெடிப் பொருள் சக்தியையும் பயன்படுத்தி, புலிகளின் படை வலுவை அழிப்பதுதான் இந்த ஆக்கிரமிப்புப் போரின் முக்கிய இராணுவ மூலோபாயமாக அமைந்தது. ஆயினும் இந்தக் குறிக்கோளை அடைவதில் சிங்கள இராணுவம் படுதோல்வியையே சந்தித்திருக்கிறது.

நான்கு புறமும் கடல் சூழ்ந்த குடாநாட்டுப் பகுதியில், புவியியல் ரீதியாக எமக்குப் பாதகமான நிலப் பரப்பில், பெரும் மரபுவழிச் சமர்களை தொடுத்து எமது படைவலுவை அழிக்க இராணுவம் திட்டமிட்டது. இந்தச் சூழ்ச்சிகர திட்டத்தை நாம் நன்கறிவோம். ஆகவே, எதிரியின் இராணுவப் பொறிக்குள் சிக்கிவிடாது, மிகவும் சாதுரியமாகப் போரிட்டு, தந்திரோபாயமான படை நகர்வுகளை மேற்கொண்டு, எமது படை வலுவைச் சீர்குலையாது நாம் பாதுகாத்தோம். இதன் காரணமாக, யாழ்ப்பாணச் சமரில் இராணுவத்தின் முக்கிய மூலோபாயம் கைகூடவில்லை என உறுதியாகச் சொல்லலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கெரில்லாப் போர் முறையைக் கையாளும் ஒரு விடுதலை இயக்கம், பெரும் உயிர்ச் சேதத்தை தவிர்க்கும் நோக்கில், படையணிகளைப் பின் நகர்த்துவதும் சில நிலப்பகுதிகளில் கட்டுப்பாட்டை இழப்பதும் தோல்வியைக் குறிக்காது. இதனை ஒரு தற்காலிகப் பின்னடைவாகவே கொள்ளலாம். படை வலுவையும் போராட்ட உறுதியையும் தக்கவைத்துக் கொண்டால் எமக்குச் சாதகமான புறநிலைச் சூழலில், நாம் தெரிவு செய்யும் நேரத்தில், தாக்குதல்களை நடத்தி எதிரியின் படை வலுவை எம்மால் அழிக்க முடியும். இதனால் இழந்த பிரதேசங்களையும் நாம் மீட்டெடுப்பது சாத்தியமாகும். முல்லைத்தீவில் நாம் ஈட்டிய மகத்தான இராணுவச் சாதனை இதற்கு ஒரு சிறப்பான உதாரணமாகும். இத்தாக்குதலில் சிங்களப் படைகளுக்கு பாரிய உயிர்ச்சேதத்தை விளைவித்து, எதிரியின் படைவலுவை பலவீனப்படுத்தியதோடு இழந்த பிரதேசத்தையும் நாம் மீட்டெடுக்க முடிந்தது. எமது படைவலுவை நாம் தக்கவைத்துக் கொண்டதால்தான் இந்த வெற்றியை எம்மால் ஈட்ட முடிந்தது. அத்தோடு எமது படை வலுவையும் நாம் மேலும் பலப்படுத்த முடிந்தது.

"சமாதானத்திற்கான போர்" என்றும், "தமிழரை விடுதலை செய்யும் படையெடுப்பு" என்றும், பரப்புரை செய்து ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆக்கிரமிப்புப் போர், தமிழரின் அமைதியைக் குலைத்து, தமிழரை அகதிகளாக்கி, தமிழரை அடிமைகளாக்கி, தமிழரின் சமூக பொருளாதார வாழ்வைச் சீரழித்து, தமிழருக்கு என்றுமில்லாத பெரும் அவலத்தைக் கொடுத்திருக்கிறது. சமாதானத் தத்துவம் பேசி உலகத்தை ஏமாற்றியபோதும், இது தமிழருக்கு எதிரான போர் என்பதை சந்திரிகா அரசு நடைமுறையில் காட்டியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு வலயங்களாக துண்டுபோடப்பட்டு, மண்மேட்டு அரண்களும், முட்கம்பி வேலிகளும், மூலைக்கு மூலை காவற் சாவடிகளுமாக காட்சிதரும் தமிழரின் இப் புகழ் மிக்க வரலாற்று மண்ணில் ஒரு இராணுவப் பயங்கரவாத ஆட்சி நடைபெறுகிறது. கைதுகளும், சிறைவைப்பும், சித்திரவதைகளும், பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும், காணாமல் போதலும், பின் மனித புதைகுழிகளுக்குள் கண்டெடுக்கப்படுவதுமாக நிகழ்ந்துவரும் கோரமான சம்பவங்கள் ஒரு உண்மையைப் புலப்படுத்தி காட்டுகிறது. அதாவது, இராணுவ ஆட்சி நடைபெறும் தமிழ்ப்பகுதிகளில் மிகமோசமான ஒரு இனஅழிப்புக் கொள்கை மறைமுகமாக செயற்படுத்தப்படுகிறது என்பதையே இது காட்டுகிறது.

ஆக்கிரமித்த பகுதிகளில் நிகழும் அட்டூழியங்களும், மற்றும் பரவலாக தென்னிலங்கையில் நடைபெறும் தமிழர் விரோத நடவடிக்கைகளும் சந்திரிகா அரசின் உண்மையான இனவாத முகத்தை அம்பலப்படுத்தி காட்டுகிறது. முந்திய இனவாத அரசுகளை விட சந்திரிகாவின் ஆட்சிபீடம் தமிழரின் தேசிய ஆன்மாவை ஆழமாக புண்படுத்தியிருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

சந்திரிகா அரசு தமிழருக்கு நீதி வழங்கப் போவதில்லை என்பதையும், தமிழரின் தேசிய பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்போவதில்லை என்பதையும் நாம் ஆரம்பத்தில் இருந்தே உணர்ந்து கொண்டோம். சமாதானப் பேச்சுக்களின் போது சந்திரிகா அரசு கடைப்பிடித்த கடுமையான போக்கும், விட்டுக்கொடாத மனப்பாங்கும் எமக்குப் பெரும் ஏமாற்றத்தை தந்தது. தமிழரின் சாதாரண வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்யும் அற்ப சலுகைகளை மறுத்து, இராணுவத்தின் மேலாதிக்க நலன்களைப் பேண முனைந்ததால் அன்றைய பேச்சுக்கள் அர்த்தமற்றதாக முடிவுற்றது. இராணுவப் பலத்திலும், இராணுவ அணுகுமுறையிலும், இராணுவத் தீர்விலும் நம்பிக்கை கொண்டிருந்ததால் பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் கொடாது, பேச்சுக்கள் முறிவடைவதற்கான புறநிலைகளையும் சந்திரிகா அரசு உருவாக்கியது. தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி, ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சி புரிய வேண்டும் என்பதே, அன்றும் இன்றும், இந்த அரசின் ஆழமான அபிலாசையாக இருந்து வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவவாதமும் இனவாதமும் மேலோங்கி நிற்கும் இந்த அணுகு முறையானது இனப்பிரச்சினையை என்றும் இல்லாதவாறு சிக்கலாக்கியுள்ளது. சமாதானத்தின் கதவுகளை இறுக மூடியுள்ளது. போரை விரிவுபடுத்தி தீவிரமாக்கி யுள்ளது. சிங்களத்தின் பொருண்மியத்தை சீரழித்துள்ளது. ஒட்டுமொத்தத்தில் சந்திரிகாவின் அரசாங்கம் இன்று மீள முடியாத ஒரு நெருக்கடிக்குள் சிக்குப்பட்டு நிற்கிறது.

சந்திரிகாவின் "சமாதானத்திற்கான போர்" தமிழரின் தேசிய வாழ்வை சீரழித்து இருப்பதுடன், முழு இலங்கையையுமே பேரழிவிற்குள் தள்ளிவருகிறது என்பதை சர்வதேச சமூகம் இன்று உணரத் தொடங்கியுள்ளது. விரிவடைந்து செல்லும் போருக்கும், இராணுவ கடும் போக்கிற்கும் எதிராக உலகத்தில் இருந்து எழும் அழுத்தத்தை திசைதிருப்பும் நோக்கில் சந்திரிகா அரசு சமாதான சமிக்ஞைகளை விடத் தொடங்கியுள்ளது.

மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப்பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை "பயங்கரவாதம்" என்றும், அந்தப் போராட்டத்தை தலைமை தாங்கி முன்னெடுக்கும் எமது விடுதலை இயக்கத்தை "பயங்கர வாத அமைப்பு" என்றும் சர்வதேச உலகில் தீவிர பரப்புரை செய்து, உள்நாட்டிலும் வெளியுலகிலும் எமது இயக்கத்திற்கு தடைவிதிக்க இந்த அரசு பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது. அதேவேளை ஒரு ஆண்டிற்குள் புலிகளை ஒழித்துவிடுவோம் என அறை கூவல்களை விடுத்து போரைத் தொடர்வதற்கு படைகளை தயார் நிலைப்படுத்தியும் வருகிறது. இந்தச் சூழலில், சந்திரிகா சமாதானம் பற்றி பேசுவது எமக்கு சந்தேகத்தை எழுப்புகிறது.

நாம் சமாதானத்தின் விரோதிகள் அல்லர். அன்றி, சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிரானவர்களும் அல்லர். நாம் வேண்டுவது உண்மையான சமாதானத்தையே. எமது மக்கள், எமது மண்ணில், நிம்மதியாக, சுதந்திரமாக, அந்நியத் தலையீடு இன்றி அமைதியாக வாழ்ந்து, தமது அரசியல் வாழ்வை தாமே தீர்மானிக்கக் கூடிய உண்மையான, கௌரவமான, நிரந்தரமான சமாதானத்தையே நாம் விரும்புகிறோம். இந்த சமாதான வாழ்வை தமிழருக்கு வழங்க சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் இணங்குமா என்பது சந்தேகத்திற்கு உரியது.

இனவிரோதமும், ஆதிக்க வெறியும், இராணுவத் தீர்வில் நம்பிக்கையும் கொண்ட எந்தவொரு சிங்கள அரசும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணப் போவதில்லை. தமிழீழ மக்கள் வரலாற்று ரீதியாகக் கண்டுகொண்ட உண்மை இது. சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் பாதுகாவலனாகவும், அரசியல் பிரதிநிதியாகவும் விளங்கும் சந்திரிகா அரசு, இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு தமிழ் மக்களுக்கு உண்மையான சமாதான வாழ்வை உருவாக்கி கொடுக்கும் என நாம் நம்பவில்லை. இந்த நம்பிக்கை யீனத்தின் அடிப்படையில்தான் நாம் மூன்றாம் தரப்பு நடுநிலையை நாடினோம். எதிர்காலத்தில் சமாதானப்பேச்சுக்கள் சாத்தியமாவதானால், அது சர்வதேச மத்தியத் துவத்துடன் நடைபெறவேண்டும் என ஒரு வருடத்திற்கு முன்னரே நாம் அறிவித்திருந்தோம். ஆனால், சந்திரிகா அரசு அப்பொழுது எமது யோசனையைக் கருத்தில் எடுக்கவில்லை. மாறாக வடபுலத்தில் ஆக்கிரமிப்புப் போரை விஸ்தரித்து, இன நெருக்கடியை மோசமாக்கி, சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையைக் கெடுத்தது.

தமிழர் மண்ணை ஆக்கிரமித்து, அந்த ஆக்கிரமிப்பை இராணுவ மேலாதிக்க நிலையாகக் கருதி, அதனைத் தனக்கு அனுகூலமான அழுத்தமாகப் பாவித்து, பேச்சுக்களை நடத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள அரசு எண்ணலாம். ஆனால் எம்மைப் பொறுத்தவரை இவ்விதமான பேச்சுவார்த்தை சுதந்திரமானதாக, சமத்துவமானதாக அமையாது. ஏனெனில், இராணுவ பலத்தை துருப்புச்சீட்டாக வைத்து எமது மக்களின் உரிமைகளுக்காகப் பேரம்பேச முயலும் ஒரு அரசிடம் நாம் நீதியை எதிர்பார்க்க முடியாது. அதனால்தான், இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்கிய சுமூகமான இயல்பு நிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம். படைகள் விலகுதல், நெருக்கடியைத் தணித்தல், இயல்புநிலையைத் தோற்றுவித்தல் ஆகியன அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன்நிகழ்வாக அமைதல் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். இப்பிரச்சினைகள் பற்றிப் பேசி ஓர் உடன்பாட்டைக் காணவும் நாம் தயாராக இருக்கிறோம்.

எமது நியாயமான நிலைப்பாட்டை சந்திரிகா அரசு ஏற்றுக்கொள்ளும் என நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள–பௌத்த பேரினவாதமானது, காலம் காலமாக, இராணுவ மேலாண்மையில் நம்பிக்கைகொண்டு செயற்பட்டு வருகிறது. இராணுவ பலத்தின் நிழலின் கீழேயே சந்திரிகாவினது ஆட்சியும் நடக்கிறது. எனவே, இராணுவ பலத்தைக் கைவிட்டு, தார்மீக பலத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது சந்தேகத்திற்குரிய விடயமே.

சிங்கள ஆட்சியாளரிடம் கைநீட்டி நின்று, நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. நாமே எமது உரிமைகளைப் போராடி வென்றெடுக்க வேண்டும். போராடாது, இரத்தம் சிந்தாது, சாவையும் அழிவையும் சந்திக்காது, தியாகங்கள் புரியாது எந்தவொரு தேசமும் விடுதலை பெற்றுக்கொண்டதாக வரலாறு இல்லை.

ஆகவே, நாம் போராடுவோம். எமது இரத்தத்தை விலையாகக் கொடுத்தும் எமது இலட்சியத்திற்காகப் போராடுவோம். வெற்றிகளை ஊக்கமாக எடுத்து, பின்னடைவுகளைச் சவாலாக ஏற்று, நாம் தொடர்ந்து போராடுவோம். எவ்வித இன்னல்கள் வந்தாலும், எவ்விதத் துன்பங்கள் நேர்ந்தாலும் நம்பிக்கை இழக்காது நாம் தொடர்ந்து போராடுவோம். எமது மண்ணிலிருந்து சிங்களப் படைகளை விரட்டும் வரை, எமது தேசத்திற்கு விடுதலை கிட்டும் வரை, எமது மக்களுக்கு விடிவு ஏற்படும் வரை நாம் உறுதி தளராது துணிந்து போராடுவோம்.

ஆக்கிரமிப்பாளனின் அடக்குமுறைக்கு ஆளாகி, அவலக்குரல் எழுப்பி நிற்கும் எமது நேசத்திற்குரியவர்களின் துயரக் கண்ணீரைத் துடைப்போம் என உறுதியெடுத்து, மாவீரர்களுக்கு இன்று எமது வீரவணக்கத்தைச் செலுத்துவோம்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

*(வே. பிரபாகரன்)*
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் 1996ம் ஆண்டு மாவீரர்நாள் செய்தி)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையுடன் புலிகள் இயக்கத்தின் பற்களும், நகங்களும் பிடுங்கியெறியப்பட்டன. என்ற அரசின் பரப்புரையை நம்பிய சிங்கள மக்கள் முல்லை இராணுவ முகாம் வீழ்ச்சி பற்றிய செய்தியறிந்து திகைத்துப் போனார்கள். படையினர் மத்தியில் பீதியூட்டும் விடயம் யாதெனில், இந்த இராணுவ அழிவு எப்படி நடந்தது என்பதைக் கண்டறிய முடியாத கையறு நிலையில் சிறிலங்காவின் இராணுவத் தலைமையகம் இருக்கின்றது. 'ஓயாத அலைகள்' நடவடிக்கையில் புலிகள் பெற்ற இராணுவ வெற்றியின் உளவியல் பரிமாணம் இதுவாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இறுதி அத்தியாயம் எப்படி அமையப் போகின்றது என்று உலகம் அவதானித்துக் கொண்டிருந்த நேரம் அது.

குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியதைக் கண்டு, போராட்ட வெற்றியில் எமது மக்களும் அவநம்பிக்கை கொண்ட காலம் அது.



இந்த நேரத்தில் தான் 'ஓயாத அலைகள்' எழுந்தது. இந் நிகழ்வு இராணுவ உலகத்தை ஒரு கணம் ஆச்சரியத்துக் குள்ளாக்கியது. புலிகள் இயக்கத்தைப் புரிந்து கொள்ளவே முடியாது என விழிக்க வைத்தது.?

இராணுவ உலகிற்கு அன்றும் இன்றும் புலிகள் இயக்கம் புரியாத புதிராகவே உள்ளது. எந்த இராணுவ ஆய்வுகளுக்குள்ளும் எந்த அளவு கோல்களாலும் சரியாகக் கணிப்பிடப்பட முடியாதவர்களாக புலிகள் இருக்கிறார்களே அது எப்படி? என்கிற கேள்வி எழுந்து நிற்கிறது.

இத்தகைய புரியாத புதிர்த் தன்மைக்கு மூலவேர் யாது? எங்கிருக்கிறது அந்த வேர்? என்ற தேடல் நிகழ்கிறது.

இராணுவ உலகிற்கு அன்றும் இன்றும் புலிகள் இயக்கம் ஒரு புரியாத புதிராகவே உள்ளது. தலைவர் பிரபாகரனின் இராணுவச் செயற்பாடுகளில் உள்ள தனித் தன்மைகளே, புலிகள் இயக்கத்திற்கு இத்தகைய புதிர்த தன்மைகளைக் கொடுத்துள்ளன.

தீவிரம் குறைந்த போர் முறையை மேற்கொள்ளவே புலிகளின் தற்போதைய இராணுவ பலம் இடம் கொடுக்கும் என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் ஆருடம் கூறியிருந்தார்கள். ஆனால் இத்தகைய படையினர் கணிப்பீடுகள் மற்றும் இராணுவ அபிப்பிராயங்கள் அனைத்தையும் 'ஓயாத அலைகள்' மூழ்கடித்துவிட்டது.

புலிகள் இயக்கம் பற்றிய இராணுவ மதிப்பீடுகளை சமகால ஆய்வாளர்களால் சரியாகக் கணிக்க முடியாதுள்ளதற்குப பிரதான காரணம் அந்த ஆய்வாளர்கள் வைத்திருக்கும் இராணுவ அளவு கோல்கள் தான் இந்த அளவு கோல்கள், உலகின் இராணுவ சிந்தனையாளர்கள் மற்றும் புகழ் பூத்த படைத் தளபதிகள் ஆகியோரின் போதனைகள், அனுபவங்கள் என்பவற்றால் ஆக்கப்பட்டுள்ளன.

ஆனால் இதற்கும் அப்பால், தலைவர் பிரபாகரனின் இராணுவச் சிந்தனைகளும், செயற்பாடுகளும் பெரும்பாலும் தனித்தன்மை வாய்ந்தவைகளாக அமைந்துள்ளன. இதன் காரணமாக, தாம் வைத்திருக்கும் இராணுவ அளவு கோல்களைப் பயன்படுத்த பிரபாகரனின் போர்க்கலையை சரியாக அளந்து– கணிக்க முடியாது வல்லுனர்கள் திண்டாடுகின்றனர். இதனால் தான் புலிகள் இயக்கம் பற்றி இராணுவ விமர்சகர்கள் கூறும் கருத்துக்கள் கணிப்புக்களில் அடிக்கடி பெருந் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன.

என்றைக்கு தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது போர்க்கலை முறைகளை விரிவாக விளக்கி உலகிற்கு வழங்குகின்றாரோ அன்றைக்குத் தான் புலிகள் இயக்கம் பற்றிய புதிரும் விடுபடும். ★



# போர்க்கலையும் தலைவர் பிரபாகரனும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரச பயங்கரவாதத்தின் சர்வதேசப் பிரச்சாரம்



(.....சென்ற இதழ் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பட்டயத்தின் வரையறைக்கு உட்பட்ட நியாயமான போராட்டம் என்று உலக நாடுகளாலும், நாடுகளின் கூட்டமைப்புக்களாலும், அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இதற்குக் காரணம், ஈழத்தமிழர்கள் தமக்குரிய மொழி, கலாச்சாரம், தாயக நிலம் ஆகிய தேசிய அடையாளங்களைக் கொண்டவர்களாகவும், தேசிய சுயநிர்ணய உரிமை உடையவர்களாகவும் விளங்குகிறார்கள். இப்போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமாக விளங்குவதற்கான காரணங்களாக பிரான்சில் பொய்ல் என்ற சட்ட அறிஞரால் கூறப்படும் காரணங்கள் பின்வருவன.

1. 1966ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஐ.நா. சபையின், குடியியல், அரசியல் உரிமைகள் விதிகளின் பிரகாரமும், பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் விதிகளின் பிரகாரமும் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு.
2. பிரிட்டிஷ் குடியேற்றவாதிகள் நாட்டைவிட்டுச் சென்றபோது ஆட்சியதிகாரம் சிங்கள மக்களைச் சென்றடைந்தது. அவ்வாட்சி அதிகாரத்தில் தமிழர் பங்கேற்பதைத் தடுத்த சிங்கள மக்கள், தமிழர்களை ஒடுக்குமுறைக்கும், பாரபட்சத்திற்கும் உட்படுத்தினர். எனவே, சிங்களக் குடியேற்றவாதம் தமிழ் மக்கள் மேல் தொடர்வதாக அமைந்தது.
3. சிங்கள இராணுவம் தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்துள்ளது. இவ்விராணுவம் ஒரு அந்நிய இராணுவமாக விளங்குவதோடு, தமிழ் மக்களை இலங்கைக் குடிகளாகக் கருதாது, வேற்றின மக்களாகக் கருதிக் கொடுமைப்படுத்துகிறது. எனவே, அந்நிய ஆதிக்கம் தமிழ் மக்கள் மீது நிலைநிறுத்தப்படுகிறது.
4. சிங்கள ஆட்சியாளர்களின் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறை, சிறீலங்கா அரசாங்கத்தை ஒரு இனவாத அரசாக மாற்றியுள்ளது. சிங்கள இனவாதம் வரலாற்று ரீதியாக நிரூபணம் ஆகியுள்ளது.

சுயநிர்ணய உரிமையுடைய தமிழ் மக்கள், குடியேற்றவாத, அந்நிய, இனவாத ஆட்சிக்கு எதிராகப் போராடுவதால் இப்போராட்டம் ஐ.நா. சபையின் விதிகளுக்கு அமைய சட்டபூர்வமானது என்பது அவரது வாதம்.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, தனிநபர்களைக் கொண்ட ஒரு குழு அல்ல. அது, சுயநிர்ணய உரிமை கொண்ட ஒரு மக்கள் கூட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலை இயக்கம் என்பது அவரது துணிபு. மேலும், இலங்கையில் ஒரு போர் நடந்து கொண்டிருக்கிறது. இப்போரில், மனிதாப சட்டங்கள் அனுட்டிக்கப்படவேண்டும் என்று ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதாவது, உள்நாட்டு ஆயுத முரண்பாட்டுக்குரிய ஜெனிவா சட்டவிதிகளுக்கு, இலங்கையில் நடைபெறும் போர் உட்பட்டது என்பதாகும். இதற்கு அமைவாகவே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போரிடும் இரு பகுதியினருக்கும் இடையில் நடுவு நிலையில் செயற்படுகின்றது. ஐ.நா. சபையின் அகதிகள் உயர் ஸ்தானிகர் அமைப்புடன் விடுதலைப் புலிகள் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளனர். மேலும், சிறீலங்கா, இந்திய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகள் நடத்தியுள்ளனர். சிறீலங்கா அரசாங்கத்துடன் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

மேலும், நோர்வே அரசாங்கம் உத்தியோகபூர்வமாக, விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசாங்கத்துக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்க, எழுத்துமூலமான கோரிக்கையை விடுத்தது. இன்னோரன்ன காரணங்களினால், விடுதலைப் புலிகளின் ஆயுதச் செயல்பாடுகள் பயங்கரவாதம் இல்லை என்பதும், சர்வதேச சட்ட வரையறைக்கு உட்பட்ட போர் நடவடிக்கைகள் என்பதும் அவரது கருத்து. மேலும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், ஜெனிவாப் போர்ச் சட்டவிதிகளுக்கு அமைவாக செயற்படுவோம் என்று எழுத்துமூலமான அறிக்கை வெளியிட்டமை, விடுதலைப் புலிகள் இயக்கம், ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்பதற்கான சான்று என்று அவர் கூறுகிறார்.

அமெரிக்க, மனித உரிமைகள் சட்ட அறிஞர் திருமதி கரன் பாக்கர் இலங்கையில் உள்நாட்டுப் போர் நிலவுவதை மேற்கூறிய ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துகிறார். 40 ஆண்டு காலம் தொடர்ச்சியான மிகக் கொடூரமான ஒடுக்குமுறைக்கு தமிழ் மக்கள் உட்பட்டு வருவதையும் எடுத்துக்காட்டுகிறார். இவ்வளவு காலமும் எவ்வித நியாயமான தீர்வுமுள்ளதமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டு வந்த காரணத்தினாலும், அகிம்சை வழிகள் தோற்றுப் போன காரணத்தினாலும், தமது உரிமைகளைப் பெறுவதற்கான அனைத்து ஜனநாயக வழிகளும் மூடப்பட்ட காரணத்தினாலும் தமிழ் மக்கள் கடைசியாக ஆயுத வழியைத் தேர்ந்தனர் என்பது அவரது வாதம். எனவே, அவர்கள் நடத்தும் ஆயுதப் போராட்டமும், அதனை வழிநடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சட்டபூர்வமானவை என்று கூறுகிறார்.

தேசிய சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்துவதற்கான போராட்டமாக இருப்பதால் இது ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்றும் அழுத்தமாகத் தெரிவிக்கிறார். மேலும், விடுதலைப் புலிகள் இயக்கம், கட்டுப்பாடு உடையது என்றும், அதிகாரப் படமுறையைக் கொண்டிருக்கிறது என்றும், தனது உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவும், கண்டிக்கவும் ஆளுமை கொண்டதென்றும் இன்னோரன்ன காரணங்களினால், விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல; தேசிய விடுதலை இயக்கம் என்று நிரூபிக்கிறார். அலெக்ஸ் பாட்ஸ்லி என்னும் அறிஞர், யார் பயங்கரவாத செயல்பாடுகளைச் செய்கிறானோ அவனே பயங்கரவாதி என்று அழைப்பதற்கு தகுதி உடையவன் என்கிறார். பயங்கரவாதம் என்பது மக்களைக் கண்மூடித்தனமான வன்செயல் மூலம் பயங்கரப்படுத்தல் ஆகும். வட அயர்லாந்தின் Sinn Fein அமைப்பின் தலைவர், ஜெரி அடம்ஸ் தமது அரசியல் நோக்கம் சரியாக இருப்பதன் காரணமாக, தமது வன்செயல் நடவடிக்கைகளும், பொது மக்களைப் பாதிப்பதாயினும் நியாயமானதே என்று வாதாடுகிறார். பிரிட்டிஷ் சோஷல் டெமோக்ரட் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர், சைமன் ஹியூஸ் என்பவர், விடுதலைப் புலிகளின் வன்செயல்களின் பின்னே அரசியல் நியாயம் இருப்பதை சுட்டிக் காட்டுகிறார். அதேவேளை விடுதலைப் புலிகள், கண்மூடித்தனமான தாக்குதல்களை பொதுமக்கள் மீது மேற்கொள்வதில்லை என்று இன்னொரு அரசியல் அறிஞர் சுட்டிக் காட்டுகிறார். தமது அதிகார பலத்தை வெளிக்காட்டவும், தமது நியாயமான கோரிக்கைகளை பிரபல்யப்படுத்தவும் தெரிவுசெய்த பொருளாதார, இராணுவ இலக்குகளையே அவர்கள் தாக்குகிறார்கள், அதன்போது பொதுமக்களும் இறந்துபட நேரிடுகிறது என்பது அவரது வாதம்.

நியூசிலாந்து மலே பல்கலைக்கழக, மானிடவியல் பேராசிரியரான மார்கரட் ட்ராவிக், சிறீலங்கா இராணுவமே கண்மூடித்தனமான முறையில் தமிழ் பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்துவதாகக் கூறுகிறார். எனவே, சிறீலங்கா அரசாங்கம் ஒரு பயங்கரவாத அரசு என்று தெரிவிக்கிறார்.

எனவே மேலே தெரிவித்த கருத்துக்களின் பிரகாரம், தமிழீழ விடுதலைப் போராட்டம் சர்வதேச சட்ட விதிகளுக்கு உட்பட்ட போராட்டம் என்பதும், அப்போராட்டத்தையும், அப்போராட்ட அமைப்பையும் சர்வதேச சமூகம் அங்கீகரிப்பதன் மூலமே தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணலாம் என்று வெளிப்படுகிறது. அதேவேளை, சிறீலங்கா அரசாங்கம் பயங்கரவாத அரசாகச் செயல்பட்டுக் கொண்டு, விடுதலைப் புலிகளை மட்டுமல்ல, தமிழ் மக்களையும் சர்வதேச பயங்கரவாதம் என்ற வரையறைக்குள் பயங்கரவாதிகளாக சித்தரிக்க முயல்கிறது. எனவே, தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு அரச பயங்கரவாதப் பிரச்சாரத்தை முறியடித்து தமது நியாயமான போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பெற உழைத்தல் வேண்டும்.

**- வளவன்**



**கொலன்னாவ** – தெரிவுசெய்யப்பட்ட பொருளாதார இலக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகா இன



திருமதி சந்திரிகா குமாரதுங்கா பண்டாரநாயக்கா சிங்கள பௌத்த பேரினவாதப் பூதத்திற்குத் தலைமை கொடுக்கும் ஒரு பேரின வாதி. ஆனால், ஒரு காலகட்டத்தில் உலகினையும், கணிசமான தமிழ் மக்களையும் தன்னை சமாதானப் புறாவாக, இனவாதத்தினைக் கடந்த அரசியற் தலைவராக நம்ப வைத்த திறமை இவருக்கு இருந்தது.

இப்போது, பொதுவாகத் தமிழ் மக்கள் மத்தியில் இவரது உண்மை யான சொரூபம் வெளிப்பட்டு விட் டது. சந்திரிகா ஒரு இனவாதி – அதுவும் கொடூரமான முறையில் இன அழிப்பைச் செய்யும் ஒரு இனவாதி என்பதனைத் தமிழர்கள் அனைவருமே புரிந்து கொள்வதில் கஸ்டங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

சந்திரிகாவினைப் பற்றிப் புரிந்து கொள்வதானால் அவரது சில இயல்பு களை நாம் கவனத்திற்கொள்ள வேண் டும். அவர் அரசியலில் தலையை 'நீட் டிய காலம் தொட்டுத் தமிழ் மக்கள் தொடர்பாக அவருக்கு எத்தகைய கரிசனை இருந்தது என்பதனை உணர்ந்து கொள்ளலும் முக்கியம்.

சந்திரிகாவின் அரசியற் பிரவேசம் அவரது கணவரான விஜயகுமாரதுங் காவின் தடங்களை ஓட்டியே இருந் தது. இலங்கைத்தீவின் 'சுதந்திரத்திற் குப்' பின் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய ஐக்கியதேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி போன்றவற்றிற்கு ஒரு மாற்றம் தேடும் நோக்கம் விஜயகுமார துங்காவின் அரசியலில் இருந்தது. கணவர் அரசியலில் ஈடுபட்டாலும், இருபெரும் தலைவர்களின் 'மகள்' என்ற திமிர் சந்திரிகாவிடம் இருக் கவே செய்தது. அத்தகைய திமிர் மட்டுமல்ல, தந்தை வழி, தாய்வழி இனவாத அரசியலின் தாக்கமும் சந்தி ரிகாவினை நிறையவே பாதித்திருந் தது. இதனால் விஜயகுமாரதுங்கா வின் எல்லா அரசியல் நகர்வுகளிலும் சந்திரிகா உடன்பட்டதுமில்லை; அவ் வாறு உடன்படாத விடயங்களில் கணவருக்காக அவர் ஒத்தும் ஓட வில்லை. விஜயகுமாரதுங்காவும் அவரை பெரிதும் வற்புறுத்தவுமில்லை. அப்போது சந்திரிகா ஒரு பெரிய அரசியல் ஆளுமையுமல்ல.

தமிழ் மக்கள் தொடர்பாகச் சந்தி ரிகாவுக்கு அனுதாபம் இருந்ததாகக் கூறப்பட்டதெல்லாம் ஒரு மாயை. இதனை சந்திரிகாவின் கணவரின் நண்பரான ஒஸி அபய குணசேக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனும் நவீன இனவாதியின் ஒழிப்புத் திட்டம் தான் என்ன?

ராவே ஒரு தடவை வெளிப்படுத்தியிருந்தார். அவர் இறப்பதற்கு முன் 'சந்திரிகா' பத்திரிகைக்கு வழங்கியிருந்த பேட்டியில் அவர் அதனைக் குறிப்பிட்டிருந்தார். அப்பேட்டியில் குறிப்பிடப்பட்ட சரியான வார்த்தைகள் எனது நினைவில் இல்லாவிடினும் அதன் சாரம் நன்றாகவே நினைவில் நிற்கிறது. விஜயகுமாரதுங்காவும் தானும், மன்னாரில் விடுதலைப்புலிகளிடம் யுத்தக்கைதிகளாகச் சிக்கிக் கொண்ட இரண்டு இராணுவத்தினரை விடுவிப்பது தொடர்பான பேச்சு வார்த்தைகள் தொடர்பாக 86–ல் யாழ்ப்பாணம் சென்றபோது சந்திரிகாவினையும் வரும்படி அழைத்ததாகவும், அப்போது சந்திரிகா தமிழர்கள் குறித்துத் தமக்கு எதுவித அக்கறையுமில்லை எனவும், யாழ்ப்பாணம் போவதனால் வரக்கூடிய ஆபத்தை எதிர்கொள்ளத் தான் தயாராக இல்லை எனவும் தெரிவித்ததாக ஓஸி அபயகுணசேகரா தெரிவித்திருந்தார்.

விஜயகுமாரதுங்காவின் மரணத்திற்குப் பின் சந்திரிகா தனது குழந்தைகளுடன் அஞ்ஞாதவாசம் புரிந்து வந்தவர்.

வெளிநாடுகளில் இடையிடையே 'சிறீலங்கா' தொடர்பான கருத்தரங்குகளில் தலையை நீட்டியிருக்கிறார். பின் நாடு திரும்பி, அரசியலில் நுழைந்து, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருந்த உட்பூசலைப் பயன்படுத்தித் தன்னை ஸ்த்திரப்படுத்தி – அதனூடாக ஜனாதிபதியாகிக் கொண்டார். பண்டாரநாயக்கா – சிறிமாவோ ஆகியோரின் புதல்வியாக இருந்தமையினாலே தான் அவரால் அவ்வாறு ஜனாதிபதியாக முடிந்தது.

சந்திரிகா, அரசுக் கட்டிலில் ஏறிய போது அவரிடம் இலங்கையின் அரசியற்சூழல் குறித்து சரியான பார்வை இருக்கவில்லை. அதேவேளை அவர் குறித்து ஒரு பெருமிதம் அவரிடம் இருந்தது. தம்மை எல்லோரும் புகழ வேண்டும் என்பதில் அளவிலா விருப்பம் அவரிடம் இருந்தது. இருப்பினும் அவர் அதனை வெளிப்படையாகக் கூறிக்கொண்டதில்லை. ஆனால் அவரது உரையாடல்களை கூர்மையாக அவதானித்திருப்பின் அதனைப் புரிந்து கொண்டிருக்க முடியும். உதாரணமாக சந்திரிகா பிரதமராக இருந்த போது விடுதலைப்புலிகளின் யுத்தக் கைதிகளாக இருந்த சில பொலிசார் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு விடுவிக்கப்பட்ட பொலிசாரோடு சந்திரிகா உரையாடிய போது, தம்மைப் பற்றிய அபிப்பிராயம் எவ்வாறு அங்கு இருந்தது என்பதனை அறிவதில் அவர் தீவிர அக்கறை காட்டியிருந்தார். இதனை இன்னொரு வகையாகக் கூறின் தம்மைத் தலைவராக ஏற்றுக் கொள்ளும் மன விருப்பம் எவ்வளவு தூரம் உள்ளது என்பதனை அறிந்து கொள்வதில் சந்திரிகாவுக்கு இருந்த தீவிர அக்கறையினை இது வெளிப்படுத்தியதாகவும் கூறமுடியும்.


சந்திரிகா, ஆட்சிபீடம் ஏறுவதற்கு முன் மிக இலகுவாக 'முற்போக்கான' வாக்குறுதிகளை அள்ளித் தெளித்தார். இனப்பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வு காணப்படும்; பத்திரிகைச் சுதந்திரம் பூரணமாக வழங்கப்படும்; ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்கப்படும் – இப்படியாக வாக்குறுதிகளை அள்ளித் தெளித்த வண்ணமே ஆட்சிபீடமேறினார். அவ்வாறு ஆட்சிபீடம் ஏறிய பின்னர் எதனையுமே அவர் நடைமுறைப்படுத்தியதில்லை. சந்திரிகாவின் 'முற்போக்கான' கொள்கைகளுக்காகவே அவரது அரசினை ஆதரிப்பதாகக் கூறிய 'புத்திஜீவிகளும்' அவர் தனது வாக்குறுதிகளை எல்லாம் பறக்க விட்டு, கொடுங்கோல் ஆட்சி புரிகின்ற போதும் சந்திரிகா அரசுக்கு காவடி தூக்கிக் கொண்டு தான் நிற்கிறார்கள். இதிலிருந்து அரசியல் அதிகாரம் தமக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்பதே இவர்களது அக்கறையாக இருந்ததே தவிர வேறு எதுவும் இல்லை என்பது மிகவும் தெளிவாகவே தெரிகிறது.

சந்திரிகா இன்று சிங்கள பௌத்த பேரினவாதத்தினை நவீன முறையில் தலைமை கொடுக்கிறார். தமிழரைக் கொன்றொழிக்க வேண்டும் என்பதில் துடியாய் துடித்துக் கொண்டு நிறுவனமயப்பட்டு நிற்கும் பேரினவாதத்திற்கு உலகின் இன்றைய போக்கிற்கு ஏற்ப சந்திரிகா தலைமை கொடுக்கின்றார். சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அவர் ஒரு கவசமாக இருந்து அதனை பாதுகாத்து வருகின்றார். அதற்குத் தேவையான செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்து வருகிறார்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சந்திரிகாவின் இன்றைய திட்டங்களில் இராணுவத் தீர்வினை உறுதியாகத் தொடர்வது என்பது முக்கிய இடத்தினை வகிக்கிறது. அவ்வாறு இராணுவத்தீர்வு காண்பதற்குத் தேவையான சர்வதேசச் சூழலை தமக்குச் சாதகமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் சந்திரிகா தீவிர கவனம் செலுத்துகிறார்.

கொடூரமான இராணுவ ஒடுக்குமுறையினைத் தமது மாமனார் ரத்வத்தையின் தலைமையில் ஒப்படைத்துவிட்டு கதிர்காமர், பீரிஸ் துணையுடன் – தமிழர்களை கொன்றொழிக்கும் யுத்தத்திற்கு சர்வதேச ஆதரவினைச் சந்திரிகா திரட்டி வருகிறார்.

இதற்காக அவர் உலக கவனத்தில் சில விடயங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றார்.

1. இன்றைய உலக ஒழுங்கில், ஒரு நாட்டில் இடம்பெறும் பிரச்சினைகளை உள்நாட்டுப் பிரச்சினையாகவே கூடுதலான அளவு பார்க்க முயலும் போக்கினைத் தமக்குச் சாதகமாக்குதல். மனிதாபிமான காரணங்களுக்காக சர்வதேச நாடுகள் அக்கறை கொள்ளும், பனிப்போர் முடிவடைந்தமையினால், பனிப்போர் அரசியலை மையமாகக் கொண்ட அரசியல் தலையீடு குறைவாக இருப்பது இதற்கு ஒரு காரணம்.

2. உலகின் எந்த யுத்தமும் போரிடும் ஒரு தரப்பினைப் பலப்படுத்தாமல் முடிவுக்கு வந்தது இல்லை என்ற மேற்குலக எண்ணத்தினைச் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தல். அரச தரப்பு பலவீனப்படுத்தப்படுவதனை விட, கெரில்லாப் போராளிகள் தரப்பு பலவீனப்படுவதனை இன்று மேற்குலக நாடுகள் விரும்புகின்றன. ஆனால் இது அரசு மேற்குலகத்திற்குச் சாதகமான அரசாக இருக்கிறதா என்பதனைப் பொறுத்தே உள்ளது.

3. சர்வதேச பயங்கரவாதம், அடிப்படைவாதம் போன்றவை தொடர்பாக மேற்குலகம் காட்டி வரும் அக்கறையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தல். உண்மையில் விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேசப் பரிமாணம் கிடைப்பதனை விரும்பாத சந்திரிகா போராட்டத்தினைப் பயங்கரவாதமாகச் சித்தரித்தபோது அதனை 'சர்வதேச பயங்கரவாதத்தின்' ஒரு பகுதி எனச் சித்தரித்து வருகிறார்.

4. மேற்குலக நாடுகள் விரும்பும் பொருளாதாரக் கொள்கையினைக் கடைப்பிடித்து அதனூடாக தமிழரை நசுக்கும் போராட்டத்திற்கு மேற்குலக உதவியினைப் பெறமுயல்கிறார்.

இவ்வாறு சந்திரிகா தனக்குச் சாதகமாக காய்களை நகர்த்தும் போது அதற்கு ஈடுகொடுத்து செயற்பட வேண்டியது தமிழர் தரப்பின் கடமையாகும். தமிழ் மக்களின் போராட்டத்திற்குச் சார்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் தூதுவர்களாக வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் செயற்பட வேண்டியது காலத்தின் தேவை.

★

## புலிகளின் முதுகெலும்பை உடைக்க முற்பட்டு அவமானகரமான பின்னடைவுகளையே இராணுவம் சந்தித்திருக்கிறது

விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை உடைக்க முற்பட்ட படையினர் பின்னடைவுகளைச் சந்தித்ததில் அவர்களுக்கு அவமானங்கள் ஏற்பட்டுள்ளன என இரு இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அவர்கள் மேலும் தெரிவிக்கையில் படையினரையும், தேசத்தையும் பாதிப்படையக் கூடிய வகையில் தகவல்களைத் தடுக்கவென ரத்வத்த செய்தித் தணிக்கையைக் கொண்டு வந்தார். முல்லைத்தீவு படைத்தளத் தாக்குதல் சம்பவம் இதனை அர்த்தமிழக்கச் செய்தது. பல யுத்த அனுபவசாலிகளின் கருத்திற்கு, இப்பின்னடைவு ஒரு வரலாற்றில் எழுதப்பட்டதாகிவிட்டது. பூநகரியும் இதே போல் அமைந்து விட்டது. கிளாலி ஏரியில் புலிகளின் நடவடிக்கையை பூநகரி படையினரால் நிறுத்தமுடியவில்லை. மேலதிக போர்த் தந்திரோபாயத்தை முன்னிட்டு பூநகரிப்படைகள் வாபஸ் பெற்றுள்ளன. விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை உடைக்க முற்பட்ட படையினர் பின்னடைவை அடைந்ததில் அவமா[illegible] ஏற்பட்டுள்ளன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முற்றுகைக்குள் ஒரு தலைநகரம்

3000 தொன் எடைக்குக் குறைவான சிறிய இந்திய சரக்குக் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்துக்குள் அனுமதிப்பதற்கு சிறீலங்கா அரசு தடை விதித்துள்ளது. இதன் பிரகாரம் இச் சிறிய கப்பல்கள் காலித் துறைமுகத்திற்கு அனுப்பப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கான அறிவித்தல்களை ஜனாதிபதி சந்திரிகாவே நேரடியாக வெளியிட்டதாகவும் அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சந்திரிகா அரசின் இந்த நடவடிக்கையானது சிறீலங்காவின் தலைநகரானது படிப்படியாக முற்றுகைக்கு உள்ளாக்கப்படுவதின் வெளிப்பாடே ஆகும். கொழும்பு நகரம் பாதுகாப்பு என்ற பேரில் ஏற்கனவே ஆயுதப்படையினர் நிரம்பி வழியும் ஒரு நகரமாகவே உள்ளது. இதன் காரணமாக கொழும்பு நகரில் அன்றாட வாழ்க்கையே பெருமளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. மக்களின் சகஜ வாழ்க்கையையும் தொழில் நடவடிக்கைகளையும் பாதித்துள்ளது என ஏற்கனவே முறைப்பாடுகளும் எழுந்துவிட்டன. கொழும்பு நகரானது இன்று தரை, வான், கடல் என மூன்று வழிகளாலும் தெளிவாகவே முற்றுகைக்கு உள்ளாகியுள்ளது. அதாவது தரைவழிப்பாதையூடாக கொழும்பு நகருக்குள் எவரும், எவையும் இலகுவில் புகுந்துவிட முடியாது. பல சோதனைச் சாவடிகளைத் தாண்டி பலமான சோதனைக்குள்ளாகிய பின்னரே அங்கு உட்புக முடியும். அதிலும் தாம் விரும்பியவாறு அல்லது விரும்பிய வழியில் எவையும், எவரும் செல்லமுடியாது. அத்தோடு வாகனங்களைத் தமது தேவைக்குரிய இடத்தில் நிறுத்திவைக்கவோ அன்றி நீண்ட நேரத்துக்கு ஒரு இடத்தில் தரித்து நிற்கவோ முடியாது. இதற்கும் மேலாக தற்போது கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் ஒருவர் தேவைக்கேற்ப பல நாட்கள் நகருக்குள் தரித்து நிற்கவோ அங்கு விரும்பிய இடத்தில் தங்கியிருக்கவோ முடியாது. இதே சமயம் கொழும்பு நகருக்குள் நீண்டகாலம் வாழ்பவர்களின் உறவினர்கள் அல்லாதோர் கொழும்புக்குள் பிரவேசிப்பது கடினமாக உள்ளது. இதே சமயம் ஆகாயமார்க்கமாகவும் பிரவேசிப்பது பெரும் சிரமத்துக்குரியதாகவே உள்ளது. பாதுகாப்பு ஏற்பாடு என்னும் ரீதியில் பெரும் சோதனைகள் கெடுபிடிகள் என்பனவற்றினால் விமான நிலையத்தை தாண்டி கொழும்பிற்குள் பிரவேசிப்பது தொல்லை மிக்கதொன்றாகவே உள்ளது. அல்லது பிரவேசிக்க முயலுவோர் மீது திடீர் சந்தேகத்திற்கு இடம் ஏற்படினும் அவர் கைதுசெய்யப்படவேண்டிய நிலையும் தீவிரமான விசாரணைக்கு உள்ளாக்கப்படவேண்டிய நிலையும் காணப்படுகிறது.



இவ்வாறு விமான நிலையங்களில் ஏற்படும் நெருக்கடி குறித்து உல்லாசப் பயணிகளே முறையீடு செய்யும் நிலையும் வந்துள்ளது. இவ்வாறான கெடுபிடிகளை விரும்பாத உல்லாசப் பயணிகள் தமது உல்லாசப் பயணத்தையே ரத்துச் செய்துள்ளனர். இந்த வகையிலேயே துறைமுகப் பகுதியில் தற்போது பலமான சோதனைகளும் கெடுபிடிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. துறைமுகங்களில் பாதுகாப்பு என்ற பெயரில் கெடுபிடிகளை மேற்கொள்வது இதுதான் முதல்தடவை என்பதல்ல. இவ்வாறான நடவடிக்கைகளை அவை ஏற்கனவே மேற்கொண்டிருப்பினும் இந்த நடவடிக்கையானது கொழும்புத்துறைமுகத்தினுள் புலிகளின் தாக்குதலை, ஊடுருவல்களை தடுக்கலாம் என்பதன் அடிப்படையிலேயே ஆகும்.

அதாவது சிறிய படகுகள் மூலம் புலிகள் தற்போது மேற்கொள்ளும் கரும்புலித் தாக்குதல்களை கொழும்புத் துறைமுகத்தினுள் நடத்தலாம் என்ற அச்சமே இவ்வாறான தடைக்கு காரணமாகலாம். ஆனால், இவ்வாறான தடையானது கொழும்புத் துறைமுகம் குறித்த அச்சத்தை உலகெங்கும் பரவச் செய்யும் என்பதை சந்திரிகா அரசாங்கம் எண்ணவில்லைப் போலும். ஏற்கனவே கொழும்பில் இடம்பெற்றுள்ள பல சம்பவங்கள் கொழும்பு ஒரு பாதுகாப்பற்ற நகரம் என்பதை சர்வதேச ரீதியில் வெளிப்படுத்தியுள்ளது. தற்போது மீண்டும் அதை வலியுறுத்துமாற் போன்று பாதுகாப்பு நடவடிக்கை என்ற ரீதியில் அரசாங்கம் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகள் முன்னைய கருத்தை வலியுறுத்துபவையாகவே இருக்கப் போகின்றன. அதாவது சந்திரிகா அரசு பாதுகாப்பு என்ற ரீதியில் மூன்று முனைகளிலும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் ஆனது, சிறீலங்கா அரசு தனது தலைநகரத்தையே முற்றுகைக்கு உள்ளாக்குவதாக இருப்பதுடன் சிறீலங்கா அரசு பொருளாதாரத்துக்குப் போட்டுள்ள முட்டுக்கட்டையாகவும் அமைந்துள்ளது என்றே கூறலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வரலாற்றின் சத்திரசிகிச்சை



1995–ஆம் ஆண்டு அக்டோபர் 30–ஆம் நாள் 2500 வருட காலமாக தமிழ் மக்களை கீழ்மைப்படுத்திய சிங்களம் போட்ட திட்டத்தை தவிடு பொடியாக்கிய நாள். எம் மக்கள் பற்றி அகில உலகமே கொண்டிருந்த கணிப்புக்கள் யாவுமே பொய்யாகி விட்ட நாள். இன்னுமொரு பேர்லின் மதில் இடிந்து வீழ்ந்தது போல் எம் மக்களை கொண்டிருந்த சகல தடுப்புக்களும் இடிந்து விழுந்த நாள். உலகத்திற்கு மட்டுமல்ல தமக்கே தாம் யார் என்பதை எம் மக்களுக்கு உணர்த்திய நாள்.

என்ன செய்தார்கள் அன்று எம் அன்புக்குரிய மக்கள்? பல நூற்றாண்டுகால ஆக்கிரமிப்பு பட்டறிவுப் பாடத்தை எவ்விதம் இம்மக்கள் வெளிப்படுத்தினர்? வரலாற்றிலேயே அபூர்வமான அதிசயத்தை 5 லட்சம் வலிகாம மக்கள் உணர்த்திக் காட்டி வரலாற்று நாயகர் ஆகினர் அன்று. எப்பொழுதுமே பின்விளைவுகள் பற்றி நிதானமான முடிவு எடுக்கும் எம் மக்கள் சிங்களத்தின் சிறைப் பிடிக்கும் நாசகார சதித் திட்டத்தினை குறிப்பால் உணர்த்திய போது தமக்காக தமிழ் ஈழ மக்களுக்காக, தரணி எங்கும் பரவி தாயக நினைப்புடன் வாழும் தம் உடன்பிறப்புக்களுக்காக ஒரு கணத்தில் பாரிய அரசியல் முடிவு ஒன்றை எடுத்தனர். கட்டிய துணியோடு கைதடி தாண்ட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு இயங்கிய எம் மக்கள் அன்றுபட்ட அவலம் முழு மனிதமே தலைகுனிய வைத்த நாள். அதேவேளை எம்மக்கள் காட்டிய மன உறுதி, விடுதலை மீதான பற்று, உறுதி, குனிந்த தலையை நிமிர வைத்த நாள். விடிவிற்காக வேண்டும் உலக மக்களுக்காக வலிகாமம் மக்கள் அன்று சிலுவை சுமந்தனர். இரு புறமும் நீரும் சகதியும் நிரம்பிய குறுகிய பாதை ஒன்றால் 5 லட்சம் மக்களும் எடுத்த கால் மறு அடி வைக்க முடியாத நிலையில் விழுந்தும், இருந்தும், கிடந்தும், புதைந்தும் ஆள்நீரில் அமுங்கி, இறந்தும் விடுதலை நோக்கிய பயணத்தை தொடர்ந்த நாள். அந்த நாள் விளைவித்த தாக்கங்கள் எவை? விளைவுகள் யாவை? அன்று தொடங்கிய இடம் பெயர்வு இன்னமும் நின்றபாடில்லை. வேட்டைநாய் போல் விரட்டும் சிங்களத்தின் படை எடுப்புக்களும் நின்றபாடில்லை. இற்றைவரை வன்னி பெருநிலப்பரப்

வே. பாலகுமார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிற்கு இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் உணர்த்தும் செய்தி என்ன என்பதை அறிய இந்த உலகம் முற்படுகின்றதா?

விடுதலை வேண்டும் என எம் மக்களின் லட்சக்கணக்கான காலடித் தடங்கள் பதிந்த வாக்குப்பதிவின் முடிவை உலகம் மதிக்கின்றதா? அல்லது அடிப்படைத் தேவைகளை, உணவை, மருந்தை, ஆயுதமாக்கும் அநீதி கண்டு கொதிக்கின்றதா? அல்லது இவ்வருட செப்ரம்பர் மாத முடிவுவரை வன்னி, மன்னார் பெருநிலப்பரப்புக்களில் (இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான வவுனியா, மன்னார் நகர் தவிர்ந்த) *661,377* மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையில் வாழ்வதாக அடக்குமுறை அரசின் பிரதிநிதிகளான அரசாங்க அதிபர்களே விடுக்கும் அறிக்கைகளையாவது கவனத்தில் கொள்கின்றதா? சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களும், *UNHCR, MSF, CARE* போன்ற மனித நேயத்தின் பிரதிநிதிகளாக இயங்கும் அமைப்புக்கள் விடுக்கும் அபாய அறிவிப்புக்களையாவது செவிமடுக்கின்றதா? அமைப்புக்களுக்கு வருடா வருடம் தொகை ஒதுக்கி விடுவதன் மூலம் உலகம் தப்பிக்கப் பார்க்கின்றதா? றுவாண்டா, புறுண்டி, சயரில் அகதிகள் அவதியா? ஆப்கானிய ஏதிலிகளுக்கு வழங்கும் வசதிகள் போதாதா? குர்திஸ் மக்களிடையே குழப்பமா? பாலஸ்தீனத்தில் பரிதவிப்பா? என்றவுடன் அதிகம் அலட்டிக் கொள்ளும் உலகம் கிளிநொச்சியை கைப்பற்றுவதற்கான போரின்போது இரண்டரை லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் 20 நூற்றாண்டு முடியப்போகும் போது நாடோடிகளாக, காட்டு வாசிகளாக மாற்றப்பட்டது குறித்து மௌனம் காட்டப்பட்டது ஏன்? ஏன் ஏன் என்கின்ற கேள்விகள் இங்கு கழிவிரக்கத்தை உருவாக்க எழுப்பப்படவில்லை. இங்கே மறைந்து இருக்கும் மிக முக்கிய செய்தி ஒன்றை நாம் மனம் கொள்வதற்காக எழுப்பப்படுகின்றது. 1983–ஆம் ஆண்டின் பின் உலகம் தமிழீழ மக்களுக்காக கண்ணீர் வடித்தபோது விடுதலைப் போராட்ட நிலைமை எவ்வாறு இருந்தது? பனிப்போரால் உலகம் பகுதி, பகுதியாகப் பிரிக்கப்பட்டு, பிராந்திய மேலாண்மை தொட்டு, வல்லரசு போட்டி வரை பிளவுபட்டிருந்தது. தமிழ் ஈழத்திலோ உறுதி முனைப்பற்ற போராட்ட தலைமை என்றொன்று இல்லாமல் கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கும் நிலையில் இருந்து இனவாதத் தலைமை என்று அரசியலில் அடைமொழியில் அழைக்கப்படும் அரசு என்கின்ற நிறுவனத்தை இயல்பாக ஆதரிக்கின்ற போராக மாற்றம் காண விரும்பாத அரசின் குழு ஒன்றும் இங்கே காணப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப் போராட்டம் எல்லைமீறிப் போகாமல் இந்தியாவின் கையிலே பாதுகாப்பாக இருக்கும் என்பது உலகிற்கு புரிந்தது. எனவே தன் நலத்திற்கு பாதகம் இருக்கும் என்ற போது தாராளமாகவே கண்ணீர் வடித்த உலகம் இப்போது வேற்றுமுகம் காட்டுகின்றது. ஏன் என்றால் இப்போது எல்லாமே மாறிவிட்டன. புதிய உலக ஒழுங்கின் அச்சாணியாக திறந்த பொருண்மிய முறை சந்தைச் சங்கிலிப் பிணைப்புக்குள் ஒன்றாக சிறிலங்கா என்ன, இந்தியாவே தம்மை இணைத்து விட்டன. இப்பிணைப்புக்கள் அறாமல் இருப்பதனால் அரசுகள் நிலை குலையாமல் இருப்பதை உலக மேலாண்மை நாடுகள் உறுதிப்படுத்துவதே அவர்களின் முழுநேர வேலையாகி விட்டது. அரசிற்கு அரசு ஆதரவு என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ள இவ் உலகில் எந்த அரசுக்கும் கட்டுப்படாமல் சுயமாக இயங்குபவையை பயங்கரவாதப் பட்டம் சூட்டி பரலோகம் அனுப்ப முடியுமா என்று பார்க்கின்ற உலகிற்கு கண்ணீர் விட எங்கே நேரம் இருக்கின்றது. அதுவும் வளங்கள் வறண்டு போகின்ற மேற்கு உலகிற்கு இளமையான வளங்களைக் கொண்ட, தனி நாடுகளைக் கொண்ட ஆசியாவில் ஆங் சாங் சூசி அம்மையாருக்காக மியான்மாரில் கொடிய சர்வாதிகார இராணுவ அரசை பகைக்கவோ, கிழக்கு திமோரில் மனித பண்பாட்டையே குழி தோண்டி புதைத்துவிட்ட இந்தோனேசியாவை இழக்கவோ முடியுமா? தவிக்கும் தமிழருக்காக சலுகை வழங்கி, சந்திரிகாவை கைவிட முடியுமா? அதுவும் விடுதலைப் போராட்ட வரலாற்றிலே பனிப்போர் முடிவடைய, நம்பினோர் கைவிட, பாதி வழியிலே பயணத்தை முடித்தோம், வந்த வழியே திரும்பினோம் என விடுதலை அமைப்புக்கள் விழலுக்கு இறைத்த நீராகிவிட்ட நிலையில் போராட்ட வரலாற்றிலேயே போரியல் துறையிலே புதிய பக்கங்களைத் திறக்கும் புதுமை இயக்கமான புலிகள் மீதி வழியை தாண்ட முற்படுகையிலேயே அவர்களை கணக்கிலே கொள்வதாகக் காட்டிக் கொள்ள முடியுமா?

எனவே தான் கொலை வழக்குடன், குண்டுவைத்த வழக்கு போடப்படுவதால் உலக அபிப்பிராயம் மாறிவிட்ட பின்னர், அவ்வாறு மாறவைக்கப்பட வேண்டும் என்கிற தந்திரோபாய அடிப்படையிலேயே வழக்குகள் போடப்படுகின்றன. மண்டேலாவை அவருடைய சிறையில் வாட வைத்த உலகம் தானே அது. இவை எல்லாம் யதார்த்த உலகத்தில் உள்ளவைதான் என்றாலும் இவை நிரந்தரமானவையோ, முற்று முழுதாக முடிவானவையோ அல்ல. இயந்திர விதி என்றும் வரலாற்றை நகர்த்தும் விதி என்றும் எல்லாமே ஒரு முகப்பட்டு இருந்து விடுவதில்லை. எவ்வளவுக்கு எவ்வளவு தன்னலமும் தனி உரிமையும் தாங்கொணாக் கொடுமைகளும் அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு தடிப்பான மனிதநேய முகத்திரையும், மனித உரிமை முகமூடியும் குறையவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆங்சாங் சூசி அம்மைக்காகவும் கவலைப்பட வேண்டியதாகின்றது. கிழக்கு திமோர் விடுதலைக்கு முனைப்புடன் குரல் கொடுப்போருக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டி உள்ளது. கெயிட்டி தீவில் நீதியை நிலை நாட்டியதாக, பொஸ்னியாவில் அமைதியை அரங்கேற்றியதாக பெருமை அடிக்க வேண்டி இருக்கின்றது. புருண்டியில், சாயரில், ஆப்கானில், அயர்லாந்தில் அமைதி கொண்டுவரப் பாடுபடுவதாக தோற்றம் காட்ட வேண்டியுள்ளது. இன்னமும் தமிழ் ஈழ மக்கள் படும் துயர் குறித்து கவனத்தில் கொள்வதாக கூற வேண்டி உள்ளது. இந்த நுட்பமான உத்தியே நாம் பயன்படுத்த வேண்டி உள்ளது. சிங்களத்தின் மூடு திரையை கிழித்து எறிய எமக்கும் வழி வகைகள் இல்லாமல் இல்லை. உலகம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கோட்பாடுகளின் வழி இயங்கவில்லை. அணி அணியாக பிரிக்கப்பட்ட அணிகளின் நிரந்தர உறுப்புக்களாக இல்லை. நவீன தொழில்நுட்ப உலகின் புரட்சி, அதன் நாளாந்த வளர்ச்சியைப் பற்றியுமே முடிவான தீர்மானம் வரவிடுவதாக இல்லை. உலகின் கருத்தோட்டத்தை மிக நுட்பமாக மாற்றும் கருவியானது சரயேவோ சந்தையிலே விழுந்த எறிகணையின் பலியெடுப்பு, எப்போது சாகும் என வல்லூறு பார்த்து நிற்க வாழத்துடிக்க தவழ்ந்த மழலையின் பரிதவிப்பு உலகின் எண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணத்தை ஒரு கணத்திலே மாற்றவில்லையா? அரியாலை, நவாலியில் மிகையொலி விமானப்படை எடுப்பின் போது உற்றாரை, பெற்றோரை இழந்த பெண் குழந்தை நெஞ்சில்



அடித்து அலறிய அவலம் இணுவிலிலே பதுங்கு குழியே புதைகுழியாகிட அந்தரங்கத்துண்டங்களாகிய கொடுமை, நவாலி நரபலியிலே வெண் மலராக கருகிய 6 மாத சிசு 'சத்ஜய' வின் போது சதைகள் பிய்ந்து நோகச் சரியும் எம் மக்கள் உலகின் மனச் சாட்சியினை உலுக்காதா? மாற்றாதா? சந்திரிகாவின் அமைதிப் பொதியெனும் மர்ம நாடகம், ஒக்ஸ்போர்ட் கதிர்காமரின் கச்சிதமான கச்சேரிகள் 'எமக்கு ஏது வழி போர் புரிவதைத் தவிர உமக்கேது விழி எமக்கு ஆதரவைத் தருவதைத் தவிர' என தம்பால் அனுதாப அலை வீசச் செய்யும் நாடகத்தின் பின்னாலேயே தொங்கி நிற்கும் மிக அற்புதமான, அதிசயமான வரலாற்று உண்மையை எம்மக்கள் புரிய வேண்டும். சூரியக்கதிர் தொட்டு இன்றைய 'சத்ஜய' வரை பாரிய மரபு வழிப் போரை நடத்துவதற்கு தேவையான சகலவித தொழில் நுட்ப உதவி வழங்கிய உலகம் என்ன எதிர்பார்த்தது? தென் ஆசிய நாடு ஒன்றின் கிளர்ச்சி குழுவின் அந்திமக்காலம் தொடங்கி விட்டது. இனி விடுதலைக் குரல் மௌனிக்கப்படும் நாள் இதோ என எண்ணியது. ஆனால் புலிகளின் தளம் மாறியதே தவிர, போராட்டக் களம் மாறவில்லை. மக்கள் இடம் பெயர்ந்தனரே தவிர அவர்கள் மனதில் இருக்கும் போராட்ட உணர்வு இடம் மாறவில்லை. விடுதலைக்கு என்ன விலையும் கொடுக்க ஆயத்தமாக உள்ளனவா? என வரலாறு வைத்த தேர்விலே சித்தி எய்திவிட்டனர் எம் மக்கள் என்பதே இடப்பெயர்வின் பாரிய விளைவாகும். உயிர்காக்க வலிகாமம் விட்டு, உடமை காக்க வலிகாம் சேர்ந்து, இப்போது தமது உடன்பிறப்புக்களை உயிர்கொடுத்து காப்பாற்றி, இனமானத்தைப் பேண திரும்பியிருந்த எம் குடாநாட்டு மக்களின் உறுதிப் போக்கும் இதன் தொடர்ச்சியேயாகும். அதேவேளை இடப்பெயர்வின் முன் இருந்ததைவிட பன்மடங்கு பலத்தோடும் அசைக்க முடியாத மன உறுதியுடனும், எது வரி



னும் நகைத்து அதற்கு முகம் கொடுக்கும் தலைவரும் வரலாற்றின் நோக்கத்தையே தெளிவாக்கும் நிலையிலேயே இத்தகைய இமாலய உண்மைகள் வெளிப்பட்டமை கண்டு அதிர்ச்சி உற்ற உலகம் போராட்ட வளர்ச்சியை மட்டுப்படுத்த எடுக்கும் இறுதி முயற்சிகளே இப்போது நாம் காணும் தோற்றங்கள். எப்போதுமே வெல்லமுடியாத போருக்காக முழுநாட்டையுமே அடகுவைத்து அதனால் முழுப் பொருண்மிய வளர்ச்சிக் குறிகாட்டிகளுமே அடிமட்டத்தில் அணையாகையில் தேசிய உற்பத்தி இரண்டரை வீதம் குறைவாகி தென் ஆசியாவிலேயே இவ்வருடம் கடைசி நிலை பொருண்மிய வளர்ச்சியை கொண்ட நாடக இப்போது சிங்களம் மாறிவிட்டது. இடைநிறுத்தப்பட முடியாத போர்ச் சூழலுக்குள் சிக்கிவிட்ட சிங்களம் இனியும் போர் புரிவதானால் சிங்கள மக்களைக் கசக்கிப் பிளிந்து சாறு எடுக்கத்தான் முடியும்.

இடம்பெயர்வின் நேரடி விளைவான முழுமையான போர் அது. எம் மக்கள் மேல் விளைவிக்கும் முழுமையான அவலம் அதேவேளை சிங்களத்தின் முழுமையான பொருளியல் சமூகக் கட்டமைப்புக்கள் சிதறும் நிலை. சிங்களம் சில போர் முனைகளை திறக்கும் போது புலிகள் ஆயிரம் போர் முனைகளை திறக்கும் நிலை – பொழுது புலர்வதற்கு முன்னான பொழுதிலேயே நிற்கும் நாங்கள் தேசிய இனம் ஒன்றின் விடுதலையை பிரசவிப்பதற்கான வரலாற்றின் சத்திர சிகிச்சை நடக்கும் போது மருந்துவிச்சிகளாக மாறும் தருணம் இது. எனவே ஒன்று சேர்ந்து, ஒருமுகப்பட்டு உலக உணர்வினை எம் பக்கம் திருப்புவோம். விடுதலையை விரைவு படுத்துவோம்.

★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தானே போடும் தடைகள்

விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை எந்தவொரு சக்தியாலும் அழித்துவிடமுடியாது.

இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வுகாணும் வழிவகைகள் என்பன யாவற்றுக்குமான முட்டுக்கட்டைகளை சந்திரிகா அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையிலேயே அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மீது அரசின் மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதலை தொடர்பான குற்றச்சாட்டாகும். இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியிலான அரசியல் தீர்வு காணப்படவேண்டுமானால் அது விடுதலைப்புலிகளில்லாமல் சாத்தியமானது அல்ல என்பது வெளிப்படையானது. இதனைப் பலருமே ஏற்றுக்கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவத்தினருடனும் அரசியல்வாதிகளுடனும் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ் குழுக்களும் இதனை ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் சந்திரிகா அரசோ அவ்வாறான நடவடிக்கைகள் எதற்கும் வழி விட்டுள்ளதாக இல்லை. தமிழ்மக்களுடனும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடனும் எவ்வளவுக்கு எவ்வளவு முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ளமுடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு முரண்பாடுகளைச் வளர்த்துச் செல்வதிலேயே அக்கறையாக உள்ளது. சந்திரிகாவின் அரசாங்கமானது என்னதான் கூறிக்கொண்டாலும் அது நடத்தும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரானது தமிழ் மக்களுக்கு எதிரான போரேயாகும். இப்போரில் தமிழ் மக்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளமையே இதற்குப் போதுமான சான்றாகும். ஒருபுறம் பொருளாதாரப்படை என்ற ரீதியில் தடுக்கப்பட்டுள்ள மருந்துப் பொருட்கள், எரிபொருள், விவசாயிகளுக்கான உபகரணங்கள் என்பன மற்றும் பல பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையானது மக்கள் மீது பெரும் பொருளாதார சுமைகளை ஏற்றியுள்ளது. இதனால் தமிழ் மக்கள் பட்டினியால் வாடுவதும், நோயால் இறப்பதும் இலகுவில் மறக்கப்படமுடியாத ஒன்றல்ல.

இதே சமயம் இராணுவ நடவடிக்கைகள் என்ற ரீதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் அப்பாவிப் பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கின்றது. இதனால் பலர் கொல்லப்பட்டதோடு படுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர் இவர்கள் மனங்களில் ஆறாத வடுக்களாகத் துயரச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது மட்டுமல்ல நீண்டகாலமாக பாடுபட்டுத் தேடிய சொத்துக்கள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுவிட்டதும் சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டதும், தலைமுறை தலைமுறையாக மறைக்கப்படக்கூடியதல்ல. இவற்றிற்கு சந்திரிகா அரசினாலோ அன்றி வேறு சிங்கள ஆட்சியினாலோ இலகுவில் பரிகாரம் கண்டுவிடமுடியாது.




இவ்வாறாக ஒரு புறம் சிங்கள ஆட்சியாளர்களுடன்சமரசத்திற்கோ, சமாதான வாழ்விற்கோ இதைச் செய்கின்ற சூழ்நிலையே சந்திரிகா அரசாங்கம் உருவாக்கிக்கொண்டு வருவதோடு விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொள்வது விசித்திரமாக உள்ளது. இந்த நடவடிக்கையானது இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு கண்டுவிடலாம் என்ற உறுதிப்பாட்டில் மேற்கொள்ளப்படுவதேயாகும். இதில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் எனக் காட்ட முனைவதும் அரசியலில் அவர்கள் ஓரம் கட்டுவதற்கான நடவடிக்கைகளில் முக்கியமானதாகும். இந்த வகையிலேயே வெளிநாடுகளில் பெரும் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சந்திரிகா அரசானது மேற்குலக நாடுகளில் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வருகின்றது. இதற்கு ஆதரவாகவும் விடுதலைப்புலிகளை அரசியல் நடவடிக்கைகளில் ஓரம் கட்டும் நடவடிக்கையாகும். மத்தியவங்கி குண்டு வெடிப்பு தொடர்பாக தலைவர் பிரபாகரன் மீது குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் பிரச்சாரங்களும் குற்றச்சாட்டுகளும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காண உதவப்போவதில்லை. இவ்வாறான முயற்சிகளினால் புலிகளை ஓரம் கட்டிவிடவோ தோற்கடித்துவிடவோ முடியாது. ஏனெனில் சந்திரிகா அரசின் பிரச்சாரங்கள் யதார்த்தபூர்வமாக அதற்கு உதவப்போவதில்லை. மாறாக சந்திரிகா அரசு கைக்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் அதற்கு எதிர்காலத்தில் முட்டுக்கட்டையாக உருவாகக் கூடியதாகும். தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராகவும், விடுதலைப் புலிகளுக்கெதிரானதாகவும் உள்ள இச்செயல்கள் சந்திரிகா அரசின் அரசியல் தீர்வினதும் சமாதனத் தீர்வினதும் தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு வகையிலும் உதவமாட்டாது. அவ்வேளையில் தங்களால் உருவாக்கிய தடைகளைத் தாண்டி வரவே சந்திரிகா அரசிற்கு பேருதவியாக இருக்கும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முல்லைத்தீவு இராணுவத் தளம்:

# வடகரையின் வாளேந்திய சிங்கம்!



"ஓயாத அலையாய் எழுந்தார்
உயிர்மூச்சின் மையம் காத்தார்
'புலி' நிகர்த்த வீரம் கொண்டார்
பொருதியே தகர்த்தார் எதிரி முகாம்"

தமிழர் தாயகக் கோட்பாட்டின் உயிர் மையம் முல்லை மாவட்டத்திலேயே உள்ளது.

இதனால், வாளேந்திய சிங்கத்தின் வெட்டிலக்கு முல்லை மாவட்டமே யாகும்.

சிங்களக் குடியேற்றங்களை நிறுவி, இராணுவ முகாங்களை அமைத்து, முல்லைத்தீவு நிலத்தைச் சிங்களமய மாக்குவதன் மூலம் வடக்குக் கிழக்கிற்கு இடையே ஒரு நிரந்தர தடுப்புச் சுவரை எழுப்பிவிடுவது, சிங்களப் பேரினவாதத்தின் திட்டம்.

இந்த வகையில், முல்லைத்தீவு இராணுவத் தளம், மணலாற்றுச் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரம்.

அத்துடன், வடபுலக் கடலின் நுழை வாசலில் முல்லைத்தீவு அமைந்துள் ளது. இது காரணமாக, படையினரின்

**முல்லை இராணுவ முகாம் தகர்ப்புப் பற்றி 'விடுதலைப் புலிகள்' (ஆவணி - புரட்டாதி 96) வெளியிட்ட 'முல்லைத்தீவு இராணுவத் தளம்: வடகரையின் வாளேந்திய சிங்கம்!' என்னும் கட்டுரையை இங்கு பிரசுரிக்கிறோம்.**

கப்பற் போக்குவரத்து விடயத்தில், முல்லைத்தீவுத் தளம் ஒரு காவற் கோபுரம்.

இதேவேளை, வடக்கு – கிழக்குப் பிராந்தியக் கடல்களில், கடற்புலிகளின் நகர்திறனைத் தடுக்க முயலும் சாட்டை போலவும் முல்லை இராணுவத் தளம் செயற்பட்டது. இந்தளவுக்கு அரசியல் – இராணுவ ரீதியில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலையாகும்.

மூன்றாம்பிறை வடிவத்தில், நந்திக் கடல் நீரேரி, முல்லைத்தீவு இராணுவத் தளத்தை அரண்செய்துள்ளது. அதன் எஞ்சிய பகுதியைப் பெருங் கடல், பொத்தி மூடிவைத்திருக்கின் றது.

ஒட்டுமொத்தத்தில், ஆமையின் மேல்ஒடு கீழ்ஒடு போல, வங்கக்கடலும் நந்திக்கடல் நீரேரியும் முல்லைப் படைத்தளத்தின் காப்புக் கவசங்கள்.

தளத்தின் தென்புறப் பகுதியில் மட்டும், ஒரு தரைவாசல் இருந்தது. அதுவும், ஒரு படையணி சுலபமாக ஊடுருவிச் செல்ல முடியாத அளவுக்கு, சதுப்புநிலத்தாலும் வெட்ட வெளிகளாலும் அரண்செய்யப்பட்டுக் கிடந்தது.

தளத்தின் வடமேற்குப் பகுதியான வட்டுவாகல் பகுதியிலிருந்து தளத்தின் தென்கிழக்குப் பகுதியான சிலாவத்தை வரையான தூரம், ஏறக்குறைய மூன்று மைல் நீளமாகும். அதே வேளை, பெருங்கடலிலிருந்து நந்திக் கடல் நீரேரி வரை, ஏறக்குறைய ஒன்று, ஒன்றரை மைல் தூர அகலத்தையும் கொண்டதாக முல்லைத்தளம் அமைந்திருந்தது. அதாவது, சுமார் ஐந்து சதுர மைல் பரப்பளவில் இந்தப் படைத் தளம் அமைந்திருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

1968ம் ஆண்டு, முல்லைத்தீவில் முதன்முதலில் ஒரு சிங்கள இராணுவ முகாம் ஏற்படுத்தப்பட்டது. அதே வேளை, நந்திக்கடல் நீரேரிக்கும், முல்லைப்படத்திலுள்ள பழைய இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட பகுதியில், ஒரு விமான ஓடுபாதை கட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஒரு சிறிய நிலப்பரப்பில் இருந்த இந்த இராணுவ முகாம், பின்னர் படிப்படியாக விரிவாக்கம் பெற்றது. 'இரண்டாம் ஈழப்போரி'ன் ஆரம்பத்துடன் இந்த முகாம் பெருமெடுப்பில் விஸ்தரிக்கப்பட்டு, ஒரு இராணுவத்தளம் (*Military Base*) என்ற, தற்போதைய பாரிய வடிவத்தை எடுத்தது.

தளப்பிராந்தியத்தின் பூகோள அமைப்பு அதன் பாதுகாப்பிற்குப் பெரிதும்துணைநின்றது. பெருங்கடல், நீரேரி, வெட்டவெளிகள், சதுப்பு நிலங்கள் என்பன, புலிவீரர்களின் ஊடுருவலுக்கு அல்லது படை நடாத்தலுக்குத் தடையாக இருந்தன.

இந்த இயற்கைப் பாதுகாப்புடன் தளத்தின் பாதுகாப்பை அதிகப்படுத்தும் வகையில் – மேலும் பல தற்காப்பு ஏற்பாடுகளைப் படையினர் ஏற்படுத்தினர்.

தளப்பகுதியைச் சுற்றி மண் அணையுடன் கூடிய ஒரு தடுப்பு வேலி இடப்பட்டிருந்தது. தளப்பிராந்தியத்தைச் சூழ இருந்த இயற்கைப் பாதுகாப்பிற்கு அடுத்ததாக, படையினர் இட்ட முதலாவது சுற்றுப் பாதுகாப்பு ஏற்பாடு அது. இந்தத் தடுப்பு வேலி சிலிப்பர் கட்டைகளை, மண் சாக்குகள், மரக்குற்றிகள் மற்றும் கொங்கிரீட் கற்கள் போன்றவற்றால் அமைக்கப்பட்டிருந்தது. இதேவேளை, தளத்திற்கு வெளிப்புறத்தில் மறைந்திருந்தபடி, தளத்தின் உட்புறத்தில் என்ன நடக்கின்றது – என்ன இருக்கின்றது – என்பதைப் புலிகள் கண்டுகொள்ளாத வா'று, தடுப்புவேலி முழுவதும்,பனை ஓலைகளாலும் தகரங்களாலும் மறைக்கப்பட்டுக் கிடந்தது.

இந்த வெளிப்புற வேலி அரணிலிருந்து 30 அல்லது 40 மீற்றர் நீளப் பகுதிகளிலுள்ள பற்றைகள் அகற்றப்பட்டு, வெட்டவெளியாக வைக்கப்பட்டிருந்தன. வேலி அரணை அண்மிக்க முனையும் எவரையும், காவற் கடமையிலுள்ள படையினர் மிகச் சுலபமாகக் காணும் வகையில், அந்த ஏற்பாடு இருந்தது. இந்தப் பகுதி மிதிவெடிகளாலும் 'கிளைமோர்' கண்ணிகளாலும் நிரப்பப்பட்டிருந்தது. சில இடங்களில், நிலத்திலிருந்து அரை அடி உயரத்தில் முட்கம்பிப் பாத்திகளும் அமைககப்பட்டுக் கிடந்தன. இது, அனைத்துவகை ஊர்ந்துசெல்லும் முறைகளையும் தடுத்துவிடும்.

www.tamilarangam.net

இந்தத் தடுப்பு வேலி எங்கணும் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுக் கிடந்தன. அவை இரவைப் பகலாக்கின. இந்த மின் குமிழ் ஒளியையும் மீறி, படையினருக்கு ஏதாவது சந்தேகம் ஏற்படுமாயின், அதைப் போக்குவதற்கு வசதியாக, சக்தி வாய்ந்த 'தேடொளி'கள் (Search Light) வேலி அரண்களில் பொருத்தப்பட்டுக் கிடந்தன.

வெளிப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தாண்டி புலிகள் உள்நுழைந்தாலும், தளத்தின் மையைப் பகுதியைச் சென்றடைய விடாது தடுக்கும் வகையில், தளத்தின் உள்ளேயும் பல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வெளிப்புற தடுப்பு வேலிப் பாதுகாப்பு ஏற்பாட்டைப் போல, உள்ளேயும், மூன்று நான்கு வலயங்களாகத் தடுப்பேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் ஒரு வலயத்தில், நூற்றுக்கணக்கான வாகனக் கண்ணிகள் புதைக்கப்பட்டிருந்தன. தளத்தின் உள்ளேயே வாகனக் கண்ணிகளைப் புதைக்கும் அளவுக்கு, தளத்தின் பாதுகாப்பு இறுக்கப்பட்டிருந்தது. அத்துடன், தளப்பகுதியில் இருந்த ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு கட்டடமும், படையினரின் காவல் நிலைகளாகவே இருந்தன. இவை தவிர, தளத்தின் மையப்பகுதியில் இருந்த 'ஆட்டிலறி' ஏவுதளமும் பிராதன முகாமின் தலைமையகமும், வேலிமேல் வேலியிடப்பட்டு, அணுகமுடியாத அதி உயர் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தன.

தளப்பிராந்தியத்திற்கு இயற்கை கொடுத்த பாதுகாப்புடனும், தளத்தினுள் தாம் ஏற்படுத்திய பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் மட்டும் படையினர் திருப்தியடையவில்லை. தளத்திற்கு வெளியே அதாவது தளத்தின் வெளி வேலிக்கு அப்பால் ரோந்துச் 'சென்றி'களையும் அவதானிப்புக் குழுக்களையும் அனுப்பி, தளத்தின் வெளிப்புறத்தையும் படையினர் சதா கண்காணித்தனர். புலிகளின் வேவுவீரர்களை எல்லைக்கு வெளியே வைத்து அழிக்கும் திட்டத்தின் செயற்பாடு வடிவமே இதுவாகும்.

இந்தளவுக்கு, முல்லைத்தீவுத் தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 'ஏ–வண்' (*A-one*) தரத்தில் முல்லைத்தளப் பாதுகாப்பு இருந்ததாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்விதம் அதி உயர் பாதுகாப்பில் இருந்த முல்லைத் தளத்தைப் புலிகள் எப்படித் தாக்கி அழித்தனர்?

இதற்கான விடை, தலைவர் பிரபாகரன் வரைந்த தாக்குதற் திட்டத்திலும் – அதற்கான தந்திரோபாயத்திலுமே இருக்கின்றது; அத்துடன் ஆயிரக்கணக்கான போராளிகளைத் தயார்ப்படுத்து, சண்ட நிலைமைகளுக்கு ஏற்றாற்போல் களமுனைத் தளபதிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கிய தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலிலும் இருக்கின்றது; மேலும், புயலை ஒத்த வேகத்துடனும், 'புலி'யை ஒத்த வீரத்துடனும் களமாடிய புலிவீரர்களின் போர்த்திறனிலும் அது புதைந்து கிடக்கின்றது.

18ம் திகதி அதிகாலை முல்லைத் தளம் மீது – ஒரே சமயத்தில் பல முனைகளிலிருந்தும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. எதிரி எதையும் எதிர்பார்க்கவில்லை. இடம் – நாள் தாக்குதற் பரிமாணம்என்று எதையுமே அவன் எதிர்பார்க்கவில்லை. பலம் வாயந்த தனது தற்காப்பு நிலைகள் புலிகளால் தகர்த்தெறியப்படுமென்று, படை வட்டாரம் நம்பியிருக்கவில்லை. ஆனால், படையினரைத் திகைப்பில் ஆழ்த்தியபடி அது நடந்து விட்டது!

தளத்தைப் புலிகள் கைப்பற்றிய போது, இரண்டு 'ஆட்லறி' ஏவு கருவிகள் உட்பட, பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிபெருட்களும் புலிகளின் கைகளிற்கு வந்தன. 1200–ற்கு மேற்பட்ட படையினர் பலியாகினர். முல்லைத்தீவுப் படைத்தளம் அமைந்திருந்த நிலமும் மீட்கப்பட்டுவிட்டது.

படைத்தளத்தை மீண்டும் கைப்பற்றவெனத் தளத்திற்கு அருகே தரையிறக்கப்பட்ட 'கொமாண்டோ' அணியினராலும் முல்லைத் தளத்தை மீண்டும் கைப்பற்ற முடியவில்லை; தரையிறக்கப்பட்ட படையினரும் ஒட்டுமொத்த அழிவைத் தவிர்ப்பதற்காக – பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இந்த தரையிறக்கச் சண்டையில், சிங்களக் கடற்படையின் 'ஏ – வண்' பாதுகாப்பைக் கொண்டிருந்த முல்லை இராணுவத் தளம், புலிகளின் 'ஏ–வண்' தாக்குதலால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது!

★★

www.tamilarangam.net

திரு.பழ.நெடுமாறன் அவர்களுடனான

# நேர்காணல்

நேர்முகம்: **விதுரன்**




# தீராத விடுதலையின் தணலை தேசமெல்லாம் சுமக்கும் பணி!

**★ எமது தேசியத்தலைவர் பற்றிச் சொல்லுங்கள்.**

பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களுக்குக் கிடைத்திருக்கின்ற இணையற்ற தலைவர் என்ற பார்வை, அவ்வளவு சரியானது என்று நான் நினைக்கவில்லை. மாறாக உலகம் பூராகவும், வாழக்கூடிய தமிழ் மக்களுக்கு இது வரை கிடைத்திருக்கக்கூடிய மிகச் சிறந்த தலைமையாக அவர் உருவெடுத்திருக்கிறார் என்றுதான் நான் நினைக்கிறேன். நம்முடையை தமிழர் வரலாற்றில் – நீண்ட நெடிய வரலாற்றில் தமிழினம் எத்தனையோ தலைமைகளைக் கண்டிருக்கிறது, ஆனாலும் கூட, தமிழினம் மிகவும் தாழ்ந்து போய் இருக்கக்கூடிய காலகட்டத்தில், தாழ்ந்து போன தமிழினத்தை மீண்டும் தலை நிமிர்ந்து நடக்க வைத்த ஒரு மகத்தான தலைமையாக, அருமைத் தம்பி பிரபாகரனை நான் பார்க்கிறேன். அவருடைய காலத்தில், அவர் தலைமையில் நடந்து கொண்டிருகின்ற இந்தத் தமிழீழப் போராட்டம், அந்த மண்ணை விடுவிக்கின்ற போராட்டம் மட்டுமல்ல, மாறாக உலகம் பூராகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எட்டுக் கோடித் தமிழ் மக்களுக்கும் விடிவைக் கொண்டுவரப் போகிற போராட்டமாகவே பார்க்கிறேன்.

**★ எமது விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதத்தோடு ஒப்பிட்டு, சந்திரிகா அரசு செய்யும் பிரச்சாரத்தை உலக நாடுகள் சிலவும் அப்படியே ஏற்றுக்கொண்டு விடுகின்ற அபாயம் அச்சத்தையும், கவலையையும் அளிக்கிறது. இதனை எவ்வாறு வெற்றிகொள்ளலாம் என்பது பற்றி எம்முடன் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

குறிப்பாக, உலகத்தின் பல்வேறு விடுதலைப்போராட்டங்களை ஏகாதிபத்தியவாதிகள் கொச்சைப்படுத்துவதற்காக, 'பயங்கரவாதிகளின் போராட்டங்கள்' என்று தான் சித்தரித்தார்கள். ஏன் இந்தியாவில் அறவழியில் நடாத்திய போராட்டத்தை பிரித்தானியாவின் தலைவர் வின்சன் சேர்ச்சில் அரைநிர்வாண பக்கிரி நடாத்தக்கூடிய கோமாளித்தனமான போராட்டம் என்றுதான் வர்ணித்தார். செஞ்சீனத்தை அமைப்பதற்காகப் போராடிய மாவோசேதுங்கை ஒரு கொள்ளைக்காரராகத்தான் சாங்கே சேக் அன்றைக்கு வர்ணித்தார். வியட்னாமிய மக்களின் விடுதலைக்காகப் போராடிய கோசிமின் அவர்களையும் இப்படித்தான் அமெரிக்கா இழிவு படுத்திற்று, அரேபிய தேசிய உணர்வுக்கு வித்திட்ட நாசர் அவர்களை அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும் இதைப் போன்ற வல்லரசுகள் எல்லாம் அவரை முளையிலையே கிள்ளி எறிவதற்கெல்லாம் முயற்சி செய்தன. அரேபிய தேசிய உணர்வின் வடிவமாக அவர் திகழ்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அதைப்போலத்தான் இன்று தமிழீழப் போராட்டத்தை, 'பயங்கரவாதிகளின் போராட்டம்' என்று சித்தரித்து அதைக் கொச்சைப்படுத்தி ஒழித்து விடுவதற்கு, சிங்களப் பேரினவாதிகள் முயற்சி செய்கிறார்கள். இவர்களைப் போல, முன்னால் பல்வேறு விடுதலைப் போராட்டங்களைக் கொச்சைப்படுத்த முயன்றவர்கள் என்ன கதியை அடைந்தார்களோ அதே கதியை இவர்களும் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

**★ 1985–ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நீங்கள் தமிழீழத்திற்குச் சென்றிருந்தீர்கள். அங்கு எமது போராட்டச் செயற்பாடுகளை, எமது விடுதலைப் போராட்டத்தை நீங்கள் கண்ணுற்று வந்திருக்கிறீர்கள். அந்தக் காலத்திலிருந்து இன்று வரை எமது போராட்டம் அடைந்து வந்திருக்கின்ற வளர்ச்சிகளில் நீங்கள் வியத்தகு என்று காணும் அம்சங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?**

1985–ஆம் ஆண்டு நான் சுற்றுப் பயணம் செய்தபோது, அன்றைக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சீருடை கிடையாது. காலில் அவர்களுக்குப் பூட்சுகள் கிடையாது. அவர்கள் கைலிகளைக் கட்டிக்கொண்டு வெறுங்காலுடன் அங்கும் இங்குமாக அலைந்து திரிந்த அந்தக் காட்சிகளை நான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைத்துப் பார்க்கிறேன். இன்றைக்கு தலைசிறந்த மரபுவழி இராணுவம் போல அவர்கள் நவீன ஆயுதங்களையெல்லாம் கையாளக்கூடிய நிலைமைக்கு வளர்ந்திருப்பதை நான் பார்க்கிறேன். இது ஒரு மாபெரும் வளர்ச்சி. இந்த வளர்ச்சி எப்படி ஏற்பட்டது என்பதை ஒவ்வொரு கட்டத்திலும் படிப்படியாகப் பார்த்தவன் என்ற முறையிலே நான் என்னுள்ளேயே சில நேரத்தில் வியந்து போகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், இதைவிடச் சிறந்த உதவி பலஸ்தினிய விடுதலை அமைப்பிற்குக் கிடைத்தது. யாசிர் அரபாத் ஒரு மாபெரும் தலைவராக, உலகம்அறிந்த தலைவராக விளங்கக் கூடியவர். அரேபிய நாடுகள் மட்டுமல்ல ஆசிய, ஆபிரிக்க நாடுகள், 120–க்கு மேற்பட்ட நாடுகள் அவருக்குத் அங்கீகாரம் கொடுத்திருக்கின்றன; அவருக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்தன. .அப்படியொரு மாபெரும் உலகம் அறிந்த தலைவர் இத்தனை நாடுகளின் உதவியோடு ஒரு விடுதலைப் படையை அமைப்பதென்பது, போராடுவதென்பது அவ்வளவு கடினமானதல்ல; ஆனால், எந்தவொரு நாட்டினது உதவியுமில்லாமல், எந்தவொரு அரசாங்கத்தின் உதவியுமில்லாமல் அதே நேரத்தில் இலங்கை அரசாங்கத்தினதும், இந்திய அரசாங்கத்தினதும் பகையைச் சம்பாதித்துக் கொண்டு இதற்கு நடுவிலே ஒரு விடுதலைப் படையைக் கட்டி வளர்த்து உருவாக்குவதென்பது, எவ்வளவு சிரமமான பணியென்பதை எண்ணிப் பார்த்தால் பிரபாகரனின் சாதனையும், விடுதலைப்புலிகளின் சாதனையும் பிரமிக்கத்தக்க சாதனையாகும். உலகில் எந்தவொரு விடுதலை இராணுவமும் இத்தகையதொரு சாதனையை நிகழ்த்தியதில்லை என்று தான் நான் நினைக்கிறேன். இன்றைக்கு இது ஒரு கெரில்லா இராணுவமாக இல்லாமல், நேருக்கு நேராக சிங்கள இராணுவத்தைப் போர்க்களத்தில் சந்திக்கக்கூடிய மரபு வழி இராணுவமாக வளர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல 85–ஆம் ஆண்டு நான் சுற்றுப்பயணம் செய்தபோது சரி, அதற்குப் பின்னால் தமிழ் நாட்டில் வந்து தஞ்சமடைந்திருந்த இலங்கை அரசியல்வாதிகள் பலரோடு பழகிய காலத்திலும் சரி, தங்களுடைய பிள்ளைகளால் இராணுவத்தை எதிர்த்துப் போராட முடியாதென்ற எண்ணம் தான் ஓங்கியிருந்ததை நான் பார்த்தேன். இவர்கள் பத்து துப்பாக்கியை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்; இவர்கள் துப்பாக்கியைத் தூக்கினால் அவர்கள் பீரங்கியைக் கொண்டு வந்தால் என்ன செய்வார்கள். இதெல்லாம் சிறுபிள்ளைத்தனம். 'சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்று தமிழீழ அரசியல்வாதிகளே என்னிடம் சொல்லியதை நான் அறிவேன். அவர்கள் கூற்றையெல்லாம் பொய்யாக்கும் வகையிலே இவர்கள் படிப்படியாக வளர்ந்தது மட்டுமல்ல, தங்கள் மக்களையும் இந்தப் போராட்டத்திற்குத் தயார்ப்படுத்தியது தான் அவர்களின் வெற்றி; இது ஏதோ புலிகளின் போராட்டம் என்று நில்லமல், தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட போராட்டமாக, மக்கள் போராட்டமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. பிரபாகரனின் வெற்றியின் ரகசியம் இங்கே தான் இருக்கிறது. மக்களையும் தங்களுடன் அரவணைத்துக்கொண்டு இந்தப் போராட்டத்தில் ஈடுபடுத்தியிருக்கிற முறை மிகச் சிறந்தது. மக்களில் இருந்து அந்நியப்பட்டு நிற்கிற எந்த விடுதலைப்போராட்டமானாலும் ஒரு போதும் வெற்றி பெற்றதில்லை. பிரபாகரனின் வெற்றிக்கெல்லாம் மக்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டு நடத்துகிற அந்த முறை தான் அவருடைய வெற்றிக்குக் காரணம் என்று நினைக்கிறேன். இது ஒரு பிரமிக்கத்தக்க வளர்ச்சியை இயக்கம் அடைந்திருக்கிறது என்றால் மிகையாகாது.

★ தமிழகத்திலும் மத்திய அரசிலும் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் மாற்றங்கள், அத்தகைய மாற்றங்கள் மூலம் தமிழீழம் தொடர்பாக இந்தியாவின் ஆரோக்கியமான உறவுகளுக்கான புதிய பாதை திறபடுவதற்கான சூழ்நிலைகள் கனிந்து விடுமா?

அதற்கான சூழ்நிலை இன்னும் வரவில்லை என்று தான் கருதுகிறேன். அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட, அது முழுமையான மாற்றமாக இல்லை. 1990–ம் ஆண்டில் ஏற்பட்ட மாற்றம் என்பது ஒரு முழுமையான மாற்றமாக இருந்தது. ராஜீவ்காந்தி தேர்தலிலே தோற்றுப்போய், வி.பி.சிங் தலைமையிலே ஒரு அரசு அமைந்த போது ஒரு முழுமையான மாற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாகத்தான் வி.பி சிங் அன்றைக்குத் துணிவாகச் செயற்பட்டு இந்திய அமைதிப் படையைத் திரும்பப் பெறுகின்ற நடவடிக்கையை எடுக்க முடிந்தது. ஆனால், அவருடைய ஆட்சி குறுகிய காலம்தான் நீடித்தது. அதனால் மேலும் பல சாதனைகளைச் செய்ய முடியாமல் போய் விட்டது. ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் ,ஆட்சி மாற்றம் என்று சொல்ல முடியாது. பழைய அரசு பதவியிலே இருந்து இறங்கியிருக்கிறதே தவிர, பழைய காங்கிரஸ் கட்சியின் ஆதரவிலே தான் புதிய அரசு ஆட்சியிலிருக்கிறது. ஆட்கள் மாறியிருக்கிறார்களே தவிர, அடிப்படை மாறவில்லை. இவர்களிடம் நாம் அதிகமாக எதிர்பார்க்க முடியாது; ஆனாலும், அண்மையில் இந்திய வெளிநாட்டமைச்சர் குஜ்ரால் வெளியிட்டிருக்கக் கூடிய




**ஒரு விடுதலைப்படையைக் கட்டி வளர்த்து உருவாக்குவதென்பது எவ்வளவு சிரமமான பணியென்பதை எண்ணிப்பார்த்தால் பிரபாகரனின் சாதனையும், விடுதலைப்புலிகளின் சாதனையும் பிரமிக்கத்தக்க சாதனையாகும்.**

அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் நடைபெறுகிற போராட்டத்தில் இந்தியா சிங்கள அரசுக்கு எந்தவித உதவியையும் செய்யாது என்ற வகையிலே ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க அறிவிப்பு. ஆனாலும் முழுமையான மாற்றங்கள் இந்த அரசின் மூலம் ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்க இயலாது.

★ குஜ்ரால் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளாது விட்டமைக்கு அரசியல் காரணங்கள் ஏதேனும் உண்டா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நல்ல விழிப்புணர்வும், போராட்டத்தைப் பற்றிய புரிந்துணர்வும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருப்பதை சென்ற இடமெல்லாம் பார்க்கிறேன். இது மேலும் வளரும்; ஒருநாளும் குறையாது; மேலும் மேலும் வளர்ந்து வளர்ந்து முழுமையான கட்டத்தை அடையும் என்றுதான் நான் நம்புகிறேன்.

அவருக்கு உடல் நிலை சரியில்லை என்ற காரணம் சொல்லப்பட்டால் கூட, இந்தப் பிரச்சினையில் ஒதுங்கி நிற்கவே அவர் விரும்புகிறார். இரண்டாவது உள்நாட்டுப் பிரச்சினையில் சிக்கிக்கொண்ட இந்திய அரசு, வெளிநாட்டுப் பிரச்சினைகளில் தீவிரமான நிலை எடுப்பதற்கு இன்னமும் தயங்குகிறது என்பதுதான் பொருள்.

★ கனடா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பல நாடுகளுக்குச் சென்று வரும் நீங்கள் தமிழீழவிடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்பதில் உலகத் தமிழினமே அக்கறை கொள்ளுகின்ற சூழல் உருவாகி வருகிறது என்ற கருத்துப் பற்றி தங்கள் கருத்து என்ன?

நிச்சயமாக, உலகம் பூராகவும் இருக்கக் கூடிய தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். 1982–ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு நாடுகளில் நான் சுற்றுப்பயணம் செய்து வருகிறேன். நாளுக்கு நாள் இந்த ஆதரவு வளர்ந்து கொண்டிருப்பதை நான் ஒவ்வொரு சுற்றுப் பயணத்தின் போதும் உணர்ந்து வருகிறேன். அண்மையிலே அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் சுற்றுப் பயணம் செய்த போது கூட நல்ல விழிப்புணர்வும், போராட்டத்தைப் பற்றிய புரிந்துணர்வும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருப்பதைச் சென்ற இடமெல்லாம் பார்க்கிறேன். இது மேலும் வளரும்; ஒருநாளும் குறையாது; மேலும் மேலும் வளர்ந்து வளர்ந்து முழுமையான கட்டத்தை அடையும் என்றுதான் நான் நம்புகிறேன்.

★ சந்திரிகா அரசின் கைக்கூலிகளால் நாதன், கஜன் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வானது புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு அச்சவுணர்வை ஏற்படுத்தியிருக்கிறது என நீங்கள் நம்புகிறீர்களா?

தமிழ்மக்களை அச்சமடைய வைப்பதற்கு மாறாக, அவர்களை மேலும் கொதித்தெழ வைத்திருக்கிறது என்பதை ஜெர்மனியில் நடந்த கூட்டத்தின் போதும்; பாரிசில் நடந்த கூட்டத்தின் போதும் என்னால் பார்க்க முடிந்தது. முன்னிலும் திரளான மக்கள் இந்தக் கூட்டங்களுக்குக் கூடுகிறார்கள் என்று சொன்னால் மக்கள் இதற்கு அச்சப்படவில்லை என்று தெளிவாகிறது. அதேநேரம், மேலும் மேலும் ஆதரவு கொடுப்பதன் மூலம் தான் இத்தகைய அநீதிகளை நம்மால் தடுக்க முடியும் என்ற உணர்வு மக்களுக்கு ஏற்பட்டிருப்பதை என்னாலே அறிய முடிகிறது. இது ஏகாதிபத்திய அரசுக்கு மக்கள் கொடுத்த பதிலடியாகத்தான் இந்தக் கூட்டங்களின் வெற்றியை நான் கருதுகிறேன்.

★ இவ்வாறான படுகொலைகள் மூலம் சிங்களப் பேரினவாதம் அடைய விரும்புவது என்ன? இது போன்ற படுகொலைகள் ஏனைய விடுதலைப் போராட்டச் செயற்பாட்டாளர்கள் மீதும் நிகழ்ந்திருக்கின்றனவா?

பல்வேறு நாடுகளிலும் இந்த நிகழ்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால், இதிலிருந்து ஒரு பாடத்தை எமது தோழர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். கராணம், சிங்களப் பேரினவாத அரசு, வெளிநாடுகளில் வாழக்கூடிய தமிழர்கள் முழுமையான ஆதரவு தருகிறார்கள்; இந்த ஆதரவை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்று திட்டமிட்டு, அந்தந்த நாட்டு அரசுகளையெல்லாம் அணுகி இதிலே முனைப்பாக முன்னின்று செயற்படுகிறது. தோழர்களையெல்லாம் வெளியேற்றும்படி அலலது அவர்கள் மீது வழக்குகள் தொடரும்படி அவர்கள் தூண்டினார்கள். அதன் காரணமாகத்தான் கனடா நாட்டில் சுரேஸ் அவர்கள் மீதும் சுவிஸ் நாட்டில் முரளி அவர்கள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டன. மற்ற நாடுகள் சிங்கள அரசின் வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவேதான், அடுத்த கட்ட நடவடிக்கையாக முன்னணித் தோழர்களைப் படுகொலை செய்வது என்ற முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு நாதன் அவர்களையும், கஜன் அவர்களையும் பாரிஸ் நகரிலே படுகொலை செய்தார்கள். இதன் மூலம், வெளிநாடுகளிலே வாழக்கூடிய தமிழர்கள் மத்தியில் ஒரு பீதியுணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதும், சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசுகள் மத்தியில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி இவர்களையெல்லாம் நமது நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதித்ததனால்தானே இத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆகவே இவர்களையெல்லாம் வெளியேற்ற வேண்டும் என்று அந்த அரசுகள் ஏதாவது செய்யட்டும் என்ற நோக்கத்திலும் அவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள். ஆக, வெளிநாடுகளில் வாழக்கூடிய நம்முடைய தமிழ் மக்கள் மத்தியிலே இறங்கி வேலை செய்து கொண்டிருக்கக் கூடிய முன்னணித் தோழர்கள் எச்சரிக்கையாக விழிப்புணர்வுடனும் நடந்துகொள்ள வேண்டும் என ரொம்ப பணிவோடு வேண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், முன்னணி வீரர்களின் இழப்பு என்பது எதிரிகளின் நோக்கத்திற்குத் துணை போய்விடும். நம்முடைய தோழர்கள் தங்களைப்பற்றி அலட்சியமாகக் கருதிக் கொண்டு நடப்பார்களானால் அதனால் ஏற்படுகிற இழப்பு என்பது இயக்கத்தின் வளர்ச்சியைப் பாதிப்பதோடு எதிரிகளுக்கு ஆதரவான சூழ்நிலையை ஏற்படுத்தி விடும்; ஆகவே, தோழர்கள் எச்சரிக்கையோடும் விழிப்புணர்வோடும் இருக்க வேண்டும். சிங்களப் பேரினவாதத்தின் இந்தப் படுகொலைகளுக்கு பதிலடியாக மக்கள் மேலும் மேலும் ஆதரவு தருவதன் மூலம் தான் இதற்குச் சரியான பதிலடியைக் கொடுக்க முடியும். அந்த ஆதரவை மக்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

★ தமிழக மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான எழுச்சி நிலையைத் தோற்றுவிக்க நீங்கள் தற்போது மக்கள் முன் எவ்வகையான செயற்திட்டங்களை வைத்திருக்கிறீர்கள்?

தமிழ் நாட்டில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக நான்கு ஆண்டு காலமாக முயற்சி செய்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான அமைப்புக்கள், கட்சிகள் அனைத்தையும் ஒன்று திரட்டி தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு என்ற பெயரில் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கு நான் அமைப்பாளனாக இருக்கிறேன். ஏறத்தாள 35–க்கு மேற்பட்ட அமைப்புக்களும் கட்சிகளும் இதில் அங்கம் வகிக்கின்றன. கடந்த நான்கு ஆண்டு காலத்துக்கு மேலாக இந்தக் குடையமைப்பின் சார்பிலே எல்லோரும் இணைந்து பல்வேறு மாநாடுகள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள், எனப் பல்வேறு போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கிறோம். இதற்கு மக்கள் பலத்த ஆதரவு அளிக்கிறார்கள்.. இதை நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம்.

★ தமிழக மக்கள் மத்தியில், தமிழீழத்திற்கான ஆதரவுச் செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன?

தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் தமிழீழ ஆதரவு என்பது, நீறு பூத்த நெருப்பாகவே இருந்திருக்கிறது. அடக்குமுறைச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம், தடாச் சட்டம் போன்ற கொடிய சட்டங்கள் தமிழீழ

**இலங்கையிலே கால்களை ஊன்றுவதற்கு சிங்கள அரசு இடமளிப்பது ஈழத்தமிழர்களுக்கு எதிரானதல்ல; இந்தியாவிற்கெதிரானது என்பதை இந்தியாவின் தலைமைப்பீடத்தில் உள்ளவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்**



ஆதரவாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதைப் பார்த்த மக்கள் மத்தியிலே அச்சம் ஏற்பட்டது. அவர்கள் தங்கள் ஆதரவை வெளிப்படையாகக் காட்டத் தயங்கினார்களே தவிர, அவர்கள் இந்தப் போராட்டத்திற்கு எதிராக ஒரு போதும் ஆகிவிடவில்லை என்பதைப் பல சந்தர்ப்பங்களில் எங்களால் பார்க்க முடிந்தது. ஏனென்று சொன்னால் உதாரணத்துக்கு ராஜீவ்காந்தி, ஜெயவர்த்தனா ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை இந்திய வானொலி, இந்தியத் தொலைக்காட்சி, இந்தியாவின் முக்கியமான பத்திரிகைகளில் தொடர்ந்து விடுதலைப் புலிகளைப் பற்றி அவதூறுப்பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகிற வகையிலே செய்திகள் பிரசுரிக்கப்பட்டன, இதற்கு மாற்றாக எங்களைப் போன்றவர்கள், செய்யக்கூடியவர்கள் செய்ய முடிந்தது என்னவென்றால் பொதுக்கூட்டம் போட்டு மக்கள் மத்தியிலே கருத்துக்களைச் சொல்ல முடிந்ததே தவிர, எங்களுக்கு வானொலி கிடையாது, தொலைக்காட்சியின் ஆதரவு கிடையாது; பெரிய பத்திரிகைகளும் எங்களுக்கு ஆதரவில்லை. அவர்களுடைய செய்தி மக்களிடம் சென்றடைந்ததைப் போல, எங்களுடைய செய்தி மக்களிடம் சென்றடைய முடியவில்லை. இந்த நிலையில் நியாயமாக என்ன நடந்திருக்க வேண்டும்? தொடர்ந்து புலிகளுக்கெதிரான அவதூறுப் பிரச்சாரம் பெரிய அளவிலே திட்டமிட்டுச் செய்த போது, மக்கள் அதை ஏற்றுக்கொண்டிருப்பார்களேயானால், நம்பியிருப்பார்களேயானால் தமிழீழ விடுதலை ஆதரவு பொதுக்கூட்டங்களை நாம் நடத்தமுடியாத சூழ்நிலை தமிழ் நாட்டில் வந்திருக்க வேண்டும். நானோ என்னைப் போன்றவர்களோ பொதுக்கூட்டங்களுக்குப் பேசுவதற்குப் போனால், புலிகளை ஆதரித்துப் பேசுவதற்குச் போனால், 'புலிகளை ஆதரித்துப் பேசுவதற்கா வருகிறாய்' என்று மக்களே எங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழக் கூடிய சூழ்நிலைதான் வந்திருக்க வேண்டும். ஆனால், போகிற பொதுக்கூட்டங்களுக்கு மக்கள் திரளாக வருகிறார்கள். ஆதரவு தருகிறார்கள் என்பது எதைக் காட்டுகிறது. இவர்கள் செய்யிற பொய்ப் பிரச்சாரங்களை மக்கள் நம்பவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆக மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அதைத் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்; சென்ற ஆண்டு நடந்த 'பந்த்' போராட்டம் மகத்தான வெற்றியை அடைந்தது. இந்தப் பிரச்சினையில் இருந்து ஒதுங்கியிருந்த கட்சிகள் கூட, அந்தப் போராட்டத்தில் ஈடு படவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. விடுதலைப்புலிகளை ஓயாமல் எதிர்த்து நிற்கிற காங்கிரஸ் கட்சி கூட, பந்த் போராட்டத்திற்கு எதிராக ஒரு அறிக்கை கொடுக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆக மக்கள் மத்தியில் இந்த ஆதரவு நன்றாகவே இருக்கிறது. அது தொடர்ந்து இருக்கும். தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவாகத் தமிழக மக்கள் கிளர்ந்தெழுவார்களேயானால் தமிழ் நாட்டிலிருக்கின்ற அரசாங்கம் அதிலிருந்து மாறுபட்டு நிற்கமுடியாத சூழ்நிலை உருவாகி விடும். ஆக, தமிழ்நாட்டு மக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை ஆதரவாகத் திரட்டுவதன் மூலமே தமிழ்நாட்டு அரசையும், அதன்மூலம் இந்திய அரசையும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக நாம் திருப்ப முடியும். ஆக, எல்லாவற்றுக்கும் அடிப்படையென்பது தமிழ்நாட்டு மக்களின் ஆதரவு தான். ஆகவே அந்த ஆதரவை முழுமையாகத் திரட்டுவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடல் வேண்டும், எங்கள் அமைப்பும் அந்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

★ மாவீரர் நாள் நிகழ்வு பற்றி தங்களுடைய கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள் எனக் கேட்ட போது?

களத்திலே வீரத்தை நிலை நிறுத்தி, தம்முடைய உயிரைத் தியாகம் செய்த வீரர்களின் நினைவு நாளைக் கொண்டாடுவதென்பது புதிதல்ல. பழந்தமிழர் காலத்தில் இந்தப் பழக்கமிருந்திருக்கிறது. போர்க்களத்திலே இறந்து போன வீரர்களுக்கு வீரக்கல் நாட்டி விழாவெடுப்பதென்பது, சங்க காலத்தில் மரபாக இருந்திருக்கிறது.



**தமிழீழப் போராட்டம், அந்த மண்ணை விடுவிக்கின்ற போராட்டம் மட்டுமல்ல, மாறாக உலகம் பூராகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எட்டுக் கோடித் தமிழ் மக்களுக்கும் விடிவைக் கொண்டு வரப்போகிற போராட்டமாகவே பார்க்கிறேன்.**

அந்த மரபுக்கு இந்த மாவீரர் நாள் புதிய வடிவம் கொடுத்திருக்கிறது. புத்துயிர் கொடுத்திருக்கிறது. ஆகவே இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதன்மூலம் நம்முடைய மண்ணைக் காக்கிற, மண்ணை விடுவிக்கிற போராட்டத்திலே உயிர் நீத்த தியாக சீலர்களுக்கு நாம் அஞ்சலி செலுத்துகிறோம் என்ற உணர்வை இந்த விழாக்கள் ஏற்படுத்துகின்றன. அந்த வகையிலே இது வித்தியாசமான விழாவாக அமைந்திருக்கிறது. இது போன்ற விழாக்கள் தமிழ் நாட்டிலும் நடாத்தப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

★ அப்துல் ரவூப்பின் தியாகத்தைப் பற்றிப் பேசிய போது...

அப்துல் ரவூப் ஒரு முஸ்லீம் இளைஞன். எவ்வளவோ பொய் பிரச்சாரங்கள் – முஸ்லீம்களுக்கு எதிராக விடுதலைப்புலிகள் செயற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்த கால கட்டத்தில் கூட, தமிழ்நாட்டைச் சேர்ந்த முஸ்லீம் இளைஞன் தன்னுடைய இன்னுயிரைத் தியாகம் செய்வதற்கு முன்வந்த நிகழ்சி என்பது, அவன் எரிந்த அந்த உடல் தீயிலேயே இந்தப் பொய்ப் பிரச்சாரங்கள் எல்லாம் பொசுங்கிப் போய்விட்டன. அவனுடைய தியாகம் தமிழ் நாட்டு மக்கள் மத்தியிலும் ஒரு அதிர்வலையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ் நாட்டில் குறிப்பிட்ட கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் ஏதேனும் சிறைவாய்ப்பட்டால் அதற்காகத் தீக்குளிப்பவர்கள் மலிந்து விட்ட ஒரு மண்ணில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அப்துல் ரவூப்பின் தியாகம் என்பது எல்லோரையும் உலுக்கியிருக்கிறது; விழிப்புறச் செய்திருக்கிறது.

★ தமிழீழப் போராட்டம் தொடர்பாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த இந்திய தலைவர்கள் கொண்டிருந்த - கடைப்பிடித்த அணுகுமுறைகள் பற்றி தங்கள் கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது, இந்தப் பிரச்சினையில் உண்மையான அக்கறை செலுத்தினார். 1983 யூலை மாதம் கொழும்புக் கலவரங்கள் நடைபெற்ற போது, அப்போது வெளிநாட்டமைச்சராக இருந்த பி.வி நரசிம்மராவ் அவர்களைக் கொழும்பு அனுப்பி ஜெயவர்த்தனாவை எச்சரிக்கை செய்தார். அதுமட்டுமல்ல, இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் கொடுமைகளைப் பார்த்துக் கொண்டு இந்தியா சும்மா இருக்காது என்ற எச்சரிக்கையை அவரே இந்திய நாடாளுமன்றத்தில் விடுத்தார். அவருடைய வற்புறுத்தலின் விளைவாக, ஜெயவர்த்தனா ஒரு வட்டமேசை மகாநாட்டை நடாத்தி தமிழர்களின் பிரதிநிதிகளோடு பேசுவதற்கு சம்மதித்தார். ஆனாலும், அவர் இதில் காலம் கடத்துகின்ற தந்திரத்தைக் கையாளுகிறார் என்பதை இந்திரா காந்தி உணர்கிற போது, ஈழத்தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி கொடுப்பதற்கு அவர் முன் வந்தார். அதைச் செய்தார். அதற்கு அடுத்த நடவடிக்கையை அவர் தொடர்வதற்கு முன்னாகவே அவர் படுகொலை செய்யப் பட்டு விட்டார். அதற்குப் பின்னால் வந்த ராஜீவ்காந்தியோ அரசியலுக்குப் புதியவர் என்ற நிலைமையில் இந்தப் பிரச்சினையை அவர் முழுமையாக உணர்ந்திருக்கவில்லை. இந்தப் பிரச்சினையில் ஆலோசகராக வந்தவர்களை ஜெயவர்த்தனா சுலபமாகத் தன் வசப்படுத்தி விட்டார். ஆகவே, ராஜீவ் காந்தி தவறுக்கு மேல் தவறைத் தொடர்ந்து செய்து, இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி கெடுத்தார். இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி எந்தத் தமிழ் மக்கள் இந்தியாவை முழுமையாக நம்பியிருந்தார்களோ அந்தத் தமிழ் மக்களையே இந்திய இராணுவம் வேட்டையாடுகிற நிலையை அவர் ஏற்படுத்தினார்.

பின்னாலே பிரமதாசா ஜனாதிபதியானவுடன், இந்திய இராணுவத்தை வெளியேறும்படி வற்புறுத்தினார். ஆக, சிங்களவர்களின் வெறுப்புக்கும் ஆளாகி, தமிழர்களின் வெறுப்புக்கும் ஆளாகி இந்திய இராணுவம் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. ராஜீவ்காந்தியின் தவறுதலான கொள்கையின் விளைவு, அதற்குப் பின்னால் வி.பி சிங் காலத்திலேயே இந்தத் தவறைத் திருத்துவதற்கு முயற்சி செய்து இந்தியப்படையை வாபஸ் வாங்கினார். அதைத் தொடர்ந்து செய்வதற்குள் அவருடைய ஆட்சி முடிவடைந்து விட்டது. பின்னாலே நரசிம்மராவ் பதவிக்கு வந்த போது, அவர் பழைய – ராஜீவ் காந்தியின் கொள்கைகளையே தொடர்ந்து கையாள வேண்டிய நிலைமையில் இருந்தார். அதைத்தான் அவர் கையாண்டார். இப்போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காங்கிரசின் தயவிலே இருக்கும் தேவ கௌடா அவர்களின் ஆட்சியிலும் மாற்றங்கள் எதுவும் பெரிதாக நிகழ்ந்து விடும் என்பதை எதிர்பார்ப் பதற்கில்லை.

★ தமிழீழப் போராட்டம் இந்திய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகமானது என்ற கருத்து நியாயமானதா?

அது ஒரு தவறுதலான எதிர் மாறான அணுகுமுறைகளின் விளை வாக இந்தக் கணிப்பு ஏற்பட்டிருக் கிறது. வங்காள தேசத்தில் விடுதலைப் போராட்டம் நடைபெற்ற போது, இந்தியா அதற்கு ஆதரவளிக்க வேண் டும் என்று இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சிகளும் வற்புறுத்தின. அதன் விளைவாக, இந்திராகாந்தி அதற்குரிய நடவடிக்கைகளில் ஈடு பட்டு இந்திய இராணுவத்தை அனுப்பி விடுதலை பெறுவதற்கு உதவி செய் தார். ஆனால், பாகிஸ்தான் வசம் இருந்த கிழக்கு வங்காளம் தனி நாடாவதற்கு நாம் உதவி செய்தால், இந்தியாவில் உள்ள மேற்கு வங்கா ளமும் தனிநாடாகப் போனால் என்ன செய்வது என்ற கவலையோ அச் சமோ இந்தியாவில் உள்ள எந்தக் கட்சித் தலைவர்களுக்கும் ஏற்பட வில்லை. வங்காளிகள் மீது வராத சந்தேகம் தமிழர்கள் மீது மட்டும் அவர்களுக்கு வருவது சரியல்ல. எதிர் மறையாகப் பார்க்கிறார்கள் என்பது தான் பொருள்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் துயரைத் துடைப்பதற்கு இந்தியா முன்வந்து உதவி செய்யுமானால், இந்தியாவில் உள்ள தமிழ் மக்கள் அதை எப்படிப் பார்ப்பார்கள்; இந் தியா போன்ற பெரிய நாடு எமது தமிழ்ச் சகோதரர்களுக்கு வந்து உதவி செய்தது என்ற நன்றியோடு இருப் பார்கள். ஆனால் மாறாக, எங்கள் தமிழ்ச் சகோதரர்கள் நடத்துகிற போராட்டத்தை ஒடுக்கிறதற்கு இந் தியா முயற்சி செய்யுமானால் அது நேர் எதிர்மாறான விளைவுகளையே தமிழ்நாட்டில் ஏற்படுத்திவிடும். ஆக இதை டில்லியில் இருப்பவர்கள் உணரவில்லை. இதை உணர்ந்து பார்த்து அவர்கள் அதற்குரிய நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும். யாரோ தவறுதலாகச் சொல்வ தைப் பார்த்து டில்லி இத்தகைய போக்கிலே செல்லுமானால் விளைவு கள் எதிர்மறையாகத்தான் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகி றேன்.

★ நீங்கள் வெளிநாடுகளில் சந்தித்த தமிழீழ மக்கள் பற்றி...

நிச்சயமாக உலகம் பூராகவும் வாழும் தமிழீழ மக்கள், தமிழீழ விடுத லைப் போராட்டத்தில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றார்கள். நான் 1982ம் ஆண்டில் இருந்து பல் வேறு நாடுகளில் நான் சுற்றுப்பயணம் செய்து வருகிறேன். நாளுக்கு நாள் இந்த ஆதரவு வளர்ந்து இருப்பதை நான் ஒவ்வொரு சுற்றுப்பயணத்திலும் பார்த்திருக்கிறேன். அண்மையில் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் கூட நல்ல விழிப்புணர்வும் இந்தப் போராட்டத்தைப்பற்றிய புரிந்துணர் வும் ஏற்பட்டிருப்பதை நான் சென்ற இடமெல்லாம் பார்த்திருக்கிறேன். இது மேலும் வளரும். ஒருநாளும் இது குறையாது வளர்ந்து வளர்ந்து இந்த ஆதரவு முழுமையான கட்டத்தை அடையும்.

★ இந்திய அரசு கடைப்பிடித்து வரும் பிராந்திய நலன்களின் அடிப் படையில் இலங்கை தொடர்பாக வெளி விவகாரக் கொள்கை சரியானதா?

இலங்கையின் பிரச்சினையில் மட்டுமல்ல, தென்னாசியாவில் உள்ள பிறநாடுகளின் பிரச்சினைகளிலும் இந்தியா நடந்து கொள்ளுகின்ற முறை சரியானதல்ல; இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு அவர் கையாண்ட அணுகுமுறை என்பது வேறாக இருந்தது. அவர் காலத்தில் எந்த நாட்டில் விடுதலைப் போராட் டம் நடந்தாலும் இந்தியா ஆதரவான கொள்கையைக் கடைப்பிடித்தது. ஆனால் அதற்குப் பின்னால் காலப் போக்கில் இந்தியாவின் அணுகுமுறை எப்படியாயிற்று என்று சொன்னால் குறிப்பாகத் தென்னாசியப் பகுதியைப் பொறுத்தவரை எந்த நாடும் இந்தியா வோடு சுமுக உறவில் இல்லை. பாகிஸ் தானோடு இந்தியாவுக்கு ஓயாத பிரச் சினைகள்; எந்த வங்காள தேசத்தின் விடுதலைக்காக இந்தியா உதவிற்றோ அந்த வங்காள தேசம் இந்தியாவிற்கு எதிராக நிற்கிறது. சரி நேபாளம் அதுவும் இந்தியாவோடு சுமூகமான உறவில் இல்லை. ஆக, இந்தியாவைச் சுற்றியிருக்கக்கூடிய அத்தனை நாடுக ளும் இந்தியாவுக்கு ஏதாவதொரு கட்டத்தில் எதிரான நிலையைத் தான் மேற்கொண்டிருக்கின்றன. அந்த வகை யில் இலங்கையிலுள்ள சிங்கள அரசும் அப்படித்தான். இந்தியாவோடு ஒத் துப் போவதில்லை. 1962–ஆம் ஆண் டில் சீனா – இந்தியாவின் மீது படை எடுத்த போது படையெடுப்பாளா ரான சீனாவைக் கண்டிப்பதற்கு இலங்கை முன் வரவில்லை. மாறாக, அது நடு நிலை வகித்தது. வங்காள தேசப் போராட்டம் ஏற்பட்ட போது பாகிஸ்த்தான் இராணுவ விமானங் கள் இந்தியாவின் மேலாகப் பறந்து செல்லக் கூடாது என்று இந்தியா தடைவிதித்தபோது பாகிஸ்த்தான் விமானங்கள் இலங்கையின் வழியா

## தெருப்பாடல்கள் ஒலிக்கிறது

மாரிகாலம் கை, கால்கள் உதறல் எடுக்கும். வெளியில் இறங்கவே முடியாது. ஆயினும் அந்தக் குளிரில் தீப்பந்தங்களோடு சேமக்கலம் ஒலிக்க பள்ளி எழுச்சிப் பாடல்கள் ஒலித்தபடி போவார்கள். கிராமத்தின் குச்சு ஒழுங்கைகள் கலங்கும். காதுக்குள் இனிய பாடலின் இராகமும், கூடிப்பாடி பள்ளி எழுப்பும் அந்த நிகழ்வும் அந்த அதிகாலைப் பொழுதில் உயிர்ப்பு மிக்கனவாக இருப்பது என்னவோ உண்மை தான். ஆனால் இன்று விடுதலைக்கான தரிசனத்துக் காக போர்ப்பாடல்கள் முழங்குகின்றன. விடுதலை வேண்டி கூட்டாக போர்ப்பாடல் ஒலிக்கிறது. கிராமங்களின் வயல்களூடாகவும், தெருக்கள் ஊடா கவும், வயல் வரம்புகள் ஊடாகவும் விடுதலைப் பண் ஒலித்தபடி வீரர்கள் போகிறார்கள். முல்லைத்தீவின் போர் வெற்றிச் செய்தி கிராம மக்களிடம் எடுத்துச் சொல்லப்படுகிறது. மக்கள் மகிழ்ச்சியில், பெருமிதத்தில் நனைகிறார்கள். தெருப் பாடல்களாகவும், தெருக் கூத்துக்களாகவும், வீதி நாடகங்களாகவும், அங்கே புதியதொரு கலை முகிழ்த்து நிற்கிறது. மக்களின் முகங்களில் தளைகள் உடைந்த, அறுந்த சந்தோஷம்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கச் சென்று வங்காளத்தில் குண்டு போட இலங்கை அனுமதித்தது. ஆக, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இலங்கையில் இருந்த அரசுகள் இந்தியாவுக்கு எதிரான நிலையையே எடுத்து வந்திருக்கின்றன. இந்த உண்மையை இந்தியா உணர மறுக்கிறது. இந்தப் பகுதியில் ஒரு வல்லாதிக்க அரசாகத்தான் விளங்க வேண்டும் என்று இந்தியா நினைக்கிறது. இது ஒரு தவறான அணுகுமுறையின் விளைவாகும். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா ஒரு நடுவராகச் செயற்படுவதற்குப் பதில், ஒரு ஆக்கிரமிப்பாளானகச் செயற்பட்டு சிங்கள அரசுக்காக இந்தியா இராணுவத்தை அனுப்பி, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு முயற்சித்தது. அதிலிருந்து, தொடர்ந்து இந்தியாவின் கொள்கை என்பது ஈழத் தமிழர்களுக்கு எதிரான கொள்கையாகவே அமைந்து விட்டது. தளபதி கிட்டு வந்த கப்பலை நடுக்கடலிலே இந்தியக் கடற்படை வழிமறித்து ஒரு அடாவடித்தனமான செயலை அது புரிந்தது. இந்திய நீதிமன்றமே இதைக் கண்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, கிட்டுவுக்கும் அவரோடு கப்பலில் வந்த தோழர்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதியை வன்மையாகக் கண்டித்திருக்கிறது. சர்வதேசக் கடற்பரப்பில் சென்று கிட்டுவின் கப்பலை வழிமறித்தமைக்கு எந்தவித நியாயமுமில்லை. சர்வதேச கடற்சட்டங்களை மீறி இந்தியக் கடற்படை செயற்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள நீதிமன்றமே சுட்டிக்காட்டக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆக, இந்தியாவின் போக்கு என்பது ராஜீவ் காந்தியின் காலமாக இருந்தாலும், நரசிம்மராவின் காலமாக இருந்தாலும் அல்லது இப்போதுள்ள அரசாக இருந்தாலும் அதன் போக்கு என்பது தமிழீழ மக்களுக்கு எதிரானதாகவே இருக்கிறது. அதற்குக் காரணமென்ன என்று சொன்னால் 'ரா' உளவுத்துறை இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த 'ரா' உளவுத்துறையைக் கட்டுப்படுத்தக் கூடிய வலிமை வாய்ந்த பிரதமர்கள் இல்லாமல் போய்விட்டார்கள். 1977—ஆம் ஆண்டில் மொராஜிதேசாய் பிரதமராக வந்த போது, 'ரா' உளவுத் துறையை இழுத்து மூடினார்கள் அது செயற்படக்கூடாதென்று; இவர்களால் அண்டை நாடுகளுடன் விரோதம் தான் ஏற்படுகிறது என்று அவர் தெளிவோடு உணர்ந்து இந்தத் துறையை இழுத்து மூடினார்கள். 'ரா' உளவுத்துறையின் அடாவடித்தனமான நடவடிக்கைகளின் விளைவாக வங்காளதேசத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே மனக்கசப்பு உருவாகிற்று.

வங்காளதேசத்தில் நடைபெற்ற தேர்தலில் முஜீபு ரகுமான் மகளுக்கு, 'ரா' உளவுத்துறை நிதியுதவி அளித்தது என்ற காரணத்தினாலேதான் வங்காளத்தில் இருந்த மற்றக் கட்சிகள் எல்லாம் இந்தியாவுக்கு எதிரான நிலையை எடுக்க வேண்டி இருந்தது. அதேபோல, அண்டை நாடான பாகிஸ்த்தானில் – சிந்து மாநிலத்திலும் பரிஜஸ்தானிலும் பாகிஸ்த்தான் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளை 'ரா' உளவுத்துறை தூண்டி விடுகிறது எனக் குற்றம் சாட்டி, பதிலுக்குக் காஷ்மீர் பிரச்சினையில் தலையிடுகிறது. ஆக 'ரா' உளவுத்துறையை இவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதன் விளைவாக அண்டை நாடுகள் எல்லாவற்றுடனும் மோதல் ஏற்பட்டுவிட்டது. இலங்கைப் பிரச்சினையிலும் அதுதான் நடக்கிறது. 'ரா' உளவுத் துறையில் ஆலோசனைகளை இந்திய அரசு கேட்டு செயற்படுவதன் காரணமாக, தமிழீழப் பிரச்சினையில் முற்றிலும் எதிரான நிலையினை இந்திய அரசு கொண்டிருக்கிறது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. இந்திய அமைதிப்படையின் தளபதியாக இலங்கைக்குச் சென்று பணி புரிந்த லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர்சிங் என்பவரும் மேஜர் சந்தேஷ் பாண்டே என்பவரும் இந்திய இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின்னால் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திலும் இந்திய அரசியல்வாதிகள் செய்த தவறின் விளைவாகத்தான், நாங்கள் பல சிரமங்களுக்கு ஆளானோம். இவர்களுக்கு உண்மையான சரியான தகவல்கள் ஏதும் தெரிவிப்பதில்லை. விடுதலைப்புலிகள் பற்றி தவறான கணிப்பை இவர்கள் எங்களுக்குக் கொடுத்தார்கள். அது பின்னாலே எவ்வளவு தவறு என்பதை நாங்களே நேரடியாக உணர்ந்தோம். இந்திய அரசு எங்களுடைய ஆலோசனைகளைக் கேட்பதற்குப் பதில், 'ரா' உளவுத்துறையின் ஆலோசனையைக் கேட்டுச் செயற்பட்டதன் காரணமாகத்தான் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையே மோதல் உருவாயிற்று. இரண்டு முக்கியமான தளபதிகள் புத்தகங்களின் மூலம் தாங்கள் கண்டறிந்த உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதெல்லாம் எதைக்காட்டுகிறது? இது போன்ற மோசமான உளவுத் துறையை வைத்துக் கொண்டு இந்திய அரசு செயற்படுமானால், ஒரு காலத்தில் உலகத்தில் இருந்து இந்தியா தனிமைப்பட்டு விடும். அந்த அபாயம் தான் எதிர்காலத்தில் உருவாகும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு அமெரிக்க இராணுவம் சிங்கள இராணுவத்திற்குப் பயிற்சி கொடுக்கிறது. அங்கே இலங்கையிலே 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஏற்படுத்துகிற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் இலங்கையில் வாழுகிற தமிழர்களுக்கு ஏற்படுத்தப் போகிற பாதிப்பை விட, இந்தியாவிற்கு ஏற்படப் போகிற பாதிப்பு பன்மடங்கு, பல ஆயிரம் மடங்கு அதிகமானது. இலங்கையிலே கால்களை ஊன்றுவதற்கு சிங்கள அரசு இடமளிப்பது ஈழத்தமிழர்களுக்கெதிரானதல்ல, இந்தியாவிற்கெதிரானது என்பதை இந்தியாவின் தலைமைப்பீடத்தில் உள்ளவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். துரதிஸ்டவசமாக இந்தியாவின் தலைமைப்பீடத்திலே உள்ளவர்கள் இந்த உண்மையை உணர மறுக்கிறார்கள். இந்த உண்மையை எவ்வளவு தூரம் விரைவாக உணர்கிறார்களோ, அவ்வளவு விரைவாக நன்மை ஏற்படும். இல்லாவிட்டால், விபரீதம் ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

★★

ஜேர்மன் மக்களிடம் எமது மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் நிகழ்த்திவரும் கொடுமைகள் பற்றியும், எமது மண் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் காலடியில் நெரிபடும் கதை பற்றியும் எடுத்துச் சொல்லுகின்ற நூலாக இந்நூல் விளங்குகின்றது.

அகிம்சா ரீதியாக தொடர்ந்த தமிழர் போராட்டம் ஆயுத ரீதியாகப் பரிணாமம் அடைந்தமையும் இந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சர்வதேச ரீதியாக, குறிப்பாக ஜேர்மன் மக்களிடம் எமது போராட்டம் பற்றிய நியாயங்களை வெளிக்கொணர, இந்நூல் பெரிதும் உதவலாம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொலைதூர தளங்கள் அருகில் கடற்புலிகளின் முக்கிய தாக்குதல்கள்

கடந்த ஒக்டோபர் மாதம் 26ம் திகதி கடற்படை நடவடிக்கை தலைமையகமான திருகோணமலைத் துறைமுகத்தின் அருகிலும், சென்ற மாதம் 11–ம் திகதி வட பிராந்திய கடற்படைத் தலைமையகமான காரைநகர் கடற்படைத் தளத்தின் அருகிலும் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்களிலும் இராணுவ ஆய்வாளர்கள் மத்தியிலும் கடற்போரில் புலிகள் புதியதொரு அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளார்கள் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இது கடற்படைத் தளங்கள் உச்சநிலை பாதுகாப்புள்ளன எனவும், புலிகளால் சென்றடைய முடியாத தூரத்தில் இருப்பவை எனவும், சென்று தாக்கிவிட்டு மீளமுடியாத தூரத்தில் அமைந்திருப்பவையாக கருதப்பட்ட காரணத்தினாலேயே ஆகும்.

இந்த நிலையில் கடற்புலிகளாலும், கடற்கரும் புலிகளாலும் இந்த இலக்குகளை நெருங்கமுடியும் என்று நிரூபித்துள்ளமையே இன்று முக்கிய பரிணாமமாகும். கடற்புலிகளைப் பொறுத்து, சிறீலங்கா கடற்படையை விட சிறியனவும், வசதிகள் குறைந்ததுமான படகுகளையே பயன்படுத்துகின்றனர். இந்த நிலையிலே நீண்ட தூரங்களில் உள்ள கடற்படை இலக்குகளை சென்றடைவதும் தாக்குவதும் பெரிதும் சிக்கலுக்குரிய விடயமாகவே கருதப்பட்டது. இதில் உண்மையும் இல்லாமல் இல்லை. அத்தோடு நீண்டதூர கடற்சமரில் ஈடுபடும் போது கடற்படையினருக்கு உதவியாக சிறீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்களும் பீரங்கி பொருத்தப்பட்ட உலங்குவானூர்திகளும் ஈடுபடுத்தப்படுவதற்கான வாய்ப்புக்களும் நிறையவே உண்டு. அவ்வாறு குறுதூர சண்டைகளின் போது, பயன்படுத்தப்பட்டதும் உண்டு. இந்த நிலையில் கடற்புலிகளின் திருமலைத் துறைமுகத்தின் அருகிலும் காரைநகர் துறைமுகத்தின் அருகிலும் மேற்கொண்ட தாக்குதல்கள் துணிகரமானவை என்று மட்டுமல்ல இவை சிறீலங்கா கடற்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி பலத்த கேள்விகளையும் எழுப்பி உள்ளது எனலாம். ஏனெனில் சிறீலங்கா இராணுவ வட்டாரங்களின் தகவல்களின் அடிப்படையில் பார்க்கும் போது, திருமலை மற்றும் காரைநகர் கடற்படைத் தளங்களை புலிகள் சென்று அடைய வேண்டுமானால் குறைந்தது 50 மைல்களுக்கு மேற்பட்ட தூரத்தை அவர்கள் கடந்து செல்ல வேண்டும். இது கடற்புலிகளிடம் உள்ள வளங்களின் அடிப்படையாக பார்க்கும் போது மிகவும் தொலைவான இடங்களில் இருப்பது சந்தேகமில்லை. அதாவது புலிகள் 50 மைல்களைக் கடந்து சென்று அங்கு சிலமணி நேரம் போரிட்ட பின்னர் அதே அளவு தூரத்துக்குத் திரும்புகின்றனர் என்பது அவர்களின் தாக்குதல் படகுகளின் அளவுக்கு மிகவும் கஷ்டமானதாகுமென்பதே கணிப்பீடாகும். அதுவும் கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடாத்துவார்களேயானால் கடற்போர் புலிகளுக்கு சாதகமாக அமையும் என்பது மிகவும் கடினமானதாகவே இருக்கும் எனக் கருதப்பட்டது.

ஆனால், கடற்புலிகள் தமது எண்ணத்தின்படி தாக்குதல் இலக்குகளை அடைவதில் வெற்றி கண்டுள்ளதோடு தாக்குதலை நடாத்திவிட்டுத் திரும்பியும் வந்துள்ளனர். இந்த வகையில் சிறீலங்கா இராணுவ வட்டாரங்களில் உள்ள முக்கியமான கேள்வியானது கடற்புலிகள் சிறீலங்காவில் எந்தக் கேந்திர நிலைகளையும் எட்டக்கூடிய ஆற்றலைப் பெற்றுவிட்டனர் என்பதே ஆகும். ஆனால் இவ்வாறானதொரு அபிப்பிராயம் இராணுவ ஆய்வாளர்களிடமோ மக்களிடமோ ஊன்றிவிடக்கூடாது என்பதன் காரணமாகவே காரைநகர் கடற்படைத் தளத்திற்கு அருகே நடந்த தாக்குதலை மாதகல் பகுதியில் இடம்பெற்றதாகக் கூற முனைந்து, இதன் மூலம் கேந்திர நிலையான காரைநகர் கடற்படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்கவில்லை என்பதைக் காட்ட முனைந்தோடு இலக்குகளின் எல்லையிலேயே புலிகள் தடுக்கப்பட்டு விட்டார்கள் எனக் காட்டவும் முனைந்துள்ளது. ஆனால், கடற்படையினர் இவ்வாறு கூறியமை கேந்திர நிலை ஒன்றை புலிகள் தாக்கவில்லை என்பதைக் காட்டுவதாக இருப்பதே ஒழிய கடற்புலிகளால் நீண்டதூரத் தாக்குதலை நடத்த முடியும் என்பதை அதனால் நிராகரிக்க முடியாமல் போய்விட்டது. எந்த வகையில் பார்க்கிலும் புலிகளின் நீண்டதூரத் தாக்குதலை சிறீலங்கா படையினரால் தடுக்கமுடியாதென்பதையே இப்புதிய தாக்குதல்கள் நிரூபிக்கின்றன.

இந்த வகையில் சிறீலங்கா கடற்படையின் புதிய ரோந்து அணிகள் மட்டுமல்ல தொலைவிலுள்ள கடற்படைக் கேந்திர நிச்சயங்களையும் இது நெருக்கடிக்கு உள்ளாக்குவதாகவே இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த நிலையானது கடற்படையின் செயற்பாடுகளைப் பாதிப்புக்குள்ளாக்கக் கூடியது எனவும் வடக்கு கிழக்கில் உள்ள கடற்படைத் தளங்களுக்கு மட்டுமல்ல அதற்கு அப்பாலுள்ள தளங்களுக்கு மட்டுமல்ல அதற்கு அப்பாலுள்ள தளங்களுக்கும் கேந்திர நிலைகளுக்கும் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை.



★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பௌத்த சிங்களப் பேரினவாதம்

(சென்ற இதழ் தொடர்ச்சி..)

இப்போதைய வளர்ச்சி நிலையில் இப்பிரச்சினையினை வெறும் மதக் கண்ணோட்டத்துடன் பாராது மானிடவியற் கண்ணோட்டத்திலேயே புரிந்துகொள்ள வேண்டும். இக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் தனிப்பண்பாட்டினங்களாக இவற்றை அங்கீகரிக்க வேண்டும்.

தென்னிந்தியாவிற்கூடாக மகாயான பௌத்தம் இலங்கைக்கு வந்தது போல பின்பு தென்னிந்தியாவில் பௌத்தம் முற்றாக அருகியமையால் தொடர்ந்து இலங்கையிலும் பௌத்தம் அருகிவிடும் என்ற அச்சம் இலங்கை மகாசங்கத்தவர்களிடம் ஏற்படவே பௌத்தத்தை காப்பாற்றுவதற்கான ஓர் அரணாகத் தென்னிந்திய எதிர்ப்பு என்னும் சித்தாந்தத்தை மகாசங்கத்தினர் உருவாக்கினர். அரசர்களும் இது சாதனமாய் இருந்ததால், அரசர்களும் மகாசங்கத்தினரும் இதில் ஒன்று கலந்தனர். மகாயானம் தேரவாத பிரச்சினையிலிருந்து இத்தகைய பிளவு ஒரு தெளிவான எல்லைக்கோட்டை உருவாக்கத் துணை புரிந்தது. தற்போது இலங்கையிலே தேரவாத பௌத்தம் நிலவுவதாகப் பெயரளவிற்குச் சொல்லப்பட்டாலும் நடைமுறையில் மகாயான பௌத்தமே நிலவுகின்றது.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இனப்பண்பாட்டு அர்த்தத்தில் ஒரே மூலக்கூற்றைக் கொண்டவர்கள். சிங்கள மக்களிடம் பெருங்கற்பண்பாட்டின் ஆழமான தொடர்ச்சியை இன்றும் தெளிவாகக் காணலாம். கிராமிய வழிபாட்டு முறைகள் சிறுதெய்வ வழிபாடுகள் "கப்புறாணமுறை" கண்ணகி வழிபாடு, மற்றும் வாழ்க்கைமுறை என்பவற்றிலெல்லாம் இத்தகைய பெருங்கற் பண்பாட்டின் தொடர்ச்சியினைக் காணலாம். கணனத் ஒபய சேகரா எழுதிய *'Padhini caly'* என்னும் நூலில் இவற்றிற்கான சான்றுகளைக் அவதானிக்கலாம்.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள "கப்புறான" போல தமிழிலே பிராமணரல்லாத பூசகர் உள்ளனர். வாய் கட்டிப் பூசை செய்தல் ஒரு சிறப்பான உதாரணமாகும். இத்தகைய பூசகர் முறையும் பூசை – படையல் முறையும் பெருங்கற்பண்பாட்டின் தொடர்ச்சியாகும். பெருங்கற் பண்பாட்டில் நிலவிய சிறப்பான தோல்வாத்தியமான பறை வாசித்தல் தமிழில் இன்று கோவில்களிலும் மரணக் கிரியைகளிலும் உண்டு. ஆனால், நகர்ப் புறங்களின் ஆலயங்களிலும் இது மிக அருகிவிட்டது. அதேவேளை சிங்கள மக்கள் மத்தியில் இத்தகைய பறைதான் மெழுகு பேற்று, கிராமத்திலிருந்து அரசவைவரை வாசிக்கப்படும் கருவியாக உள்ளது. சிங்கள மக்களின் கிராமிய வாழ்விலும் கிரியைகளிலும் பெருங்கற்பண்பாட்டின் தொடர்ச்சிகளை நிறையவே காணலாம்.

**மு. திருநாவுக்கரசு**

இலங்கை தென்னிந்தியாவிலிருந்து மிக அருகில் ஒரு சிறுகடலால் மட்டும் பிரிக்கப்படுவதால் அக்கடலைக் கடந்து காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவில் இருந்து அரசியல், மதம், மற்றும் பண்பாட்டுத் தாக்கங்களும் அவ்வப்போது மக்கள் வரவுகள் ஏற்பட்டு வந்துள்ளன. இவ்வாறாக காலத்துக்காலம் தென்னிந்தியாவில் இருந்து வந்து குடியேறும் வர்த்தகர்களும், படையெடுப்பாளரும், புலப்பெயர்ச்சியாளர்களும் தாம் குடியேறும் இடங்களிற்கேற்ப, அதாவது தமிழ்ப் பகுதிகளிற் குடியேறுவோர் தமிழராயும், சிங்களப் பகுதிகளிற் குடியேறுவோர் சிங்களவராயும் மாறிக்கொண்டனர். இன்று சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் "கறன", "துறன", "சலாகம்" ஆகிய சாதிப் பிரிவினர் கி.பி. 14ம் நூற்றாண்டுகளிலே தென்னிந்தியாவில் இருந்து வந்த குடியேறிச் சிங்களவராய் மாறிய மக்களே என்று வரலாற்றாய்வாளரான மைக்கல் றொபேட்ஸ் கூறுகிறார். இவ்வாறே நீர்கொழும்பில் வாழும் சிங்களவர் கண்ணுக்கு எட்டியகாலத்தில் சிங்களவராய் மாறிய தமிழராவார். சிங்களவர் பிரத்தியேகமான இனமென்பதையோ தமிழர் மீதான சிங்களவரின் இனவன்மத்தையோ நிராகரிக்க இந்த வரலாற்றுண்மை உதவும். பழைய மகாயான – தேரவத பிரச்சினைகளுக்கூடாக இன்றைய நவீன தமிழரைச் சிங்களவர் அணுகக்கூடாது. ஈழத்தமிழர் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான பண்பாட்டு வேரை ஈழமண்ணிற் கொண்டுள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சிங்களவர்களிற்கு எப்படி இலங்கைத்தீவில் ஒரு பகுதி சொந்தமோ அப்படியே தமிழருக்கும் இலங்கைத்தீவின் ஒரு பகுதி சொந்தமாகும்.



சிங்கள பௌத்தத்திற்கு தமிழரால் அச்சுறுத்தல் என்று சிங்கள பௌத்தவாதிகள் கூறுவதற்குப் பதிலாக, பௌத்தம், பாளி, சமஸ்திருதம் ஆகியவற்றின் கூட்டுச்சேர்வால் ஒரு பகுதித் தமிழர் சிங்கள பௌத்தராய் மாறிவிட்டனர் என்றும் மூலத் தமிழ் மக்களைப் பௌத்தம், பாளி, சமஸ்திருதம் என்பன ஆக்கிரமித்ததன் விளைவாகவே இன்றைய சிங்கள – பௌத்தம் உருவானது என்றும் கூறிக் கவலைப்படும் திராவிட வாத கண்ணோட்டம் கொண்டோரும் உண்டு.

தென்னிந்தியாவிலிருந்து வந்த மன்னர்களின் படையெடுப்புக்கலை வைத்துக் கொண்டு ஈழத்தமிழருக்கு எதிரான வாதங்களை முன்வைப்பது முற்றிலும் தவறானது. பண்டைய வரலாற்றில் ஒரு மன்னனுக்கு எதிராக இன்னொரு மன்னன் படையெடுப்பது இயல்பு. அதில், தமிழர் – சிங்களவர் என்றோ, இந்து, பௌத்தர் என்றோ, அண்ணன் – தம்பி என்றோ வேறுபாடில்லை. தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டியர்கள் ஒருவருக்கு எதிராக இன்னொருவர் படையெடுத்தனர். உண்மை இவ்வாறிருக்கையில் தென்னிந்திய தமிழ் மன்னர்களின் பழைய படையெடுப்புக்களை, வைத்துக்கொண்டு ஈழத்தமிழ் மக்களை எதிரிகளாக வர்ணிப்பது தவறு.

கி.பி. 10ம் நூற்றாண்டில் நிகழ்ந்த சோழப்படையெடுப்பு சிங்கள – பௌத்த இராசதானியை அனுராத புரத்தில் இருந்து பொலநறுவைக்கு மாற்றியது உண்மை. ஆனால், இப் படையெடுப்பானது வடக்கிற் கந்த ரோடையைத் தலைநகராகக் கொண்டு எழுந்த கதிரமலை அரசை அப்படியே கபளீகரம் செய்துகொண்டது. இங்கு சிங்களவரைப் பொறுத்தவரையில், சோழப்படையெடுப்பாலே தலைநகரம் இடம்மாறியதுதான் நிகழ்ந்தது. ஆனால், தமிழரைப் பொறுத்தவரையில் அவர்களது அரசே சோழரால் விழுங்கப்பட்டுவிட்டது. எனவே, என்றோ யாரோ மேற்கொண்ட படையெடுப்புக்களுக்காக இன்று ஈழத்தமிழரின் உரிமைகளைச் சிங்களவர் மறப்பது மிகவும் அநீதியானது.

ஈழத்தமிழர் வந்தேறுகுடிகள், படையெடுப்பாளர் அந்நியர் என்று சிங்களவரால் முன்வைக்கப்படும் வாசகத்திற்கு வேறொரு இலகுவான பதிலையும் கொடுக்கலாம். சிங்கள பௌத்த வாதிகள் கூறுவது போல் தமிழர் இடையில் வந்தவர் என்பதை வாதத்துக்காக ஏற்றுக்கொண்டாலும், அவர்கள் 13 நூற்றாண்டிலிருந்து அரசமைத்து (யாழ்ப்பாண இராச்சியம், வன்னி இராச்சியம்) வாழ்ந்து வந்துள்ளனர். நவீன நிலைமையை உலகளாவிய ரீதியிற் பார்க்கும் போது இடையிற் குடியேறிய பல மக்கள் கூட்டங்கள் அரசமைத்துத் தேசிய இனங்களாயும், தேசிய அரசுகளாயும் வாழ்வதைக் காணலாம்.

பதினைந்தாம் நூற்றாண்டின் பின்பு ஐரோப்பாவிலிருந்து படையெடுப்பாளராய் அமெரிக்கா, கனடா, மற்றும் லத்தீன் அமெரிக்கப் பகுதிகளிற் குடியேறிய ஐரோப்பியர் அங்கெல்லாம் அரசமைத்து வாழ்கின்றனர். ஒஸ்ரேலியா, நியூசிலாந்து போன்றவையும் இவ்வாறு குடியேற்றங்களால் உருவாக்கப்பட்ட அரசுகளே. இவ்வாறு 15ம் நூற்றாண்டின் பின்பு படையெடுப்பாளரால் அமெரிக்காவுக்குட் குடியேறிய ஐரோப்பியர் அரசமைத்து இன்று ஏகப் பெரும் வல்லரசாய் இருக்க முடியுமென்றால் 13ம் நூற்றாண்டில்

www.tamilarangam.net

# இறந்தவர்களைப் புதைத்துவிட்டு மீண்டும் எழுக!

பாலஸ்தீனக் கவிஞர்: தௌபீக் சியாட்
ஆங்கிலம் வழி தமிழில்: மயன்

இறந்தவர்களைப் புதைத்துவிட்டு
மீண்டும் எழுக!

கோப்பையின் அடிமட்டம் வரை,
எமக்கேயான சிவப்புநிற கசப்புப் பானத்தை
நாம்தான் முழுமையாகப் பருகவேண்டும்-

சரித்திரமே பிசகிப் போய்விட்ட இவ் வேளையில்;
நாம்வதைபடப் போகிறோம்
...ஒருபெண்செம்மறி ஆடுபோல்
கொலைபடப் போகிறோம்.

ஒரு வாத்துக்கூட்டம் பறப்பதுபோல்
நாம் இங்கிருந்து ஓடிவிடத்தான் வேண்டும்...



இந்த வெளியேறல், தரும் அவமானம்,
எமது எலும்பிடை ஊனைக்கூடத்தொடலாம்.
இதனைப் பொருட்படுத்தாதீர்கள்!
கோபங் கொண்ட அந்தநெடுங்கடலில்..
...எமது சடலங்கள் ஒரு பாலமாக அமையும்
நாம் அக் கடலின் கரைகளை
புறக்கணித்ததும் இல்லை,
அவை ஒருபோதும் எம்மை
கைவிட்டதும் இல்லை.

ஓ! பொன்னைப்போல் மின்னும்
எனது அன்னை பூமியே
சிவப்புக் கற்களும் யானைத் தந்தமும்
உடைய நாடே
உன்னில் நாம்கொண்ட பிரியம்
காதலைவிட மேலானது.
அது விலைமதிப்பற்றதும் கூட.

இதனால், இறந்தவர்களைப் புதைத்துவிட்டு
மீண்டும் எழுக
நாளை, எம்மைவிட்டுப் பறந்துபோய்விடும்.
ஆனால் நாம் அதனை நழுவிப்போய்விட
விட்டுவிட முடியாது.
நாம் நிரந்தரமாகவே ஓடிப்போய்விட்டவர்களோ
அல்லது
தொலைந்து போய் விட்டவர்களோ அல்ல...
ஆனால் மீண்டும் ஒருமுறை...
நாம் உருக்கிவார்க்கப்பட்டு விட்டோம்.
புதியவர்களாகவே...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசமைப்புடன் வாழ்ந்த ஈழத்தமிழர் ஏன் சுயநிர்ணய உரிமையுடன் வாழ முடியாது?

கனடாவில் உள்ள ஆங்கிலேயரும் பிரான்சுக்காரரும் அத்தேசத்தின் இணையான ஸ்தாபகர்கள் (*Co-towNders of a new nation*) என்று அழைக்கப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் ஈழத்தமிழரும் சிங்களவரும் இத்தீவின் இணை உரிமையாளர் (*Co-owners*) என்பதே சரியானது. இதன்படி இன்று ஈழத்தமிழர் பெரும்பான்மையாக வாழும் இலங்கைத்தீவின் வடக்கு – கிழக்குப் பிரதேசம் தமிழருக்கு உரிமையான பிரதேசம். சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் சிங்களவரிற்கு உரிமையான பிரதேசம்.

நவீன நடைமுறையில் ஓரினத் தன்மை கொண்ட அரசுகள் என்பதை விட பல்லினத் தன்மைகொண்ட அரசுகளே (*multination state*) உலகில் தொண்ணூறு வீதத்திற்கு உள்ளன. இத்தகைய பல்லினத்தன்மை கொண்ட யதார்த்தத்தை சிங்களவர் ஏற்காததன் விளைவே இலங்கையின் இன்றைய இனப்பிரச்சினையாகும். தேசிய வாதம் எனும் நவீன பதத்திற்கு சிங்களத்தில் பிரயோகிக்கப்படும் பதம் “ஜாதிவாதய” என்பதாகும். சிங்களத்தில் “ஜாதிவாதய” என்ற பதத்திற்கு இருக்கும் வரலாற்றுக்காலச் சாரப் பொருள் என்னவெனில் சிங்கள இன வாதம் என்பதேயாகும். அதவாது ஓரினத் தன்மை வாதமாகும்.

ஏனைய இனங்களில் உரிமையையும் தனித்துவங்களையும் மறுப்பது தான் தேசியவாதம் என்பதற்குச் சிங்களத்தில் உள்ள பொருளாகும். ஈழத் தமிழர் சுதந்திரமடைந்த காலத்தில் சிங்கள மக்களுடன் இணைந்து ஐக்கியமாக வாழும் தமது விருப்பத்தைத் தெளிவாகவே தெரிவித்திருந்தனர். ஒற்றை ஆட்சி முறையின் கீழ்க் கூட மொழியுரிமையுடன் வாழ விரும்பினர். அந்த மொழி உரிமையைச் சிங்கள ஆட்சியாளர் மறுத்தனர். மூன்று மொழிகளை உத்தியோக மொழிகளாகக் கொண்டு சுவிட்சர்லாந்தில் தேசம் வாழமுடியும் என்றால் இரு மொழிகளை உத்தியோக மொழிகளாகக் கொண்டு ஏன் இலங்கையில் ஐக்கிய தேசிய வாதம் கட்டியெழுப்பப்பட்டிருக்கக் கூடாது? ஆனால், இதற்கு மாறாக 1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தைச் சிங்கள ஆட்சியாளர் புகுத்தி ஐக்கியத்திற்கு ஆப்பு வைத்தனர்.

சிங்களவரின் இத்தகைய போக்கு, சமஷ்டித் தீர்விற்கான கோரிக்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் வலுவாக்கியது. சமஷ்டி முறையை உருவாக்குவது நாட்டை தமிழருக்குப் பிரித்துக்கொடுப்பதற்குச் சமன் என்று சிங்கள இனவாதிகள் வாதிட்டு வருகின்றனர். சமஷ்டி முறையின் கீழ் பல் தேசிய இனங்கள் ஓரரசு அமைப்பின் கீழ் ஐக்கியமாக வாழ்வதைச் சிங்கள இனவாதிகள் ஏன் புரிந்துகொள்ளத் தவறுகின்றனர்? சமஷ்டி முறையை மறுத்ததின் விளைவுதான் பிரிந்து செல்வதற்கான தனிநாட்டுக் கோரிக்கையாகும்.

ஓரினத்தன்மை கொண்டதாயினும் அரசு அளவாற் பெரிதாயின் நிர்வாக வசதிக்காகப் பிரதேச ரீதியாகச் சமஷ்டி முறை உருவாக்கப்பட்டுள்ளதை உலகில் அவதானிக்கலாம். அதேவேளை சிறிய அரசுகளாக இருப்பினும் பல்லினத்தன்மை கொண்டனவாயின் இனத்தனித்துவங்களைப் பேணுவதற்கும் இன முரண்பாடுகள் எழாது தவிர்ப்பதற்கும் சமஷ்டிமுறை தோற்றுவிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். பல்தேசியவாதம் (*Multi nation*) தேசியவாதத்தில் ஒரு முக்கிய அம்சமாகும். பல்தேசிய வாதம் சரிவர இயங்குவதற்குச் சமஷ்டி முறை அவசியமானது. முரண்பாடுகள் வலுத்த போது சமஷ்டிக் கோரிக்கையைத் தவிர வேறு மாற்று வழிகள் தமிழருக்கு இருக்கவில்லை. ஆயினும் சமஷ்டிக் கட்சி 1965ம் ஆண்டு மாவட்ட சபையைக் குறைந்தபட்சமாகச் சிறீலங்காப் பிரதமருடன் ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் இறுதியிற் சிங்களத் தலைவர்களால் அதைக்கூட நிறைவேற்ற முடியவில்லை.

நீண்டகாலமாகத் தொடர்ந்த தமிழரின் உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டதுடன் சமஷ்டிக் கோரிக்கையும் மறுக்கப்பட்டதன் இறுதி விளைவாக தமிழீழக் கோரிக்கையும் அதற்கான ஆயுதப் போராட்டமும் எழுந்தன.

சிங்கள ஆட்சியாளரின் தொடர்ச்சியான பல்வேறு வகையான அடக்கு முறைகளாலும் தமிழர் சிங்களவர் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.

தமிழ் மண்ணில் மேற்கொள்ளப்பட்ட அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழருக்கு எதிரான சட்டங்கள், காலத்திற்கு காலம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் இனப்படுகொலைகள், பொலிஸ் ஒடுக்குமுறை, இராணுவ ரீதியான தொடர்ச்சியான இன அழிப்பு நடவடிக்கைகள் என்பவற்றுடன் ஒன்றுகூடும் உரிமை, கலாச்சார உரிமைகள், நடமாடும் உரிமை, குடியிருப்பு உரிமை, எண்ணவெளிப்பாட்டுரிமை, உயிர் வாழும் உரிமை என்பன அனைத்தும் மறுக்கப்பட்டதுடன் தமிழரின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி என்பவை எல்லாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட ஆறாவது அரசியலமைப்புத் திருத்தம் தமிழர் பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்லக்கூட முடியாத நிலையைத் தோற்றுவித்தமையை இங்கு குறிப்பிட வேண்டும். சிங்களவராலே தமிழர் பாரபட்சமாக எல்லாவகையிலும் நடத்தப்படுவதுடன் முற்றிலும் இரண்டாந்தரப் பிரஜைகளாய் ஒடுக்கப்படுகின்றனர். பாரிய இனப்படுகொலை, விமானக் குண்டு வீச்சு மற்றும் எறிகணை வீச்சு, தீவைப்பு, சொத்தழிப்பு, அவமானப்படுதல் ஆகிய இவை அனைத்தின் மத்தியில் தமிழர் இனியும் சிங்களவருடன் இணைந்து வாழ முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டனர்.

நீண்டகாலத் தொடர் ஒடுக்குமுறைகளின் விளைவாக, தமிழரின் மனம்புண்பட்டு இட்டுநிரப்ப முடியாத பிளவு வந்துள்ள சூழலிலே கண்துடைப்பு “உரிமைகள்” எதனையும் இன்று அங்கீகரிக்கும் நிலையிலே தமிழர் இல்லை. இத்துணைப் பகைமை வளர்ச்சி அடைந்த பின்பு தமிழரை மேலும் ஒடுக்குவதை உலக அரங்கில் நியாயப்படுத்துவதற்காக கண்துடைப்பு நடவடிக்கையாகத் தமி

‘தமிழர் வடபுலப் பெயர்ச்சி அவலமும் அதற்கப்பாலும்’ என்னும் நூல் ஆங்கில மொழியில் திரு. வஸந்தராசா (முன்னாள் ரூபவாகினிக் கூட்டுத்தாபனத் தலைவர்) அவர்கள் வெளியிட்டிருந்தார்.

இந்நூலை தற்பொழுது தமிழ் மொழியில் திரு. எஸ். சங்கரமூர்த்தி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளை இராணுவ, அரசியல், வரலாற்று ஆய்வுக் கண்ணோட்டத்தோடு மிக ஆழமாக ஆராயும் இந்நூல் தமிழர்கள் இடம்பெயர்வின் அவலம் குறித்தும் ஆழமான தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மும் "உத்தியோக மொழிகளுள் ஒன்று" ஆக ஆக்கப்பட்டுள்ளது. ஆனால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதேபோல எத்தகைய "கண்துடைப்பு உரிமைகளையும்" தமிழர் ஏற்கமாட்டார்கள். இவை எல்லாம் காலம் கடந்தவையும் பயனற்றவையுமாகும். அமைதியாக வாழ்ந்த ஈழத்தமிழரை ஆயுதமேந்துமாறு சிங்கள அரசு நிர்ப்பந்தித்தது. சிங்களப் பயங்கர வாதத்தின் விளைவே தமிழீழப் போராட்டமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சிங்கள அரசு "பயங்கரவாதம்" என வர்ணிக்கின்றது. சிங்களப் பயங்கரவாதத்தில் இருந்து தப்பித்தும், தற்காத்தும் கொள்வதற்காகத் தமிழர் போராடுகின்றனர். டி.எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா என்போர் சிங்களப் பயங்கரவாதத்தின் முதலிரு தூண்களுமாவர். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், லலித் அத்துலத் முதலியும் இராணுவ ரீதியான பயங்கரவாதத்தின் கொடுமுடியாவர். ஏனைய சிங்களத் தலைவர்களும் இப்பயங்கரவாதத்தில் ஆங்காங்கே பங்குடையவராவர்.

சந்திரிகா நவ இனவாதியும் (*Neo Chauvinist*) நவ பயங்கரவாதியும் (*Neo terrorist*) ஆவார். இவரது சமாதானம் பற்றிய பேச்சென்பது சாத்தான் வேதம் ஓதுவது போன்றது. உலகின் நவீன வளர்ச்சி நிலைகளைக் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்றாற்போல் இனவாத்ததை நவீனப்படுத்தியவராகச் சந்திரிகா உள்ளார். டி.பி. விஜேதுங்காவின் இனவாதத்தை விடவும் சந்திரிகாவின் புதிய நவ இனவாதம் ஆபத்தானதாகும். சந்திரிகாவின் நவ இனவாதமகப்பட்டமானதும் நவபயங்கரம் மிக்கதுமாகும்.

சிங்கள இனவாதிகள் தமது ஒடுக்குமுறைக்குச் சாதகமான வகையிற் சிங்கள மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் கருத்துக்களைப் பரப்புகின்றனர். தமிழர் சிங்களப் பகுதிகளிற் குடியேறலாம். அதேபோலச் சிங்களவரும் தமிழ்ப் பகுதிகளிற் குடியேறுவதில் என்ன தவறு? என்று கேள்வி எழுப்புகின்றனர். சிங்களப் பகுதிகளிலே தமிழர் உதிரியாகக் குடியேறுவது வேற; தமிழ்ப் பகுதிகளிற் சிங்களவரின் திட்டமிட்ட அரச குடியேற்றம் வேறு என்பது ஒருபுறம் கவனிக்கத்தக்கது. மறுபுறம் எண்ணிக்கையிற் சிறிய தமிழ் மக்கள் மத்தியில் எண்ணிக்க்கையில் பெரிய சிங்கள இனம் குடியேறினால், சிறிய இனத்தின் இனப்பருமன் மாறி அது இலகுவாக விழுங்கப்பட்டு விடும். அதே வேளை பெரிய இனத்தின் மத்தியில் சிறிய இனம் குடியேறினால், பெரிய இனம் பாதிக்கப்படமாட்டாது. அதாவது பெரிய மீனுக்கும் சிறிய மீனுக்கும் இடையில் ஏதாவது விரும்பிய மீன் மற்றைய மீனை விழுங்கலாம் என்ற பொதுவான சட்டம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். சட்டப்படி சிறிய மீன் எப்படி முயன்றாலும் பெரிய மீனை விழுங்க முடியாது. ஆனால் பெரிய மீன் சிறிய மீனை ஒரு கணத்துள் விழுங்கிவிடும். எனவே இதிலே பொதுவான சட்டங்கள் என்பதல்ல பிரச்சினை. சிறிய இனத்திற்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதே பொதுவான பிரச்சினையாகும்.

பன்னிரண்டு வீதம் உள்ள தமிழர் அதனைவிடவும் பெரிய பங்கு நிலப்பரப்பைத் தமது தாயகமாகக் கோருகின்றனர்என்றும் அதுவே அவர்களது அநீதியான போக்கிற்குச் சான்று என்றும் சிங்கள இனவாதிகள் கூறுகின்றனர். தமிழர் தாம் வாழும் தொடர்ச்சியான பிரதேசத்தைத்தான் தமது தாயகமாகக் கோருகின்றனர். இன விகிதாசாரமும் தாயகமும் எண் கணிதத்திற்குள் அடங்காது. உலகிலே சிறிய அளவு சனத்தொகை விகிதத்தைக் கொண்டுள்ள ஒஸ்ரேலியரும் கனடியரும் சனத்தொகையாற் கூடிய நாடுகளது பிரதேச அளவை விடவும் பெரிய நிலப்பரப்புக்களைக் கொண்டுள்ளனர். அவரவர் வாழும் பிரதேசத்தை வைத்துக்கொண்டுதான் தாயகம் வரையப்படுகின்றது. சனத்தொகை விகிதத்திற்கும் பிரதேச அளவிற்கும் இதிலே தொடர்பில்லை.


சிங்கள பௌத்த இனவாதத்தின் சாராம்சம் இதுதாம். அதாவது ஈழத் தமிழர் சிங்களப் பௌத்தரால் இனம் மாற்றப்பட வேண்டும். (*Policy of assimication*). அவ்வாறு இனம் மாறத் தவறினால் அவர்கள் அழித்தொழிக்கப்படவேண்டும் என்பதாகும். சந்திரிகா கூறும் "சமாதானம்", "போர்" என்பவற்றில் முதலாவதன் விளக்கம் சரணடைந்து இனம் மாறு என்பது; இரண்டாவது, அப்படிச் சரணடைந்து இனம்மாறத் தவறினால் தமிழர் அழித்தொழிக்கப்படுவர் என்பது.

சிங்களப் பௌத்தர் தம்மிடமுள்ள இந்திய எதிர்ப்பைத் தமிழரின் எதிர்ப்பாய் உருவாக்கியுள்ளனர். இதனால் ஈழத்தமிழரை இனமாற்றம் செய்தல் அல்லது அழித்தொழித்தல் என்ற கொள்கையை வகுத்துக் கொண்டனர். பண்டைய தவறான வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இருந்து நவீன வரலாற்றை இவர்கள் அணுகுகின்றனர். தமது பொய்யானதும் குரூரம் நிறைந்ததுமான ஐதிகக் கட்டுக்கதைக்குத் தமிழரைப் பலியிடுகின்றனர்.

இரு குழுக்களுக்கு இடையே பிணக்கு ஏற்பட்டபோது புத்த பகவான் ஒரு குழுவை ஆற்றிற்கு அப்பாலும் மறு குழுவை ஆற்றிற்கு இப்பாலும் தனித்தனியே பிரிந்து வாழுமாறு தீர்ப்பளித்தார். இட்டு நிரப்பப்பட முடியாத பகைமைகளுக்கும் முரண்பாட்டிற்கும் மத்தியில், தமிழர் பிரிந்து கொள்வதைத் தவிர வேறு வழி எது? புத்தபகவான் போதித்தது போல் பிரிந்து செல்வது அமைதியை உருவாக்கும்.

★★

சோகத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. இந்நூலின் பிற்சேர்க்கையாக 'சூரியக்கதிர் 2, 3' இராணுவ நடவடிக்கைகளின் நிகழ்வுகளும் இணைக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் நியாயமான நீதியான போராட்டம் பற்றியும் விடுதலைப் புலிகள் நிரந்தரமான சமாதானத்தின் மீது கொண்டுள்ள தீராத, அசையாத நம்பிக்கை குறித்தும் இந்நூல் பேசுகிறது. சந்திரிகா அரசின் சகல பிற்போக்குத் தனங்களையும் கிழித்தெறிந்து இனவாதச் சேற்றில் அமுழ்ந்தும் அதன் அவலத்தையும் நன்கு வெளிப்படுத்தியிருக்கிறது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமகாலமும் ஆதிரையனும்



‘ஆதிரையனின் கட்டுரையும் இல்லை’ என மிகுந்த கவலை தொனிக்க திலகரண்ணர் என்னிடம் சொன்னார். எனது கண்கள் கலங்கி விட்டன. எனக்கே அப்படியென்றால் எமது வாசகர்கள் இந்தத் துயரை எப்படித்தான் தாங்கிக் கொள்வார்களோ? எரிமலைக்கு மாதாமாதம் ஒரு கட்டுரை வேண்டியிருந்தது. அந்தக் கட்டுரை ஒருமாத காலப்பகுதியின் சமகால அரசியல் யதார்த்தச் சூழலைப் படம்பிடிப்பதாக இருக்க வேண்டும்; அத்தோடு அந்தக் காலப்பகுதியில் எது மிகப்பெரிதான விடயமாக இருக்கிறதோ அதனை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதும் முக்கியமானதாக இருந்தது. இதற்கு ஒரு பொருத்தமானவரை நாம் தேடினோம். அப்போது நாம் ஆதிரையனை அணுகினோம். எமது மண்ணின் அரசியல் சமூகப் பிரச்சினைகளை சதா அவதனித்துக் கொண்டிருப்பவர்களில் ஆதிரையன் குறிப்பிடத்தக்கவராக இருந்தார். அதனால் நாம் அவரையே அந்த வகையான கட்டுரைகளை எழுதும்படி கேட்டுக் கொண்டோம். முதலில் அவர் மறுத்தார், “எனக்கிருக்கின்ற பிரச்சினைகளுக்கும், பளுவுக்கும், நேமின்மைக்கும் இடையில் என்னால் முடியாது” என்று விட்டார். ‘என்ன நீங்களே இப்படிச் சொன்னால் நாங்கள் வேறு யாரிடம் கேட்பது என்றோம். “நீங்கள் என்னை விடுவதாயில்லை. சரி. சரி கடைசி நாள், அதாவது நீங்கள் எரிமலை முடிக்கும் தறுவாயில் இதனை எழுதித் தருகிறேன்’ என்றார். ஒவ்வொரு தடவையும் ஞாபகப்படுத்த வேண்டும்; கேட்க வேண்டும். என்ன விடயத்தைப் பற்றி என்பதையும் பேச வேண்டும். இது அவருக்கு ஆக்கினையாக இருக்கும் என நாங்கள் நினைப்பதுண்டு; ஆனால் அந்த வகையான ஆக்கினையை அவர் அங்கீகரித்தார் என்றே நினைக்கிறோம். அப்படி நான் ஆக்கினைப்படுத்தாவிட்டால் அவர் எழுதமாட்டார். அவர் ஒரு எழுத்தாளராக இருக்கவில்லை. அவர் தேவையின் நிமித்தமாக எழுதினார். எமது மக்களின் பிரச்சினைகளை, எமது மக்கள் படும் துயரை, யார் சொல்லுவது, எழுதுவது, பாடுவது, என்கின்ற அடிப்படையிலேயே அவர் இயங்கினார். ஆதிரையனுக்கிருந்த கடுமையான வேலைகளுக்கு மத்தியில் எரிமலைக்கு ஒரு கட்டுரை எழுதுவதென்பது மிகச் சிரமமான காரியம். ஆனால் அவர் தான் ஒப்புக் கொண்ட அந்தப் பணியை இறக்கும் வரை சரியாகவும், நேர்த்தியாகவும், திறம்படவும், சிரத்தையோடும் செய்து தந்தார். அது இன்னும் என்னை கலங்க வைக்கிறது. எமது மண்ணில் போராட்ட வாழ்வியலுக்கூடாக ஏற்பட்டு விடுகின்ற துன்பமும், சோகமும் நாமறிவோம். அங்கு உயிருக்குயிரான தோழர்களை நாம் பறிகொடுத்திருக்கிறோம். அப்போது நாம் துடித்திருக்கிறோம். மறுகணத்தே குனிந்த தலைகளை நிமிர்த்துவோம். ஆனால் வெளிநாடொன்றில் எமது உயிர்த் தோழர்களை நாம் எமது மக்கள் திரியும் லாச்சப்பேல் தெருவில் இனம்தெரியாத துப்பாக்கி மனிதர்களின் துப்பாக்கிக் குண்டுக்கு பலி கொடுக்க நேர்ந்து விட்டது என்பது நெஞ்சை வதைக்கும் கொடும் துயரில் ஆழ்த்துகிறது.

*1989*–ம் ஆண்டின் பிற்பகுதியில், ஒரு காலைப் பொழுதில், ஆதிரையனை நான் எமது காரியாலயத் தெருவில் முதன் முறையாகச் சந்திக்க நேர்ந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**'வரலாறு மீண்டும் திரும்பும் வடக்கில் மீண்டும் புலிக்கொடி பறக்கும்'**

....சமாதான வேடம் தரித்த சந்திரிகா அரசின் படைகள் இன்று எம் அன்னை பூமியில் நிலைகொண்டிருந்தாலும், எங்கள் சொத்துக்களையும் சுகங்களையும் சேதப்படுத்தியிருந்தாலும் இந்த இனவெறிப்படைகள் இன்னும் எத்தனை நாட்களுக்கு அங்கு நிலை கொள்ள முடியும்? மீண்டும் எம் தாய் நிலத்து வீரர்கள் எழுவர். உலகின் நான்காவது இராணுவத்தையே வெற்றிகொண்ட பிரபாகரனின் பிள்ளைகள் உள்ளனர். வருவர்; வெல்வர். விடியும் நாள் தூரமில்லை. இருள் விலக அம் மண்ணில் புதிதாய் ஒரு சூரியன் எழும். அந்த இனிய செய்தி விரைவில் வரும்.

– ஆதிரையன்

(பெப்ரவரி 1996, எரிமலை)

போதே அவரிடம் ஒரு ஆளுமையை இனம் கண்டு கொண்டேன். அவர் ஒரு நல்ல நண்பனாக, நல்ல விமர்சகனாக இருந்தார். ஒரு நல்ல கவிஞனாக, பாடலாசிரியனாக, நாடகம் எழுதுபனாக, இயக்குனனாக அவர் மிளிர்ந்தார். பின்னர் அவர் பத்திரிகை ஆசிரியனராக, இயக்குனராக இருந்தார்.

ஆதிரையனாக எரிமலையில் புனைபெயரில் எழுதி வந்தவர் கஜனே!

இந்தச் சம்பவம் இனம் தெரியாத துயரை எமக்குள் ஏற்படுத்தியிருக்கிறது. எம்மால் எளிதில் மறந்து விடுவதற்கில்லை. எம்மால் இந்த துயர நிகழ்வை தாங்கிக் கொள்ள முடியாது. எங்களின் தோழர்களை நாம் ஏன் இப்படி தெருவில் பிணங்களாக மீட்க வேண்டி நேரிட்டது? ஏன்? இந்தக் கேள்வி ஆழமான துயரவடுவை எமக்குள் ஏற்படுத்தி நிற்கிறது. யாராவது ஒரு தோழன், அல்லது இன்னும் எம்மோடு இணைந்து விடுதலைக்காக உழைக்கும் சகோதரன், அல்லது அவனது துயில் கலைக்கும் இசைப் பாடல்கள், அல்லது ஈழமுரசு, அல்லது ஆதிரையன் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், ஏதாவதொரு கணத்தில், அவரது நினைவைக் கிளர்த்த துணையாய் இருக்கின்றன.

நாம் இனிமையாகப் பேசியும், உரையாடியும், சிரித்தும் மகிழ்ந்தோம்; சமூக அரசியல் கலை, இலக்கியம் தொடர்பான விடயங்களை ஆழமாக அலசினோம்; எமது போராட்டத்திற்கு நாம் எந்த வகையில் உந்து சக்திகளாக விளங்கலாம் என்பது பற்றி சிந்தித்தோம். இரவு பகலாக கஜன் உழைத்தான் உண்மை. கஜன் கனகாலமாக ஒழுங்கான நித்திரையின்றி, நல்ல உணவின்றி, ஓய்வொழிச்சலின்றி உழைத்தான். இந்த ஐரோப்பாவின் இலையுதிர்காலத்தில் மரங்கள் துயரிசைக்கும் காலத்தில் எமது தோழர்களை இழந்து நிற்கின்ற துயரை வார்த்தையில் சொல்ல முடியாது.

ஆதிரையனின் கட்டுரைகளை வாசித்தவர்களுக்கு அவனுடைய ஆளுமை புரியும் அவனது கட்டுரைகள் சில ஆங்கிலமொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரமாகின. அண்ணர் அந்த விடயத்தைச் சொல்லிய போதே கஜனுக்கும் தெரியும். அதன் மகிழ்ச்சியை அவர் காண்பித்தார்.

உண்மையில் ஆதிரையன் என்ற புனைபெயரில் கஜன் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் காத்திரமானவையாக இருந்தன.

வரலாறு மீண்டும் திரும்பும்

வடக்கில் மீண்டும் புலிக்கொடி பறக்கும்'

'யாழ்குடாநாடு ஆக்கிரமிப்பாளனுக்கு மீள முடியாத மரணப் பொறி'

ஒரு நம்பிக்கையை அவை கொண்டிருந்தன; ஆதாரபூர்வமாக, அரசியல் விஞ்ஞான இராணுவக் கண்ணோட்டத்தோடு எழுதப்பட்ட கட்டுரைகளாக அவை இருந்தன. ஒரு கதை சொல்வதைப்போல தொடங்கி வாசகரை தனது கட்டுரைக்குள் அழைத்துச் செல்லுகின்ற ஆதிரையனை எரிமலை வாசகர்களும் இழந்துவிட்டார்கள்.

எமது தேசியத் தலைவர் குறிப்பிட்டது போன்று 'தாயக விடுதலையில் ஆழமான பற்றுடையவர்' கஜன்.

அத்தகைய ஒரு அருமையான இளைஞனை நாம் இழந்துவிட்டோம்.

— சுபா

**'சிறை வாழ்வும் சித்திரவதையும்'**

...தமிழ் மக்களில், வளர்ந்து வரும் இளம் சந்ததியை அழித்துவிட்டால், ஒரு தலைமுறை இடைவெளி உருவாகும். அத்தலைமுறை இடைவெளிக்குள் போராட்டத்தை வேரோடு கிள்ளி எறிந்துவிடலாம் அல்லது நசுக்கிவிடலாம் என அரசு எண்ணிச் செயற்பட்டு வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் அரசு இச்செயற்பாட்டை தீவிரப்படுத்தி வருகின்றது. இளம் சந்ததியினர் அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் தம்மையும் இணைத்துக்கொள்ள முன்வரராத பட்சத்தில், இந்த இளைஞர்களின் உயிர் வாழ்தல் பற்றிய சாத்தியங்கள் கேள்விக்குறியாகின்றன. ஆம்; போராட்டமென்பது உயிர் வாழ்தலின் இயக்கமே.

– ஆதிரையன்

(ஜுலை 1996, எரிமலை)

**'தாண்டிக்குள இராணுவ முகாம் மனநோயாளிகளின் கூடாரம்'**

....கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ காயங்களுக்கும், வார்த்தைகளில் வடிக்கமுடியாத எத்தனையோ துயர்களுக்கும் காரணமாய் விளங்கும் தாண்டிக்குள தடைமுகாம் இருந்த சுவடே தெரியாமல் முற்றாக அழித்தொழிக்கப்பட்டு துடைத்தெறியப்படும் நாள் தூரத்தில் இல்லை என்பதே உண்மை.

– ஆதிரையன்

(செப்டம்பர் 1996, எரிமலை)

**'தமிழ்க் குழுக்களுக்கு அரசு மீது அதிருப்தி ஏன்?'**

...இதுவரை காலமும் அரசுக்கு ஆதரவாக அதன் அடிவருடிகளாக இயங்கி வந்த தம்மீதே – தம் எசமான விசுவாசத்தின் மீதே இந்த அரசு சந்தேகப்படுகின்றது என்ற உண்மையை இவர்களால் ஜீரணிக்க முடியவில்லை என்பதுடன், தமிழ் மக்கள் இவர்களை எப்பொழுதோ மறந்து கைகழுவி விட்டு விட்டார்கள். அரசும் கை கழுவி விட்டால் தமது போக்கிடம் எது என்ற அச்சமே அவர்கள் மத்தியில் தற்போது தலை தூக்கியுள்ளது. அந்த ஏக்கத்தின் எதிர்காலம் பற்றிய அச்சத்தின் வெளிப்பாடே சிறீலங்கா அரசின் மீதான அதிருப்பதி எனலாம்.

– ஆதிரையன்

(ஒக்டோபர் 1996, எரிமலை)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சீரமைக்கப்படவேண்டிய புலம்பெயர் சமூக உளவியல்

ஒவ்வொரு தனிமனிதனுமே தான் வாழ்ந்த சூழலுக்கூடாகவே தனது ஆளுமையும்; உளவியலையும் வளர்த்தெடுத்துக் கொள்கிறான் ஆனால் தனிமனித உளவியலால் உருவாக்கப்பட்ட கோபுரமே இறுதியில் சமூக உளவியலாக உருவெடுத்து நிற்கிறது. எப்போதும் ஒரு நாட்டு மக்களைப் பற்றி பிறிதொரு நாட்டவரின் பார்வை அந்த இனத்தின் சமூக உளவியலைச் சார்ந்தே அமைவு பெறுகிறது. கடந்த பத்தாண்டு காலத்தில் புலம்பெயர் தமிழ் மக்கள் உருவாக்கிக் கொண்ட சமூக உளவியலானது மேலை நாடுகளில் எவ்வாறு தன்னை அடையாளப் படுத்தியுள்ளதென்பது கூர்ந்து நோக்கப்பட வேண்டிய விடயமாகும். அண்மையில் டென்மார்க்கிலிருந்து சிறிலங்காவிற்கு நாடு கடத்தப்பட்ட சித்திரா இராஜேந்திரன் என்ற இளம் பெண்ணை அவ்விதம் நாடு கடத்தியது சரியா? தவறா? என்பது பற்றி டெனிஸ் தொலைக்காட்சி சேவைகளில் நடைபெற்று வந்த வாதப் பிரதிவாதங்களானவை மேற்சொன்ன சரி, தவறு என்ற இரு கேள்விகளுக்கும் மட்டுமல்ல; புலம்பெயர் தமிழினத்தின் சமூக உளவியலானது எத்தகைய கட்டுமானங்களைக் கொண்டது என்ற கேள்விக்குரிய விடையையும் தேடுவதாகவே தென்படுகிறது.

மேற்படி நாடுகடத்துலுக்குள்ளான இளம் பெண்மணி தான் ஏற்கனவே விடுதலைப்புலிகள் அமைப்பில் மருத்துவத் தாதியாகக் கடமையாற்றியதாகவும்; பின் அதிலிருந்து வெளியேறியதாகவும் குறிப்பிட்டார். இதன் காரணமாக விடுதலைப்புலிகளாலும்; சிறீலங்கா அரசாலுமாக இருவழிகளிலுமே தனக்கு அச்சுறுத்தல் உள்ளதென தொலைக்காட்சியில் தோன்றிப் பேட்டி வழங்கினார். டெனிஸ் மக்களில் நிறையப்பேரும் அவருக்காகக் குரல் கொடுத்தனர். எவ்வாறாயினும் இறுதியில் அவர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார். இப்பொழுது அதே தகவல் தொடர்பு சாதனங்களே மேற்கண்ட இளம்பெண் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்தவர் அல்ல என்றும்; அவர் ஏற்கனவே சில ஆண்டுகள் பாரிசில் இருந்தவரென்றும்; புதிய தகவல்களை வெளியிடுகின்றன. இதன்படி சித்திரா இராஜேந்திரன் பிழையான தகவல்களை வழங்கி அரசியல் அடைக்கலம் கோர முற்பட்டார் என்பதே இப்போது அரசு தரப்பிலான வாதமாக உள்ளது.

இவ்விவகாரம் தற்போது கொதிநிலையில் இருப்பதால் இதைவிடுத்து, ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களில் பலர், தம்மை முன்னிறுத்தி, தமது சமூக முதன்மை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யைப் புறந்தள்ளி தெரிவித்துக் கொண்டுவிட்ட கருத்துக்களில் பலவற்றை நீதியான முறையில் முன்வைத்திருந்தால், அவை தமிழினத்திற்கு சாதகமான சர்வதேச அபிப்பிராயமொன்று உருவாகியிருக்கலாம். எல்லோரும் தங்கள் பங்கிற்கு பாலை ஊற்றும் ஓர் தொட்டியில் நான் மட்டும் நீரை ஊற்றுவதால் குடியா முழுகிப் போய்விடும்? என்ற மனோநிலையானது தொட்டியில் பெரும் பங்கு நீரையே ஊற்றி வைத்திருப்பது இப்போது தெரிகிறது. விடுதலைக்குச் சாதகமான கருத்துக்கள் உண்மையானவை என்றாலும் அதைத் தெரிவிப்பதானது, தமது அகதிநிலை அந்தஸ்த்திற்குப் பாதகமானது என்ற கருத்துவாதமானது எங்கிருந்தோ பயணித்து; விருட்சமாக வளர்ந்து விட்டதன் மறுவிளைவுகளே இத்தகைய நாடு கடத்தல்களை ஊக்குவித்து வரும் பல்வேறு காரணிகளில் தலைமைக் காரணியாக இருக்கலாம்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்த பேராசிரியர் ஒருவர் இதுபற்றிக் கூறுகின்ற போது, தமிழர்களுக்குள் ஆயிரம் முரண்பாடுகள் இருக்கலாம்; ஆனால் தமிழர் சமுதாய உளவியல் என்பது, 'தமிழ்த் தேசியம்' என்ற விடயத்தைச் சார்ந்தே எப்பொழுதும் நிற்றல் வேண்டுமெனக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், சொந்த நாடுகளைக் கொண்ட இனங்களுக்கான சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதில் அந்தந்த நாட்டுத் தூதுவராலயங்கள் முக்கிய பணியாற்றுகின்றன. ஆனால் தமிழர்களைப் போல நாடற்ற இனங்களுக்காக ஆதரவு தேடவேண்டியது தூதுவராலயங்களது கடமையல்ல. அது அந்தந்தத் தேசிய இனங்களுக்கே உரியது. எனவே தான் ஒவ்வொரு தமிழருமே வெளிநாடுகளில் வாழும் போது ஒரு தூதுவருக்குரிய பொறுப்புணர்வுடன் வாழவேண்டியது அவசியமெனக் கூறிச் சென்றார்.

இக்கருத்தானது இன்றைய புலம்பெயர் மக்களால் ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டிய செய்தியாகும். ஒருவர் அகதி அந்தஸ்த்து பெறுவது எப்படி? என்ற தகவல்களைக் கொண்ட கைநூல்கள் தற்போது எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் தமிழிலேயே கிடைக்கின்றன. ஆனால் அவற்றை எந்தவொரு பயண முகவருமே அறிந்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை. கடுங்குளிரில் சிக்கி ஆஸ்த்திரியாவில் இறந்துபோன இலங்கையர், பொருட்களை ஏற்றி இறக்கும் லொறியில் அடைபட்டு மூச்சுத் திணறி இறந்த தமிழரென கிடைக்கும் சோகமான செய்திகளிலிருந்து இந்த நூல்களை முகவர்கள் அறிந்திருக்கவில்லை என்ற உண்மையை அறிந்து கொள்ளலாம். மேலும் குறைந்தபட்சம் அகதி அந்தஸ்த்துக்கோரி வரும் உறவினருக்காவது சரியான தகவல்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டிய தமது கடமையை பலர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் நிறைய முரண்பாடான தகவல்கள் மேலை நாடுகளில் தாறுமாறாக விதைக்கப்பட்டிருக்கலாம்; இந்த விதைகளே தற்போது பாதிக்கப்பட்டு வருவோருக்கெதிரான பெருமரங்களாக வளர்ந்திருக்கின்றன.

உண்மையில் புலம்பெயர் சமூகமென்பது உருவ அமைப்பில் பஞ்சதந்திரக் கதையில் வரும் 'பாருண்டம்' என்னும் அதிசயப் பவையின் தோற்றத்திற்கு இணையானதாகும். இப்பறவைக்கு இரண்டு தலைகளும் ஒரு உடலும் உண்டு. கதையின்படி தன் உடலைப் பாதுகாக்கும் ஒரு தலை நல்ல உணவை உண்ண; அதன் மறு தலையோ அதனோடு முரண்பாட்டை படிப்படியாக வளர்த்துச் சென்று; இறுதியில் ஒருநாள் விஷத்தையே சாப்பிட்டுக் கொண்டது. இதனால் இருதலைகளும் மட்டுமல்ல அந்தப் பறவையே அழிந்து போனது. இன்று ஈழத்தமிழினமும் 'தமிழர் தேசியம்' என்ற ஒரு உடலையும்; தமிழீழத்தில் வாழ்வோர், புலம்பெயர்ந்து வாழ்வோர் என்ற இருதலைகளையும் கொண்டிருக்கிறது. புலம்பெயர் சமூகம் தமிழின மேம்பாட்டிற்கு மாறுபாடான எதிர்வினையை உட்கொள்ளுமானால் ஒரு தலையின் தவறான செயற்பாடு இருதலைகளுக்குமே பாதகமாக அமைந்து விடும்.

'பாருண்டம்' என்ற பறவையின் கதை கற்பனையானது. ஆனால் நிஜத்தில் நடைபெற்றுவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கைக்காகவே எழுதப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடலாகாது. நடந்துவிட்ட குறைபாடுகளை தேடிப் பிடிப்பது எல்லோரதும் கடமை. அதேவேளை குறைகளைத் தேடுதலென்பது தூற்றுவதற்காக அல்ல; திருத்துவதற்காகவே என்ற வாழ்வியில் தொழில்நுட்பத்தையும் அத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் சமூக உளவியலை மேலும் சிதைவடையச் செய்யாது மேம்படுத்துவதற்கு இதுமிக அவசியமாகிறது. புலம்பெயர் சமூக உளவியல் ஆரோக்கியமான முறையில் வளர்த்தெடுக்கப்படுமானால் விடிவிற்காகப் போராடும் சுதந்திரப் பறவைகளுக்கு அதுவே புலம்பெயர்ந்தோர் காலத்தால் ஆற்றக்கூடிய சிறந்த கடமையாகும்.

★



"மனித உரிமைகளுக்கு அரசாங்கம் உன்னத ஸ்தானத்தை வழங்கியுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை மீறலில் பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு நீதி கிடைக்கவில்லை எனக் கருதினால் ஜெனிவா அல்லது நியூயோர்க்கிலுள்ள ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு முறையிட முடியுமாம்.

...ஆனால், ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை போலவுள்ள யாழ். குடாநாட்டிலுள்ள மக்களால் இந்த உரிமைகளைப் பெறமுடியுமா? அனுபவிக்க முடியுமா?"

— ஆசிரியர் தலையங்கம்
வீரகேசரி 07.09.1996

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






ஜேர்மனி







தமி

நட

வ







இத்தாலி






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





நோர்வே



புலம்பெயர்ந்து வாழும்
ழீழ மக்களால், அவர்கள்
வாழும் நாடுகளில்
த்தப்பட்ட 'கவன ஈர்ப்பு
ரம்' நிகழ்ச்சிகள் மற்றும்
ாவீரர்நாள் நிகழ்ச்சிகள்

மலேசியா








சுவீடன்

சுவிஸ்









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாவை மறுதலித்து



மீறி
எங்கும் கவிந்துளது இருள்.

அம்மன் கைக்கிளியென அமர்ந்த வெண்புறா,
புதைகுழியினின்றும் மீட்ட
மனித உரிமைப் பாத்திரம்,
தோண்டியெடுத்த வெள்ளெலும்புகளால்
தூக்கிய பந்தற்போலி,
தொங்கவிடப்பட்ட
வார்த்தையலங்கார தோரணங்கள்,
புலை வீச்சமடிக்கும் பொய்கைத் தாமரைகளென
போலிப்பகலாய் விரிந்த
எல்லா வெள்ளைத் தனங்களையும்

மீறி எங்குமாய்க் கவிந்துளது இருள்.

எதிர்காலம் தேடி
இருளையே பிசைகின்ற எண்ணிறைந்த கைகளிடை
என்னுடையவையும்தான்

எதையுமே இனங்காண முடியா இருளிடையே
ஒளியோனின் வரவை கட்டுரைக்கும்
குடுகுடுப்பைக் காரனின் குரலை
எங்கிருந்து இரவல் பெறுவது?
இரவல் கூவலில் என் சுயம் வெளிக்குமா?

இல்லை
இல்லையென்று மறுதலித் தெழுகிறேன்
ஒடுக்குமுறையின் கரங்கள் நெரிக்கையிலும்
வாழ்வின் கோஷிப்பை தளரவிடாத என்
கவிவலக் கையில்
ஏந்தியெடுத்தனன் வெண்சங்கை.
எழுப்ப முயன்றது சுயத்தின் குரலை.

என் சொல்வேன்?
என்னவென்று சொல்வேன்?

காயம்பட்ட புறாவின் கசிவென்ன
வெண்சங்கினூடே வழிந்ததென் ரத்தம்
வெண்சங்கினூடே எழுப்பமுயன்ற
எனது குரலிலே இரத்தம் பாய்ந்தது.
பள்ளியெழுச்சிப் பாடலின் வரிகள்
இரத்தப் பரல்களாய் சிதறித் தெறித்தன.

இரத்தங்கக்கிச் செத்தது காண்க
இன்றைய வெண்புலர்வும்.

எம்முடைய வாழ்நிலம்
எம்முடை வாழ்வு
வாழ்வெளிக் கனவுகள்
வாழ்வை கோஷித்த குரல்கள்
சிதறிப்போயின
சேர்த்தெடுத்துக் கோர்க்க முடியாத
சொற்களாய்.

ஒடிந்து கிடக்கிற கையென
துவண்டு துவண்டு துடிக்கிற சொற்கள்,
சிதைந்த தசைகளில் தானாடும் சொற்கள்
தெறித்துப் பறந்த விழிகளில் திகைப்புறு சொற்கள்.
கைவிடப்பட்ட மழலை கைகளால்
மோதி மோதி முகத்தில் அறைந்தழு சொற்கள்
காயம்பட்ட காற்று பனிவெளியிடை
புகுந்து புகுந்து பறைதரு சொற்கள்

இப்படியாக
உடைந்துப்போய்க்கிடக்கின்ற வாழ்வின்
ஒலிக்கூறுகளை எங்கனம் நான்
உயிர்மணிக் கோர்வை செய்வேன்?

குருதிச் சகதியிடைத் தோய்கிற வாழ்வை
எடுத்துடைத்து எப்படிக் கொலுநிமிர்த்துவேன்?
புத்த பகவான் காவிதரித்த
நோன்மதி நாளில் எனது வாழ் நிலம்
இரத்தக்காவி தரித்ததை
எவர்க்கெடுத்துரைப்பேன்?

சங்கமித்தையும் மகிந்தனும்
போதியின் கிளையொடும் நடந்த
வரலாற்றுச் சுவடுகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரத்தாறு விழுங்கியதை
எந்தவம்சத்தின் காதையில் சேர்ப்பேன்?
என்னவளே! தாயே!
சங்கென்ன வெண்முலை பிசைந்து
உண்ட பாலமுதெல்லாம்
செங்குருதியாய் பாய்ந்தோட
அள்ளுண்டு போகுதடி
அருமந்த வெள்ளை உயிர்கள்
அன்றலர்ந்த வெண் தாமரைகள்

வெள்ளை உயிர்களிடை வேறு
பேதித்துக் காண்பதுண்டோ
அம்மை நீ சொல்க
செங்குருதிப் பாய்வில்
என் குருதிக்கிளை ஈதென்று
எழுதிக்காட்டுவதும் உண்டோடி?

இயலேன்
என்சுற்றம்; என் அயல் என்றெல்லாம்
என்னுடைச் சுயம் பிரிந்து காணல்
இயலேன்.

கண்ணுடையீர் காணுங்கள்
என்னிதயம் வெண் பூத்திருக்கிறது
எல்லோர்க்குமாக
என்னிதயம் துடித்தபடி இருக்கிறது
எல்லோருக்குமாக

எல்லோர்க்குமான என் இதயத் துடிப்பினிலே
காலம் துடிக்கிறதா?
கவிதை துடிக்கிறதா?
வாழ்வு துடிக்கிறதா? ஊழிக்
கூத்தனின் உடுக்கு துடிக்கிறதா?
சிவக்கொழுந்து துடிக்கிறதா
உச்சியிலே துளும்புகிற கங்கையின்
உயிர்த்திவலை சிலிர்க்கிறதா?

எல்லோர்க்குமாக
எடுத்த பதத்தில்
இசைவது என்துடிப்பு
கோடிழுத்துத் துவள்கின்ற மின்னலின்
சுகன வெளித் துடிப்பென்ன
காணுங்கள் எந்தன் கவிதை துடிக்கிறது:

கேட்கிறதா?
வாழ்வின் துடிப்போசை
கேளுங்கள்
இசைத்துக் கேளுங்கள்
எல்லோரினுள்ளும்
இந்தச் சுயத்தின் உடுக்கொலிப்பு

கேட்கிறதா?
எனின் எழுங்கள்
சாவில்லை
இந்தக் கணந்தன்னில்
சாவென்பதில்லை.

வாழ்வின் துடிப்போசை பெருக்கில்
சாவு, இருள், அவலம், தடுமாறல்
யாவும் அள்ளுண்டு போக
சுயப்பிரக்ஞை சுடர்க வற்றாது.

சுயப்பிரக்ஞை
வாழ்முதலின் வற்றாத சுடர்
சாவின்மையின் ஒளி
விடுதலையின் உயிர்மணிகள்
விளைகின்ற நன்னிலம்

நாமெல்லாம் நன்னிலத்தின்
காவலர்கள்
சுயப்பிரக்ஞையெனும்
சுடர்மணிக் கிரீடத்தை எடுத்தணிவோம்.

சாவை மறுதலித்து
வண்ணம் அழகிய வாழ்வை
உயிர் செய்வோம்.

சகலரும் எழுக
சாவின்மை பாடுவோம்
வருக.

– சு. வி –

குறிப்பு:

1) புத்தர் காவிதரித்த நோன்மதி நாளில்தான் வடக்கே முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது.

2) சங்கமித்தை, மகிந்தன் இருவரும் போதி மரக்கிளையொடும் மாதகல் துறையின் வந்திறங்கியதாய் மஹாவம்சம் கூறுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


லெப். கேணல் நாதன்


கப்டன் கஜன்


26.10.1996 அன்று தோழர்கள் இருவரும் சிங்கள அரசின் கைக்கூலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட இடம்.

நவம்பர் 10, 11ம் திகதிகளில், மாவீரர்களின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிகழ்வில்



# ஆதாரவேர்களை அறுத்திடத் துடிக்கும் ஆக்கிரமிப்பு அரசு

**26.10.96** அன்று விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுச் செயற்பாட்டாளர்களாக விளங்கிய கஜன், நாதன் ஆகிய இருவரும் சிறிலங்கா அரசின் கைக்கூலிகளினால் படுகொலை செய்யப்பட்டனர். இது சிறிலங்கா அரசாங்கத்தின் தமிழர் மீதான பயங்கரவாதம் கடல் கடந்து விட்டது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தமிழீழ விடுதலையின் ஆதரவாளர்களாக, ஆதாரவேர்களாக மாறிவருகின்றமையை ஆபத்தானதாகவே கருதி வந்திருக்கிறது.

இச்செயற்பாடுகளை முறித்துக் கொட்டிவிட அது பல்வேறு வழிகளில் முயற்சி எடுத்தமையை தமிழ்மக்கள் நன்கறிவர். இதன் விளைவுகளை நேரடியாகவே கனடாவில் திரு. சுரேஸ் அவர்கள் கைதுசெய்யப்பட்டதன் மூலமும், சுவிஸில் திரு. முரளிதரன் அவர்கள் கைதுசெய்யப்பட்டதன் மூலமும் எமது மக்கள் கண்டு கொண்டனர். அத்தகைய கைதுகளை மக்கள் எதிர்த்து ஊர்வலங்களை நடாத்தியும், துண்டுப் பிரசுரங்களை தொடர்ச்சியாக விநியோகித்தும், உயர் நீதிமன்றுகளில் நின்று வழக்காடியும் வந்தனர்; வருகின்றனர்.

விடுதலைச் செயற்பாடுகளை சிறிலங்கா அரசு முறித்துக் கொட்டிவிட எழுந்ததன் எதிரொலிகளாக தொடர்ந்த நடவடிக்கைகள் மக்கள் எழுச்சிகளின் மூலம் தோல்வி கண்டு வருவதைக் கண்டு ஆத்திரமுற்ற சந்திரிகா அரசு பயங்கரவாதச் செயற்பாடுகளை கடல் கடந்து நீட்சிகொள்ள வைத்திருக்கிறது என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவதானிகளின் பார்வை துல்லியமா னதே.


விடுதலைப்புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் திரு. கந்தையா பேரின்ப நாதன் (நாதன்), பிரெஞ்சுக்கிளையின் உறுப்பினரும் ஈழமுரசு பத்திரிகை ஆசிரி யருமாக விளங்கிய திரு. கந்தையா கஜேந் திரன் (கஜன்) அவர்களும் மக்கள் அதிக மாக நடமாடும் பகுதிகளில் (வெறிச் சோடிக்கிடக்கின்ற வீதியில் அல்ல) – தமிழர் கடைகள் அனைத்தும் திறந்தி ருந்து பரபரப்பாக இயங்கிக் கொண்டி ருந்த வேளையில், துப்பாக்கி ஏந்திய சிறிலங்கா கைக்கூலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். சூடுபட்டு எமது தோழர்கள் வீதியில் இரத்தம் தோயக் கிடந்தார்கள். எமது மக்களின் விடிவிற் காக உழைத்த தோழர்கள் வீதியில் விழுந்து கிடப்பதைக் கண்ட மக்களில் சிலர் யார் இறந்து கிடக்கின்றார்கள் என்ற விபரத்தை வெளியிடக்கூடப் பயந்து போனார்கள். சம்பவம் நடந்த சில நிமி டங்களில் பிரெஞ்சுப் பொலிசார் அவ் வீதியின் போக்குவரத்தை துண்டித்து விட்டார்கள். அருகருகே, ஆங்காங்கே தொழிற்பட்டுக் கொண்டும், செயற்பட் டுக் கொண்டும் நின்ற தோழர்கள் 'இரு தமிழர்கள்' சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி கேட்டு ஓடினார்கள். ஆனால் அவர்களால் எதையும் பார்த்து அறியமுடியாது போயிற்று. சம்பவத் தைக் நேரில் கண்ட சில தமிழர்களையும் பொலிசார் தம்முடன் அழைத்துச் சென் றிருந்தமையால் எமது இரு தோழர்களும் அதற்குள் அகப்பட்டிருக்க வேண்டும் என்ற விதமாக நம்பி தோழர்கள் தேடி னார்கள். பொலிசில் சென்று எமது இரு தோழர்களையும் காணவில்லை என்ற விபரத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் அவர்களிடமிருந்து பதில்கள் ஏதும் கிடைக்கவில்லை. அடுத்தநாள் காலை ஒன்பது மணிக்குப் பின்னரே, சூடுபட்டு இறந்துபோனவர்கள் எமது இரு தோழர்க ளுமே என்ற செய்தி கிடைத்தது.

போராட்டச் செயற்பாடுகள் பல் வேறான தளங்களில் நிகழ்பவை. அது பல விரிந்த தளங்களில் நிகழ்கிறது. அந்த வகையில் கஜன், நாதனது செயற்பாடுக ளின் தன்மை வித்தியாசமானது. விடுத லைப் போரின் அங்கமாக நின்று செயற் பட்ட வீரர்கள் அவர்கள்.

எமது தேசியத் தலைவர் அவர்கள் இவர்களது வீரச்சாவு பற்றிக் குறிப்பிடுகை யில்,

"பரந்து வளர்ந்து உலகெங்கும் கிளை பரப்பி நிற்கும் எமது விடுதலை இயக்கத்





10.11.1996 அன்று தோழர்கள் இருவரினதும் அஞ்சலிக்கூட்ட நிகழ்வு





12.11.1996 – தோழர்கள் இருவரினதும் இறுதிப்பயண நிகழ்வு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





எமது தோழர்கள், பிரான்ஸ் மண்ணில் விதைக்கப்பட்டார்கள். அந்த நிகழ்வில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.



இருதோழர் உடல் சுமந்து
நடந்தோம்
எம் விழியோரம் நீர்
சுரக்க துவண்டோம்
புகழாரம் தந்தவரை
வியந்தோம்
அவர் தாங்கிநின்ற பெரும்
பணியதனைச் சுமந்தோம்;
நிமிர்ந்தோம்.

தின் சர்வதேச கட்டமைப்பை சீர்குலைத்து அனைத்துலக ரீதியாக எமக்கு அணிதிரளும் ஆதரவை முறியடிப்பதற்காக சிங்கள இனவாத அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருவது உலகறிந்த உண்மை." எனக் குறிப்பிட்டிருந்தார். அதிலிருந்து, கஜன், நாதன் ஆகியோர் புரிந்த செயற்பாடுகளின் தன்மையையும் –அதில் அவர்களுக்கிருந்த ஆபத்தையும் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஒருவர் அனைத்துலக நிதிப் பொறுப்பாளர், மற்றவர் பரந்துரைச் செயற்பாட்டாளர். இத்தகைய இரு செயற்பாட்டாளர்களையே எதிரி தனது இலக்காக்கி இருக்கிறான். இதன் மூலம் சிறிலங்கா அரசு வெளிநாடுகளில் விடுதலைச் செயற்பாடுகளை முறித்துக் கொட்டலாம் என்று எண்ணுகிறது. தமிழீழ விடுதலைக்கு ஆதரவாய் பல்லாயிரம் கரங்கள் இறுக்கமாய் பிணையும். இந்த மக்களின் எழுச்சியை ஒரு போதும் அடக்கி விடமுடியாது. இது ஏனோ ஆக்கிரமிப்பாளர்களுக்கு புரிவதில்லை?

சிறிலங்கா அரசானது எமது இரு தோழர்களின் வீரச்சாவு ஏற்படுத்தும் அலையின் தாக்கத்தை உண்மையில் அறிந்திருக்கவில்லை. ஜனநாயக விழுமியங்கள் பேணப்படும் பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் ஒரு பத்திரிகையாளர் படுகொலை செய்ப்பட்ட நிகழ்வானது சாதாரண நிகழ்வாக இருக்கவில்லை. அது அனைத்து உள்ளங்களையும் உலுக்கிய நிகழ்வு. இரு தோழர்களின் படுகொலை நிகழ்வும் தமிழர் வாழ்வு குறித்த உத்தரவாதத் தன்மையற்ற நிலையையே வெளிநாடுகளிலும் சிறிலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பதற்கான கட்டிய நிகழ்வாக இதனை தமிழர்கள் உணர்கிறார்கள். எதிரியின் இச் சதிச்செயலை இனம் காண்பதோடு இது போன்ற சதிவலைச் செயல்களால் நிகழ இருக்கும் ஆபத்துக்களை மக்கள் அறிகின்ற போதும், தெரிந்து கொள்கின்ற போதும் அவற்றை முன் கூட்டியே தெரிவிப்பதன் மூலமுமே இத்தகைய ஊடுருவல்களை நாம் இனம் கண்டு வெல்ல முடியும்.

இல்லையேல் தமிழ்த்தேசியம் அழித்தொழிக்கப்படுவதற்கான ஆபத்துக்களை முறியடிக்காது போகின்ற அவலமானது, நீடித்த துன்பங்களின் திறவுகோலாக அமைந்து விடும். இந்த வரலாற்றுக் கடமையை புலம்பெயர்ந்த தமிழீழ மக்களும் தங்கள் தோள்களில் சுமக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### சந்திரிகா அரசின்

# கண்ணுக்குப் புலப்படாத போர் அரங்குள் புலம்பெயர் தமிழர்

புலம்பெயர்ந்த நிலங்களில் வாழும் தமிழீழ மக்களின் தஞ்ச வாழ்வு கேள்விக்குரியதாகிவிட்டது. பிரச்சினைகளில் இருந்து தப்பியோடிய நாங்கள் இனி....? இது இன்று எம்முன் எழுந்து நிற்கும் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் உலகம் பூராகவும் வாழும் தமிழ் மக்கள் உத்தரவாதமற்ற, துயர் நிறைந்த வாழ்வு பற்றிச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். உலகம் பூராகவும் சந்திரிகா தமிழர்களை பயங்கரவாதிகள் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்.

எமது விடுதலைப் போர் சுதந்திரமான, கௌரவமான, பாதுகாப்பான நல்வாழ்வுக்கானது. இந்த அகதி வாழ்வு உண்மையில் நாங்கள் வெட்கப்பட வேண்டியதொன்றே. ஆனால் எங்களில் சிலர் பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள். இல்லை இது ஆபத்து மிகுந்தது; இது காத்திரமற்றது என்ற பல்வேறு தீர்க்கதரிசனமான எண்ணக் கருக்களின் அடிப்படையில் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள்தான் நாதனும் கஜனும்.

அவர்களை நாங்கள் இழந்து விட்டோம். அவர்களின் அஞ்சலி நிகழ்வுகளை நாங்கள் லண்டனிலும் செய்வதற்கான ஒழுங்குகளை செய்வதாக இருந்தோம். பிரான்சிலும் நாங்கள் பெரிய மண்டபங்களில் இறுதி அஞ்சலி நிகழ்வுகளை செய்ய ஒழுங்கு செய்திருந்தோம். ஆனால் அவை எல்லாவற்றுக்கும் தடைகள் எழுந்தன. இந்தத் தடைகள் எமக்கு அதிர்ச்சியளிப்பதாக, கவலை அளிப்பதாக இருந்தது. எங்களின் இரு தோழர்கள் வீதியில் சிறீலங்கா அரசின் கைக்கூலிகளால் அநியாயமாகச் சுடப்பட்டு இறந்து போனார்கள். அவர்களது இறுதிக் கிரியைகளில் எமது மக்கள் பெருமளவில் கலந்து கொள்ளுவார்கள். இவ்வாறு மக்கள் கலந்து கொள்வதை சந்திரிகா அரசு விரும்பவில்லை. அது சகல வழிகளிலும் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு ஒரு ஆக்கிரமிப்பு அரசு என்பதை இங்கும் நிலை நாட்டியது.

மனிதாபிமானமற்ற அதன் ஆக்கிரமிப்புக் கொள்கைகள் வெளிநாடுகளில் அகதித் தஞ்சம் கோரிய எம் மீது அழுத்தத் தொடங்கியிருப்பதை எமது மக்கள் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். இது ஆக்கிரமிப்பாளர்களின் வரலாற்றுத் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்ற சம்பவங்கள். இதனை எதிர்கொள்வதுதான் வழி. இன்று தமிழீழ மக்கள் வெளியில் எதிர்கொண்டு நிற்கும் கண்ணுக்குத் தெரியாத ஓர் போர் அரங்கு இது.

எனினும் எமது மக்களும் நாமுமாக இறுதி அஞ்சலி நிகழ்வுகளை ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களாக மேற்கொண்டோம். மழை பெய்து கொண்டிருந்தது. எங்கும் ஈரலிப்பாகவே இருந்தது. கண்ணீர் சிந்தியபடி மக்கள் பலர் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஏழாயிரத்துக்கும் அதிகமான மக்கள் எமது தோழர்களின் வாழ்வின் நினைவைச் சுமந்தபடி வந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

அவலமான வாழ்வை வெல்ல பெரும் நிதி திரட்டி, எமது தாயகத்தின் பாதுகாப்புப் பலத்தை, படைபலத்தை அதிகரிக்க வேண்டும் என இயங்கியவர் நாதன்.

அதுவே எமது மக்களின் வாழ்வுக்கான சிறந்த உத்தரவாதங்களாக இருக்கும்.

இந்த உயரிய சிந்தனையின் செயற்பாட்டாளர்கள் இருவரையும் நாம் இன்று இழந்து விட்டோம்.

இந்த இருவரின் இழப்பும் எமது மக்களின் உளத்தில் ஒரு கவலை உணர்வை ஏற்படுத்தியதென்னவோ உண்மை. இந்த இளைய வீரர்களும் மக்களுக்காக வாழ்ந்தவர்கள் என்ற போது அவர்கள் உளத்தில் ஏற்படும் கசிவு இன்னும் அதிகமானதே!




மாவீரர்கள் நாதன், கஜன் ஆகியோரது நாற்பத்தியோராவது நாள் 'நினைவில் நனைவோம்' நிகழ்வு, 08–12–96 அன்று பாரிஸில் நிகழ்ந்தன. இந்நிகழ்வின் போது இவ்விரு மாவீரர்களின் நினைவாக 'புயற்பறவைகள்' எனும் ஒளி இழைநாடாவும் (இது ஒரு தரிசனம் வெளியீடு) 'நெருப்புப்பறவைகள்' எனும் நினைவுத்துளிகள் அடங்கிய நூலும், 'தொலைதூரச் சுவடுகள்' எனும் இசைத்தட்டும் (விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் பிரான்ஸ்) வெளியிட்டு வைக்கப்பட்டன. இரு மாவீரர்களின் வாழ்வின் பதிவுகளாகவும், நினைவின் மீட்பாகவும் நெஞ்சில் நிறையும் வெளியீடுகளாகவும் அவை விளங்கும். முறையே இவ் வெளியீடுகளின் முதல் பிரதிகளை பிரித்தானியக் கிளை சார்பில் திரு. தனம் அவர்களும், விடுதலைப் புலிகள் ஜேர்மன் கிளை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. க. சிவநாதன் அவர்களும், விடுதலைப் புலிகளின் நோர்வேப் பிரதிநிதி திரு. சர்வே அவர்களும் பெற்று வெளியிட்டு வைத்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்வியலுடன் இணைந்த கவிதைகள்



புதிய உணர்வுகளுக்கும் மன வெழுச்சிகளுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய கலை வடிவங்களுள் கவிதை தனித்துவமானது. மனவெழுச்சிகளைச் செறிவு படுத்திக் காட்டக்கூடிய "சிக்கனம்" வாழ்வியலுடன் இணைந்த கவிதைகளுக்குரிய தனித்துவமாகும். வாழ்வியலுடன் இணைந்த தகவல்களையும் கடந்த அனுபவங்கள் கவிதைகளின் வழியாகத் தரப்படுகின்றன. இந்நிலையிலே கவிதை, மொழியில் ஒரு 'மேம்பட்ட' மொழியாகவும், ஒரு வகையிற் பன்முகப் பரிமாணங்கள் கொண்ட மொழியாகவும் கருதப்படுகின்றது.

ஒலிப்படிமங்களோடு இணைந்த சமூகச் செயல் முறையின் இயக்க இசையுடன் சமகாலக் கவிதைகள் தோய்ந்து நிற்கவேண்டிய தேவையை வாழ்வியல் அழுத்தங்கள் விசைப் படுத்தி நிற்கின்றன. இந்நிலையில் அக்கவிதைகளை ஆழ்ந்து உள்வாங்கிக் கொள்வதற்குப் பலமுறை மீளமீளக் கவிதைகளை வாசிக்கவேண்டிய தேவையை வற்புறுத்த வேண்டியுள்ளது. இது "மீள்வை" எனப்படும். நடப்பியலோடு இணைந்த கவிதைகளில் "மீள்வை" என்பது தவிர்க்கமுடியாத ஒரு பண்பு. பின்வரும் 'புதுவையின்' அடிகளில் மீள்வையின் மேலோங்கலைக் காணலாம்.

"மண்ணிலே பிறந்த மறுகணப் பொழுதே
பின்னிய வலையைப் பொசுக்கிட
எழுந்தோம்
பொசுக்கிட எழுந்த போதிலும் எங்களின்
பூரண விடுதலை தூரவே உள்ளது."

கவிதை நுகர்வுக்கு அடிப்படையாக இருப்பது புலன் நுகர்வு. சமகால வாழ்க்கை தொடர்பான புலன் வழிப் பதிவுகளின் திரட்சி ஒவ்வொருவரதும் உளத்திறன் பொதிகளாக உள்ளன. இந்நிலையில் உளத்திறன் பொதிகையோடு இணங்க முடியாத நடப்பியல் போலிகளை வாசகரால் இலகுவாக இனங்காணப்படக்கூடியதாக இருக்கும். அதேவேளை உளத்திறன் பொதிகையோடு இணங்கும் படிமங்கள் கவிதைகளின் ஆற்றல்களுக்குச் சான்றாகவும், விசையாகவும் அமையும்.

உளத்திறன் பொதிகையோடு கவிதை இணைந்து செல்லும் செயல் முறை "செம்பதிகை" எனப்படும். செம்பதிகை இயல்புகள் மேலோங்கும் புதுவையின் சில அடிகள் வருமாறு !

- சபா ஜெயராசா -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எங்கள் வானிலே கருமுகில் சூழ்ந்தது
இடிமழை புயலென அழிவுகள்
சேர்ந்தன
துங்கமாமணித் தீவு அழிந்தது
தூசி படிந்த தெரு சோகம் மிதந்தது
இங்கு புதியதோர் சக்தி பிறந்தது
இளைய பரம்பரை எழுந்து நிமிர்ந்தது
கங்குல் முடிந்தொரு காலை மலர்ந்தது
காத்துக் கிடந்த நம் காலம் சிரித்தது."

நிகழ்புலக் கவிதை, நிகழ்புகல் கடப்புக் கவிதை என்றவாறு சமகாலத்தைய வாழ்க்கை அனுபவங்களின் செறிவான பரிமாணங்களைக் கூறுதல் நிகழ்புலக் கவிதைகளாக கருதலாம். நிகழ்காலத்தோடு ஒட்டாததும், சம்பந்தப்படாததுமான கவிதையாக்கங்கள் நிகழ்புலக் கடப்புக் கவிதைகள் என்று குறிப்பிடப்படும். கூடியளவு ஆத்ம விசாரங்களைக் கொண்டதே நிகழ்புலக் கடப்புக் கவிதைகள்.

நிகழ்புலக் கவிதைகள் பல்வேறு நுண்பரிமாணங்களைக் கொண்டவை. நிகழ்புலத்தைத் தூண்டும் கவிதைகள், புலத்திலே துலங்கும் கவிதைகள் என்று பிரித்தல் அடிப்படையான ஒரு பாகுபாடு. செயற்பாடுகளை விசைப் படுத்துபவை தூண்டும் கவிதைகள் எனப்படும். சூழலுக்குரிய தூண்டற்பேறுகளைக் காட்டுபவை "துலங்கும்" கவிதைகள் என்றும் குறிப்பிடப்படும்.

நிகழ்புலக் கவிதைகள் கருத்தியலுடன் தொடர்பு கொண்டவை. புற உணர்வையும் உள்ளுணர்வையும் ஒன்றிணைப்பவை. இயக்க விசையுடன் கூடிய பொருண்மை கொண்டவை. தர அளவில் சமகாலக் கவிதைகளுக்கிடையே பெரும் வீச்சுக் காணப்பட்டாலும், சிக்கலான குறியீடுகளில் இருந்து விடுபடல் நிகழ்புலக் கவிதைகளுக்குரிய தனித்துவமான அலைகளாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் இக்கவிதைகள் பூட்டி மூடப்படாத "திறந்த" தாராண்மைக் கவிதைகளாகக் காணப்படுகின்றன.

சொற்களிலிருந்து ஓசை ஒழுங்கமைப்பை நிரல்படுத்தாது நிகழ்புலமன வெழுச்சிகளில் இருந்து ஓசை ஒழுங்கமைப்பை வலுப்படுத்துவதற்கான முனைப்புக்கள் நிகழ்புலக் கவிதைகளிலே காணப்படுகின்றன. மொழியில் ஏற்கனவே நிகழ்ச்சித் திட்டமாக்கப்பட்ட ஓசை ஒழுங்கமைப்பைக் குறைந்த அளவிலே பயன்படுத்த முயலுதல் இன்னொரு பரிமாணமாகச் சுட்டிக் காட்டப்படத்தக்கது.

தனித்தனியான மனவெழுச்சிகளிலும் பார்க்க, கூட்டான மனவெழுச்சிக்குரிய விசைகள் சமகாலச் சூழலில் மேலோங்கியுள்ளமை நிகழ்புலக் கவிதைகளின் ஊடுருவிய பலமாக கருதப்படுகின்றது. ஆங்கிலத் திறனாய்வாளர்களின் எண்ணக்கருவின் வழியாக இதை விளக்குவதாயின் மனவெழுச்சிப் பொதுமைப்பாடு என்று குறிப்பிடலாம். தேசிய இனத் தனித்துவம் மேலோங்கலும் மனவெழுச்சிப் பொதுமைப்பாடும் சமாந்தரமான சமூகச் செயற்பாடுகளாகும். கண்களுக்குரிய கவிதைகள், செவிகளுக்குரிய கவிதைகள் என்றவாறு இயல்புகளின் அடிப்படையிற் கவிதைகளை இருவேறுபடுத்தலாம். நிகழ்புலக் கவிதைகள் வாய்மொழி சார்ந்த சம அழுத்தக் கோடுகளோடு கூடுதலான இணைப்பை கொண்டுள்ளமையால் செவிப்புலப் படிமங்களோடு ஒப்பீட்டளவில் இடையுறவு மேலோங்கி நிற்கின்றது. இந் நிலையில் அவை "தொழிற்படும்" கவிதைகள் என்ற படிமலர்ச்சியைப் பெறுகின்றன. "பேசும் பேச்சும் பேசமுனையும் பேச்சும்" நிகழ்புலக் கவிதையின் உயிர்க்கலன்களாக மாறுகின்றன.

பேசும் பேச்சும், பேசமுனையும் பேச்சும் கவிதைகளில் இடம்பெறுதல் "தொடுமுனையம்" எனப்படும். வாழ்வியலுடன் இணைந்த கவிதைகளில் தொடுமுனையத்தின் வீச்சுவிசை கொண்டு காணப்படும். முருகையனின் பின்வரும் அடிகள் உதாரணத்துக்குப் போதுமானது.

சொற்களை ஒருங்கே தொகுத்துக்
கலக்கவும்
சுர் எனும் ஒசை தோற்றம்பெற்றது
நுரைத்தது கலவை
புகைத்தது பிறகு
சூடுபிடித்தது
சூழல் ஒளிர்ந்தது
உள்ளுணர்வுகளை ஆகுதியாக்கினேன்
உயிர்ப்பண்புடைய கலைகள் உதித்தன.

சமகாலக் கவிதையின் பரிமாணம் கவிஞர்களின் உருவாக்கத்தோடும் இணைந்தது. கவிதையாக்கங்களிற் புதிய புலன்களிலிருந்தும் கவிஞர்கள் உருவாகி வருகின்றனர். சாதாரணமாக கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவோரும், பத்திரிகைத்துறைகள் சார்ந்தோரும் பாரம்பரியமாகக் கவிதைகளிற் பங்குபற்றினர். ஆனால் நிகழ்புலக் கவிதை ஆக்கங்களிற் பல்வேறு சமூகத் தளங்களிற் செயற்படுவோர் பங்கு பற்றி வருகின்றனர்.

பாரம்பரியமற்ற புதிய மன உணர்வுகளை விபரிக்கவும் நிகழ்புலக் கவிதையின் பரிமாணமாக உள்ளது புதிய

> "பலாலியில் உணவறையில் சாப்பிட்டுக் கொண்டு 'ஸ்ரார்' தொகைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும்போது கூட, உயர் அதிகாரிகள் பயத்துடனேயே இருக்கின்றனர்; விடுதலைப் புலிகளின் தாக்குதல் எந்நேரமும் நடக்கலாமென்ற அச்சத்துடனேயே காணப்படுகின்றனர்."
>
> – ஜாவிட்ராகவி
> ('ராய்ட்டர்' செய்தியாளர்)
> ஈழநாதம் 25.08.1996"

சமூக விழுமியங்கள். புதிய நடிப்பாங்குகளை ஏற்றல், புதிய இட அசைவுகள் முதலியவற்றை அடியொற்றிய புதிய மன உணர்வுகள் நிகழ்புலக் கவிதைகளில் செறிவுடன் சித்தரிக்கப்பட்டு வருகின்றன. புதிய மன உணர்வுகள் வெறும் கடுதாசிக் கோலங்களாக வெளிவரவில்லை. அவை ஆழ்ந்த நீர்த் தேக்கம் போன்ற உணர்ச்சி வலிமையுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்பு கொண்டுள்ள குறியீடுகளைக் காட்டும் முனைப்புடன் வெளிவருகின்றன. உறைப்பானதும், வண்ணங்கள் நிறைந்ததுமான புதிய படிமங்கள் நிகழ்புலக் கவிதைகளினூடாக வெளிவருகின்றன.

இலக்குகள் பற்றிய விசுவாசமும் நம்பிக்கையும் நிகழ்புலக் கவிதைகளுக்கு வலுவூட்டுகின்றன. நிகழ்புலத்தின் வலிமையுடனும் அழுத்தங்களுடனும் இலக்குகள் தொடர்புபட்டு நிற்கின்றன. நிகழ்புலத்தின் சந்தர்ப்பங்களையும் செயல்முறைகளையும் இணைத்து இலக்குகள் உருவாக்கப்படும். கவிதையின் இலக்குகளை முதன்மைப்படுத்திய விசைகளை ஏற்படுத்தும் செயல்முறை "தொடுகாவியம்" எனப்படும் வாழ்வியலோடுஇணைந்த கவிதைகளிலே தொடுகாவியப் பண்புகள் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இடம்பெற்றுவிடும்.

"குஞ்சுகளுக்காய்
கூடுகட்டல் குற்றம் என
கூட்டில் அடைக்கப்பட்ட
குருவிகள்"

என்ற தூயவன் எழுதிய கவிதையில் தொடுகாவியத்தின் அடுத்த முனைகளைக் காணலாம். நிகழ்புலக்கவிதைகள் ஓய்வுநிலை குழம்பிய கவிதைகளாகக் காணப்படுகின்றன. அதாவது சாந்தி, அமைதி என்பவற்றிலும் அருட்டலும் சலனங்களுமே கவிதைகளில் மேலோங்கி உள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தமிழ் அழகியல்" என்று புதிய எண்ணக் கருவை நிகழ்புலக் கவிதைகள் உருவாக்கி வருகின்றன. ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகிய நீக்ரோ மக்களின் இலக்கியங்களை ஆராய்வோர் "கருமை அழகியல்" என்று தொடரை முன்மொழிதல் உண்டு. ஒரு இனக் குழுமத்தின் தனித்துவமான மனவெழுச்சிகளுடன் அழகியல் தொடர்புபட்டு நிற்றல் உண்டு. நீக்ரோ மக்களின் ஆழ்ந்த மன உணர்வுகளை புரிந்து கொள்வோரால் மட்டுமே 'கருமை அழகியல்' விளங்கிக்கொள்ள முடியும். இத்தகைய ஓர் அறிகை நிலை "தமிழ் அழகியல்" விளக்கத்துக்கும் பொருத்தமானதாகும்.

நிகழ்புலக் கவிதையின் இன்னொரு பரிமாணம் "தன்னியல்" யாப்பினைக் கையாளும் முறைமையாகும். நியமான யாப்பு முறைமை ஒன்றிருக்க அதனைப் பொருட்படுத்தாது தமக்கே உரித்தான அறிகை வயப்பட்ட கவிதை ஒழுங்கமைப்பை மேற்கொள்ளல் "தன்னியல் யாப்பு" என்று குறிப்பிடப்படும். உலகக் கவிதைப் பரப்பில் இவ்வாறான தன்னியல் யாப்பு வடிவத்தை ஆழ்ந்த வேர்ப்படுக்கைகளுடன் நிலைநிறுத்தியவர் வோல்ரர் விற்மன். கறுப்பு இனத்தவர்கள் மீது சுமத்தப்பட்ட அடக்குமுறைகளுக்கும் அழுத்தங்களுக்கும் எதிரான கவிதைக்குரல் கொடுத்த லோங்ஸ்ரன் கியூஸ் என்பாரும் இவ்வாறான தன்னியல் யாப்பு வடிவத்தை பயன்படுத்தினார். சமகால தமிழ்க் கவிதையிலே தன்னியல் யாப்பு வடிவம் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

நிகழ்புலக் கவிதைகளிலே காணப்படும் இன்னொரு சிறப்புப் பண்பு கவிதையின் பொழுதுபோக்குக் கட்டமைப்பையும் மீறிய காட்சிகளை முன்வைக்க முயல்வதாகும். கவிதையை வெறும் பொழுதுபோக்கு நிலையிலிருந்து மேலுயர்த்தும் பொழுது, இவ்வாறான மேல்நோக்கிய முடிவுகளின் ஆக்கமுயற்சி வளர்ச்சியடையும். கவிதையின் வழியாக சமூக மலர்ச்சிகளை உந்த முற்படும் பொழுது இவ்வாறான பண்புகள் வெளிக்கிளம்புதல் உண்டு.

நீக்ரோ மக்களின் எழுச்சியைத் தூண்டும் கவிதைகள் சமய உள்ளடக்கத்தின் மீது வலிமையான பிணைப்புகளை ஏற்படுத்தியுள்ளன. சமகாலத் தமிழ்க் கவிதைகளில் ஒருசில கவிஞர்களைத் தவிர ஏனையோரிடத்து இந்தப் பண்பு பலங்குன்றியுள்ளது. எமது நிகழ்புலக் கவிதைகள் இந்த வலிமையான வேர்களை நிராகரித்து நிமிர்ந்து எழமுடியாது.

நிகழ்புலக் கவிதைகளில் ஒருவித ஆவண உள்ளீட்டுத்தன்மை காணப்படுகின்றது. தமிழ்க் கவிஞர்கள் உலகெல்லாம் வாழ்வதால் எழுகின்ற உணர்வுகளும், பாரம்பரிய நிலத்தோடு ஒட்டி நிற்கும் உணர்வுகளுமாக பரந்த காட்சியை நிகழ்புலக் கவிதைகள் தருகின்றன. பரந்த தகவல்களை களஞ்சியப்படுத்தலும் நிகழ்புலக் கவிதைகளினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. நிகழ்ச்சிகள் கவிதைப் படிமங்களாக மாற்றப்படுகின்றன. இது "தகவுகள்" ஆக்கல் என்று குறிப்பிடப்படும்.

நிகழ்புலத்தினூடாக அறம் வலியுறுத்தலும் சமகால தமிழ்க் கவிதைகளிலே காணப்படுகின்றன. கவிஞர்களின் கருத்தியலுக்கு ஏற்பவும் வாழும் புலத்துக்கு ஏற்பவும், சமூகத்தளங்களுக்கு ஏற்பவும் அறம் வலியுறுத்தப்படுகின்றது. இக்கட்டுரையிற் கவிஞர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. சுமார் எழுபது கவிஞர்களின் ஆக்கச் சாராம்சத்திலிருந்து இக் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

### கவிதை ஆளுமை

ஒருவரின் கூட்டுமொத்தமான நடத்தைகளின் வடிவமாக கவிதை ஆளுமை கருதப்படுகின்றது. பிறரிடமிருந்து வேறுபடும் தனித்துவமான பண்புகள் கவிதை ஆளுமையை இனம்காணுவதற்கு நோக்கப்படுகின்றன. புறத்தூண்டிகளுக்கு ஒருவர் எவ்வாறு துலங்குகின்றார் என்பதிலிருந்தும் கவிதை ஆளுமை விபரித்துக் கூறப்படுகின்றது. இது "துலங்கல் பெறுமானம்" என்று விளக்கப்படும். ஒருவரது அறிவுப்பெறுமானம், மனவெழுச்சிப் பெறுமானம் என்பவற்றிலிருந்தும் கவிதை ஆளுமை விரிவுபெறுகின்றது.

சமூக இடைவினைகளின் வழியாகவே தனிமனித ஆக்கம் நிகழ்கின்றது. மனித இடைவினைகள் ஒருவரது வாழ்நாள் முழுவதும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. முதிர்ச்சி, அனுபவம், கல்வி, சமூகச் சூழல் என்பவற்றுக்கேற்ப இடைவினைகள் வளர்ச்சியும் மாற்றமும் அடையும். சமூகத்தில் ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் நடிப்பாங்குகள் ஆளுமை உருவாக்கத்திலே பெரும் பங்குகொள்கின்றன. நடிப்பாங்குகள் வாயிலாக ஒருவர் தம்மைப் பற்றிய காட்சியை உருவாக்கிக் கொள்ள முடியும். அவ்வாறே பிறரும் அவரைப்பற்றிய காட்சியை வடிவமைத்துக்கொள்ள முடியும்.

ஆளுமையில் சுய எண்ணக்கரு அல்லது சுய படிமம் என்பவை முக்கியத்துவம் பெறுகின்றன. ஒருவர் தமது உருவத்தை, பழக்கங்களை, மனவெழுச்சிகளை, நோக்கங்களை, விருப்பங்களைப் பற்றிக்கொள்ளும் காட்சிகள் சுயஎண்ணக் கருவிலும், சுயபடிமத்திலும் இடம்பெறுகின்றன. ★

"...இன்று கடினமான எதிர்ப்பு சக்தி வாய்ந்ததும் உயர்ந்தளவு உந்துசக்தி கொண்டதுமாகத் திகழும் விடுதலைப் புலிகள் அமைப்பை, அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், 80–களின் இறுதிப் பகுதியில், முதல்தரம் வாய்ந்த கெரில்லா இயக்கமாக உருவாக்கினார்.

...கிளசவிற்ஸ் முதல் மாவோ, சேகுவரா ஆகியோரைப் போல பிரபாகரனும் சிறிய நிரந்தர இராணுவத்தை, தமிழ் இராணுவ வரலாறு மூலமும் அதன் இலக்கியங்கள் மூலமும் கற்றறிந்து உருவாக்கிக்கொண்டார்."

–மேர்வின் டி சில்வா

('லங்கா கார்டியன்' ஏட்டின் ஆசிரியர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறிலங்காவின் நண்பன்

இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்கும் இடையிலான உறவு நிலை முன்னெப்பொழுதும் இல்லாதவாறு திருப்திகரமாகவும், நட்புரிமையுடனும் இருக்கின்றதென லக்ஸ்மன் கதிர்காமர் அண்மையில் தெரிவித்திருந்தார். இதேசமயம் வேறொரு இடத்தில் இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்கும் இடையிலான உறவுநிலை அதிருப்தியுறாமல் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் எச்சரிக்கை கலந்த தொனியில் பேசியும் உள்ளார். அமைச்சர் கதிர்காமரது பேச்சானது சிறிலங்கா இந்தியா உறவு நிலை எவ்வளவு திருப்திகமாக இருப்பினும் அது எவ்வேளையிலும் ஆபத்திற்குள்ளாகலாம் என்பதன் வெளிப்பாடே ஆகும். அவ்வாறானால் இந்தியாவுடனான உறவுநிலை பாதிப்படையச் செய்யக்கூடிய ஏதாவது நடவடிக்கைகள் சிறிலங்காவில் இடம் பெறுகின்றதா என்பது தவிர்க்க முடியாத கேள்வி எழுகின்றது.



லக்ஸ்மன் கதிர்காமர்

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தான் தலையிடப் போவது என்ற ரீதியில் இந்தியா தொடர்ந்து தனது கருத்துக்களை வலியுறுத்தி வருவதோடு விடுதலைப்புலிகள் தொடர்பான நிலைப்பாட்டிலும் மாற்றம் எதையும் செய்ததாகவும் இல்லை. இந்த நிலையில் அகதிகள் தமிழகத்துக்கு செல்வதனாது இந்தியாவுக்கு சில அசௌகரியங்களை ஏற்படுத்துவதாயினும் அவ்விவகாரம் இந்தியா சிறிலங்கா உறவுநிலையைப் பாதிப்படையச் செய்து விடும் என்று கூறுவதற்கு இல்லை. ஆகையினால் சிறிலங்கா அது குறித்துக் கவலைப் படவேண்டியோ அன்றி எச்சரிக்கை அடையவோ தேவையில்லை. அத்தோடு விடுதலைப்புலிகள் இந்தியாவுக்குள் நுழைந்து விடாது தடுப்பதில் இந்தியா தீவிர அக்கறை காட்டி வருகின்றது. இந்த நிலையில் இந்தியா குறித்து எச்சரிக்கையுடன் சிறிலங்கா செயல்படுவது இந்தியாவுக்கு விரும்பத்தகாத செயல்பாடுகள் ஏதிலாவது சிறிலங்கா ஈடுபடுவதாக இருக்க வேண்டும். அல்லது இப் பிராந்தியத்தில் இந்தியாவின் முதன்மையைப் பாதிப்படையச் செய்யும் நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு ஈடுபட்டிருக்க வேண்டும். அல்லது ஈடுபட்டுக்கொண்டிருக்க வேண்டும். இதில் சுட்டிக்காட்டத்தக்கது இந்தியாவுடன் நட்புரிமையை சிறிலங்கா பேண விரும்பினாலும் கூட இந்தியாவை விட மேற்குலக நாடுகளுடனான குறிப்பாக அமெரிக்கவுடனான நட்புக்கு முன்னுரிமை கொடுக்க முற்பட்டுள்ளமையாகும்.

இது தென் ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் செல்வாக்கு மேலும் அதிகரிக்க ஏற்படுத்திக் கொடுக்கும் சந்தர்ப்பம் ஆகும். இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை எனக் கூறிக்கொண்ட போதும் இந்தியாவின் தலையீட்டை முன்பிருந்த ஐ.தே. கட்சி அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. இது இந்தியாவின்றி இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாணமுடியாது என்ற ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்டதாக இருந்தது. ஆனால் இந்திய இராணுவம் வெளியேறிய போதும் இந்தியாவின் உறவைப் பாதிப்படைய விட சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. இதன் வெளிப்பாடாகவே இந்தியாவின் பரம எதிரியாக ஆரம்பத்தில் இருந்த முன்னாள் ஜனாதிபதி பிரமேதாச கூட மூன்று தடவை இந்தியா சென்றுவந்தமையும் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் சந்திரிகா குமாரணதுங்கா மேற்கொண்ட முதலாவது விஜயமாக இருந்தமையும் ஆகும்.

ஆனால் இன்று இந்தியா தனது எதிரியல்ல என்று சிறிலங்கா பேசிக் கொண்டாலும் இனப்பிரச்சினை விவகாரத்திலோ அன்றி ஏனைய விடயங்களிலோ அது இந்தியாவை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. மேற்கு நாடுகளைக் குறிப்பாக அமெரிக்காவையே நாடி நிற்கின்றது. இதன் மூலம் தனது நெருக்கடிகளுக்கு தீர்வுகாணலாம் என நம்புகின்றது. இதனை அமெரிக்காவுக்கு சிறிலங்கா அமைச்சர்



அமெரிக்க 'கிரீன்பெரே'

கள் அடிக்கடி விஜயம் செய்வதும் வெளியுலக நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிப்பதில் இருந்துமே புரிந்துகொள்ளமுடியும். இதைத் தவிர அமெரிக்காவில் புலிகளைத் தடை செய்யும் நோக்கில் தீவிர செயல்பாட்டை ஆரம்பித்துள்ளமை குறித்தும், அமெரிக்க 'கிரீன்பெரே' குழுவினர் சிறிலங்கா ஆயுதப்படையினருக்கு பயிற்சி அளித்து வருகின்றமையும் சுட்டிக்காட்ட முடியும். இந்த நிலையில் தான் அதாவது இந்தியாவுடனான நட்புறவிற்கு வழங்கும் முதன்மையை விட அமெரிக்காவிற்கு வழங்குகின்ற முதன்மையும் அமெரிக்க 'கிரீன்பெரே' குழுவினர் சிறிலங்கா ஆயுதப்படையினருக்குப் பயிற்சி வழங்குகின்றமையும் இந்தியாவுக்கு அதிருப்தியான விடயங்களாகவே இருக்கும். இதனை விளங்கிக்கொண்டே கதிர்காமர் இந்தியா உறவு குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். அதாவது இந்தியா விரும்பாத செயலைச் செய்து கொண்டு அதனை விழிப்புறாமல் எந்தளவிற்கு பார்த்துக்கொள்ள முடியுமோ அந்தளவிற்குப் பார்த்துக் கொள்வதே சந்திரிகா அரசின் நோக்கமாகும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லில்லி மலர்கள்

1946-ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தின் நடுப்பகுதி அது.

குவோமின்ராங் (Kuomintang) படைகளுக்கெதிராகப் பெரிய தாக்குதல் ஒன்று திட்டமிடப்பட்டது. தாக்குதல் சமயத்தில் ஏற்படக்கூடிய தேவைகளைக் கவனிப்பதற்காக வெவ்வேறு ஆட்கள் வெவ்வேறு பிரிவுகளுக்கு அதிகாரிகளினால் அனுப்பிவைக்கப்பட்டனர்.

போர்முனைக்கு அருகிலுள்ள முதலுதவி நிலையத்தில் பணிபுரிவதற்காகாக நான் இறுதியில் அனுப்பப்பட்டேன். நான் போகவேண்டிய இடத்துக்கு என்னைக் கூட்டிச் செல்லும் வழிகாட்டியாக வந்திருந்த தொடர்பாளனைப் பின்தொடர்ந்து, எனது மூட்டை முடிச்சுக்களுடன் நடக்க ஆரம்பிக்கிறேன்.

காலையில் பெய்த மழை இப்போ ஓய்ந்திருந்தது. மழைநீரின் பிசுபிசுப்பில் வீதி வழுக்கிக் கொண்டிருந்தது. வீதியோரத்துச் செடிகள் மழைநீரில் தூசி அகன்று வெயிலில் பச்சையாய்ப் பளபளத்துக் கொண்டிருந்தன. சுத்தமான காற்று இதமாய் வீசிக் கொண்டிருந்தது.

ரம்மியமான அந்தச் சூழ்நிலையை, இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருந்த எதிரியின் ‘ஆட்லறி’ வெடிச் சத்தங்கள் பாழ் செய்து கொண்டிருந்தன. இல்லையென்றால் – ஒரு விழாவுக்குப் போவது போன்ற மன உணர்வையே அந்தச் சூழ்நிலை ஏற்படுத்தியிருக்கும்

பத்துப் பன்னிரண்டு யார் இடைவெளியில் அவன் எனக்கு முன்னால் நடந்து கொண்டிருந்தான்.

கால்கள் கொப்பளித்திருந்ததாலும், வீதி வழுக்கிக்கொண்டிருந்ததாலும் அவனுக்கு ஈடாக நடக்க என்னால் முடியவில்லை.

நான் நடையை வேகப்படுத்தினால், அவனும் வேகமாய் நடந்தான். எனது நடையின் வேகம் தணிந்த போது அவனும் மெதுவாக நடந்தான். இத்தனைக்கும் ஒரு தடவை கூட அவன் பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை. ஒருவேளை அவனுக்குப் பிடரியிலும் கண்கள் இருந்தனவோ?

எப்படியிருந்தபோதும் எனக்கும் அவனுக்குமிடையில் இருந்த தூரம் குறையவுமில்லை கூடவுமில்லை

அவனைப்பற்றி அறியும் ஆவல் எனக்குள் உருவாகியது. தலைமையகத்திலும் அவனை நான் சரியாகப் பார்க்கவில்லை. முன்னால் சென்று கொண்டிருந்த அவனை இப்போது பார்க்கிறேன்.

அகன்ற தோள்களுடன் உயரமான சிறுவன். அவன் மங்கிப்போன மஞ்சள் நிறச்சீருடை அணிந்திருந்தான் மரத்தின் சிறுகிளையொன்று அவனுடைய துப்பாக்கிக் குழலைச் சுற்றியிருந்தது, உருமறைப்புக்காக என்பதையும் விட, அழகுக்காகச் செய்யப்பட்டது போலவே தோன்றியது.

நடந்ததில் எனது கால்கள் வீங்கிவிட்டன. அவனை அழைத்து, ‘சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு நடப்போமே’ எனக் கூறிவிட்டு, ஒரு கல்லில் அமர்ந்து கொண்டேன்.

எனக்கு முதுகைக் காட்டியபடி, சிறிது தூரத்தில் இருந்த கல் ஒன்றில் அவனும் அமர்ந்து கொண்டான். தனது முழங்கால்களுக்குக் குறுக்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு, நான் ஒருத்தி இருப்பதையே அறவே கவனிக்காதவன் போல இருந்ததன் காரணம், நான் ஒரு பெண் என்ப தாகவே இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டேன்.

திடீரென நான் எழுந்துபோய் அவனெதிரே இருந்த கல் ஒன்றில் அமர்ந்து கொண்டது, அவனைக் கலவரப்படுத்தியிருக்க வேண்டும்..

என்ன செய்வதென்று தெரியாமல் அவன் திண்டாடுவது தெரிந்தது.

இளமை மாறாத அந்த வட்ட முகம், அவனுக்குப் பதினெட்டு வய துக்கு மேல் இருக்காது என்பதைச் சொல்லியது.

'நீ எந்த ஊரைச் சேர்ந்தவன்?'

தொண்டையைச் செருமியபடி, 'ரியான்முஷான்' (Tianmushan) என் றான்.

ஓ... நாங்கள் இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் தான்.

'வீட்டில் என்ன செய்துகொண்டி ருந்தாய்?'

'மூங்கில் இழுப்பதில் அப்பாவுக்கு உதவி செய்துகொண்டிருந்தேன்'.

## ரூ சீ யூவான்

தமிழில்:

சாவித்திரி அத்துவிதானந்தன்

எங்கள் ஊரின் மூங்கில் காட்டின் ஒடுங்கிய பாதையிலே நின்று, செடிக ளின் நுனிகள் பாறைகளில் மோதிக் கலகலக்கும்படி மூங்கில் இழுத்துக் கொண்டு நிற்கும் ஒரு மனிதன் எனது மனக்கண்ணில் வருகிறார். இவனைப் போலவே தான் அவருக்கும் அகன்ற தோள்கள்.... அவர் தான் இவனு டைய தந்தையாக இருக்க வேண்டும்..

'உனக்கு எத்தனை வயசு?'

'பத்தொன்பது'

'எப்போது படையில் சேர்ந்தாய்?'

'கடந்த வருடம்'

'ஏன் படையில் சேர்ந்தாய்?'

– நான் அடுக்கிக் கொண்டே போவது, சம்பாஷணையாக இல்லா மல் ஒரு குறுக்கு விசாரணை போலவே இருந்ததை உணர்ந்து கொண்டும், நான் அவனை இப்படிக் கேட்டேன்.

'எனது கிராமத்துக் கூடாக இந்தப் படையினர் நடந்தபோது நானும் அவர்களுடன் சேர்ந்து வந்து விட் டேன்?'

'உனது குடும்பம் யார் யாரைக் கொண்டது?'

'அம்மா.. அப்பா.. தம்பி... சகோ தரிமார்.. . எங்களுடன் வசிக்கும் ஒரு அத்தை.'

' நீ திருமணமானவனா?'

'...............'

அவன் எதுவுமே பேசாமல் 'தர்ம சங்கடத்துடன் சிரித்தபடி வேகமாகத் தலையை ஆட்டினான்.

அவனுடைய உள்ளம் கவர்ந்த பெண் யாராவது இருக்கிறாளா என்ற கேள்வி என் நா வரைக்கும் வந்து விட்ட போதிலும் நான் கேட்க வில்லை.

சிறிது நேர மௌனத்தின் பின்,

'புறப்படுவதற்கு நேரமாகிவிட்டது' என்று சொல்வதுபோல அவன் வானத்தையும் பார்த்து, பின் என்னை யும் பார்த்தான்.

முதலுதவி நிலையத்தை அடைந்த போது பகல் இரண்டுமணி. போர் முனையிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் அந்த இடம் அமைந்திருந் தது.

சிறிதும் பெரிதுமாய் முக்கோண வடிவிலே அமைந்திருந்த ஆறு கட்டி டங்களைக் கொண்ட ஒரு ஆரம்ப பாடசாலை அது. வளவிலே பெரும ளவில் வளர்ந்துவிட்டிருந்த பூண்டு கள், சில காலமாகவே அந்தப் பாட சாலை நடைபெறவில்லை என்பதைக் கூறின. பலர் உதவியாளர்களாக அங்கே பணிபுரிந்துகொண்டிருந்தனர். அறைகளின் கழற்றப்பட்ட கதவுகள், ஒழுங்காக அடுக்கப்பட்ட கற்களின் மேல் குறுக்காகப் போடப்பட்டு, நோயாளிகளுக்கான படுக்கைகளாய் மாறியிருந்தன. காயங்களுக்கான மருந்து வகைகள் தயார் நிலையில் இருந்தன. படுக்கைகளுக்கு விரிப்பதற் குப் போதுமான அளவு மெத்தைகள் மட்டும் வந்து சேர்ந்திருக்கவில்லை. காயமடைந்து வரும் நோயாளிகள் குளிரின் பாதிப்புக்கு மிகவும் விரை வாக உள்ளாகிவிடுவார்கள் என்ப தால் மேலும் சில மெத்தைகள் அந்தக் கிராமத்து மக்களிடமிருந்து நாம் பெற் றுக்கொள்ள வேண்டியிருந்தது.

அந்த வேலையைச் செய்ய நான் முன்வந்தேன். உடனடியாகவே செய்ய வேண்டிய பணியாக அது இருந்தபடி யால், என்னுடன் வந்து உதவி புரிந்த பின் போர்முனைத் தலைமையகத் துக்குப் போகும்படி எனது வழிகாட்டி வந்த சிறுவனைக் கேட்டுக்கொண் டேன். முதலில் தயங்கினான். பிறகு சம்மதித்தான்.

அருகில் இருந்த கிராமம் ஒன்றுக் குப் போய், ஒரு சந்தியில் அவன் கிழக்குப்பக்கமாகவும் நான் மேற்குப் பக்கமாகவும் மெத்தைகள் சேகரிப் பதற்காக நடந்தோம். சிறிது நேரத்தி லேயே இரண்டு பெரிய மெத்தைக ளும் ஒரு சிறிய மெத்தையும் என்னி டம் சேர்ந்து விட்டன. அவற்றைக் கொண்டு போய் வைத்து விட்டு மீண்டும் வர எண்ணிய போது என் னெதிரே அவன் வெறுங்கையுடன் வந்து கொண்டிருந்தான்.

"என்ன நடந்தது?" நான் கேட் டேன்.

எங்களுடைய போராட்டம் பற்றி புரிந்துணர்வுடைய அந்த மக்களிட மிருந்து ஒரு மெத்தைகூடப் பெற்றுக் கொள்ள முடியாமல் இவன் திரும்பி வந்ததை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"பிரபுத்துவ மனப்பான்மை கொண்ட இந்தப் பெண்களிடம் நீங் கள்தான் போய் மெத்தை கேளுங்கள் சகோதரி.." சிறிது கோபத்துடன் சொன்னான்.

"யார் அது? அது எந்த வீடு? வா அங்கே போய்ப் பார்ப்போம்..." இவன் ஏதாவது கட்டாயமாகக் கதைத்து அவர்களைக் குழப்பியிருப் பான்....

சேர்க்கக்கூடிய மெத்தைகளில் ஒரு மெத்தை குறைவாகக் கிடைப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல; ஆனால் அவர்களுக்கு வெறுப்புண்டாகும்படி நடந்து கொள்வது பாரதூரமான பலாபலனை ஏற்படுத்திவிடுமல் லாவா...?

என்னுடன் வர விருப்பமில்லாதவ னாய் அவன் ஆணி அடித்ததுபோல அவ்விடத்திலேயே நின்றான்.. மக்க ளுக்கு வெறுப்பூட்டும் வகையில் நடந்து கொள்வது கூடாது என்பதை எடுத்துச் சொன்ன பிறகே என்னுடன் வருவதற்கு இணங்கினான்.

அந்த வீட்டுக்குள் நாங்கள் போன போது, வரவேற்பறையில் யாருமே தென்படவில்லை. பல தடவைகள் கூப்பிட்டும் பதிலில்லை. ஆனால் உள்ளே நடமாட்டம் இருப்பது புரிந் தது.

திடீரென, வாசல் திரையை நீக்கிக் கொண்டு ஒரு இளம் பெண் தோன்றி னாள். வளைந்த புருவங்களும் அழகிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகஜாடைகளுமாய் சிறந்த அழகி அவள். புது ஆடைகள் அணிந்திருந்தாள்.

சிறுவன் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னிக்கும்படி அவளிடம் கேட்டுக்கொண்டேன்.

'அப்படியொன்றுமில்லை' என்று சொல்வது போன்ற முகபாவத்துடன் உதடுகளைக் கடித்து லேசாகச் சிரித்தாள்.

நான் கூறிமுடித்ததும் மேலும் வந்து சிரிப்பை அடக்க முற்படுவது போல உதடுகளை இறுகக் கடித்துக் கொண்டாள்.

நாங்கள் வந்த காரணத்தை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நான் நின்று கொண்டிருக்க சிறுவன் எனது நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்தபடி நின்றான்.

விஷயத்தைக் கூறிய பிறகு அவள் சிரிக்கவில்லை. ஏனோ – அடிக்கடி திரும்பி உள்ளே தனது அறையைப் பார்ப்பதும் பிறகு எங்கள் பக்கம் பார்ப்பதுமாக நின்றாள். நான் உண்மையாகத்தான் கேட்டேனா என்பதை அறிய முற்படுவது போல என்னையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அடுத்த கணம் மெத்தையைக் கொண்டு வருவதற்காக அவள் உள்ளே போகவும், சிறுவன் உடனே, 'உங்களைப் போலத்தான் நானும் இதையெல்லாம் அந்தப் பெண்ணிடம் சொன்னேன்.. அவள்தான் பொருட்படுத்தவில்லை..' என்று காரமாகக் கூறினான்.




அப்படிக் கதைத்ததற்காக அவன் மீது நான் கோபப் பார்வையை வீசிய போது, அந்த இளம்பெண் மெத்தையும் கையுமாக நின்று கொண்டிருந்தாள். அந்த மெத்தையைத் தருவதற்கு அவள் ஏன் விரும்பவில்லை என்பது மெத்தையைப் பார்த்தபோது விளங்கியது.

பூப்போட்ட துணியினாலான புதிய மெத்தை அது. மெத்தையின் உறை – சிவப்புப் பின்னணியில் வெள்ளை லில்லி மலர்கள் பூத்திருப்பது போன்ற பூவேலைப்பாட்டுடன் அழகாக இருந்தது.

சிறுவனுக்கு எரிச்சலூட்டுவது போல – 'இந்தாருங்கள்' என்று சொல்லி மெத்தையை என்னிடம் நீட்டினாள். ஏற்கனவே நான் வேறு மெத்தைகள் வைத்திருந்தபடியால், அவள் தந்த மெத்தையை வாங்கிக் கொள்ளும்படி நான் அவனைப் பார்க்க, சிறுவனோ தெரியாதவன் போல நின்றான்.


நான் கூப்பிட்டதும், வேண்டா வெறுப்புடன் மெத்தையைக் கையில் வாங்கிக் கொண்டு வெளியே போவதற்காக அவசரமாகத் திரும்பினான். திரும்பிய வேகத்தில், கதவிலிருந்த ஆணியில் பட்டு அவனது சட்டை தோள்பட்டையடியில் 'படீர்' எனப் பெரிதாகக் கிழிந்தது.

இளம்பெண் புன்னகைத்தபடி, அவனது சட்டையின் கிழிசலைத் தைத்து விட ஊசி நூல் எடுத்து வர உள்ளே ஓடினாள். அவன் கவனிக்காதவன் போல மெத்தையோடு வெளியே நடந்தான்.

நாங்கள் சில தூரம் கடந்து சென்ற பின் யாரோ சொன்னார்கள் 'அந்தப் பெண் மூன்று நாட்களுக்கு முன்பு தான் திருமணமானவளாம். அவள் சீதனமாகக் கொண்டு வந்த ஒரே சொத்து – அந்த மெத்தை'

இந்தச் செய்தி என்னை ஒருவித கவலையில் ஆழ்த்தியது. சிறுவனும் கவலையடைந்தவனாய்த் தனது கையிலிருந்த மெத்தையை உற்றுப் பார்த்தபடியே மௌனமாக நின்றான்,

எனது மன உணர்வுகள் போலவே





"கிளிநொச்சியிலிருந்து வன்னியின் உட் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து, பாம்புகள் நிறைந்த பற்றைகளுக்கு அருகில் குழந்தை குட்டிகளுடன் வெயிலிலும் மழையிலும் சோர்ந்து கிடந்த மக்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணங்களை அனுப்பாமல், அவர்களைத் தாண்டிக்குளம் ஊடாக வவுனியாவுக்கு இழுத்தெடுப்பதில் காண்பிக்கப்பட்ட அரசியல் நோக்கங்கொண்ட முனைப்பு, மனித நேயம் கொண்ட சகலரும் வெட்கித் தலை குனிய வேண்டிய விடயமாகும்"

*ஆசிரியர் தலையங்கம் (வீரகேசரி 01.09.1996)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனுடையதும் இருந்திருக்க வேண்டும்.

'நாங்கள் இதை வாங்கிக் கொண்டு வந்தது சரியில்லைத்தான்; ஆனால் அவளுடைய திருமண மெத்தையைத் தான் நாங்கள் இரவல் வாங்கினோம் என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்?' – நடந்தபடியே அவன் இப்படிக் கூறினான்.

'உண்மை தான்.. இப்படி ஒரு மெத்தையை வாங்குவதற்கான பணத்தைத் தேடிக்கொள்ள அந்தப் 'பெண் எத்தனை கஸ்டங்கள் பட்டாளோ..? எத்தனை நாட்கள் நித்திரையை இழந்து மேலதிகமாய் வேலை செய்தாளோ...? .... ம்.... இருந்தும் இவளைப் பிரபுத்துவ மனப்பான்மை கொண்டவள் என்றும் சிலர் சொல்கிறார்களே..' அவனைச் சீண்டுவதற்காகவே கடைசி வசனத்தை இப்படிக் கூறினேன்.

சட்டென அவன் நடப்பதை நிறுத்தி, 'இதைத் திருப்பிக் கொடுத்து விடுவோம்..' என்றான்.

'இனித் திருப்பிக் கொடுப்பது அவளைப் புண்படுத்துவது போலாகும்' என நான் கூறியதை ஏற்றுக் கொண்டான்.

'சரி... தேவை முடிந்த பிறகு இதைத் துவைத்து அவளிடமே திருப்பிக் கொடுப்போம்,,' என்று கூறிவிட்டு அதன் பிறகு நிம்மதியடைந்தவனாய், நான் கொண்டுவந்த மெத்தைகளையும் தன்னிடம் வாங்கிக் கொண்டு விரைவாக நடந்தான்.

முதலுதவி நிலையத்தை அடைந்ததும், படையணித் தலைமையகத்துக்கு மீண்டும் செல்ல அவனுக்கு விடை கொடுத்தேன். அவன் முகம் பிரகாசமாகியது. எனக்கு சல்யூட் அடித்து விட்டு ஓடியவன், ஏதோ நினைத்திருக்க வேண்டும்... தனது கைப்பையினுள் தடவி – உள்ளேயிருந்த இரண்டு பழைய பணிசுகளை வெளியே எடுத்து என்னிடம் காட்டி விட்டு அங்கிருந்த கல் ஒன்றின் மீது அதை வைத்தான்.

'இது உங்களுக்கு இரவுச் சாப்பாடு' எனக் கூறிவிட்டு விரைவாகச் சென்று மறைந்தான்.

பணிசை எடுக்க நான் போன போது, தூரத்தில் அவன் சென்று கொண்டிருந்தான். அவனுடைய துப்பாக்கிக் குழலைச் சுற்றியிருந்த மரக் கிளையில் இருந்த கிறிசாந்திமம் பூ ஒன்று அவன் காதருகில் அசைந்தாடிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவனுடைய சட்டையின் கிழிந்த




துண்டு காற்றிலே படபடத்துக் கொண்டிருப்பதும் தெரிந்தது. அதைத் தைத்துக் கொடுக்காமல் விட்டதற்காக என் மனம் வேதனைப்பட்டது. குறைந்தது இன்று மாலை வரைக்குமாவது தோள் தெரியும்படி அவன் திரிய வேண்டியிருக்கும்....

★★

முதலுதவி நிலையத்தில் நாங்கள் அதிகம் பேர் இல்லை.. தண்ணீர் எடுப்பது, உணவு தயாரிப்பது போன்ற சில்லறை தேவைகளுக்காகக் கிராமத்திலிருந்து சில பெண்கள் கூட்டி வரப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தியாய் அந்த இளம் மணப் பெண்ணும்... என்னைக் கண்டதும் முன்னைப் போலவே உதடுகள் மூடிய படி புன்னகை செய்தாள். அடிக்கடி என்னைப் பார்த்தாள். அப்படிப் பார்த்த போதெல்லாம் வேறு யாரையோ தேடுவது போல அவள் பார்வை இருந்தது. கடைசியில் கேட்டாள்;

'அந்தத் தோழன் எங்கே போய் விட்டான்?'

'அவன் போர்முனைத் தலைமையகத்துக்குப் போய் விட்டான்' என்று நான் சொன்னவுடன்; மெத்தை கேட்டு வந்த போது, அவனை உபசரிக்காமல் நான் மோசமாக நடந்துவிட்டேன்' என்று அதற்காக வெட்கப்படுபவள் போலக் கூறினாள்.

ஏற்கனவே கதவுகளாலும் மேசைகளை ஒன்றாக அடுக்கி வைப்பதனாலும் தயாரிக்கப்பட்டிருந்த கட்டில்களில், மெத்தைகளை நேர்த்தியாக விரித்து நோயாளிகளுக்கான படுக்கைகளைத் தயார் செய்வதில் அந்தப் புது மணப் பெண் ஈடுபட்டாள்.

வெளித் தாழ்வாரத்தின் ஒரு மூலையிலிருந்த படுக்கையில் அவளுடைய அழகான மெத்தையும் போடப்பட்டிருந்தது.

மாலை சாய்ந்ததும் முழுநிலவு வானத்தில் எழுந்தது. தாக்குதல் இன்னமும் ஆரம்பிக்கவில்லை.

குறிக்கோள் எதுவுமற்ற குண்டு வீச்சுக்களும் எதிரியின் பக்கம் இருந்து ஆரம்பமாகின. அதன் காரணமாக, ஒன்றன்பின் ஒன்றாக வானில் தோன்றிய தீச்சுடர்கள் – மெழுகு விளக்குகள் போலத் தோன்றி இரவைப் பகலாக்கிக்கொண்டிருந்தன.

இத்தகைய சூழ்நிலையில் எதிரி மீது தாக்குதலை ஆரம்பிப்பது என்பது மிகவும் சிரமமாகவும், பாரதூரமான இழப்புக்களை ஏற்படுத்துவதுமாகவே இருக்கும். இதை எண்ணிய போது, அந்தப் பால் நிலவின் மீது கூட எனக்குக் கடுங்கோபம் ஏற்பட்டது.

எமக்கு உணவும், வீடொன்றில் தயாரிக்கப்பட்ட 'நிலவுக் கேக்'கும் கொண்டுவரப்பட்டன. அன்று முழு நிலவுக் கொண்டாட்டம் என்பது மனதில் தோன்ற, எனக்கு வீட்டு ஞாபகம் வந்தது.

எங்களுடைய ஊரில், முழுநிலவு நாட்களில், ஒவ்வொரு வீட்டின் வாசல்கதவுக்கு வெளியிலும் ஒரு மூங்கில் மேசையில் வாசனைத் திரவியங்களுடன் மெழுகுதிரியும் கொளுத்தப்பட்டு, பழங்களும், நிலவு கேக்கும், வேறு உணவு வகைகளும் வைக்கப்பட்டிருக்கும். வாசனைத் திரவியம் எரிந்து முடிந்தவுடன் ,நிலவுத் தேவதைக்கென தயாரிக்கப்படும் அந்தக் 'கேக்' எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும். 'கேக்' சாப்பிடும் ஆவலில், மேசையைச் சுற்றிநிற்கும் சிறுவர்கள் வாசனைப்புகை எரிந்து முடியும் நேரத்திற்காகப் பொறுமையின்றிக் காத்திருப்பார்கள்.

'நிலவுத் தாயே.... எங்கள் மீது உனது ஒளியைக் கருணையோடு படரவிடு' என்று மேசையைச் சுற்றி நின்று பாடுவார்கள்.

எங்கள் ஊர், ரியான்முஷானிலே தந்தையுடன் உதவியாக அன்று மூங்கில் இழுத்து இன்று போர் முனையில் நின்றுகொண்டிருக்கும் அந்தச்

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுவனை நோக்கி எனது எண்ணங்கள் தாவுகின்றன. சில வருடங்களுக்கு முன்னால் இவனும் இப்படித்தான் மேசையருகில் நின்று கேக்கை ருசி பார்க்கும் நேரத்தை எதிர்பார்த்த படியே அவசரமாய் நிலாப் பாட்டைப் பாடியிருப்பான்.

ஒரு துண்டுக் கேக்கை எடுத்து வாயில் போடுகிறேன். மீண்டும் அந்தச் சிறுவனிடமே எனது எண்ணங்கள் தாவுகின்றன. இந்த நேரம் அவன் என்ன செய்துகொண்டிருப்பான்? படையணித் தலைமையகத்தில் நின்று கொண்டிருப்பான், அல்லது அல்லது நீண்டு செல்லுகின்ற பதுங்குகுழி ஒன்றில் நடந்துகொண்டிருப்பான் அல்லது கிடங்கு ஒன்றினுள் அமர்ந்திருப்பான்.

★★

சிறிது நேரத்தில் எங்கள் பக்கத்தில் துப்பாக்கிகள் முழங்கின. ரவைகள் தீப்பிழம்புகளாய் வானத்தில் அங்கு மிங்கும் பறந்துகொண்டிருப்பது தெரிந்தது.

தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது. சில நேரங்களுக்குள்ளேயே எங்கள் முதலுதவி நிலையம் சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கிவிட்டது. காயமடைந்தவர்கள் கொண்டுவரப்பட்டார்கள். காயமடைந்தவர்களின் பெயர்களையும், பிரிவுகளையும் நான் பதிவுசெய்து வைத்துக்கொண்டேன். படுகாயமடைந்து மயக்க நிலையில் கிடந்தவர்களின் விபரத்தை, அவர்களுடைய உடைகளில் காணப்பட்ட பட்டியல்களின் மூலம் பெற்றுக் கொண்டேன்.

படுகாயமடைந்த ஒருவனுடைய விபரங்கள் எடுப்பதற்காக அவனுடைய பட்டியலைப் பார்த்தபோது, 'Messenger' (தொடர்பாளன்) என அதில் காணப்பட்ட எழுத்துக்களால் எனது இதயம் ஒருகணம் துடிப்பை மறந்தது.

'அவனாக இருக்குமோ....?'

இல்லை.... அவனில்லை... இவன் ஒரு படைப்பிரிவின் தொடர்பாளன். அவன் – எனது சிறுவன் – படையணித் தலைமையகத்தின் தொடர்பாளன்.

தாக்குதல் ஆரம்பமாகி ஒருமணி நேரத்துக்கு மேலாகிவிட்டது. அவ்வப்போது காயமடைந்து வந்தவர்களிடம் விசாரித்தபோது, எங்கள் தரப்பில் முதலாவது தடைவேலி, அதன்பிறகு முட்கம்பித் தடை, என்பவற்றை எமது படைகள் தாண்டி, அதற்கப்பால்




முதல் இருந்த காவலரணையும் கைப்பற்றிய பின், வீதிகளில் போர் நடந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதன் பிறகு, போர் நிலைமைகளின் முன்னேற்றம் பற்றிய செய்தி எதுவுமே கிடைக்கவில்லை.

'தொடர்ந்தும் போர் நடந்துகொண்டிருக்கிறது' என்றோ, 'வீதிகளில் போர் நடக்கிறது' என்றோதான் செய்திகள் கிடைத்தன.

ஆனால், காயம்பட்டு வந்தவர்களின் உடல்களை மூடியிருந்த சேறும் சேற்றிலிருந்து கிண்டியெடுக்கப்பட்டவை போன்ற தோற்றத்துடன் காணப்பட்ட 'ஸ்ட்ரெச்சர்'களும் (Stretcher) போரின் தீவிரத்தன்மையை எமக்கு உணர்த்தின. விரைவில், 'ஸ்ட்ரெச்சர்கள்' பற்றாமல் போயின. இதனால் படுகாயமடைந்தவர்களை உடனுக்குடன் மருத்துவமனைக்கு அனுப்ப முடியவில்லை.

காயமடைந்தவர்களின் முகம், கைகள் என்பவற்றைக் கழுவச் செய்து குடிக்க முடிந்தவர்களுக்கு சிறிது சூப் கொடுத்து, சிலருக்கு உடைகள் மாற்றச் செய்து, இவற்றைத் தவிர அவர்களுடைய வலியைக் குறைப்பதற்கு என்னால் வேறெதுவுமே செய்யமுடியவில்லை.

சில நோயாளிகளுக்கு, உடைகளை முற்றாகக் களைந்து, பெருகும் இரத்தத்தைக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டியிருந்தது. ஏற்கனவே பழக்கப்பட்டுவிட்டதனால் இந்தப் பணி எனக்கு வித்தியாசமாகத் தெரியவில்லை. ஆனால், உதவிக்கு நின்றிருந்த கிராமத்துப் பெண்கள் இவ்வாறு செய்வதற்குக் கூச்சப்பட்டார்கள். தாங்கள் சமையல் வேலைகளையே செய்வதாகக் கூறிவிட்டார்கள். அரும்பாடுபட்டு, அந்தப் புதுமணப் பெண்ணை, என்னுடன் நின்று பணிபுரிவதற்குச் சம்மதிக்க வைத்தேன்.

போர்முனையில் வெடிச்சத்தங்கள் ஒழுங்கற்றுக் கேட்டுக்கொண்டிருந்தன. விரைவில் பொழுது விடிந்து விடும் என எண்ணிக்கொண்டு நேரத்தைப் பார்த்தேன். அது நள்ளிரவு. சந்திரன் பிரகாசமாய், வழமையை விட உயரத்தில் தெரிந்தான். தொடர்ந்து, மிக மோசமாகக் காயமடைந்த ஒருவன் கொண்டுவரப்பட்டபோது ஏற்கனவே உள்ள படுக்கைகள் நிரம்பியிருந்ததால் வெளித்தாழ்வாரத்தில் ஒரு படுக்கையில் அவனை விட வேண்டியேற்பட்டது.

அவனைப் படுக்கையில் கிடத்திய பின்னரும் அவனைத் தூக்கி வந்தவர்கள் திரும்பிச் செல்லாமல் அங்கேயே குழுமி நின்றார்கள். அவர்களில் சற்று வயது முதிர்ந்த ஒருவன் என்னை மருத்துவர் என எண்ணியிருக்க வேண்டும்....

ஆவலுடன், "டொக்டர்.... எப்படியாவது இவனுடைய உயிரைக் காப்பாற்றுங்கள்... உங்களுக்கு ஒரு செங்கொடி பரிசாகத் தருவோம்..." என்று எனது கைகளைப் பிடித்தபடி கூறினான்.

அவனைக் குணப்படுத்தும் வழிவகை நிச்சயமாய் என்னிடம்தான் இருப்பது போல, வந்திருந்த மற்றவர்களும் கண்களை அகலவிரித்து என்னையே பார்த்தபடி நின்றார்கள்.

நான் அவர்களுக்குப் பதில்கூற முற்பட்ட சமயம், கையில் தண்ணீருடன் அங்கு வந்த புதுமணப் பெண், ஸ்ட்ரெச்சரில் கிடந்தவனைக் கண்டு வீரிட்டு அலறினாள். மற்றவர்களை விலக்கிக் கொண்டு அப்போதுதான் நானும் பார்த்தேன்.

அவன்.... அந்தச் சிறுவன்.

கபடமற்ற, அவனுடைய சிவந்த வட்டமான முகம், இப்போ வெளிறிப் போய்க் கிடந்தது. கண்கள் அமைதியாய் மூடிக்கிடந்தன. அவனுடைய கிழிந்த சட்டை இப்போதுகூடத் தொங்கிக்கொண்டிருந்தது.

"அவன் எங்கள் உயிரைக் காப்பாற்றவே இதைச் செய்தான்" என்று பச்சாதாபத்தோடு கூறிய முதியவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்தும் கூறினார்.

"முன்னேறிப் போவதற்காக நாங்கள் பத்துப் பேர் ஒரு ஒழுங்கையில் நின்றிருந்தபோது, இவன் எமக்குப் பின்னால் நின்றான். அதே நேரம், எதிரிகள் சிலர் கூரை ஒன்றின் மேலிருந்து வீசிய கைக்குண்டு எம்மை நோக்கிப் புகைந்தபடி வந்தது. "குப்புற வீழ்ந்து படுங்கள்" என எங்களிடம் உரத்துக் கூறியவாறே அவன் அந்தக் கைக்குண்டைத் தன்னோடு சேர்த்தபடி குப்புற விழுந்தான்....."

மணப்பெண், பொங்கிவந்த அழுகையை அடக்குவதற்காக மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட்டாள்.

எனது கண்களில் நிறைந்த நீரை அவர்கள் காணாதவாறு மறைத்துக் கொண்டு, அவர்களை அனுப்பிவிட்டு நான் திரும்பியபோது, விளக்கு ஒன்றைக் கொளுத்தி வைத்துவிட்டு அவள் – மணப்பெண் – அவனுடைய மேற்சட்டையைக் கழற்றிவிட்டு உடலை மெதுவாகத் துடைத்துவிட்டுக்கொண்டிருந்தாள்.

நெடிய தோற்றமுடைய அந்தச் சின்னஞ்சிறுவன் பேச்சு மூச்சற்றுக் கிடந்தான். நான் மருத்துவரை அழைத்துவர ஓடினேன். அவனுக்கு ஊசி போடுவதற்காக மருத்துவருடன் நான் திரும்பியபோது, அவள், சிறுவனருகில் அமர்ந்தபடி அவனது சீருடையின் கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்தாள்.

ஸ்டெதஸ்கோப்பை வைத்துப் பரிசோதித்த மருத்துவர் ஆழ்ந்த பாவனையோடு நிமிர்ந்து: "நாங்கள் செய்




யக்கூடியது எதுவுமில்லை" என்று கூறினார்.

அருகில் பேர்ய்ச் சிறுவனுடைய கைகளைத் தொட்டுப் பார்த்தேன். அவை விறைத்துப் போய்க் கிடந்தன. இவை எதையுமே கண்டதாகவோ, கேட்டதாகவோ இல்லாதவள் போல அந்தப் பெண், தொடர்ந்தும் ஒவ்வொரு தையலாகத் தைத்துக்கொண்டேயிருந்தாள். அவள் அப்படியிருப்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. 'தைக்க வேண்டாம்' என அவளிடம் மெதுவாகக் கூறினேன். நிமிர்ந்து என்னை ஆச்சரியமாய்ப் பார்த்தவள், மீண்டும் மௌனமாய் – ஒவ்வொரு இழையாகத் தையல் வேலையைத் தொடர்ந்தாள். அவளை அந்த நிலையிலிருந்து மீட்க, சந்தோஷமற்ற அந்தச் சூழ்நிலையக் கலைத்து விட, அந்தச் சிறுவன், எழுந்திருந்து வெட்கத்துடன் சிரிக்கும் காட்சியைப் பார்க்கவேண்டும் என.... இவை எல்லாவற்றுக்காகவும் என் மனம் ஏங்கியது. எனக்கென அவன் தந்து சென்ற பழைய பணிஸ் இன்னமும் என் சட்டைப்பையில் பத்திரமாய் இருந்தது.

உதவியாளர்கள் சவப்பெட்டியுடன் வந்து, முதலில் அவனைக் கிடத்தியிருந்த மெத்தையை அகற்றினார்கள்.

மணப்பெண்ணுடைய முகம் திடீரெனப் பேயறைந்தது போல ஆயிற்று. வெடுக்கென மெத்தையைப் பறித்தவள், அதன் பாதியைப் பெட்டியின் அடிப்பாகத்தில் விரித்து மீதியை அவனது உடலை மூடிக்கொள்ளக் கூடியதாய் வைத்துக் கொண்டாள்.

"இந்த மெத்தை கிராமத்து மக்களில் யாரோ ஒருத்தருடையது" என ஒருவன் சொன்னான்.

"அது என்னுடையது" என்று கூறிவிட்டு மறுபுறம் திரும்பிக் கொண்டாள். கண்களில் திரண்டிருந்த கண்ணீர் நிலவின் ஒளியில் பளபளத்தது.

தூய்மையான உள்ளத்துக்கும் அன்புக்கும் அடையாளமான வெள்ளை லில்லி மலர்கள் பொறிக்கப்பட்ட அந்தச் சிவப்பு மெத்தையால் சிறுவனுடைய முகத்தை அவர்கள் மூடுவதைப் பார்த்தபடியே நான் நின்றேன்.

"இன்றைய நவீன ஆயுதங்களுடன் ஆண்டுதோறும் 4000 பில்லியன் ரூபாய்களை போர்ச் செலவுக்காக ஒதுக்கிக்கொண்டு, இலங்கை அரசு, புலிகளை எதிர்கொள்கின்றது. எனினும் வெற்றியொன்று அருகில் இல்லை.

...எல்.ரி.ரி.ஈ. அமைப்பு இன்று உலகெங்கிலும் பிரபல்யமான வெற்றிகரமான கெரில்லா அமைப்பாக உரிமை பெற்றுள்ளது. அவர்களின் அரசியல் பிரிவின் மூலம் தமிழ் மக்கள், திட்டமிட்ட ரீதியில் அறிவூட்டப்பட்டுள்ளனர். ஈழதேசமொன்றின் உரிமை தொடர்பான சித்திரமொன்றினால் அவர்களின் மனம் களிப்பூட்டப்பட்டுள்ளது.



யுத்த முனையில் நூற்றுக்கணக்கானோர் இறந்துபோகும்போது, மேன்மேலும் சிறார்களைக்கூட இயக்கத்தில் சேர்த்துக்கண்டு, தமது பலத்தை புலிகளால் அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருப்பதுகூட அதனால்தான்."

சிறிபால கந்துமுல்ல ('திவயின' சிங்கள ஏட்டில்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித உரிமைக்குரலுக்கான உதவி

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சர்வதேச அரங்கில் ஒரு பயங்கரவாத இயக்கமாகக் காட்ட முனையும் அதேவேளை, சிறீலங்கா அரசினால் மனித உரிமைகள் பேணப் படுவதாகவும் தமிழ் மக்கள் இராணுவத்தின் பாதுகாப்பில் சுதந்திரமாக வாழ்கின்றனர் எனவும் காட்டிக் கொள்வதில் சந்திரிகா அரசாங்கம் தீவிரமான கவனம் செலுத்துகின்றது. இதன் காரணமாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது போன்ற அறிவிப்புக்களையும் அடிக்கடி வெளியிட்டு வருகின்றது. ஆனால் மறுபுறம் சிறீலங்கா இராணுவம் மேற்கொள்ளும் மனித உரிமைகள் குறித்து அதில் திகிலூட்டும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இந்த மனித உரிமை மீறல்கள் குறித்து அரச சார்புடைய சில மனித உரிமை அமைப்புக்கள் மௌனம் சாதிக்கும் போது சில கொடூரங்கள் படிப்படியாக வெளிவந்த வண்ணமே உள்ளன. ஆனால் இவை தனியாக வடக்கு கிழக்கில் மட்டும்தான் இடம் பெறுபவை அல்ல. சிலசமயம் வடக்கு கிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கும் தெற்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கும் இடையில் சில வகையில் குரூரங்கள், சித்திரவதை என்பவற்றில் வேறுபாடு இருக்கலாம். ஆயினும் இரண்டு பகுதிகளிலும் தமிழ் மக்களின் மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதே உண்மை நிலையாகும். எடுத்துக்காட்டாகக் கூறுவதானால் வடக்கிலும் கிழக்கிலும் மனித உரிமை மீறல்கள் என்பன பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள் என்பன வரை சம்பந்தப்பட்டவையாக உள்ளன. அதாவது மாணவி கிருசாந்தி விவகாரம் போன்றவையாக இருக்கின்றன. இதே சமயம் தெற்கிலோ அவை கைதுகள், சித்திரவதைகள் என்ற ரீதியில் பெரும்பாலும் அமைகின்றன. ஆனால் அங்கும் பாலியல் வல்லுறவுகளோ அன்றிப் படுகொலைகளோ இடம்பெறமுடியாது என்று கூறிவிடமுடியாது. ஆனால் தெற்குப்பகுதியில் மனித உரிமைகளைச் சுட்டிக்காட்ட முனைவது சிறீலங்கா அரசு மனித உரிமைகளை மீறுகின்றது என்பதைக் கூறுவதற்கு என்பதற்காகவல்ல. ஏனெனில் சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் ஒரு புதிய விடயமோ அன்றி ஆச்சரியப்படத்தக்க விடயமோ அல்ல. இனவாதச் சிந்தனையில் ஆட்சி நடாத்தும் சிங்கள ஆட்சியாளர்களிடம் இதைவிட தமிழ்மக்கள் எதிர்பார்ப்பதற்கு எதுவும் இருப்பதாகவும் இல்லை. இந்த நிலையில் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்ட முனைவது சிறீலங்கா அரசின் மனித உரிமை குறித்து பிரச்சாரத்தை செவிமடுப்பவர்களுக்கும் அதன் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்குமே ஆகும். ஏனெனில் இவர்கள் சிறீலங்காவுக்குப் புரியும் உதவிகள் யாவும் மனித உரிமைகள் பேணப்படுகின்றன என்பதன் அடிப்படையிலேயே ஆகும். இதே சமயம் இவர்கள் தமிழ் மக்கள் தரப்பு நியாயங்களை ஏற்றுக் கொள்ளவும் தயங்குகின்றனர்.

ஆனால் அண்மையில் டென்மார்க்கில் இருந்து நாடுகடத்தப்பட்ட கோப்பாயைச் சேர்ந்த சித்திரா ராஜேந்திரன் விவகாரம் தமிழர் தரப்பு நியாயங்களை மேற்குலகம் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவக் கூடும். அதாவது டென்மார்க்கில் அரசியல் அடைக்கலம் கோரிய சித்திராவை டென்மார்க் நாடு கடத்தியமையானது சிறீலங்காவில் அவரது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்ற அடிப்படையிலேயே அமைந்தது. இருப்பினும் தற்போது சித்திரா கைது செய்யப்பட்டமையானது சிறீலங்காவில் அவரது பாதுகாப்பு குறித்துக் கேள்வியை எழுப்பியுள்ளது. அத்தோடு அவர் தொடர்பாக விடயங்களைச் சேகரிக்க வந்த டென்மார்க் பத்திரிகையாளர்களையும் கைது செய்து சிறீலங்கா நாடு கடத்தியமை இந்த விவகாரத்தில் சிறீலங்காவின் கடும் போக்கை வெளிக்காட்டுவதாக உள்ளது. இதேவேளை வெளிநாடுகளில் இருந்து நாடுகடத்தப்படும் ஒருவர் கைதுசெய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் இதுதான் முதல் தடவையும் அல்ல. இருப்பினும் இவ்வாறான சம்பவங்கள் எவையும் இவர்களை நாடுகடத்திய அரசுகள் கருத்தில் கொள்வதில்லை. ஆகையினால் சித்திரா விவகாரமும் மேற்குலகில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது தான். ஆனால் எதிர்பார்க்கப்படுவது என்னவெனில் சிறீலங்கா அரசுக்கு உதவும் நாடுகள் இன்னும் மனித உரிமைகள் பேணப்படுகின்றன என்ற அடிப்படையில் சிறீலங்காவுக்கு உதவுவது தவறானது என்பதினாலேயே ஆகும். ஏனெனில் அவை ஒரு போதும் மனித உரிமைகள் பேணப்பட உதவமாட்டாது. மனித உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கவே உதவும்.

★★

# ஒரு பௌத்தனின் தலைகுனிவு

'வடக்கில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வன்முறைக்கு எதிரான பௌத்த மதத்தவர் என்ற ரீதியில் நான் வெட்கித் தலை குனிகின்றேன்' இவ்வாறு தெரிவிக்கின்றார் பத்தேகம சாமித்த தேரோ. இந்த உணர்வானது ஒரு உண்மையான பௌத்தனுக்கு இருப்பது நியாயமானதே. இந்த பௌத்தன் ஒரு தேரோவாகவும் இருக்கலாம் ஒரு சாதாரண நபராகவும் கூட இருக்கலாம். ஏனெனில் பௌத்த மதத்தைப் போதித்தவரான கௌதம புத்தர் மக்கள் படும் இன்னல்கள் துயரங்களைத் சகிக்க முடியாத நிலையிலேயே துறவறம் பூண வேண்டிய நிலையும் மக்கள் அத்துன்பங்களில் இருந்து விடுபடுவதற்குமான வழிமுறைகளைப் போதிக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. அத்தோடு மனிதர்களை துன்பத்துக்கும் துயருக்கும் உள்ளாக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து துன்பப்படுவதும் இந்த மனித உரிமை மீறல்களை பௌத்தர்கள் இளைப்பதினால் வெட்கித் தலை குனிவதும் நியாயமானதே. ஏனெனில் பௌத்தர்கள் என்ற ரீதியில் இவ்வாறான நடவடிக்கைகள் பௌத்தத்தையே கேவலப்படுத்துவது போன்றதாகும். ஆனால் இவற்றை தலை குனிவு என்று நினைப்பதற்கு எத்தனை பௌத்த குருமார்கள் இருக்கின்றார்கள்? எத்தனை பௌத்த மக்கள் இருக்கின்றார்கள்? ஒட்டுமொத்தமாக சகலரும் பௌத்த போதனையை முழுமையாக மனம் கொள்ளாதவர்கள் என்று கூற முடியாது விட்டாலும் அனேகர் போதனைகள் கடைப்பிடிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேச்சுக்கு முரணான அரசின் செயல்

விமானப் படைக்கும் கடற் படைக்கும் என பெருஞ் செலவில் போர்த் தளபாடங்களை கொள்வனவு செய்யும் முயற்சியில் சிறீலங்கா அரசு இறங்கியுள்ளது. இதில் நவீன போர் விமானங்கள் கடற்படைப் போர்க் கப்பல்கள் என்பன முதன்மையாக இருக்கின்றன எனவும் இராணுவ வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு புறம் சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் **ஜெனரல் அநுருத்த ரத்வத்தையும், இராணுவத் தளபதி லெப். கேணல் றொகான் தளுவத்தவும் போர் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் புலிகள் நகர்களில் இருந்து விரட்டப்பட்டு விடுவார்கள், போராடும் சக்தியை இழந்துவிட்டார்கள்** எனவும் பேசி வருகிறார்கள். மறுபுறம் ஜனாதிபதி சந்திரிகாவோ இவ்வாண்டிற்கு மட்டுமல்ல அடுத்த ஆண்டிற்குமான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஆகையினால் புதிய ஆயுதத் தளபாடங்களுக்கு இராணுவத்துக்குத் தேவையான செலவீடு அடுத்த ஆண்டில் குறைக்கப்படும் எனப் பேசி வருகிறார். இவ்வாறாக சிறீலங்கா அரசின் தலைமையும் இராணுவத் தலைமையும் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டார்கள் எனக்கூறிக் கொள்கின்றனர். இதற்கு யாழ் நகர் கைப்பற்றப்பட்டதையும், கிளிநொச்சி நகர் கைப்பற்றப்பட்டதையும் ஆதாரமாகக் கொண்டு பிரச்சாரம் செய்கின்றனர்.

ஆனால் மறுபுறத்தில் பெரும் செலவினதான போர்த் தளபாடங்களை வாங்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. தற்போது கிடைக்கும் தகவல்களின்படி பார்த்தால் சிறீலங்கா வான்படைக்கும், கடற்படைக்கும், தற்பொழுது உள்ள ஆயுதத் தளபாடங்களை மேலதிகமாக்கும் நடவடிக்கை நடைபெறுகிறது. இந்த இராணுவ தளபாடங்கள் முன்னையதை விட நவீனப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும் என எதிர்பார்க்கலாம். அத்தோடு இராணுவத்திற்கென ஆட்சேர்ப்பு நடவடிக்கையிலும் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. இம் முயற்சியில் சந்திரிகா பெரும் அக்கறை காட்டுவதாக இருக்கிறது. இராணுவத்தின் 47–வது ஆண்டு நினைவுதின வைபவத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா பெரிதாக இராணுவத்தினரை உயர்த்திப் பேசியுள்ளமை சிறப்பு உதாரணம் ஆகும்.

போர் முனையில் இராணுவத்தின் கை ஓங்கியிருப்பின் இவ்வாறான ஆட் சேர்ப்பு, ஆயுதக் குவிப்பு நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருக்க வேண்டிய தேவை எழுந்திருக்காது. அதற்கு வேண்டிய அவசியம் உருவாகியிருக்க மாட்டாது என்பது மட்டுமல்ல சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பெரும் பிரச்சாரத்தில் அரசாங்கம் முனைப்பட வேண்டிய தேவையும் எழுந்திருக்க மாட்டாது. அதாவது ஏதோ ஒரு வகையில் பிரச்சினையைச் சர்வதேச மயமாக்க வேண்டிய தேவை அரசுக்கு எழுந்திருக்க மாட்டாது. இந்த நிலையானது சந்திரிகா அரசின் பேச்சுக்கும் செயற்பாட்டிற்கும் இடையில் உள்ள வேறுபாடு வடக்கு கிழக்குப் போர் முனையில் தள நிலவரத்தையும் வெளிக்காட்டுவதற்கு சிறப்பான ஒரு எடுத்துக் காட்டாகும்.

அதாவது களநிலை, அரசு கூறுவது போன்று அரசுக்குச் சாதகமாக இல்லை என்பதும் போரை முடிவுக்கு கொண்டுவரும் அரசுக்கு யோசனை தற்போது இல்லை என்பதும் தெளிவான விடயமாகும்.

★★

---

பவர்களாக இல்லை என்றே நிச்சயமாகக் கூறமுடியும். இவ்வாறு இல்லாது விட்டால் இலங்கையில் பெருமளவு இரத்தம் சிந்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது. இனக்கலவரங்கள் நடத்தப்பட்டிருக்க மாட்டாது. வெற்றிபெற முடியாது என்ற நிலையில் கூட பெருந்தொகையை செலவிட்டும், பல உயிர்களைப் பறிகொடுத்தும் தொடர்ந்து யுத்தத்தை நடாத்தும் சிந்தனை ஏற்பட்டிருக்க மாட்டாது.

மாறாக இன்று இனங்களுக்கிடையில் தொடர்ந்து யுத்தம் இடம் பெறுவதற்கு பௌத்தமே பிரதான காரணமாகும். ஏனெனில் அரசியல்வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றப் பாவிக்கும் பிரதான சக்தியில் ஒன்றாக இவை உள்ளமையே ஆகும். அதாவது ஆட்சி பீடம் ஏறுகின்றவர்களுக்கு பௌத்த பீடங்களில் உள்ளவர்களின் ஆசிர்வாதம் அவசியம் தேவையாக உள்ளது. இந்த நிலையில் பௌத்தத்தின் பாதுகாவலர் என தம்மைப் பிரகடனப் படுத்திக் கொள்ளும் பௌத்த பீடங்களினால் பௌத்த கோட்பாடுகளுக்கு எதிர்மாறான செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. இதை இவர்களினால் பௌத்தத்திற்கு ஏற்பட்ட தலைகுனிவு ஒன்று என்றே கூறுதல் வேண்டும். இதைத் தவிர தம்மைப் பௌத்தர்கள் எனக் கூறிக்கொள்ளும் பெரும்பான்மை மக்களும் பௌத்த கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதாக இல்லை. தமது செயல்களுக்கு வருந்துவதாக இல்லை. அரசியல்வாதிகளும் பௌத்த பீடங்களும் திட்டமிட்டு உருவாக்கும் இனக்கலவரங்களையும் வன்முறைகளையும் செய்து முடிப்பவர்களாக இவர்களே உள்ளனர். இந்த வகையில் பௌத்த பீடங்கள், அரசியல்வாதிகள், தலைவர்கள் ஆகியோர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பௌத்தத்தின் பெயரால் மட்டுமல்ல மனிதத்துவத்தின் பெயராலும் மிகவும் மோசமானவையாகும். ஏனெனில் அங்கு பௌத்தம் மட்டும் கொல்லப்படவில்லை. மனிதத்துவமும் கொல்லப்படுகின்றது. ஆகையினால் ஒரு உண்மையான பௌத்தத்திற்கு வடக்கு கிழக்கில் ஒரு பௌத்த அரசு மேற்கொள்ளும் செயல்கள் கஸ்டத்தையும் தலைகுனிவையும் ஏற்படுத்துவது ஆச்சரியமானது அல்ல. ஆனால் தனியாக ஒரு பிக்கு இதனை தலைகுனிவாக கருதுவதனால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடப் போவதில்லை. ஒட்டுமொத்தமாக பௌத்த பீடங்களைச் சேர்ந்தவர்களில் இருந்து பௌத்த மக்கள் வரை இதையொரு தலைகுனிவாக கருதும் போதே இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்பதோடு பௌத்தர்களும் தலை நிமிரமுடியும்.

★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முடிவு அல்லது தொடக்கம்

**சீனக்கவி பீதாவோ**
**தமிழில்: அஸ்வமேதா**



இங்கே நான் எழுந்து நிற்கிறேன்
ஒருவருக்கு மாற்றாக, கொலைசெய்யப்பட்ட
தோழனுக்கு மாற்றாக
ஒவ்வொரு முறையும் சூரியன் உதிக்கும்போது
நிலத்தை விலக்கிப் போகும்
ஒரு பாதையைப்போல
ஒரு கனத்த நிழல் கடந்து போகிறது.

ஒவ்வொரு வீட்டுக்கும் அடுத்த வீட்டுக்கும்
இடையில்
சரியாகப் பூச்சு பூசப்படாத கூரைகளைத்தழுவி
பனிமூட்டும் மூடுகிறது
சிம்னிகள் புகை மண்டலத்தை ஊதுகிறது
மரங்கள் வெம்மையாகின்றன
சோர்வுற்ற ஒவ்வொரு கைநுனியினின்றும்
சிகரட் துண்டுகளினின்றும்
கறுத்த புகை மேலெழுகிறது

சூரியனின் பெயரால்
இருள் வெடித்துக் கொண்டெழுகிறது
இன்னும் மயான அமைதி தான்
கிழக்கின் கதையாக இருக்கிறது
முதிர்ந்தவர்கள் என்றும் மௌனமாகவே
இருந்தவர்கள்
மௌனமாகவே இறந்தவர்கள் முடிந்து போனார்கள்

ஒவ்வொரு கனவிலும் நான்
உனக்காகத் தேடிக் கொண்டிருக்கிறேன்
மூடுபனிபோர்த்திய
ஒவ்வொரு காலையிலும் இரவிலும்
வசந்தத்துக்காவும் ஆப்பிள் மரப்பூப்புக்காவும்
நான் காத்திருக்கிறேன்
தேனீக்கள் கொணரும் மெலிதான காற்றில்
கடற்கரையில் நான் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்
அலைகளில் தோன்றிய சூரியவெளிச்சத்தில்
புயற்பறவைகள் எழுகின்றன
அவர்களில் உள்ளெழும்பிய கதைகளை நான்
பார்க்கிறேன்
உனது மறந்தபெயரையும் எனது பெயரையும்

புதிய இரத்தம் உயிர்ப்புப் பெறுமெனில்
நாளைய கிளைகளில் கனியும் கனிகளில்
என் நிறம் தெரியும்.

இங்கே நான் எழுந்து நிற்கிறேன்
கொலைசெய்யப்பட்ட தோழனுக்கு மாற்றாக
எனக்கு தேர்வதற்கு வேறேதுவுமில்லை
இது தான் வழி
நான் எங்கு வீழ்கிறேனோ
அங்கே மற்றொரு தோழன் எழுவான்
காற்று என் தோளில் அமரும்
நட்சத்திரங்கள் காற்றில் ஒளிரும்

சரணடையாமல் போர் புரியும்
போராளிகளின்
எண்ணற்று போகும் கல்லறைத் தோட்டத்தில்
ஒருநாளில்
சூரியன் உதிரும் மாலையாகக் கூட ஆகும்
கறுப்புக் காக்கைகளின் கூட்டம் துக்கத்தில் மக்கள் திரள்போல்
அரற்றிக் கொண்டு அழுது குழுமவும் கூடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறீலங்கா இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை:

# புதிய நெருக்கடி



ஆட்சேர்ப்பு விளம்பரம்

'நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரவாத நிலையை ஒழித்துக் கட்டுவதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டும். பயங்கரவாதத்தை ஒழிப்பது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு முன்னோடி அம்சமாகிவிட்டது. யுத்தத்திற்கு செலவிடப்படும் பெருந் தொகைப் பணம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் உத்தியோக வாய்ப்புக்களையும் மந்தமடையச் செய்கின்றது.' அமைச்சர் ரத்வத்த சிங்கள இளைஞர்களுக்கு இவ்வாறனதொரு கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

சிங்கள இளைஞர்களை நோக்கி அவர் மட்டுமல்ல பாடசாலை அதிபர்களும், பௌத்த பிக்குகளும், சிங்கள அரசியல்வாதிகளும், இராணுவ உயர் அதிகாரிகளும், முப்படைத் தளபதியும் ஜனாதிபதியுமான சந்திரிகாவும் இவ்வாறானதொரு அறைகூவலையே விடுத்து வருகின்றனர்.

சந்திரிகாவின் சமாதான நாட்டம் என்பது விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்துவது, அல்லது தமிழ் மக்களை அழித்தொழிப்பது என்பதுதான். உலகத்தின் முன் தமிழர்கள் பயங்கரவாதிகள் தான் என அவர் நிரூபித்துக் கொண்டு அத்தகையதொரு இன அழிப்பு நடவடிக்கையை திட்டமிட்டு தீவிரமாக செயற்படுத்தியும் வருகிறார். அனேகமாக சந்திரிகா, படையினருக்கு தமிழர் மீதான சகல ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும் உத்தர விட்டுள்ளார். சிறிலங்கா இராணுவத்தின் கட்டுமீறிய, காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளும் இன்று உச்சம் பெற்று வருகின்றன. பாலியல் வன்முறைகள் தொடர்கின்றன. அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன. புதைகுழிகள் நீளுகின்றன. மக்கள் அகதிகளாகின்றனர். வீடுகள் உடைக்கப்படுகின்றன. மனித நாகரீகமே வெட்கித் தலை குனிகிறது. உலகில் எங்குமே நடந்திராத மனிதப் படுகொலைகள் தொடர்கின்றன. அதன் எல்லைகள் நீளுகின்றன. சிறிலங்கா அரசாங்கத்தின் பயங்கரவாதத்தை தடுத்து நிறுத்த உலகின் முன் குரல் எழுப்புவது போன்ற தொடர் பிரச்சாரப் போராட்டங்களைத் புலம் பெயர்ந்த தமிழராகிய நாம் தொடரவேண்டும்.

உண்மையை உலகின் முன் கொண்டு வந்து நிறுத்த நாம் கடுமையாக உழைக்க வேண்டும் உயிர் வாழ்தலுக்காகவே நாம் போராடுகிறோம் என்பதை உலக மக்கள் அறிய வேண்டும்.

எமது எத்தனை பெரிய நகரங்களை கிராமங்களை நாங்கள் இழந்து விட்டோம். எமது நகரங்கள் அழுகின்றன. அதன் துயர் தோய்ந்த முகமே எங்களின் கண்களில் நிழலாடுகிறது. வாழ்வின் நகரங்களை, கிராமங்களை இழந்த மக்கள் துடித்துப் போயிருக்கிறார்கள். திகைத்துப் போயிருக்கிறார்கள்.

தமிழர்களது வாழ்க்கை காட்டுக்கு விரட்டப்பட்ட செயலானது உலகின் கண்களில் பயங்கரவாதமாக ஒருநாள் தோன்றாது போகாது.

இன்று அகதிகளாக விரட்டப்பட்ட மக்களும் தஞ்சமடைந்து வாழும் இதய பூமியான வன்னிப் பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதன் மூலமே போராட்டத்தின் ஆணிவேரை அசைத்துவிடலாம் என்ற இலக்கை நோக்கி சிங்கள பௌத்த பேரினவாதம் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறது.

இந்த இதயப் பகுதியைத் தாக்கி அழிக்கதக்க படைபலம் இல்லாமையே இப்போது சந்திரிகாவுக்குள்ள கவலை. இந்தப் பகுதி மீது ஒரு பெரும் போரை நடாத்த நவீன படைக்கலச் சக்திகள் நிறைய இருக்கின்றன. ஆனால் நாட்டைக் காக்க இளைஞர்களாகிய நீங்கள் முன்வரவேண்டும் என்பதே இராணுவ அதிகாரிகளின் அழைப்பும் ஆகும்.

இருளைக் கண்டே 'புலி' என அஞ்சும் நிலையிலேயே படையினர் இருக்கிறார்கள். இது இவ்வாறிருக்க ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் எவ்வாறு வெற்றியீட்டும். ஆனால் சந்திரிகா இராணுவத்தினரைக் கவரும் விதத்தில் புதிய திட்டங்களை தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறார். அதாவது போர்முனையில் உள்ள சிறிலங்காப் படையினருக்கு அரசாங்கம் புதிய சம்பளப் பட்டியல் ஒன்றை அறிவித்துள்ளது. இதன் படி போர்முனைகளில் கடமையாற்றும் படையினரின் மாதாந்தச் சம்பளமாக 11.000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமையாகும். சில வேளைகளில் இந்த சம்பள அறிவிப்புத் திட்டத்தில் அப்பாவி ஏழைச் சிங்கள இளைஞர்கள் பலியாகக் கூடும்.

-வாசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே. ஆர். தேடிய தேட்டம்

1987ம் ஆண்டு யூலை மாதம் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு சில தினங்களின் முன் இரவு 11 மணியளவில் கொம்யூனிச கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டி.யு. குணசேகர வீட்டிற்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனா தொலைபேசி அழைப்பு எடுத்தார். அப்போது குணசேகரா வீட்டில் இல்லை. அரைமணி நேரத்தின் பின் குணசேகரா வீட்டிற்கு வந்ததும் அவரின் மனைவி ஜே. ஆரின் தொலைபேசி அழைப்பு வந்த செய்தியைக் கூறினார். சில நிமிடங்களில் தொலைபேசி மணி மீண்டும் அடித்தது.

குணசேகரா றிசீவரை எடுத்தார். அது ஜே. ஆரின் குரல். தனது மாளிகையில் உடனடியாக தன்னை வந்து சந்திக்குமாறு ஜே. ஆர். கூறினார். இந்த நடுராத்திரியில் அதுவும் உடனடியாக தன்னை வந்து சந்திக்குமாறு ஏன் இந்த மனிதர் அழைக்கின்றார் என குணசேகரா ஆச்சரியம் அடைந்தார். அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அனுராபண்டாராநாயகாவிற்கு குணசேகரா இத்தகவலை உடனடியாகத் தெரிவித்தார். 'பயப்பட வேண்டாம் நீங்கள் ஜே. ஆரிடம் செல்லுங்கள்' என குணசேகராவிற்கு அனுரா கூறினார்.

## ஒப்பந்தம் உருவாகியது

குணசேகராவின் கார் ஜே. ஆரின் இடத்தினை சென்று அடைந்தது. லலித் அத்துலத்முதலி ஓடிவந்து காரின் கதவை திறந்து குணசேகராவை வரவேற்றார். சிறிது நேரத்தில் அனுராவும் அங்கு வந்து சேர்ந்தார். "ராஜிவ் இடம் இருந்து ஒரு 'பக்ஸ்' செய்தி வந்திருக்கிறது; நான் அவருடன் ஒரு ஒப்பந்தத்திற்கு போகப் போகிறேன்" என்று ஜே. ஆர். கூறினார். அப்போது அந்த 'பக்ஸ்' இல் உள்ள சில ராஜதந்திர பதங்களுக்கு பொருள் பார்ப்பதற்காக லலித் ஆங்கில அகராதி ஒன்றை வேகமாகப் புரட்டிக் கொண்டிருந்தார். குணசேகரா ஒப்பந்தத்திற்கு போவதை ஆதரித்தார். தான் ராஜீவிடம் ஒப்பந்தத்திற்கு போவதற்கான செய்தியை பிரேமதாசாவிற்கு ஜே. ஆர். தெரிவித்ததும் பிரேமதாசா சினம் கொண்டு எழுந்து சென்றார். அப்போது நிசங்க விஜயரத்னா அங்கு இருந்தவர்களை பார்த்து கூறினார். 'இனி எங்கடை கதை முடிந்தது. வெண்கலக் கடைக்குள் எருமை புகுந்தது மாதிரி பிரேமா எல்லாவற்றையும் கெடுக்கிறார்'. என்று தற்போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவராக இருக்கும் டி. யு. குணசேகரா ஜே. ஆர். உயிருடன் இருக்கும் போது அண்மையில் வெளியிட்ட தகவல்கள் இவை.



## மறக்க மாட்டோம்

ஒப்பந்தம் கைச்சாத்தான பின் ஒப்பரேசன் பூமாலையின் பின், ராஜீவை முன்னால் வைத்துக்கொண்டு ஜே. ஆர். பத்திரிகையாளர்களுக்கு கூறினார். 'நாங்கள் இதை மன்னிப்போம் ஆனால் மறக்க மாட்டோம்.' என்று. ராஜீவை அவர் முன்னிலையில் பத்திரிகைகளுக்கு அழகாக அவமதித்து அச்சுறுத்தியும் கூறினார். இன்னொரு கட்டத்தில் ஒப்பந்தம் பற்றி ஜே. ஆர். அபிப்பிராயம் தெரிவிக்கையில் தனக்குள்ள இராஜதந்திர இலக்கையும் இராஜதந்திர உள்நோக்கையும் இராஜதந்திர பரிபாசையில் பின்வருமாறு கூறினார்.

'ராஜீவ் கையை நீட்டினார், நான் அவரின் கையைப் பிடித்துக்கொண்டேன்.' ஜே. ஆரின் அரசியல் வாழ்வில் ஏற்பட்ட மிகப்பெரிய நெருக்கடியாகவும், சுதந்திர இலங்கையில் அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட மிகப்பெரிய அரசியல் நெருக்கடியாகவும் அமைந்தது. இந்த ஒப்பந்தமும், இந்த ஒப்பந்தத்திற்கு பின்னணியாக அமைந்தது இன நெருகடியும் அரசியல் சூழலுமாகும்.

## அரசியல் நெருக்கடி

1983 யூலை இனப்படுகொலை, தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதமாகும். 1982 பொதுசன வாக்கெடுப்பில் தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களை ஜே. ஆர். வாங்கி வைத்திருந்தமை போன்றன – ஜே. ஆருக்கு பெரும் அரசியல் அபகீர்த்திகளை ஏற்படுத்தினவேயாயினும் இலங்கை இந்திய ஒப்பந்தம் சம்மந்தப்பட்ட அரசியல்தான் ஜே. ஆரின் 52 ஆண்டுகால அரசியல் வாழ்விற்கு ஏற்பட்ட மிகப் பெரிய அரசியல் நெருக்கடியாகும். இதுவரை எந்தவொரு சிங்கள ஆட்சியாளரும் எதிர்நோக்கியிராத ஒரு நெருக்கடியை ஜே. ஆர். எதிர்நோக்கத் தயாரானார். இந்தியாவை பெரும் பூதம் எனக் காட்டி காலமெல்லாம் சிங்களவர் அஞ்சிக்கொண்டிருந்த பின்னணியில் அந்த பூதத்தை செவியில் பிடிக்க ஜே. ஆர். தன்னை தயாராக்கினார். தனக்கு சவாலாக இருந்த தமிழரை இரையாகக் கொடுத்து தனக்கு அச்சுறுத்தலாக இருந்த இந்தியாவை ஜே. ஆர். தனது தந்திரப் பிடிக்குள் கொண்டு வந்தார். தந்திரம், கயமைத்தனம், கொடூரம் ஆகிய அணிகலன்களை அணிந்து கொண்டு சிரிப்பால் இந்தியாவை எதிர்கொள்ளத் தயாரானார். ஒப்பந்தம் சம்பந்தமான பிரேமதாசவின் நெருக்கடி, கட்சிக்குள் ஏனையோரின் நெருக்கடி, பத்திரிகைகளின் நெருக்கடி எனப் பல நெருக்கடிகள் எழுந்தன. இந்த நெருக்கடிகளை கருவிகளாகக் கொண்டு இந்தியாவை வளைத்துப் பிடிக்க ஜே. ஆர். திட்டம் இட்டார். ஜே. ஆரின் தந்திரங்களின் உயர்வாய் தெரிவது தனக்குப் பெரும் சவாலான இந்தியாவை மடக்கியது தான்.

## சூழலின் கைதி

அதனை இவ்வாறு தான் கையாண்டார். அதாவது தான் சூழலின் கைதி என்று தன்னைப்பற்றி தானே கூறினார். இதில் நெருக்கடிகள் இருந்தமை உண்மைதான். ஆனால் அந்த நெருக்கடிகளை பூதாகரமாகக் காட்டி அந்த நெருக்கடிகளின் கைதியாக தான் இருக்கின்றேன் என்று காட்சியை தெளிவாக ஏற்படுத்தி, தான் ஒரு பரிதாபத்திற்கு உரிய நிலையில் இருப்பதான ஒரு காட்சியை இந்தியாவிடம் காட்டினார். இத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னால் பரிதாபத்துக்கு ஜே. ஆரை பாது காப்பதற்கும் அவரின் சொற்படி ஆடு வதற்கும் இந்திய ஆட்சியாளர்கள் கூட தயாராகினர். இதனால் தமிழ் மக்க ளின் இரத்த ஆறு ஓடியது. இந்தியா தனது நண்பர்களின் இரத்தத்தை குடித் தது. அப்போது ஜே. ஆர் பின்வருமாறு சொன்னார். 'சிறிதளவு மையைத் தீட்டி னேன் அதனால் சிங்கள இளைஞர்க ளின் ரத்தத்தை சிந்தாது பாதுகாத்தேன்.'

## அசோக சிங்கங்கள்

சாணக்கியரின் புதல்வர்கள் இப் போது ஜே. ஆரிடம் அரசியல் அகர வரிசை கற்க வேண்டியதாயிற்று. தூணே றிய சிங்கங்கள் (அசோகத்தூண்) இப் போது தரையில் குதித்து, சிக்குண்டு தவிக்கலாயின. அவை சிக்குண்டு தவிக் கும் போது ஜே. ஆர். மிடுக்குடன் பின் வருமாறு கூறினார். 'நான் புலிகளுடன் குத்துச் சண்டையில் ஈடுபட்டுக் கொண் டிருந்த போது இந்தியா மத்தியஸ்த்த ராக நின்றது. இப்போது அந்த மத்தி யஸ்தனை குத்துச்சண்டைக்குள் இழுத்து விட்டேன். நான் மத்தியஸ்த்துவராக (நடுவராக) நிற்கிறேன். சகதிக்குள் சிக் குண்ட அசோக சிங்கங்கள் ஜே. ஆரைப் பார்த்து உறுமக் கூட முடியாத அள விற்கு இளைத்துப் போய்விட்டன.

## முது சொத்து

தனது 52 கால அரசியல் வாழ்வில் ஜே. ஆர். சாதித்த மிகப் பெரும் அரசி யல் சாதனை எதுவென்றால் அது இந் தியாவை அவர் ஒப்பந்தத்தின் மூலம் கையாண்டவிதம்தான். அது சிங்கள இனவாதத்தில் ஜே. ஆர். தேடிக் கொடுத்துள்ள அரும்பெரும் – முது சொத்தாகும். இனவாதம் கருக்கொண்ட இந்தக் கேவலத்திற்கு அப்பால் அடங் கிய இலங்கைக்கு ஜே. ஆர். கொடுத் துள்ள நன்கொடை, இரத்தமும் கண் ணீரும் கொண்ட அரசியல் யாப்பும் அரசியல் நாகரீகமும் தான்.

## பாடப் பொருள்

அரசியல் நோக்கில் பார்ப்பதாயின், செயற்படும் விதி எப்படியிருக்கின்றது என்பதை கண்டறிய வேண்டுமென் றால் ஜே. ஆரின் அரசியல் வாழ்வை ஆராயவேண்டும். இதனால் அரசிய லில் அவர் ஒரு பாடப் பொருளாவார் என்பதில் சந்தேகம் இல்லை. உண்மை யில் அவர் ஒரு முக்கிய உதாரணம். தீமையில் இருந்து தப்பி வாழ்வதற்கு அந்த தீமையின் வழிகளைக் கற்றறிய வேண்டும்.

– மு. திருநாவுக்கரசு

# கிழிந்த சிறகு

உறக்கம் முறித்து வருத்தம் தரும்
ஒரு நுளம்பாய்
சிறு ரவைக் குண்டென்
சுதந்திரங்களைப் பறித்துச் சிறையிருத்திப் போனதா?

முட் குத்திக் காற்றுப்போன சில்லாய்
என் கால் ஆனதா?!


சுதந்திர வானில் உயர விழைந்த
என் சிறகு கிழிக்கவென்றே
வழிமறித்துக் காத்திருந்ததா
அந்த ரவைச் சனியன்!

எத்தனை தடைகள் ஏறிக் கடந்து
எனக்குயர்வு தந்து
இத்தனை காலம்
எனைச் சுமந்த என் சிறகே!
ஏன் விரிய மாட்டாயாம் இப்போ?!

உடற் சுமையெனவாகி
மரத்துப்போன கட்டையாய்
உணர்விழந்தே கிடப்பாயா?!
என் காலே!
சிறகிழந்த பறவையின் ஏக்கம்
நிரந்தரமாகுமா எந்தனுக்கு?!

பழையபடி எப்போ
சிறகே விரிவாய்?
சொன்ன திசையெங்கும்
சுமந்து திரிவாய்?
சிறைகொள் வாழ்விருந்து எனை மீட்பாய்?!

– இளந்திரையன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாய்த் தமிழகத்தின் கடமை

## பழ. நெடுமாறன்




ஏறத்தாழ நாற்பதிற்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 8 கோடி தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

அதிலும் குறிப்பாக இலங்கை, மலேசியா, தென்ஆபிரிக்கா, மொறீசியஸ், பிஜித்தீவு போன்ற நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும் மற்றநாடுகளில் அந்த நாடுகளுக்குத் தக்கபடி எண்ணிக்கையிலும் தமிழர்கள் விரவி வாழ்ந்து வருகிறார்கள். இதில் இலங்கையில் வாழக்கூடிய ஈழத்தமிழர்கள் அந்த நாட்டின் தொன்று தொட்டு வாழும் குடிகள் ஆவார்கள். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து அவர்கள் அந்த நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். நம்முடைய சங்க இலக்கியத்தில் ஈழத்துப் பூதந்தேவனார் என்ற புலவர் பெருமகனைப் பற்றிய குறிப்பும் அவருடைய பாடலும் இடம் பெற்றிருக்கின்றன. ஆக சங்க காலத்திலேயே ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதும் அவர்களுள் புலமை பெற்றவர்கள் இருந்தார்கள் என்பதும் இதன் மூலம் நமக்குத் தெரிகிறது. மேலும் ஈழத்துப் பூதந்தேவனார் காலத்தில் தாய்த்தமிழகத்தோடு சேய்த் தமிழகமான ஈழத்திற்கு நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதும் இதன் மூலம் அறியப்படுகின்றது.

சங்க காலத்தில் என்னென்ன பொருட்கள் பூம்புகார்த் துறைமுகத்தில் வந்து இறங்கின என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது பட்டினத்துப் பாலை. அதிலே 'ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்' வந்து இறங்கின என்று குறிப்பிடப்படுகிறது. ஆக ஈழநாட்டிலிருந்து தாய் தமிழகத்துக்கு உணவுப் பொருட்கள் வந்து இறங்கின என்பதும் அறியப்படுகின்றது. இன்றைக்கு மலேசியாவின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய கடா என்பது தான் அன்றைக்கு காழகம் என அழைக்கப்பட்டது. அந்தக் காழகத்திலிருந்தும் பல பொருட்கள் தமிழகத்திற்கு வந்தன என்பதும் நமக்குத் தெரிகிறது. ஆக எல்லா வகையிலும் சேய்த் தமிழகமான தமிழீழத்துக்கும் தாய்த் தமிழகத்திற்கும் நெருங்கிய உறவும் தொடர்பும் இருந்தன. தாய்த் தமிழக மக்களுக்கு இந்த நாடுகளில் வாழக்கூடிய தமிழர்களோடு இருந்த் தொடர்பு என்பது பிற்காலத்தில் அறவே அற்றுப் போனது ஏன்? வரலாற்று ரீதியாக இதற்கான காரணங்களை சிந்தித்து அறிய வேண்டும். 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டன், பிரான்ஸ், போன்ற ஐரோப்பிய நாடுகள், ஆசிய நாடுகள் பலவற்றையெல்லாம் பிடித்து தம்முடைய அடிமை நாடுகளாக வைத்துக்கொள்ளத் தொடங்கின. தாங்கள் பிடித்த இந்த நாடுகளில் உள்ள வளங்களையெல்லாம் சுரண்டுவதற்கு அவர்கள் திட்டமிட்டார்கள். அந்தத் திட்டத்திற்கு இணங்க இந்நாடுகளில் றப்பர், தேயிலைத்தோட்டங்கள் அமைத்தல், இந்த நாடுகளில் உள்ள சுரங்கங்களைத் தோண்டி எடுத்தல் போன்ற பணிகட்கு அவர்களுக்கு நல்ல உழைப்பாளிகள் தேவைப்பட்டார்கள். அப்போது இதற்கு ஏற்றவர்கள் தமிழர்கள் தான், இவர்களே கடுமையாக உழைக்கக் கூடியவர்கள் என்பதை அறிந்து கப்பல் கப்பலாக தாய்த் தமிழகத்திலிருந்து தமிழர்களை இலங்கை, பர்மா, மலேசியா, தென் ஆபிரிக்கா, மொறீசியஸ், பிஜித்தீவு போன்றவற்றிற்கு கொண்டு போனார்கள். இவர்களும் வஞ்சகம் இல்லாமல் உழைத்து அந்த நாடுகளை வளம் கொழிக்கச் செய்தார்கள். ஐரோப்பியர்களால் வெளி




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளுக்குக் கொத்தடிமைகளாகக் கொண்டு போகப்பட்ட நம்முடைய தமிழர்கள் அந்நாடுகளில் எப்படி வாழ்கிறார்கள்? அவர்களின் வாழ்க்கைத் தரம் எப்படியிருக்கிறது? அவர்கள் உரிமை பெற்ற மனிதர்களாக வாழ்கிறார்களா? அல்லது அடிமைகளாக அவல வாழ்வு வாழ்கிறார்களா? என்பதைப்பற்றி தாய்த்தமிழகத்திலே எந்த அளவிற்கு சிந்தனை இருந்தது? கவலை இருந்தது? என்பதனை நாம் எண்ணிப் பார்ப்போமானால் வெட்கமும் வேதனையும் தான் மிஞ்சும். ஆனால் தாய்த்தமிழகமும் அன்றைக்கு ஆங்கிலேயரிடமும் அடிமைப்பட்டுத் தானே கிடந்தது.

அந்த நிலைமையிலே என்ன செய்ய முடியும் என்று சிலர் சமாதானம் கூறலாம். தாய்த் தமிழகம் அடிமைப்பட்டுக் கிடந்தது உண்மை தான். ஆனாலும் கூட பிறநாடுகளில் வாழக் கூடிய தமிழர்கட்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அவல நிலையைப் பற்றி கண்ணீராவது வடித்திருக்கலாம். அதைப் பற்றி ஒரு மனமருகல் அவர்கட்கு இருந்திருக்க வேண்டாமா? ஆனால் அவையெல்லாம் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

பெரும்பாலான தமிழர்கள் உணர்வற்றிருந்த காலத்தில் பிறநாட்டுத் தமிழர்களின் அவல நிலையைப் பற்றி பாரதி சிந்தித்திருக்கிறான். வேதனை அடைந்திருக்கிறான். அவன் எழுதிய முற்றுப் பெறாத ஒரு பாடலிலே இதைப்பற்றித் தெளிவாக எழுதியுள்ளான் 'விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செயநினைத்தாய் எனக் குரையாயோ' என்று விதியை நொந்து கொள்ளும் பாரதி அடுத்துச் சொல்கிறான்:

ஆப்பிரிக்கத்து காப்பிரி நாட்டிலும்
தென்முனை அடுத்தத் தீவுகள்
பலவினும்
பூமிப்பந்தின் கீழ்ப் புறத்துள்ள
பற்பல தீவினும்
பரவி யிவ்வெளிய தமிழ்ச்சாதி
தடியுதையுண்டும்
காலுதையுண்டும் கயிற்றடியுண்டும்
வருந்திடும் சேதியும் மாய்ந்திடும்
சேதியும் பெண்டிரை மிலேச்சர்
பிரித்திடல் பொறாது
செத்திடும் சேதியும் பசியால் சாதலும்
பிணிகளால் சாதலும்
பெருந்தொலையுள்ள தம் நாட்
டினை பிரிந்த நலிவினால் சாதலும்
இஃதெலாம் கேட்டு எனது உளம்
அழிந்திலேன்'...

என்று புலம்புகிறான் பாரதி. பாரதியின் புலம்பலைப் போல எத்தனை பேர் அந்த நாளில் தமிழ் நாட்டில் புலம்பவாவது செய்தார்களா என்று பார்த்தால் ஏமாற்றம் தான் மிஞ்சுகிறது.

தாய்த் தமிழகமும் அந்த அளவிற்கு அன்றைக்கு அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்தது. அதன் விளைவாக பிற நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் ஏனென்று கேட்பதற்கு நாதி இல்லாத நிலைமையில் ஆதரவற்றவர்களாக அவதிப்பட்டார்கள். அவர்களை யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். தட்டிக் கேட்பதற்கு இவர்கட்கு நாதி இல்லையென்று அந்தந்த நாடுகளிலேயுள்ள ஆள வந்தவர்கள் நினைத்தார்கள். தமிழர்களை மேலும் மேலும் கசக்கிப் பிழிந்தார்கள். அவர்கள் உழைப்பை உறிஞ்சினார்கள். தென் ஆபிரிக்காவில் வாழ்ந்த தமிழர்கள் வெள்ளையரின் நிறவெறிக்கெல்லாம் இரையானார்கள் என்பது ஒரு சோக வரலாறு. அவர்களுக்காகப் போராட குசராத் நாட்டிலிருந்து மோகன்தாஸ் கரம்சந்த் காந்திதான் வரவேண்டியிருந்தது. தாய்த் தமிழகத்திலிருந்து எந்தத் தலைவரும் அவர்களுக்காக வாதாடவோ, போராடவோ செல்லவில்லை. ஆனாலும் தென் ஆபிரிக்காவிலே வாழ்ந்த தமிழர்கள் காந்திக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக நின்று ஊக்குவித்தார்கள். அவர் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் எண்ணற்ற தமிழர்கள் கலந்துகொண்டு பல தியாகங்களைச் செய்தார்கள். அவற்றிற்கெல்லாம் தியாக சிகரமாக தில்லையாடி வள்ளியம்மை என்ற யுவதி கைதியாகி சிறையிலே நோய் வாய்ப்பட்டு தன்னுடைய இன்னுயிரை ஈந்தாள். மகாத்மா காந்தியடிகளோ அதைக்கண்டு மனமுருகிப் போனார். அவளுடைய மன உறுதியை அவர் வியந்து பாராட்டியிருக்கிறார். தில்லையாடி வள்ளியம்மைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள அவளுடைய சிற்றூருக்கு நேரடியாக வந்து அவளுக்கு அஞ்சலி செலுத்தினார் என்பது வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தியாகும். அதைப்போலவே பர்மா சுதந்திரம் பெற்ற போது அந்த நாட்டிலே வாழ்ந்த தமிழர்களின் சொத்துக்களையெல்லாம் அந்த அரசு பறிமுதல் செய்தது. எண்ணற்ற தமிழர்கள் உயிருக்கு அஞ்சி அந்த நாட்டிலிருந்து ஓடிவரக் கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் இதை ஏனென்று யாரும் கேட்கவில்லை.

இவ்வாறு பர்மியத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியைப் பற்றி தமிழகத்து மக்கள் கொஞ்சமும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அங்கிருந்து வந்த அகதிகள்தான் சென்னை, மதுரை, திருச்சி போன்ற பல நகரங்களில் பர்மா அகதிகள் என்ற பெயரால் சிறு கடைகள் வைத்து வணிகம் செய்தார்கள். இன்றைக்கு பர்மா அகதிகள் கடை வீதி என்று தான் அந்த வீதிகள் அழைக்கப்படுகின்றன. தமிழர்களின் அவலநிலைக்கு இன்றளவும் சான்றாக அந்த வீதிகள் திகழ்கின்றன. மலேசியாவிலுள்ள நம்முடைய தமிழ்த்தோட்டத் தொழிலாளர்களையெல்லாம் ஒன்று திரட்டித் தொழிற்சங்க அமைப்பைக் கட்டி நிறுவி அந்தத் தொழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாளர்களை வெள்ளை முதலாளிகள் சுரண்டி வந்ததற்கு முடிவு கட்டுவதற்காகப் போராடினான் மலேசியத் தமிழன் கணபதி. இளம் தொழிற்சங்கத் தலைவனான அவன் தலைமையிலே மலேசியத் தமிழ்த் தொழிலாளர்கள் அணிதிரண்ட போது பிரிட்டிஷ் அரசு அஞ்சியது. வெள்ளை முதலாளிகளின் தூண்டுதலின் பேரிலே மலேசியக் கணபதியை சிறைப்பிடித்தது. பொய்யான வழக்குத் தொடுத்தது. இறுதியிலே அவனுக்கு மரணதண்டனை விதித்தது. தூக்குக் கயிற்றிலே தொங்க விட்டது. மலேசியக் கணபதிக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமைக்கு எதிராக தமிழகம் போதுமான அளவு கண்டனக் குரலை எழுப்பவில்லை என்பது வெட்கப்படவேண்டிய தொன்றாகும். அங்குமிங்குமாக சிலர் அதைப்பற்றிப் பேசினார்களே தவிர ஒட்டுமொத்தமாக தமிழகம் கொதித்து எழுந்திருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறாததன் காரணமாக மலேசியாவில் இருந்தும் தமிழர்கள் அணி அணியாக வெளியேற வேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

அதைப் போல இரண்டாம் உலகப் போரின் போது சிங்கப்பூரிலே நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் இந்தியாவின் சுதந்திரத்திற்குப் போராடுவதற்காக இந்திய தேசிய இராணுவத்தை அமைப்பதற்காக வேண்டுகோள் விட்ட போது அணி அணியாகத் தமிழர்கள் அவருடைய படையிலே சேர்ந்தார்கள். தமிழ்ப் பெண்கள் தாங்கள் அணிந்திருந்த நகைகளையெல்லாம் கழற்றி நேதாஜிக்கு நிதியாக வழங்கினார்கள். எண்பதினாயிரம் பேரைக் கொண்ட இந்திய தேசிய இராணுவத்தில் பெரும்பாலோர் தமிழர்களாகவே இருந்தார்கள். வீரமுடன் போராடினார்கள். ஆனாலும் அவர்களின் அந்தப் போராட்டம் வெற்றி பெறவில்லை. அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டு அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு இறுதியிலே விடுதலையானார்கள்.

ஆனால் சுபாஷ் சந்திரபோசின் இந்திய தேசிய இராணுவம் இந்தியாவின் சுதந்திரத்திற்காக முதன் முதலாக ஆயுதம் தாங்கிய ஒரு போராட்டத்தை நடத்திய போது அந்தப் போராட்டத்திலே கலந்துகொண்டு பல தியாகங்கள் புரிந்த தமிழர்களை எந்த அளவிற்குத் தமிழகம் பிற்காலத்திலே மதித்தது என்று நாம் பார்த்தால் வெட்கப்பட வேண்டி இருக்கும். தமிழகம் அவர்களைச் சரிவர மதிக்கவில்லை. இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த எண்ணற்ற தமிழர்கள் வறுமையில் வாடி இறந்தனர். இன்னும் பலர் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே பலபேருக்கு அரசாங்கத்தின் தியாகிகள் உதவி நிதி கிடைத்ததே தவிர தமிழ் மக்களின் மனமுவந்த பாராட்டுக்களோ அல்லது உதவியோ கிடைக்கவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும். ஆனால் நேதாஜியின் பெருமையைப் பற்றியும் அவர் அமைத்த இந்திய தேசிய இராணுவத்தின் சிறப்பைப் பற்றியும் தாய்த் தமிழகம் உணரவில்லை. ஆனால் தமிழீழத்தைச் சேர்ந்த பிரபாகரன் அதை உணர்ந்திருந்தார். நேதாஜியும் அவருடைய இந்திய தேசிய இராணுவமும்தான் பிரபாகரனுக்கு உந்துசக்தியாக திகழ்ந்தன என்பது ஒரு வரலாற்று உண்மையாகும்.



நேதாஜியின் படையைப் போலவே தமிழீழ மக்களை விடுவிப்பதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவர் அமைத்தார். இன்றும் தொடர்ந்து போராடி வருகிறார். நேதாஜியின் படையில் இருந்து ஆயுதம் தாங்கிப் போராடிய தமிழ் வீரர்கள் தாய்த் தமிழகத்திற்குத் திரும்பியபோது தமிழக மக்கள் வரவேற்றுப் போற்றியிருந்திருப்பார்களானால், மதித்திருப்பார்களானால் அவர்களைக் கண்டு தமிழ் நாட்டு இளைஞர்களும் உணர்ச்சி பெற்றிருப்பார்கள். உத்வேகம் பெற்றிருப்பார்கள். தாய்த் தமிழகம் எவ்வளவோ சிறப்புடன் திகழ்ந்திருக்கும். ஆனால் தாய்த் தமிழகம் அதைச் செய்யத் தவறியது. நல்ல வேளையாக தமிழீழம் அதைச் செய்து வருகிறது. இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழித் தமிழர்களான மலையகத் தமிழர்களின் கதி என்னவாயிற்று? அந்நாட்டின் வளத்திற்காக தங்களை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்ட அவர்களைப் பரம்பரை பரம்பரையாக அந்த நாட்டை வளப்படுத்துவதற்காக தங்களுடைய வியர்வையையும் இரத்தத்தையும் சிந்திய மலையகத் தமிழர்களை சுதந்திரம் பெற்றவுடன் இலங்கை அரசு துச்சமாக மதித்து தூக்கி எறிவதற்கு முற்பட்டது. அவர்களுக்காகத் தாய்த் தமிழகம் போராடுவதற்காக முன்வரவில்லை. இதன் விளைவாக இந்திய அரசும் அவர்கள் விடயத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளத் தவறியது. தாய்த் தமிழகமே அக்கறை எடுக்காத போது இந்திய அரசு அதிலே எப்படி அக்கறை எடுக்க முடியும்? இந்தியாவின் பிரதமர் ஜவகர்லால் நேரு இலங்கையின் பிரதமர் கொத்தலாவலையுடன் செய்துகொண்ட உடன்பாடானாலும் சரி லால்பகதூர் சாஸ்திரி சிறீமாவோடு செய்துகொண்ட உடன்பாடானாலும் சரி இந்திரா சிறீமாவோடு செய்துகொண்ட உடன்பாடானாலும் சரி இந்த உடன்பாடுகள் அனைத்தும் மலையகத் தமிழர்கட்கு துரோகம் விளைத்த உடன்பாடுகளேயாகும். மலையகத் தமிழர்களை இலங்கையிலிருந்து விரட்டியடிப்பதற்கு அந்த அரசு முற்பட்டபோது இந்த உடன்பாடுகளின் மூலம் இந்திய அரசு அந்த நடவடிக்கைக்குக் கட்டியம் கூறி வரவேற்றது. ஆனால் இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தாய்த் தமிழகம் என்ன செய்தது? எந்தளவுக்கு கவலைப்பட்டது? தாய்த் தமிழகம் அன்றைக்குக் கொதித்தெழுந்து குரல் கொடுத்திருக்குமேயானால் மேற்கண்ட உடன்பாடுகளுக்கு இந்திய அரசு அங்கீகாரம் கொடுத்திருக்காது. அங்கே இருக்கும் மலைய மக்கள் அகதிகளாக இந்தியாவிற்குத் திரும்பிய பிறகு அவர்களது நிலைமை பரிதாபப்படக் கூடிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதத்தில் இருந்திருக்காது. அவர்கள் தங்கள் வாழ்வை இழந்த மக்களாக இன்னமும் தவிக்கிறார்கள் என்று சொன்னால் இந்திய அரசு செய்த துரோகம் மட்டும் காரணமல்ல. தாய்த் தமிழகம் தான் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறிவிட்டது என்பது தான் முக்கியமான காரணமாகும்.

இந்திய வம்சாவழித் தமிழர்கள் பிரச்சினையில் அதாவது தாய்த் தமிழகத்தைச் சேர்ந்த மக்கள் இலங்கைக்கு வலுக்கட்டாயமாக கொத்தடிமைகளாக அழைத்துச் செல்லப்பட்டவர்களின் விசயத்தில் தாய்த தமிழகம் போதுமான அளவு அக்கறை எடுத்துக் கொள்ளாததன் காரணமாக பிற்காலத்தில் ஈழத்தமிழர்கட்கும் இதே அவலங்கள் நேர்ந்தன. திட்டமிட்ட இனப்படுகொலையின் மூலம் இலங்கையில் உள்ள தமிழர்களை அறவே ஒழித்திடுவது என கங்கணம் கட்டிக் கொண்டு சிங்கள வெறியர்கள் செயல்பட்டபோது தாய்த்தமிழகம் என்ன செய்தது? தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் ஆதாயத்திற்கு இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்தனவே தவிர இது நம்முடைய பிரச்சினைகளில் முக்கியமான பிரச்சினை; இப் பிரச்சினைகளில் நாம்தான் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்; இந்திய அரசுக்கு எதிராக தமிழ் மக்களை அணி திரட்டிப் போராட வேண்டிய அரசியல் கட்சிகள் பல்வேறு காரணங்களினால் ஒப்புக்காக எதிர்ப்புக்காட்டி பிறகு அடங்கி விட்டன. இதன் காரணமாக இந்திய அரசின் மமதை வளர்ந்தது. தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளத் தொடங்கிற்று. இதனுடைய உச்சக்கட்டம் தான் இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி ஜெயவர்த்தனாவுடன் ஈழத்தமிழர்களைப் பற்றி உடன்பாடு செய்து கொண்டதாகும்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினையை நிர்ணயிப்பதற்கு சிங்களவர் தலைவர் ஜெயவர்த்தனாவும் இந்தியாவின் பிரதமர் ராஜீவ்காந்தியும் உடன்பாடு செய்கிறார்கள் என்று சொன்னால் அந்தத் துணிவை ராஜீவ் காந்திக்கு கொடுத்தது யார்? தாய்த் தமிழகம் தான் அந்தத் துணிவை ராஜீவ் காந்திக்கு கொடுத்து விட்டது. இப்படியான ஒரு உடன்பாடு ஏற்படுவதற்குத் தாய்த் தமிழகம் கடுமையான எதிர்ப்பைக் காட்டியிருக்க வேண்டுமேயானால் அந்த உடன்பாடு செய்வதற்கான துணிவே ராஜீவ் காந்திக்கு வந்திராது.

இப்படி ஒரு உடன்பாட்டைச் செய்து அதை ஏற்க மறுத்த தமிழீழ மக்களை கொன்று குவிப்பதற்காக அவர்களுடைய விடுதலைப்போராட்டத்தை அடியோடு நசுக்குவதற்காக இந்திய இராணுவத்தை அங்கு அனுப்பி ஏறத்தாழ 7000–க்கு மேற்பட்ட தமிழர்களை படுகொலை செய்தாரே ராஜீவ் காந்தி அதற்கான பொறுப்பும் பழியும் தாய்த் தமிழகத்தை சார்ந்தது என்பதுதான் வேதனை தரத்தக்க உண்மையாகும். தாய்த் தமிழகம் தன்னுடைய கடமையை சரிவரச் செய்யாததற்கான விளைவை ஈழத்தமிழர்கள் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்தது. ஈழத் தமிழர் பிரச்சினையானாலும் மலையகத் தமிழர் பிரச்சினையானாலும் உலகின் வேறெந்த நாட்டில் வாழுகின்ற தமிழர்களுக்குள்ள பிரச்சினை எதுவானாலும் அவற்றில் தாய்த்தமிழகம் என்ன சொல்லுகிறதோ அதைத்தான் இந்திய அரசு கேட்க வேண்டும்; அதன்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற நிலையை எடுப்பதற்கு தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் அடியோடு தவறிவிட்டார்கள். இந்திய அரசு இந்தப் பிரச்சினையிலே என்ன நிலை எடுக்கிறதோ அதுதான் தங்களுடைய நிலை என்று பகிரங்கமாகச் சொல்லவேண்டிய பழிக்கு தமிழகத்தலைவர்கள் ஆளாகி இருக்கிறார்கள். தங்களுடைய உணர்வை டில்லிக்கு உணர்த்தி இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று எச்சரிக்கை விட வேண்டியவர்கள் டில்லி ஆட்டுவித்தபடியெல்லாம் ஆடினார்கள். டில்லியைத் திருப்தி செய்வதற்காக பிறநாட்டுத் தமிழர்களை பலிகொடுத்தார்கள் என்று நான் குற்றம்சாட்ட விரும்புகிறேன். இதன் விளைவாகத்தான் பல்வேறு நெருக்கடிகள் தமிழ் இனத்திற்கு ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகது.

தாய்த் தமிழகம் செய்யவேண்டியதை, செய்ய வேண்டிய நேரத்தில் செய்யத் தவறியதற்கான விளைவை தான் அனுபவிக்க நேர்ந்தால் பரவாயில்லை. ஆனால் தாய்த் தமிழகம் செய்த தவற்றுக்கான தண்டனையை ஈழத்தமிழர்களும் மலையகத் தமிழர்களும் பிறநாட்டுத் தமிழர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை விட வேதனைக்குரிய விடயம் ஒன்று வேறு இருக்க முடியுமா? குற்றம் செய்பவர்கள் தாய்த்தமிழகத்து மக்கள்; தண்டனை அனுபவிப்பவர்கள் பிறநாடுகளிலேயே வாழும் தமிழர்கள் என்று சொன்னால் இந்தத் தாயகத் தமிழர்களை யாரும் மன்னிக்கவே மாட்டார்கள். இந்த நிலைமையை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இதற்கான பரிகாரத்தை தாய்த் தமிழக மக்கள் செய்யவேண்டும். பிறநாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் விடயத்திலே தான் தாய்த் தமிழகம் அக்கறையற்று போக்கும் அலட்சியப் போக்கும் கொண்டிருந்தது என்பது மட்டுமல்ல இந்தியாவிலே பிற மாநிலங்களில் வாழுகின்ற தமிழர்கள் விடயத்திலும் தாய்த்தமிழகம் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர்கள் வாழுகிறார்கள். எப்படிப் பட்ட வாழ்க்கை அவர்களுடைய வாழ்க்கை? அந்த மாநிலங்களைச் சுரண்டிப் பிழைப்பதற்கு அவர்கள் செல்லவில்லை. மாறாக அந்த மாநிலங் களில் உழைத்துப் பிழைக்கும் மக்க ளாகத்தான் அவர்கள் இன்று வரைக் கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கர்நாடக மாநிலத்தில் கோலார்த் தங்கச் சுரங்கத்தில் ஆயிரம், ஆயிரம் அடிகளுக்குக் கீழே உயிரை துச்சமாக மதித்து சென்று தங்கத்தை வெட்டி யெடுத்து வருபவர்கள் தமிழர்கள். நூறாண்டு காலத்திற்கு மேலாக அங்கு வாழ்ந்து வரும் தமிழர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நலிந்து கொண்டிருக் கிறார்கள். கர்நாடக மாநிலத்தில் உள்ள காப்பித் தோட்டங்களிலே வேலை செய்பவர்கள் தமிழர்கள். இதைப் போலவே பம்பாயிலும். ஆசி யாவிலேயே மிகப்பெரிய சேரி என்று பெயர் எடுத்த தாராவி சேரியிலே வாழக்கூடியவர்கள் யார்? மிகப் பெரும்பாலோர் தமிழர்கள். சாக்கடை யோரங்களிலே குடிசைகளை அமைத் துக்கொண்டு அவர்களின் அந்த அவல வாழ்க்கையைப் பார்க்க நேர்ந் தால் தமிழினத்திற்கா இந்தக் கதி என்று நாம் கண்ணீர் விட வேண்டி வரும். அதைப் போலவே ஆமதாபத் திலே, கல்கத்தாவிலே, டில்லியிலே என்று இந்தியாவின் பல்வேறு பகுதிக ளிலே தமிழர்கள் எடுபிடிகளாக அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள். அவர்களைப் பற்றியெல்லாம் தாய்த்தமிழகம் எந்த அளவிற்கு கவ லைப்பட்டிருக்கிறது?

கர்நாடகத்தில் இருந்தும் மராட்டி யத்தில் இருந்தும் தமிழர்கள் அகதிக ளாக விரட்டியடிக்கப்பட்ட போது தாய்த் தமிழகம் அதற்கு எதிரான நடவடிக்கை எதனையும் பெரிய அள விற்கு செய்து விடவில்லை. ஒரு சிலர் எதிர்ப்புக்காட்டியதோடு அது அடங்கி விட்டது. இந்த நிலைமை என்பது ஒட்டுமொத்தத்தில் தமிழ் இனத்திற் குத் தலைகுனிவை ஏற்படுத்தும் நிலை யாகும். தாய்த் தமிழகத்தின் இந்த அலட்சியப் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தாய்த் தமிழ கத்தின் தலையாய பிரச்சினையிலே கூட தாய்த் தமிழக மக்கள் எந்த அள விற்கு கொதித்து எழுந்திருக்கிறார்கள் என்று பார்த்தால் அது இன்னும் வெட்கக்கேடான செய்தியாகும். ஆயி ரம் ஆயிரம் ஆண்டு காலமாக எந்தக் காவேரி நதி நீரின் மீது தமிழகத்திற்கு உரிமை இருந்ததோ அந்த உரிமையை அறவே இழந்து நிற்கக்கூடிய நிலை யிலும் கூட தாய்த் தமிழகம் போது மான அளவிற்குத் தன்னுடைய எதிர்ப் பைக் காட்டவில்லை. இது போலவே தமிழகத்தின் எல்லைகள் பறிபோன போது கூட தாய்த்தமிழகம் போது மான அளவிற்கு தன்னுடைய எதிர்ப் பைக் காட்டவில்லை.

வடவேங்கடத்தை இழந்தோம், தேவிகுளம், பீர்மேடு போன்ற வள மான பகுதிகளை நாம் இழந்தோம். இவற்றை நாம் இழந்தபோது கூட தாய்த்தமிழகம் கொதித்தெழவில்லை. இத்தகைய போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். வெற்று முழக் கங்களினாலும் வீண் ஆரவாரங்களி னாலும் தாய்த்தமிழக மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள் அவர்கள் திட்டமிட்டு திசை திருப்பப்படுகிறார்கள். அவர்க ளுடைய உண்மையான பிரச்சினை கள் என்ன என்பதே அவர்கள் அறிந்துகொள்ள முடியாதபடி திரை யிட்டு மறைக்கப்பட்டு இருக்கிறார் கள். தங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் அவர்கள் கவனம் திருப்பப்படுவதை உணராமல் இருக் கிறார்கள். இந்த நிலைமைக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் தாய்த்தமிழகம் எதிர்காலத்திலே என்ன ஆகுமோ என்ற அச்சம் என் உள்ளத்தைக் குடைகிறது.

தாய்த்தமிழகத்து மக்கள் தாங் கள் யார் என்பதை உணரவேண்டும். தம்முடைய அடையாளமே தெரியா மல்போகும் அளவிற்கு பிறரின் ஆதிக் கம் தங்கள் மீது படர்ந்து வருவதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண் டும். வெள்ளையர் வெளியே போன பிறகுகூட அவர்களுடைய மொழி யான ஆங்கிலம் இன்னும் தாய்த் தமிழக்திலே அரசோச்சுகிறது. தாய்த் தமிழக மக்கள் ஆங்கில மோகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். ஒரு பக்கத்திலே இந்தி தமிழர்களை அடிமைப்படுத்துவதற்கு இடை விடாது முயற்சி செய்து கொண்டி ருக்கிறது. தமிழ் நாட்டில் தொழில் வணிகம் ஆகியவற்றை முழுவதுபமாக மார்வாடி குஜராத்திகள் கைப்பற்றி விட்டார்கள். தமிழக்தின் பொருளா தாரம் என்பது அந்நியர்கள் கையிலே முழுமையாகச் சிக்கி விட்டது. இவ் அபாயங்களை எத்தனை தமிழர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆக எல்லா வகையிலும் தமிழகத்தை பெரிய அபா யம் சூழ்ந்து நிற்கிறது. தாய்த் தமிழ கம் தலைநிமிர்ந்து நிற்குமானால் தான் அண்டை நாடுகளிலே வாழக் கூடிய தமிழர்களும் தலை நிமிர்ந்து நிற்பார்கள். எனவே தாய்த் தமிழக மக்கள் இந்த உண்மைகளை உணர வேண்டும். உலகம் பூராவும் வாழக் கூடிய தமிழர்களின் எதிர்காலமும் தங்களுடைய எதிர்காலமும் நாம் பெறுகிற விழிப்புணர்வில் தான் இருக் கிறது என்ற உண்மையை உணர வேண்டும். இந்த உணர்வை என் றைக்கு தாய்த்தமிழக்திலே வாழக் கூடிய தமிழர்கள் பெறுகிறார்களோ அன்றைக்கு அவர்களுக்கும் விடிவு பிறக்கும். உலகம் பூராவும் வாழக் கூடிய தமிழர்களுக்கும் விடிவு பிறக் கும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மொழியூடகமும் அதன் கட்டமைப்பும்

## சொக்கன்

உணர்வதற்கும் உணர்ந்ததை வெளிப்படுத்துதற்கும் அறிவதற்கும் அறிந்ததை வெளிப்படுத்தற்கும் இன்றியமையாத கருவியாய் விளங்குவது மொழி. உணர்வும் அறிவும் பரந்தும் விரிந்தும் ஆழ்ந்தும் மக்களினத்தின் தேவைகளை நிறைவுசெய்ய முற்படும் பொழுது, அவற்றிற்கு இசைந்து மொழியும் வளரவேண்டியது இன்றியமையாததாகும். இவ்வளர்ச்சிக்குத் துணைபுரியும் இதழ்கள் (பத்திரிகைகள், சஞ்சிகைகள்) மொழியை ஊடகமாகக் கொண்டு செயலாற்றுகையில் அதன் கட்டமைப்பினை எந்த அளவிற்குப் பேணலாம், பேணமுடியும் என்பதை உரத்துச் சிந்திப்பதே (Loud Thinking) இந்தக் கட்டுரை.

Journalism என ஆங்கிலத்தில் வழங்கும் சொல்லுக்கு 'இதழியல்' என்று தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இன்றும் 'பத்திரிகை' என்று வழங்கும் வடசொல்லைத் தமிழாக்கி செய்தித்தாள், சஞ்சிகைகள் பற்றிய கற்கைநெறியை 'இதழியல்' எனக் குறிப்பிட்டிருக்கின்றனர். நாளேடுகள், சஞ்சிகைகள் என்பவற்றை வெளியாக்கும் செயற்பாடு, பட்டறிவிலே தொடங்கிப் படிப்பறிவுத்துறையாக மாறியுள்ளமை இதழியலின் முதன்மையையும் எதிர்காலத்தில் அது மேலும் வளரவேண்டியுள்ளதையும் குறிகாட்டி நிற்கிறது.

உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், பல்துறை சார்ந்த தகவல்கள், அவை பற்றிய கருத்தாக்கங்கள், விமர்சனங்கள் முதலானவற்றை உள்ளடக்கிச் சாதாரண படிப்பறிவுடைய பொதுமக்களும் வாசித்துப் பயன்பெறும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே செய்தித்தாள்களும், சஞ்சிகைகளும் வெளியாகின; வெளியாகின்றன. எனவே, இவற்றினைக் கையாளப்படும் ஊடகமான மொழியிலே நெகிழ்ச்சியும், தெளிவும், உடனடி விளக்கமும் அமைவதே விரும்பப்படுவதாகும்.

*Roman of Journalism* என்று நூலிலே. *Rajani Banerjee* என்பவர் இதழியலிலே கையாளப்படவேண்டிய மொழியினை, ஓர் இதழாளன் (*Jounalist*) கையாண்டு வெற்றிகாண்பதற்குப் பின்வரும் எட்டு அறிவுரைகளைத் தந்துள்ளார்.

1. மொழிநடை, வாசிப்பவனை வசப்படுத்தும் உணர்ச்சியூட்டும் வகையில் அமைதல் வேண்டும். (*The Language must be very sensitive*)
2. காணும் காட்சியைச் சொற்களால் சித்திரமாக அமைக்க முயல்க. (*Try to draw Pictures out of words*)
3. குறித்துக்காட்ட வேண்டிய உண்மைப் பொருளிலிருந்து விலகி இதுவோ அதுவோ என ஐயத்தை உண்டாக்கத்தக்க பல பொருள் தரும் மொழியத் தவிர்க்கவும் (*The language must not be ambiguous*)
4. கூறும் செய்திக்கும் அதை வெளிப்படுத்தும் மொழிக்குமிடையே தளம்பலற்ற சமநிலை இருத்தல் வேண்டும். (*Balance There must be a balance between the Story you say and The language Through Which it is expressed*)
5. கடினமற்றதும் எளிதானதுமான மொழியைக் கையாளும் திறனைப் பயில்க. (*Practice the art writing in lighter vein*)
6. மொழி வெளிப்பாட்டில் சுமையற்றதோர் உணர்வு நிலை. (*Use reliefin your expressions*)
7. சொற்செறிவை சிக்கனத்தைக் கையாள்க. (*Economise words*)
8. சொற்களஞ்சியத்தை மிகப்பரவலான அளவில் பெற்று முறையாகக் கையாள முயல்க. (*Try to acquire a wide Control over your vocabulary*)

இவை பற்றி விரிவாகப் பார்ப்பதற்கு முன்பு தமிழில், இதழியல் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலே (*1841* – உதயதாரகை) இருந்த வகையையும், அதன் இன்றுள்ள நிலையையும் தேவையையும் பறவைப் பார்வையாக நோக்குதல் வேண்டும். சமயம், மொழி, சமூக வாழ்வு என்பவற்றிற்கு முதன்மையளித்து உள்நாட்டு ஆட்சிசார்ந்த சில செய்திகளையும், பேராளர்கள் பற்றிய தகவல்களையும் தருவதோடு அக்காலச் செய்தித் தாள்கள் நிறைவுகண்டன. புதிய சொற்களில், கருத்துக்களில், அவற்றைக் கையாளவேண்டிய தேவைகளில் அதிக கவனம் செலுத்தாத காலம் அது. வாசகர் தொகையும் குறைவே. அவ்வாறு வாசிப்பவரும் சாதாரண பொதுமக்கள் அல்லர். அக்காலத்தில் வெளியான இதழ்களோடு ஓரளவு தொடர்புகொண்டிருந்தவரும், 'வசன நடை கைவந்த வல்லாளரு'மான நாவலரே கொலிசு (College) இங்கிலிசு (English) போன்ற சொற்களைக் கையாண்டாரென்றால் இதழியற் சொற்பஞ்சம் எவ்வளவு இருந்தது என்பதை ஓரளவு உணர்ந்து கொள்ளலாம்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்தித் தாள்களிலே கையாளப்பட்ட உரைநடை பற்றிப் பாரதியார் பின்வருமாறு எடுத்துக்கூறுகிறார்:

**உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், பல்துறை சார்ந்த தகவல்கள், அவை பற்றிய கருத்தாக்கங்கள், விமர்சனங்கள் முதலானவற்றை உள்ளடக்கிச் சாதாரண படிப்பறிவுடைய பொதுமக்களும் வாசித்துப் பயன்பெறும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே செய்தித்தாள்களும், சஞ்சிகைகளும் வெளியாயின; வெளியாகின்றன. எனவே, இவற்றினைக் கையாளப்படும் ஊடகமான மொழியிலே நெகிழ்ச்சியும், தெளிவும், உடனடி விளக்கமும் அமைவதே விரும்பப்படுவதாகும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"…. எனக்கு நாலைந்து முக்கியமான தமிழ்ப் பத்திரிகைகள் வருகின்றன. அவற்றுள் ஒன்று வாரப்பத்திரிகை. அது பழுத்த சுதேசியக் கட்சியைச் சேர்ந்தது. ஆனால், தக்க பயிற்சி இல்லாதவர்களால் நடத்தப்படுவது. சில தினங்களின் முன்பு அந்தப் பத்திரிகையில் யுத்த சம்பந்தமான தலையங்கம் ஒன்று எழுதப்பட்டிருந்தது. அதில் ருஷ்யாவில் 'போல்ஷெவிக்' என்ற ஒரு மனுஷ்யன் இருப்பதாகவும், அவன் ஒரு கட்சி ஏற்படுத்தி நமது நேசக்கக்ஷிக்கு விரோதம் செய்வதாகவும் சொல்லியிருந்தது. அஃது அந்நாட்டில் ராஜ்யம் புரட்சிக் கூட்டங்களில் ஒன்றாகிய 'மாக்ஸ்மித்' கக்ஷிக்கு மற்றொரு பெயரென்றும் அந்தப் பத்திராதிபர் தெரிந்துகொள்ளவில்லை. மேலும் அதே பத்திரிகையில் ஒவ்வொரு வியாசத்துக்கும் தமிழ் மகுடத்துக்கு மேலே இங்கிலீஷ் மகுடமொன்று சூட்டியிருக்கிறது. 'ருஷ்யாவின் நிலைமை *The Situation in Russia* தாய்ப்பாசையின் மூலமாகக் கல்வி கற்றல் *The Veonaculars as media of instruction* காயிதப் பஞ்சமான காலம்; என்ன அநாவசியம் பார்த்தீர்களா?

இவ்வாறு அக்கால இதழியலாரைக் கேலிசெய்யும் பாரதியார் (மாக்ஸ்மித், இங்கிலீஷ், வியாசம், மகுடம், கஷி முதலாகத் தாமே பிறமொழிச் சொற்களை அதிகமாகக் கையாண்டிருப்பதும் கருத்தை ஈர்ப்பதே) இதழ்களிலே கையாளப்படவேண்டிய மொழி நடை எவ்வாறிருத்தல் வேண்டும் என்பதற்கும் வழிசொல்கிறார். "முதலாவது நீ, எழுதப்படுகிற விஷயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு வழி சொல்கிறார். "முதலாவது நீ, எழுதப்படுகிற விஷயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக் காட்டு. அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக் கொண்டு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ் நாட்டிற்குப் பயன்படும்." (பாரதியார்— கலைகள் பக். 116–117)

பாரதியார் இப்படிக் கூறியதன் பின்னரும் இந்நூற்றாண்டின் இரண்டாங்காலில் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் வெளியான செய்தித்தாள்களிலே கையாளப்பட்ட மொழியும் சொல்லாட்சியும் பெரிதும் திருத்த மடைந்தன என்று சொல்வதிற்கில்லை. ஜவாப்தா, ஜரூர், மாக்சிஸ்டுகள், ஆட்சேபம், காலனித்துவம், ராஜி, ராஜினாமா, பிரத்தியேகம், பரஸ்பரம், யூனஒ முதலாகப் பிறமொழிச் சொற்களோடு ஆங்கிலப்பாங்கான தமிழ் நடையும் பெருமளவு இடம்பெற்றே வந்தது. சாதாரண படிப்பறிவுடையவனும் படித்து விளங்க வேண்டும் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் 'தினத்தந்தி' நிறுவுனர் சி.பா. ஆதித்தனாரின் கோட்பாட்டை அப்படியே ஏற்று, தள்ளுவண்டிக்காரனின் தமிழைக் கையாண்டுதான் எழுதி விளங்கவைக்க வேண்டும் என்பதும் ஏற்கத்தக்கதன்று.

எனினும், செய்தித்தாள்களில் கையாளப்படும் மொழிநடை (*Academics*) எனப்படும். அறிவர்களையோ, மொழிவல்லர்களையோ மனநிறைவு கொள்ள உகந்தவாறு கையாளப்படல் வேண்டும் என்பதுமில்லை.

இதற்கான காரணிகள் பின்வருவன:

1. செய்தித்தாள்களை வாசிப்பவர் அவற்றில் வருவனவற்றை அவசர கதியிலேயே உள்வாங்குபவர்கள் (பஸ், புகைவண்டி முதலியவற்றில் பயணம் செய்கையிலும் இந்த வாசிப்பு நடக்கும்) அவர்கள் சொல்லணியையோ, மொழி வெளிப்பாட்டுத் திறன்களையோ எதிர்பார்த்து வாசிப்பதில்லை. மேலோட்டமாகவே வாசிப்பவர். இவர்களின் வாசிப்பு அறிவைத்தேடல் முயற்சியல்ல. படித்ததை நீண்டநாள் மனத்தில் பேணிக்காக்க வேண்டும் என்ற தேவையும் இவர்களுக்கு இல்லை.
2. செய்திகளால் ஏற்படும் கிளர்ச்சிகள், மனப்பாதிப்புக்கள், செய்திகளால் எரிச்சலடைதல் பயன்படுத்தல் அல்லது அவற்றைக் கொண்டு நன்மை அடைதல் என்பனவே வாசகரளவில் முதன்மையான பயன்கள்.

இங்கு ஆசிரியர் பகுதி, சிறப்புக் கட்டுரைகள், தொடர் கட்டுரைகள் பற்றி நான் குறிப்பிடவில்லை. அவையும் இதழியல் சார்ந்தனவாயினும் அவற்றைப் பிறிதொரு கண்ணோட்டத்தில் பின்பு பார்ப்போம்.

மேற்குறிப்பிட்டவை இதழ்களிலே முதன்மையாய் இடம்பெறும் செய்திகள் பற்றியனவே. இனி, இதழியலார் தமது மொழித்திறனை வளர்க்க கையாள வேண்டிய முறைமைகள் பற்றி முன்னர் குறிப்பிட்ட எட்டு அம்சங்களையும் தனித்தனி பார்ப்போம்.

**1. வாசிப்பவனை வசப்படுத்தும் மொழி:—**

எழுதப்பட்டுள்ள செய்தியை வாசகர் எவ்வித சிரமமுமின்றித் தமது புலன்களால் உணர்ந்து விளங்கிக் கொள்ளக்கூடிய மொழியே அவர்களை வசப்படுத்தும் மொழி. இது நேரடியானதாயிருத்தல் வேண்டும். (*Sensitive and direct*) அணியலங்கார அடைமொழிகளோ, தேவையற்ற விவரணங்களோ இல்லாத வகையில் அமைவது முக்கியம். இதற்கு எடுத்துக்காட்டாக, பனர்ஜி, முதியவன் ஒருவனுக்கு ஏற்படும் உடல், உள நோக்காட்டினை எவ்வாறு எழுதக் கூடாது, எவ்வாறு எழுதவேண்டும் என்று பின்வருமாறு விளக்குவர்.

எழுதக்கூடாத முறை:

"அவனுக்கு இது அதிர்ச்சி தந்தது. அதனால் அவனுக்கு திடீரென்று பெரும் நோ உண்டாயிற்று. அது அளவுகடந்த துன்பத்தை அளிப்பதாயும் தாங்க முடியாததாயும் இருந்தது. அதனை வார்த்தைகளில் வடிப்பது இயலாத காரியம்" என்றோ

அல்லது

"மிகவும் மோசமானதாய் வேதனையும் அவலமும் மிக்கதாய் அந்த முதியவனால் தாங்கவே முடியாத அளவினதாய் அந்த நோ இருந்தது" என்றோ எழுதுவது அநாவசியமா

ஆதிக்க சக்திகள், மக்களின் மனோ உணர்வுகளைச் சாகடிக்கவே விரும்புகின்றன. விடுதலைப் பற்றின் மீதும், சுதந்திர தாகத்தின் மீதும் அவர்களால் எதுவும் செய்யமுடியாத போதெல்லாம் ஆத்திர முற்று கண்மூடித்தனமான எறிகணைகளையும், குண்டுகளையும் அந்த மக்களின் குடியிருப்புக்களின் மீது கொட்டுவார்கள்.

காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்த தென்னை மரம் சரியும். குழந்தைகள் ஆடி மகிழ்ந்த முற்றம் குண்டும் குழியுமாகும். சன்னங்கள் தைத்து வீட்டின் சுவர்கள் அம்மைத் தழும்பேறிய முகமாய் இருக்கும். எங்கும் இனம்புரியாத அச்ச உணர்வும் அதன் வாடையும் எதிரொலித்தபடி இருக்கும். மக்கள் அச்சத்தால் வெளிறிய முகங்களுடன் தொலையாத இருளுடன் போராடுவார்கள். இந்த 'ஆட்லறி' எறிகணைகள் உயிர்ப்பறவையைக் கொன்று குதறுவதற்காக இரைந்துகொண்டு வரும் கணங்கள் தோறும் செத்துப் பிறப்பார்கள்.

'ஓயாத அலைகளி'ன் போது புலிவீரர்கள் ஆட்லறி எறிகணைகளை கைப்பற்றிச் சென்றார்கள். அப்போது நாளும் தம் உயிரை உருக்கிய இராட்சத அரக்கனை புலிகள் எப்படி சிறைப்பிடித்துச் செல்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னது. மூன்று நான்கு வரிகளை வீணடித்து, வாசிப்பவனையும் அந்த நோவின் தன்மையை உணர முடியாதவாறு செய்யத்தக்க இந்த வெளிப்பாடு வேண்டியதில்லை. "அந்த முதியவன் தன் தசையினுள்ளே முள் ஒன்று தைத்தது போன்ற நிலையை அடைந்தான்" என்பது சிக்கனச் சொல்லாட்சியும் உணர்ச்சி நிறைவும் கொண்டதாகும்.

### 2. சித்திரம்போல் அமைந்த செய்தி விளக்கம்:—

சித்திர விவரணத்தைப் பல சொற்களால் நீட்டி முழக்கிச் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. "கடற்கரும்புலிகள் 4 நாட்களில் இரண்டாவது தடவையாக நேற்றுப் பட்டப் பகலில் வீரகாவியம். பட்டப்பகலிலே படைத்திட்ட வீரகாவியம் (உதயன் ஆவணி 14) 4 நாள்களில் மீண்டும் நடத்திய வீர சாகசத்தால், கிளாலிக் கடலிலே இரண்டு 'டோரா' அதிவிசைப் படகுகள் சுக்குநூறாய்ச் சிதறின. இந்த நிகழ்வின் போது கரும்புலிகள் இருவர் களப்பலியாயினர். 50 கலிபர் இரண்டு உட்படப் பல ஆயுதங்கள் அள்ளப்பட்டன."

வீரசாகசம், சுக்குநூறு, 50 கலிபர் இரண்டு, அள்ளப்பட்டன என்ற சொற்றொடர்கள் நிகழ்ந்ததை உள்ளவாறே படம்பிடித்துக் காட்டவில்லையா?

### 3. ஐயமும், பல பொருளும் தருவதுமான மொழிநடையைத் தவிர்த்தல்:—

"தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையிலிருந்து சித்த சுவாதீனம் உள்ளவர் தப்பி ஓட்டம்!"

சித்தசுவாதீனம் என்பதின் பொருள் மூளையைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல். அப்படி வைத்திருப்பவர் – சித்த சுவாதீனம் உள்ளவர். சித்த சுவாதீனம் அற்றவர் அல்லவா தப்பி ஓடுவார்? அன்றியும் பைத்தியக்காரன், சித்தசுவாதீனம் அற்றவன் போன்ற சொற்கள் அவற்றால் குறிக்கப்படுபவனை மிகவும் தாழ்வாக மதிக்க வைக்கின்றன. சித்தசுவாதீனம் இன்மையை இன்று 'மனநோய்' என்ற சொல்லால் அழைத்து அந்நோயுடையவர்களை கருணையோட நடத்த வேண்டும் என்று உளநோய் நிபுணர்கள் உரைப்பார்கள். அன்றியும் 'தப்பி ஓடுவதற்கு' மூளைத்திறனும் திட்டமிடும் ஆற்றலும் வேண்டும். மனநோயாளர் வைத்தியசாலையிலிருந்து ஓட்டம் என்பதற்குப் பதில் தப்பியோட்டம் என்று கூறுவது அவர்களைப்பற்றி அறியாதவர்கள் கூற்றாகவே அமையும். 'தனக்கறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்'.

முன்னாள்(?) விசேட அதிரடிப் படை இன்ஸ்பெக்டர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

### 4. செய்திக்கும் அதன் வெளிப்பாட்டிற்குமிடையே சமநிலை பேணுதல்:—

நேரடியாகக் கண்டோ, கேட்டோ அறிந்த செய்தியைக் கூட்டிக் கூறலோ குன்றக் கூறலோ சமநிலையைப் பெரிதும் பாதிக்கும். நூற்றுக்கணக்கில் மக்கள் கூடியுள்ள கூட்டத்தை 'மாபெருங் கூட்டம்' என்று கூறுவது மிகைப்படக் கூறுதலுக்கு எடுத்துக்காட்டு.

பல்லாயிரக்கணக்கில் கூடியுள்ள கூட்டத்தை அடைமொழியின்றிக் 'கூட்டம்' என்று எழுதுதல் குன்றக்கூறல் என்பதுள் அடங்கும். விருப்பு, வெறுப்பு, முற்சாய்வுகள் காரணமாகச் சாமானியரை மகத்தான பணிகளாற்றிய பெரியார் என்றோ, நாட்டுக்கு நற்பணிகளாற்றியவரை சில சேவைகளை ஆற்றியவர் என்றோ எழுதுதல் தவறு. இதழியலாளன் விருப்பு, வெறுப்புக்களைக் கடந்த நடுவுநிலையாளனாய் விளங்குவதோடு, மக்களின் கருத்துக்களை உருவாக்கும் புனிதப்பணியினை மேற்கொள்பவனாகவும் உள்ளான். இதனை அவன் எக்காலத்தும் மறந்துவிடல் கூடாது. *Pen is mighter than the Sword* என்பது எழுத்தாளருக்கு மட்டுமல்ல இதழியலாளருக்கும் பொருந்துவதே.

*Jounalism and Government* என்ற நூலினை எழுதிய *John Whale* என்பார் செய்தித்தாள்கள் மூலம் ஒருவரின் படிமத்தினை மிக விரிவாக விளக்கியுள்ளார். பிரித்தானியாவில் லோயிட் ஜோர்ஜ், அஸ்குவித் என்ற இருவரிடையே பிரதமர் பதவிப்போட்டி ஏற்பட்டது. மான் செஸ்றர்சாடியான் என்ற செய்தித்தாளும் அதனைப் பின்பற்றிப் பல செய்தித்தாள்களும், 'அஸ்குவித் பொறுப்புணர்ச்சியற்ற வெறும் பார்வையாளர்' என்று வர்ணித்து, அவருக்கு எதிரான தாக்குல்களைக் கடுமையாகத் தம் எழுத்துக்களிலே கக்கின. இதன் பலனாக அஸ்குவித் தோல்வியடைந்தார். அஸ்குவித்தை வெற்றிகொண்ட லோயிட் ஜோர்ஜ் அவர்களே, தமது உரையிலே பின்வருமாறு குறிப்பிட்டார். "பொது மக்கள் சபை அஸ்குவித்தை வேண்டாம் என்று தள்ளிவிடவில்லை. செய்தித்தாள்கள் கையாண்ட தந்திரமே அவரை வீழ்த்தியது" போற்றினும் எல்லை கடந்து போற்றித் தூற்றினும் எல்லை கடந்து தூற்றி எழுதுவதென்பது இதழியலாளனின் வெளிப்பாட்டுத் திறனுக்கு எடுத்துக்காட்டாகலாம். ஆனால் அது அதன் நடுவு நிலைமைக்கு நேர்மைக்குச் சான்றாகாது.

### 5. கருமையான எளிய நடையைக் கையாளுதல்:—

"வடக்கிலிருந்து தமது இன்னுயிர் ஈந்த மறத்தமிழர் வரிசையிலே அவர்களிலும் ஒருபடி மேலாக, ஏனெனில் அவர்கள் சொந்த மானங் கருதியே உயிர் துறந்து துறக்கம் புக்கவர் – நீரும் அருந்தாது நம் தமிழீழ மானமும், மீட்பும் வேண்டி உயிர் உவந்தளித்த மாவீரத் தியாகி திலீபனின் நினைவு நாள் அதிவிமரிசையாகத் தமிழீழமெங்கும் கொண்டாடப்படுகிறது" என்ற நீண்ட வாக்கியம் கருத்துச்செறிவு மிக்கதுதான். ஆனால் தேவையற்ற பல அடைமொழிகளும், 'துறக்கம்' என்ற பொருட்கடினச் சொல்லும் கையாண்டமையால் எளிமையை இழந்து நிற்கிறது.

"தமது மானம் பறிபோகும் நிலையில் வடக்கு நோக்கியிருந்து எதுவும் உண்ணாது உயிர்விட்டவர்கள் நம் மறத்தமிழர். அவர்களின் ஈகம் உயர்ந்ததே. என்றாலும் அது தன்னலம் உடையது. மாவீரத் தற்கொடையாளித் திலீபனோ தமிழீழத்தின் மானமும், மீட்பும் வேண்டி உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டான். அவனுடைய நினைவு தமிழீழமெங்கும் உணர்ச்சிமயமாகக் கொண்டாடப்படுகிறது" என்று எழுதினால் எளிமையும், எதிர்பார்க்கும் கிளர்ச்சியும் உண்டாகும்.

(அடுத்த இதழில் தொடரும்)

றார்கள் என்று பார்த்து பரவசம் எய்தினார்கள். அப்போது இரு வயோதிபர்கள் திருவையாற்றில் நின்றுகொண்டு,

"ஐயா, பிள்ளையள் முல்லைத்தீவிலிருந்து ஆட்லறி எடுத்துப் போட்டாங்களாம் தெரியுமே?"

"மெய்யே! அப்ப இனி நாங்கள் இஞ்சையிருந்து பலாலி ஆமிக்காரனுக்கு ஷெல்லடிக்கலாம் எண்டு சொல்லுங்கோ" என்றார்களாம்.

பின்ன எப்படிச் சொல்லுவார்கள். அடிக்கு அடிதான் அவர்கள் சொல்லுற வேதம். யாருக்கும் பணியாத மண்ணின் மக்களின் உணர்வு அப்படி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உதிக்கும் திசையில் உதயம்

நவம்பர் இருபத்தியேழு மாவீரர் நாள். தமிழீழ மக்களின் எழுச்சியையும், மீட்சியையும் சுட்டிநிற்கின்ற இந்தப் புனிதமான நாள், விடுதலைக்கு வித்திட்டு விதையாகிப்போன மாவீரர்களின் நினைவோடு நிறைந்து சிறந்து புலருகின்றது. குறுகிய எல்லை கடந்து, எல்லோரும் ஒத்து, தமிழீழ தேசத்தின் உரித்துடை மனிதரெல்லாம் உணர்வேற்றி, எழுச்சிகொண்டு, விடுதலைக்கு உறுதி எடுத்துக்கொள்ளும் தேசிய எழுச்சிநாள்தான் மாவீரர் நாள். ஆனால், தமிழ் மக்களை அடக்கி ஆள நினைக்கின்ற, பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களும், அதன் அடக்குமுறை இயந்திரமும், அதன் அடிவருடிக் கூட்டமும் கலக்கமுறுவதும் இக்காலத்தில்தான். அடக்குமுறையைத் தகர்க்கத் துடிக்கின்ற தேசிய எழுச்சியின் ஆவேச முகத்தை, புனிதமான காலத்தில் காணவேண்டியதாகிவிடுமோ என்ற கலக்கம் அவர்களது. மாவீரர் வாரத்தில், அதையண்டிய நாட்களில் சிங்களப் பேரினவாதப் படையின் முதுகெலும்பை உடைத்துப்போடும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் பெரிதும் . சிறிதுமாக நடத்தியிருந்தனர். அதன் எதிர்பார்ப்பு இந்த ஆண்டிலும் பெரிதாக இருந்துள்ளதும், அதனை எப்படியாவது எதிர்கொண்டே ஆகவேண்டும் என்ற தயார்ப்படுத்தலை சிங்கள ஆக்கிரமிப்பு இயந்திரம் கூடிய மட்டில் மேற்கொண்டதும் நடந்துள்ளது.

ஆனால், இவ்வருடம் சற்று வித்தியாசமாக, இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக விடுதலைப் புலிகள் மாவீரர்நாள் சிறப்பாகக் கொண்டாடுவதில் அதிக அக்கறை காட்டியிருந்தனர் என்பது, எதிரிக்கு ஆறுதல் தந்த ஏமாற்றமாகிவிட்டது. அதேநேரத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் மீது பெரும் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த தமிழ் மக்களுக்கு மகிழ்வுதரும் சம்பவங்கள் எதுவும் இக்காலத்தில் நடக்கவில்லை.

எதிரி எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில், உயிர்நிலையை உலுக்கி எடுக்கின்ற தாக்குதலை நடாத்துவதே, விடுதலைப் புலிகளின் பாணி.

விடுதலைப் புலிகளின் பெரும் தாக்குதலை, எதிர்கொள்ளும் வகையில் தம்மைத் தயார்ப்படுத்தி வைத்திருந்த சிங்களப்படையின் பொறியில் விடுதலைப் புலிகள் சிக்கிக்கொள்ளவில்லை. இக்கால இடைவெளியில், பெரும் தாக்குதலை, இப்படி இன்ன வகையில் நடத்தித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயமும் விடுதலைப் புலிகளுக்கு இல்லை.

சில வாரங்களின் அமைதியை உசுப்பிக்கொண்டு, டிசம்பர் மாதம் எட்டாம் திகதி, தென்தமிழீழத்தில் குண்டுவெடித்தது. உடலில் வெடிமருந்தைக் காவிக்கொண்டு, 'அங்கயற்கண்ணி நீரடி தாக்கியழிப்புப் படையணி'யைச் சேர்ந்த கப்டன் மாலிகா கடற்கரும்புலியாகச் சென்று இத்தாக்குதலை நடாத்தினார். சிங்களக் கடற்படையின் டோரா பீரங்கிப்படகு, அதில் வந்த கடற்படையினருடன் வெடித்துச் சிதறி நீரில் கரைந்தது. குடாநாட்டில் எதிர்பார்க்கப்பட்ட தாக்குதல், தென்தமிழீழத்தில் வெடித்ததாக சிறீலங்காவின் பாதுகாப்பு உயர்பீடத்திற்கு அதிர்ச்சி. பாதுகாப்பு நன்கு இறுக்கப்பட்ட, திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் நடந்த இத்துணிகரமான அசாத்தியத் தாக்குதலை புலிகள் எப்படி நடத்தினர்..? பாதுகாப்பு நடவடிக்கையில் ஏற்பட்ட ஓட்டை என்ன...? என்று விசாரணையிலும் ஆராய்ச்சியிலும் சிறீலங்கா பாதுகாப்பு உயர்பீடம் சற்று மூளைக்கு வேலை கொடுத்துக்கொண்டிருக்கும் போது மீண்டும் ஒரு தாக்குதல், மூன்று நாள் இடைவெளியில் தென்தமிழீழத்திலேயே நடத்தப்படுகின்றது.

இது பெரும் தாக்குதல். சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது நடத்தப்பட்ட பெரும் தாக்குதல்களில் ஒன்றாக இடம்பிடித்துள்ள, புலுகுனாவை அதிரடிப்படை முகாம் தாக்குதல். மட்டக்களப்பிற்கும் அம்பாறைக்கும் இடையே, மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்த இந்த முகாம், ஆயுத வளத்தையும், ஆள் பலத்தையும் கொண்டிருந்தது. விசேட பயிற்சி பெற்று, திமிர்த்தனமான இனவெறியாட்டத்தில், தனிமுத்திரை பதித்திருந்த விசேட அதிரடிப்படையினர் மீது, கடந்த ஏப்ரல் மாதமும் ஒரு பெரும் தாக்குதல் நடாத்தப்பட்டது. அதன்போது, இருபது வரையிலான படையினர் கொல்லப்பட்டனர். ஆனால், டிசம்பர் பதினோராம் திகதி நடத்தப்பட்ட இத்தாக்குதலில், அதிரடிப்படையினரின் முகாமே அழிக்கப்பட்டு, ஐம்பதுக்கும் மேற்பட்ட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். அத்தொகையை விட சற்றுக் கூடுதலானோர் காயப்படுத்தப்பட்டனர். இரண்டரை மணி நேர கடும்தாக்குதலின் பின் முகாமை விடுதலைப் புலிகள் பூரணமாகக் கைப்பற்றிக்கொண்டனர். கைப்பற்றப்பட்ட பெருமளவிலான ஆயுதங்களில், 85 மில்லி மீற்றர் ஆட்டிலறிப் பீரங்கியும், மோட்டார்களும் விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தைப் பெருக்க உதவியிருக்கும். முல்லைத்தீவில் 120 மில்லி மீற்றர் ஆட்லறிகள் இரண்டை விடுதலைப் புலிகளிடம் இழந்த சிங்களப் படை, புலுகுனாவையிலும் ஆட்டிலறியை இழந்துள்ளது. நவீன கனரக ஆயுதங்களை ஒவ்வொரு களத்திலும், சிங்களப் படை இழந்துவருவது, சிங்களப் படையைப் பொறுத்தவரை அபாய அறிவிப்பே என்பதில் சந்தேகமில்லை. அதேவேளை, விடுதலைப் போராட்டத்தை இத்தகைய ஆயுதக் கைப்பற்றல்கள், இன்னொரு தளத்திற்கு உயர்த்தியுள்ளன என்பதிலும் சந்தேகமில்லை.

வடக்கில், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை, சிறீலங்காப் படையினர் ஆரம்பிப்பதற்கு முன் தென்தமிழீழத்தில் இருந்த நிலைக்கும், தற்போது உள்ள நிலைக்கும் இடையே மிகப் பெரும் வேறுபாடு உண்டு. இன்று, கிழக்கில் பெரும் நிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. சிவில் நிர்வாகத் திட்டங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்கள், வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன. வடக்கே இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்டபோது, சிவில் நிர்வாகக் கட்டமைப்பு எவ்வகையில் வளர்ச்சி கண்டதோ அதையொத்த வகையில், தென்தமிழீழத்திலும் தமிழீழ நிர்வாகக் கட்டமைப்பு வளர்ச்சிகண்டு வருகின்றது.

தென்தமிழீழத்தை முழுமையாக மீட்டெடுக்கும் வரலாற்றுப் பணி நோக்கிய நகர்வை சகலநிலைகளிலும் காணக்கூடியதாக உள்ளது. அதை எதிர்வுகூறும் வகையில், புலுகுனாவை முகாம் தாக்குதலைக் கொள்ளலாம்.

— சுப்பு —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# விழிகள் திறப்போம்!

– அ. பாலமனோகரன் –

கொப்பன்கேகன் நகரத்தில் கிழக்குவாசல் பகுதி நாற்சந்தி ஒன்றில், வீதியின் மறுபக்கத்தை அடைவதற்கு நான் பச்சை விளக்குக்குக் காத்திருந்தபோது தான், எனக்குப் பின்பாக அந்தச் சிரிப்பொலி கேட்டது.

இரு இளம்பெண்கள் தமக்குள் எதுவோ பேசிக் கலீர் என்று சிரித்த அந்த ஓசை, அக் காலைவேளையில், ஒரு மணியோசை போல, பறவைகளின் இன்னிசை போல செவிக்கும், மனதுக்கும் இரம்மியமாக இருந்தது.



இந்த நாட்டின் இளஞ் சந்ததியினர் தான் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள்! சிட்டுக்கள் போலச் சுதந்திரமாகப் பறந்து திரிவதற்கும், விரும்பிய துறையைத் தேர்ந்தெடுத்துத் தமது அறிவையும், திறமையும் விருத்தி செய்வதற்கும், மனத்துக்குப் பிடித்த துணையுடன் எந்தவிதமான விரசமோ, விகல்பமோ இன்றி, வீதியோரத்தில் கூட கொஞ்சிக் குலவவும் இவர்களால் இங்கு முடிவதற்குக் காரணம் இவர்களின் மூத்த தலைமுறையினரின் விவேகமும், அயராத உழைப்பும், பொது நலன் பேணும் மனப்பான்மையும் தான் என எனக்குள் எண்ணியவாறே வீதியை விரைந்து கடந்து கொண்டிருந்தேன்.

இன்று எமது மண்ணிலே, வாழ்வதற்கு ஒவ்வொரு கணமும் போராடிக் கொண்டிருக்கின்ற இளஞ் சந்ததியினரையும், எனக்குப் பின்னாக இப்போதும் கலகலவெனச் சிரித்தவாறே வந்து கொண்டிருந்த டெனிஸ் கன்னியரையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை. மாலதி, நளாயினி, கஸ்தூரி, அங்கயற்கண்ணி என்று ஆரம்பித்துத் தொடர்ந்து கொண்டே சென்ற புனிதப் பெயர்கள், முகங்கள் இவையெல்லாம் நொடிக்குள் மனதுள் மின்னி மறைந்தன. எமது மூத்த தலைமுறையும், எமது தலைமுறையும் செய்யத் தவறியதை, எமது அடுத்த தலைமுறையாவது சிறப்பாகச் செய்கின்றதே என்ற ஒரு ஆறுதல் உணர்வுடன், கூடவே எனக்குப் பின்னாக, இவ்வளவு இன்பமாக, தன்னிச்சையாக சிரிக்கும் அந்தக் கன்னியரைப் பார்க்க வேண்டும் போல ஒரு உந்துதலும் ஏற்படவே, வீதியின் கரையேறி நின்று, திரும்பிப் பார்த்தேன்.

அந்தக் கன்னியர் இருவருமே இதற்குள் என்னையும் முந்திக் கடந்து சென்றிருக்க வேண்டுமே? தரையில் கால்பாவாத கன்னிப் பருவமல்லவா? ஏன் இந்தத் தாமதம்? அதற்கான காரணத்தை நான் இப்போது சட்டென்று புரிந்து கொண்டேன்.

காரணம் – அந்த இரு கன்னியருமே கண்பார்வை அற்றவர்கள்!

எனது நெஞ்சு ஒரு கணம் அப்படியே இறுகிக் கொண்டது. இறைவா! இத்தனை வனப்பையும், வாலிபத்தையும் அள்ளிக் கொடுத்து விட்டு, கண்களைப் பறித்துக் கொண்டாயே!

இதற்குள் அக் கன்னியர் இருவரும் தம் கைகளிலுள்ள வெண்கோல்களினால் தரையைத் தட்டித் தட்டி, வழியை உணர்ந்தவாறே, தாம் செல்ல வேண்டிய திசையில் போய்க் கொண்டிருந்தனர்.

அந்த இரு இளைய முகங்களிலும் தான் எத்தனை களிப்பு! துயரின் நிழல் கொஞ்சமும் இல்லையே! வாழ்வின் முக்கால் பங்கை, முழுப்பார்வை கொண்ட இரு கண்களுடன் வாழ்ந்து தீர்த்து விட்ட நான், எப்போதாவது ஓர் நாள், ஒரு நிமிடம், இந்தக் கன்னியரைப் போன்று மனம்விட்டு, வாய்விட்டுச் சிரித்திருக்கின்றேனா என எண்ணியவாறே நடந்தேன்.

கிழக்கு வாசல் ரயில் நிலையத்தின் படிகளில் இறங்கி, பாறூமுக்குச் செல்லும் ரயிலுக்காக நான் மேடையில் காத்திருக்கும் போதுதான், அந்தக் கன்னியர் இருவரின் இனத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், மேடையின் ஒரு ஓரமாக, ஒரு கையில் சில சஞ்சிகைகளை ஏந்தியவாறு நிற்பதைக் கண்டேன். அவருடைய மறுகையில் பார்வையற்றவர்கள் உபயோகிக்கும் வெண்கோல் இருந்தது. அவர் கையிலிருந்த சஞ்சிகையைப் பார்க்கும் ஆர்வம் மேலிட, அவரருகில் நான் சென்றதை உடனடியாகவே உணர்ந்து கொண்ட அந்த இளைஞர், சிரித்தவாறே சஞ்சிகைகளை என்பக்கம் நீட்டினார். அவற்றில் ஒன்றை நான் எடுத்துக் கொண்ட போது, எனது ரயிலும் வந்து விடவே, நான் ஓடிச் சென்று ஏறிக்கொண்டேன்.

அந்தச் சஞ்சிகையின் முற்பக்கத்தில் ஒரு எளிமையான, ஆனால் அழகான வண்ணத்துப்பூச்சியின் சித்திரம் காணப்பட்டது. எவ்வித ஆடம்பர அழகோ, வர்ணச் சிதறல்களோ இல்லாது, ஒரே நிறத்தில் மட்டும் காணப்பட்ட அந்தச் சித்திரத்து வண்ணத்துப் பூச்சிக்குக் கண்கள் இருக்கவில்லை. இரண்டு உணர்கொம்புகளை மட்டுமே கொண்டிருந்த அந்த வண்ணத்துப்பூச்சியின் பிற்புலத்தில் ஒரு பொன்னிறச் சூரியன்! – கண்களை இறுக மூடிக்கொண்டு, உச்சி வெய்யிலில் சூரியனைப் பார்த்தால் உள்ளுக்குள் தெரியுமே பொன்னிறம் – அந்த நிறச் சூரியன்!

சஞ்சிகையின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தபோது, அது பார்வையற்றோருக்கான சங்கத்தின் மாத இதழ் என்பது தெரிந்தது. அத்தியாவசியமான புலன் ஒன்றை இழந்து விட்டவர்களின் நலன் கருதி, எத்தனையோ சேவைகளையும், வசதி வாய்ப்புக்களையும் அளிக்கும் அச் சங்கத்தின் பணியையும், அப்படி ஒரு சங்கத்தை தமது சமுதாயத்தில் உருவாக்கி, ஆதரவும் அளித்துவரும் டென்மார்க மக்களையும் எனக்குள் நான் வியந்து பாராட்டிக்கொண்டேன்.

ஏதோவோர் குருட்டு எண்ணத்தில் நானும் எனது கண்களை இறுக மூடிக்கொண்டேன். ரயில் ஓடிக் கொண்டே இருந்தது.

பார்வையற்ற தன் கணவன் பார்த்து அனுபவிக்க இயலாதவற்றைத் தானும் பார்க்கத் கூடாதெனத் தனது விழிகள் இரண்டையும் எப்போதுமே வரிந்து கட்டிக்கொண்ட, பாரதக் கதையின் திருதராட்டினன் மனைவி கண்ணுக்குள் தெரிந்தாள்.

அதே சமயம், நாட்டிலே எனது கிராமத்தில் வாழந்த ஒரு பார்வையற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்ணின் முகமும் எனது மனத் திரையில் தோன்றியது.

திருதராட்டினன் மனைவியோ ஓர் அரசி! அவளுக்குப் பணிவிடை செய்யப் பலர் இருந்தனர். அரசிகளினால் விழிகள் இன்றியும் சிக்கல் இன்றி வாழ்ந்துவிட முடியும். ஆனால் எனது கிராமத்தின் பார்வையற்ற பெண்ணோ பரம ஏழையாக இருந்தாள்.

ஆனால், அவள்தான் எத்தனை உயர்ந்தவள்! உழைப்பில் சிறந்தவள் என்பது இப்போ எனக்கு உறைத்தது! அவள் பிறவியிலேயே குருடாக இருக்கவில்லை. எப்படி அவள் தன் பார்வையை இழந்தாள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அவளுடைய கையிலே வெண்கோல் இருக்கவில்லை என்பதும், பார்வையற்றோருக்கு உதவ எமது ஊரில் சங்கம் எதுவும் இருக்கவில்லை என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் இடையிலே தன் கணவனை இழக்க நேரிட்ட அந்த இளம்பெண் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையை நான் நேரில் கண்டவன். அந்த வாழ்க்கையின் மகத்துவம் எனக்கு இப்போ மிகவும் தெளிவாகப் புரிந்தது.

பத்து வயதான தன் மகளின் தோளைத் தொட்டுக்கொண்டே, இடுப்பில் இளைய பிள்ளையைச் சுமந்துகொண்டு ஊரெல்லாம் திரிந்து தென்னோலை சேகரித்து இழுத்து வந்து, தன் குடிசையோரக் குட்டையில் அவற்றை ஊறப்போட்டு, கிடுகு இழைத்து விற்றுப் பிழைத்தவள் அவள்!

மிகவும் எளிதாக ஒரு வசனத்திலே எழுதிவிட்ட விஷயமல்ல இது! தீவிர உழைப்பின் கதை! கையேந்திப் பிச்சை எடுக்காது, மானத்தோடு வாழ்ந்து தன் இரு பிள்ளைகளையும் ஆளாக்கிப் பலன்கண்ட ஒரு அற்புதத் தாயின் கதை இது! இரண்டேக்கர் வயலும் தோட்டம் செய்ய ஒரு துண்டுக் காணியும் கொண்ட எத்தனையோ பேர் எனது ஊரில் தொடர்ந்தும் ஓலை வீட்டிலேயே வாழ்ந்து கொண்டிருக்க, தன் மகளுக்கென ஒரு சிறிய இரண்டறைக் கல்வீடு கட்டிக் காட்டியவள் அந்தப் பார்வையற்ற விதவை!

அயராது உழைத்து ஆயிரம் துன்பங்கள் சேர்ந்து வந்தபோதும் நிலை குலையாது எதிர்நீச்சலிட்டுப் போராடி, வாழ்ந்து காட்டிய அவள் பிறந்த மண்ணிலே தான் நானும் பிறந்தேன் என என்னுள் ஒரு பெருமிதம் ஏற்படவே செய்தது.

ஊரை நினைக்கையில் அந்தக் குருட்டுத் தாய் ஓலையிழுத்த எனது கிராமத்து ஒழுங்கைகள் ஞாபகத்துக்கு வந்தன. இப்போது இந்த ஒழுங்கைகள் ஒவ்வொன்றுக்கும் பெயருண்டு என்பது எனக்குத் தெரியும். நானறிய அந்த ஒழுங்கை மணலில் தவழ்ந்த குழந்தைகள், தமது எதிர்காலச் சந்ததியினருக்காகத் தம்முயிரை ஈந்து மாவீரராகி, தாம் வாழ்ந்த இடங்களுக்குப் பெயர் கொடுத்திருக்கின்றார்கள்.

அந்த மண்ணில்தான் நீயும் பிறந்தாய் எனப் பெருமைப்படுவதற்கு உனக்கு என்ன அருகதை உண்டு என நெஞ்சுக்குள் ஒரு கேள்வி எழுந்து உறுத்தியது.

இன்றைய நிலையில் ஊரில் இருப்போரின் நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், நாம் இங்கு வாழ்வது பெரும்பாலும் இரந்து வாழும் வாழ்வு என்றாலும், அது பொருளாதார ரீதியில் ஒரு இராச வாழ்க்கை தான்! அதனால்தான், திருதராட்டினன் மனைவியைப் போன்று, நாட்டில் நடப்பதைக் கண்டு கொள்ளாமல் எனது மனக்கண்ணை இறுக வரிந்து கட்டிக்கொண்டிருக்கிறோமா? அவள் தனது கணவனுக்காக தன் விழிகளை மூடிக்கொண்டாள். நாம் எவருக்காக எமது கண்களை மூடிக்கொண்டோம்? எமது பிள்ளைகள் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் இந்த நாடுகளில் வாழ வேண்டும் என்பதற்காகவா ஓடியோடி உழைக்கின்றோம்?

எமக்குத் தெரிந்ததெல்லாம் பழைய பாரதக் கதைதான்! இன்றைய குருஷேத்திரத்தில் அங்கு புதிய பாரதம் படைக்கப்படுவதை எதற்காக பார்க்க மறுக்கின்றோம்.?

குருஷேத்திரத்தில் யுத்தம் நிகழ்கையில், கண்களற்ற திருதராட்டினன் அருகில் இருந்தவாறே அதைத் தன் மனக்கண்ணால் கண்டு, நேர்முக வர்ணனை வழங்க அன்று விதுரர் இருந்தார்.

எமது பிள்ளைகளுக்கு, எமது சொந்த மண்ணின் விடுதலைப் போரையும் அதன் வீரம்மிக்க நாயக, நாயகிகள் பற்றியும் எடுத்துக்கூறவேண்டிய தார்மீக, வரலாற்றுக் கடமை எமக்குண்டு என்பதை எம்மில் எத்தனை பேர் உணர்ந்துள்ளோம்?

இது தெரியாமல் வாழும் எமது பிள்ளைகளுக்கும், பிறவிக் குருடனாகிய திருதராட்டினனுக்கும் வித்தியாசந்தான் என்ன?

பார்வையற்றோருக்கான அடையாளச் சின்னமாகிய கண்களற்ற வண்ணத்துப்பூச்சியின் சித்திரத்தை இன்னுமோர் தடவை உற்று நோக்கினேன். வெளிநாடுகளில் வாழ்கின்ற எம்மைக் குறிப்பதற்கு ஒரு அடையாளச் சின்னம் ஒன்று வரைய வேண்டியிருந்தால் அது எப்படி அமையும் என நினைத்துப் பார்த்தேன்.

விழிகள் மட்டுமல்ல, உணர்வுக்கான கொம்புகள்கூட இல்லாத, வாயும் வயிறும், அதற்குக் கீழே உள்ள உறுப்புக்களும் மட்டுமே கொண்டதொரு விசித்திர ஜந்துவைத்தான் என்னால் கற்பனை செய்ய முடிந்தது! மிக மிக வெட்கமாகவும் இருந்தது!

விழிகளை மூடிக்கொண்டேன் மனக்கண் திறந்து கொண்டது.!

★★

## பிறந்த நாடே சிறந்த கோயில்

சொந்த மண்ணையும் சொந்த மொழியையும்
எந்த நிலையிலும் எண்ணிப் பாரடா;
செத்து மடிவது ஒருமுறையென்று
செந்தமிழ் காக்க செருக்களம் பாயடா!

காட்டிக் கொடுப்பனால் கரையுமா நாடு
நீட்டிய துவக்கால் எதிரியைத் தேடு
நாட்டிலே விடுதலைக் கதவு திறக்கும்
நமக்கெல்லாம் நிம்மதி தானே படைக்கும்!

அந்நியன் பாதம் எம் அன்னையை நாடின்
பாயும் குருதியில் பகைவனை வீழ்த்து
வன்னியன் பாதையில் தன்னை மறக்கும்
மரபினை இங்கே மார்பினில் ஏற்று!

'சுதந்திரம்' எனும் இ.ஜே விஜயக்கோன் அவர்களின் கவிதை நூலில் இருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஷாட் அபு ஷாவார்

# மழைக்கு முன்

தொலைதூரத்தில் மலைகளைத் தழுவும் நீல வானம். மலை முகடுகளின் புகாரைத் தாண்டி சூரியன் மேலே எழுகிறது. பாறைகளாய், கறுத்து, நெருங்கி, எரிமலை போல் தொடர்ச்சியாக நெருங்குவன போன்ற மலைகள்... வெறிக்கும் என் (அல்லது வாசகர்) விழிகளுட் புகுவனபோல் அவ்வளவு அருகில்...

(காட்சி திடீரென மாறுகிறது)

சாம்பல்நிற வானம். அடர்ந்த முகில்கள் பாறைகளை நீரால் விளாசுகின்றன.

மேடைக்கப்பாலிருந்து உரத்த ஓர் குரல்: வானமே வெடிக்கப் போகிறது.

இன்னொரு குரல்: பயப்படாதே, ஆண்டவன் சித்தம்.

பொங்குமாகடல் பாறைகளைத் தாண்டிப் பறக்கிறது கர்ச்சிக்கும் அலைகள்; காற்றில் பறக்கும் உவர் நுரைகள் (வாசகர் கண்கள் பனிக்கின்றன – இல்லாமலுமிருக்கலாம்) ஒரு குரல் அழைக்கின்றது: யூனிஸ்! நீ எங்கே இருக்கிறாய்?

கண நேர நிசப்தம்.

மிக விரைந்து ஓர் காட்சி!

வணங்குதல் போல் ஓராயிரம் உடல்கள் வளைந்தபடி... அவர்கள் தலைக்கு மேல் அந்தரத்தில் ஒரு வாள் ஊசலாடுகிறது. மேடைக்காப்பிலிருந்து ஒரு குரல்: யூனிஸ்! நீ எங்கே?

முரசுகள் ஒலிக்கின்றன. இறுக இணைத்த தோள்களில் நடுங்கும் கால்கள் மோதிக் கிளம்பும் ஆவேச ஒலிகள்...

மேடைக்கப்பாலிருந்து ஒரு குறிப்பு:

நாம் இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இருக்கிறோம்.

இடமிருந்தும் வலமிருந்தும் வந்து கூடி, குழப்பத்துடன் நகரும் அணிகள், வாய்கள் திறந்து மூடுகின்றன. அடியிலிருந்து கிளம்பும் குரல்கள். கோபத்தில் சிவந்த முகங்கள்...

வாசகரே, அவர்கள் சொல்கிறார்கள்: 'நாங்கள் பாலஸ்தீனியர்; நாங்கள் தாம் பாலஸ்தீனியர்...' (ஆனால் நீங்கள் கவனிக்கிறீர்களில்லை) அவர்கள் அழைப்புக் குரல் வலிதாய் மீண்டும் ஒலிக்கிறது: யூனிஸ்! நீ எங்கே இருக்கிறாய்?

பயங்கர வெடியோசைகள் எதிரொலிக்கின்றன.

காட்சி மாறுகிறது. வியர்வை பளபளக்க காட்டுக் குதிரைகள் காற்றில் பறக்கின்றன. ஒரு குரல் கட்டியங் கூறுகிறது:

இதோ குதிரைப் படை... குதிரைப் படை வருகிறது. குதிரைகள் பாய்ந்து தாக்குகின்றன...

காற்றில் விளாறும் சவுக்குகள்... ஆயிரம் பொலிசார். சனக்கூட்டத்தின் மேல் பாய்கிறார்கள்...

சில விநாடிகள் அமைதி.

ஒரு தொழில் ரீதியான பேச்சாளன் பேசுகிறான்: "சகோதரர்களே! உங்களுக்காக நாம் எதுவும் செய்வோம், நீங்கள் வீடுகளுக்குத் திரும்பி விட வேண்டும்..."

சவுக்குகள் பயங்கரமாக விளாறுகின்றன. காற்றில், உற்சாகமாக சிறகடிக்கும் பறவைகள் போல் தோன்றும் பாறைகளின் கீழ் குதிரைக்காரர்களின் தலைகள் தெரிகின்றன.

மண் வீடுகளாலான முகாமொன்றின் தொலைத் தோற்றம்.

நூற்றுக்கணக்கான சிறு வீடுகள் வரிசையாக அருகருகே, கதவுகள் அகலத் திறந்தபடி... சகதி நிறைந்த ஒழுங்கைகள். அவற்றில் மிதிக்கும் – ஆனால், முன்னேறும் – காலடி ஓசைகள்...

பேச்சாளன் குரல், மீண்டும்.

சகோதரர்களே, எமது இதயங்களில் நம்பிக்கை உள்ளது. ஆண்டவன் எம்மோடு, நாம் தாண்டியே தீருவோம்... இன்னும் ஒரு சில தசாப்தங்கள் மட்டுமே...

எல்லாம் மறைய, ஒரு ஒலிப்பதிவுக் கருவி மட்டும். அதிலிருந்து பலமான கரகோஷங்கள்...

(சீழ்க்கைகளுங்கூட) மகிழ்ச்சி ஆரவாரங்கள்...

ஒரு பேச்சரங்கு விரிகிறது. கவிஞனொருவன் ஏறுகிறான். வாய் தடுமாறி (வழமை போல்) விரல் நுனியில் மெல்ல எம்பி... ஒலிப்பதிவுக் கருவியில் அதே ஒலிகள். கவிஞன் குரல் உரக்கிறது. ஒடுக்குமுறைகள் ஒருநாள் ஒழியும். உங்கள் வேட்கை அவற்றை வெல்லும்.

கரகோஷங்கள் கவிதையை மூழ்கடிக்கின்றன. முதலாவது சபதம் முடிவடைகிறது.

இரண்டாவது:

மணற்புயலிடை மிதக்கும் பல கூடாரங்கள். திகைத்த முகங்களுடன் மனிதர்கள். கண்ணீரும் புழுதியும் படிந்த முகத்துடன் மணலிற் பறக்கும் குழந்தைகள். மழித்த அவர்கள் தலைகளிற் காயங்கள் தெரிகின்றன.

ஒரு மெல்லிய பல்லவி:

என் நாடு என் நாடு என் நாடு...

மேடைக்கப்பாலிருந்து ஆத்திரத்துடன் உறுத்தும் குரலொன்று:

பாலையாய்ப் போன நிலம்.

பாலங்கள் உடைந்து, ஆறெல்லாம் சேறாகி காய்க்காத செடிகள், கிளையில்லா மரங்கள்...

குழந்தைகள் கண்கள்.. கண்களில் நீர் பொங்குகிறது. நடுங்கும் ஓர் குரல்: வெள்ளிடி விழுந்த காலம்..

மேடைக்கப்பால் ஒலிக்கும் குரல்: குழந்தைகள் முகங்கள் கிழன்று போயின... மலை மலையல்ல; கறையான் புற்று.

உயரமான ஒரு சுற்றுலாப் பயணி காட்சியில் வருகிறான். மூக்கைக் கைக்குட்டையால் பொத்தியபடி எல்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வற்றையும் படம் பிடிக்கிறான்.

இந்தச் சுற்றுலாக்காரர்தாம் எல்லாக் கேட்டுக்கும் கால்.

விமானங்கள் இரைகின்றன; கம்பீரமான ஒரு மசூதி... ஒரு ஷேக் ஓடுகிறான்... அருகே குண்டொன்று விழுந்து பறக்கிறது. ஷேக்கின் மேற்பகுதி மட்டும் தெரிகிறது; பயமே உருவாக அவன் திட்டுகிறான்; கோவில்களைக்கூட.... கடவுளே உன் கோபத்தைக்காட்டு... அழி... அவர்களை நரகத்திற் தள்ளு...

இரண்டாம் சபதம் முடிவடைந்தது. இறைவன் கோபம் இப்போது ஏன் இப்படி?

தெறித்த இரத்தம் உருச் சிதைந்த ஆயுதங்கள், முகமில்லாப் படையாட்கள், கருகிய உடல்கள்... சாவின் மணம் வாசகர் மூக்கில் நுழைகிறது. (ஆனால் அவர்கள் நுகர்புலனை இழந்திருக்கக்கூடும்)

கருகிய உடல்களினின்று புகைத் திரள்கள் எழுகின்றன. அணியாடைகள் இற்று வீழ்கின்றன... மண்ணில் நிணம் வடிக்கிறது...

கட்டளையிடும் ஓர் குரல் அறிவிக்கிறது; அவர்களை அழியுங்கள் உங்கள் பற்களால் உங்கள் நகங்களால். வெருட்சியுற்ற பறவைகள் போலச் சிதறிய சதைத் துண்டுகள் கருகி ஆயுதங்களின் உருக்குச் சில்லுகளுடன் கலக்கின்றன.

ஒரு சிறிய கீதம்.

இரகசியப் பொலிஸ் எங்கள் பற்களைப்
பிடுங்கியது.
எங்கள் நகங்களை அது இல்லா
தொழித்தது.
எங்கள் கைகள் வெறுங்கைகள்
எப்படி நாங்கள் போரிடுவோம்?

காட்சி மாறுகிறது. எல்லாம் பச்சை... இளம்பச்சை மயம்... ஆரஞ்சுப் பழங்கள் குவியல்களாக உள்ளன.

குழந்தைகள் போர் விளையாட்டு விளையாடுகிறார்கள். அவர்கள் கைகளில் தடித்துப்பாக்கிகள். மேற்கு நோக்கி... நீட்டியவாறு... விமான இரைச்சல்...

ஒரு குழந்தை அலறுகிறது: நாங்கள் அதைச் சுட்டு வீழ்த்தி விட்டோம்.... பாருங்கள், எரிகிறது... இன்னொரு குழந்தை அதை மறுத்தது: இல்லை நாங்கள் சுடவில்லை... உனது ஆயுதம் மரக்கட்டை. பொய் சொல்வது பாவம், தெரியாதா?

சூரிய பாறைகள் தோன்றுகின்றன. மறையும் சூரியனின் ஒளியைப் பிரதிபலித்தவாறு... ஆறு கலங்கலாக ஓடுகிறது. குறுக்கே கடக்கும் ஒரு அசைவு (சிரமப்பட்டுத் தாண்டும் ஒருவனின் பக்கவாட்டுத் தோற்றம்)

கராமே அகதி முகாம். பெண்கள் குழந்தைகள், முதியோர். கைகளால் கண்களுக்கு நிழல் பிடித்தவாறு மேற்கு நோக்கி உற்றுப் பார்க்கிறார்கள் கடக்கும் மனிதனை.

பேரோசையுடன் பிழம்புகள் எழுகின்றன. உருக்குத் துண்டங்கள் சிதறுகின்றன. தீ பரவுகிறது.

கராமே முகாமில் தங்கள் களிமண் குவியல்களிலிருந்து மக்கள் திரண்டெழுந்து வந்து ஒரே குரலிற் பாடுகிறார்கள்.

ஏழைகள் நாங்கள் இங்கிருந்து
வெளிக்கிடுவோம்
கோபக்கனலால் கொடுமைகளை நீறாக்க
எதிரிருந்தும் அருகிருந்தும்
எம்மைச் சுடுவோர் இனி நிறுத்தட்டும்
அவர்கள் உறுதியாகச் செபித்தபடி
முன்னேறுகிறார்கள்.
தாய்நாட்டு மண் தவிர்ந்த மற்றெந்தத்
துதி வழிபாடும் தரணி மதியாது
பாட்டாளியை விடப் பாட்டுரியவன்
பாரினில் வேறெது
மண்ணுக்காகவும் மகிழ்ச்சி வெளிச்சம்
உதிப்பதற்காகவும்
பட்டால் செத்தான், சாகிறான், சாவான்

இந்தச் சூரியன் போலவே நாங்கள்
இனிமேலே எழுவோம்
இன்பம் இச்செகத்தினிற் பொங்கும்
அதனை அழித்தல் இயலாதது போல
எமையும் அழித்தல் இயலாததாகும்
மண்ணின் விதையும் மகிழ்வும் நாமே.

காயமடைந்தோரைக் காவியபடி ஆற்றைக் கடக்கும் மனிதர்கள் மேல் ஒளிகுவிகிறது. அவர்கள் பாடுகிறார்கள்:

இலட்சியமே உனக்காக
ஒளியைத் தேடும் குழந்தை
விழிகளே உங்களுக்காக
எங்கள் தேசமே உந்தனுக்காக
நேசத்திற்குரிய எம் பாட்டாளிக்காகவும்

மேடைக்கப்பாலிருந்து ஒரு குரல்:

பயமென்றால் என்னவென்று நீங்கள் அறிவீர்களா? அவர்கள் பாடுகிறார்கள்:

எங்கள் பிள்ளைகளையும் அவர்தம் அன்னையரையும் நாங்கள் பாதுகாக்கின்றோம்.

வஞ்சமில்லா அந்தத் தூய முகங்கள்...
பசுந்தாரைகளையும் பாடல்களையும்
நாங்கள் நாடுகிறோம்
ஆனால் இப்போ உயிருக்குயிரே
விலையாகிறது.
குண்டாலும் கருத்தாலும் குற்றங்களைத்
திருத்துகிறோம்
எங்கள் ஏர்க்கால்கள் தங்கள் தெம்மாங்கை
மீண்டுமிசைக்க
அவர்கள் பிரிகிறார்கள் சிலர் மேற்கே.
சிலர் கிழக்கே. பச்சை
இரத்தம் தோய்ந்த ஆடைகள்,
காயமடைந்தோரை காவியவாறே.
எதனுக்காகவும் பாடாதே இனிவரும்
போர்களுக்கே பாடு.
உங்கள் பாடலும்
உங்கள் பாதையும்
ஒன்றே யாகுக.

★★★

## யாழ் நகரில் புதிய சமூக சீர்கேடு

யாழ்ப்பாண நகரப் பகுதிகளிலும் நகருக்குச் சுற்றுப்புறங்களிலும், மூலை முடுக்குகளிலும், கண்டகண்ட இடங்களில் எல்லாம் மதுபான வகைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சமூகச் சீர்கேட்டை உண்டாக்கும் இந்த மதுபான வியாபாரம் வெற்றிலைக் கடை, தேநீர்க்கடை, மரக்கறிக்கடை, சில்லறைக்கடை, மண்ணெண்ணைக் கடை என்ற வேறுபாடு இன்றி எங்கு பார்த்தாலும் நடக்கிறது.

மதுபானங்களை, உத்தரவுபெற்ற வியாபாரிகள் மட்டுமே விற்கலாம் என்பதுதான் சட்டம். யாழ்ப்பாணத்தில் இப்போது இவையெல்லாம் செல்லுபடியாகாமல் போய்விட்டதா? நடவடிக்கை எடுக்க அதிகாரமுள்ளவர் எவரும் இல்லையா? என்று மக்கள் கேட்கிறார்கள். திருவிழாக்களில், கோயில்களில் மைல் கணக்குக்கு மணிபொருள்கள் அடுக்கி வைப்பது போன்று சாராயம், பியர், ஸ்டவுட் என்றும் எமக்குப் பெயர் தெரியாத ரகம் ரகமாக மதுபான வகைகள் கடைகளில் கண்காட்சிக்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமா? அவற்றை விற்பனையாக்குவதற்கு தரகு பார்ப்பவர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மதுபான விற்பனை இவ்வாறு பகிரங்கமாக நடப்பதால் நகருக்கு வரும் மக்கள் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றார்கள். மதுபானம் வாங்குமாறு மக்களுக்கு (மாணவர்களுக்கும் கூட) தொல்லை கொடுக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# காத்திரு

www.tamilarangam.net

**22.06.1941** – அதிகாலை 03.15 அளவில் உலகம் இதுவரை கண்டிராத வகையில் ஹிட்லரின் ஜெர்மனியப் படைகள் 'ஒப்பரேசன் பார்பரோசா' என்று பெயரிடப்பட்ட, பிரமாண்டமான அகன்ற மின்னற் தாக்குதலை ரஷ்யக் குடியர சின் மேல் ஆரம்பிக்கின்றன. சுமார் 3 மில்லியன் ஜெர்மனிய, ஹங்கேரிய, ரூமேனிய மற்றும் பின்லாந்திய படைவீரர்கள் இதில் பங்குபற்றுகின்றனர்.

உக்ரைன் மற்றும் பல ரஷ்ய கரையோரப் பகுதிகளை மின்னல் வேகத்தில் ஜெர்மனியப் படைகள் கைப்பற்ற, ரஷ்யாவின் முது கெலும்பாக விளங்கிய தொழிற்சாலைகள் ஆசியப்பகுதிக்கு மாற் றப்படுகின்றன. அங்கே நாளொன்றுக்கு 18 மணி நேரம் என்ற ரீதி யில் வேலை செய்யக்கூடிய அனைவரும் தொழிலாளர்களாக பணிபுரிய, மற்றைய இடங்களில் இருந்து ஆண்களும், பெண்களும் வேலை செய்யவும் செஞ்சேனையில் இணையவும் அணி அணி யாக திரண்டு வருகின்றனர்.

'எதிரியை விரட்டியடிப்போம்' என்ற ஒரே எண்ணத்துடன் இரவும் பகலும் பணி புரிந்த அவர்கள் அடிக்கடி உற்சாகமாக முணு முணுத்தது, ஒன்றுதிரண்டு பாடியது 'காத்திரு' என்ற கீழக்கண்ட கவிதையாகும்.

- நாபோ

காத்திரு
நான் வருவேன், உனது காத்திருத்தல் பலமாக வீசும் போது
காத்திரு
நீ துன்பத்துடன் இலையுதிர் காலத்தை எதிர்நோக்கும் போதும்
காத்திரு
மாரிக்காற்று கூச்சலிடும் போதும்
காத்திரு
உதறவைக்கும் கோடைகால வெப்பத்தின் போதும்
காத்திரு
மற்றவர்கள் காத்திருப்பதை கைவிட்டு, நடந்தவற்றை
மறந்திருந்த போதும்
காத்திரு
கடிதங்கள் வருவது நின்று விட்ட போதும்
காத்திரு
மற்றவர்கள் காத்திருந்து களைத்து விட்ட போதும்
காத்திரு
எனது அம்மா நம்பிக்கையை இழந்து விட்ட போதும்
நண்பர்கள் நெருப்பை சுற்றி இருந்து
எனது நினைவஞ்சலிகளை செலுத்தும் போதும்
காத்திரு
அப்போதும், ஆனால் எனது நினைவஞ்சலிகளை செலுத்தாதே
காத்திரு
ஏன் எனில் நான் வருவேன் அப்போது, மரணத்தின்
கோரப்பிடிகளில் இருந்து காத்திராதவர்கள் தாராளமாக
சொல்லட்டும் அது என்னுடைய அதிர்ஸ்டம் என்று.
அவர்கள் ஒரு போதும் புரிந்தகொள்ள மாட்டார்கள்
மரணத்தின் பிடியில் இருந்து உனது காத்திருந்தமையே
என்னைக் காப்பாற்றியதை. நான் எப்படி உயிர் தப்பினேன்
என்று உனக்கும் எனக்கும் மட்டுமே தெரியும், நீ எனக்காக
காத்திருந்தமையே காரணம் என்று, மற்றவர்கள் யாரும்
காத்திராத போதும்.....



## உள்ளேயும் வெளியேயும்

ஒரு மாபெரும் மரத்தையும்
சூழ்ந்து நின்ற வெளியையும்

மழை பெய்த மாலை ஒன்றுடன்
சேர்த்து விழுங்கினேன்.

காலையும் மாலையும்
கூடு திரும்பும்
பறவைக் கூட்டங்களும்
நிகழ்கின்றன உள்ளே
காலமும் ஓடுகிறது.

வெளியே அக்கோடிக்கும் இக்கோடிக்கும்
நீளும் சிறகு விரித்து
வண்ணங்கள் கடந்த
இந்தப் பறவை மட்டும்
மெல்லப் பறந்து
கொண்டு இருக்கிறது.

எங்கு
எப்போது
என்பதுதான்
தெரியவில்லை.

- ஆனந்த்

நன்றி: 'காலச்சுவடு 91'
சிறப்பிதழில் இருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அம்மா ! கலங்கி அழாதே, நீ ஈன்றெடுத்த
இம்மாமணிதான் எழில் குன்றிப் போனதென
எண்ணி மருளாதே, இனியுனக்குப் பாரமில்லை
கண்ணைத் துடையம்மா காலம் வரும் !

